**POLITICAL SCIENCE**
**TEST - 3**

| | | |
|---|---|---|
| 11th Civics | Unit 3 | அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் பகுதி - 1 |
| | Unit 4 | அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் பகுதி - 2 |
| | Unit 5 | மக்களாட்சி |
| | Unit 6 | அரசாங்கத்தின் வகைப்பாடுகள் |
| | Unit 7 | அரசியல் சிந்தனை |

**11ம் வகுப்பு தொகுதி 1**
**அலகு -3**
**அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் பகுதி – 1**

**இறையாண்மை**

**இறையாண்மையை பற்றி நாம் விவாதிப்போம்:**

- ஒரு நாடு தன்னிச்சையாக, தன் மக்களை கட்டுப்படுத்தி பாதுகாக்கும் போது இறையாண்மையைப் பெற்றிருப்பதாக கருதப்படுகிறது. அவ்வாறு செயல்படும்போது, அந்நாட்டினை அதிகாரம் வாய்ந்ததாகவும், சுயசார்புள்ளதாகவும் ஏனைய நாடுகள் அங்கீகரிக்கின்றன. இறையாண்மை என்பது ‘‘சூப்பரானஸ்’’ (ளுரிநசயரௌ) என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து தோன்றியதாகும். இது ஆங்கிலத்தில் மிக உயர்ந்த அல்லது மேலான என்றும் பொருள்படுகிறது.

- ரோமானிய நீதிபதிகளும், மக்களும் இடைக்காலத்தில் இறையாண்மையை ‘‘சம்மா பெடெஸ்டாஸ்’’ (ளுரஅஅய ீழவநளவயள): என்றும் ‘‘ப்ளெனிடீயூட்பொடெஸ்டாஸ்’’ (ீடநைவைரனந ீழவநளவயள) என்றும் வார்த்தைகளை பயன்படுத்தி அரசின் மேலான தன்மையை பெயரிட்டு அழைத்தனர். அரசியல் அறிவியல் ‘‘இறையாண்மை’’ என்ற சொல் போடின் என்ற அறிஞர் எழுதி 1576-ல் வெளியான குடியரசு என்ற நூலில் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டது. ஒரு நாட்டின் உறுதித்தன்மை, அந்நாட்டின் இறையாண்மையை அடிப்படையாக கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

- அரசமைப்பு என்பது அரசு தொடர்பாக சட்டங்களையும், விதிகளையும் எடுத்துரைக்கிறது. மேலும் அரசமைப்பு என்பது அரசின் இறையாண்மையை பிரதிநிதித்துவபடுத்துவதாகும். இந்திய அரசமைப்பின் முகவுரையில் கூறப்பட்டதுபோல, இறையாண்மை என்றால் அரசு எந்த துறை சார்ந்த சட்டத்தினை உருவாக்கினாலும் அது அரசமைப்பின் வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

- இறையாண்மை என்பது பொருள் மற்றும் பண்புகள்
- இறையாண்மையின் வகைகள் மற்றும் அம்சங்கள்
- பன்மைவாதத்தின் பொருள், மற்றும் தோற்றம்

**இறையாண்மை என்றால் என்ன?**
"இறையாண்மை என்பது ஒட்டுமொத்த, மற்றும் தடையில்லாத அரசின் அதிகாரமாகும். மேலும் அதீத கட்டளைத்தன்மை உடையதாகவும் காணப்படுகிறது.
**- ஜீன் போடின் (துநயெ டீழனளை)**

**இறையாண்மையின் பண்பியல்புகளை பற்றி நாம் படிப்போம் அவைகள் யாவை?**

**நிரந்தரமானது** (Permanence):

- இறையாண்மையின் முக்கிய பண்பாக அதன் நிரந்தரத்தன்மை திகழ்கிறது. அரசு இயங்கும் வரை இறையாண்மை நீடிக்கிறது. மன்னர் இறப்பதாலும், அரசாங்கம் செயல் இழந்து போவதாலும் இறையாண்மை பாதிக்கப்படுவதில்லை. இதன் எதிரொலியாகவே, "மன்னர் இறந்துவிட்டார், ஆனாலும் அரசபீடம் நீண்டு வாழ்க" என்று இங்கிலாந்து குடிமக்கள் கூறுகின்றார்கள்.

**பிரத்தியோகமானது** (Exclusiveness):

- ஓர் சுதந்திர அரசில், இரண்டு இறையாண்மைகள் இயங்காது, அப்படி இருக்குமேயானால் அரசின் ஒற்றுமையானது சீர்குலைந்துவிடும்.

**அனைத்தையும் முழுமையாக உள்ளடக்கியது** (All comprehensiveness):

- ஒவ்வொரு தனிமனிதனும் மற்றும் தனிமனிதர்கள் அங்கம் வகிக்கக்கூடிய குழுமமும் அரசின் இறையாண்மைக்கு உட்பட்டதாகும். குழுமங்கள் அல்லது சங்கங்கள் அதிக வலிமை வாய்ந்ததாக இருந்தாலும், பணம் படைத்ததாக இயங்கினாலும் இறையாண்மையின் அதிகாரத்தை தடுக்கவோ அல்லது அதற்கு கீழ்படியாமலோ இருக்க முடியாது.

**மாற்றித்தர இயலாதது** (Inalienability):

- இறையாண்மை என்பது அரசின் உயிர் மற்றும் ஆன்மாவாக விளங்குகிறது. இது அரசை அழிக்காமல் இறையாண்மையை மாற்றித்தர முடியாததாக விளங்குகிறது.

**ஒற்றுமை மற்றும் எக்காலத்திலும் நீடித்திருக்கும் தன்மை** (Unity and Everlasting):

- இறையாண்மையின் தனித்தன்மை அதன் ஒற்றுமையில் ஒன்றியுள்ளது. இறையாண்மை என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் செயல்படுவதில்லை. மாறாக அது அரசு இயங்கும் வரை நீடித்திருக்கும் அழியாததன்மை கொண்டதாகும்.

**பிரிக்கமுடியாதது** (Indivisibility)

- இறையாண்மை என்பது பிரிக்க முடியாத தன்மையைக் கொண்டதாகும். இத்தன்மையே இறையாண்மையின் உயிரோட்டமாக விளங்குகிறது.

**முழுமைத்தன்மை** (**Absoluteness**):

- இறையாண்மை என்பது நிபந்தனையற்றதாகவும், அளவிட முடியாததுமாக விளங்குகிறது. மேலும் இது கீழ்பணிதலுக்கு அப்பாற்பட்டது. தான் விரும்பிய எதையும் சாதிக்க கூடியதாக விளங்குகிறது.

ஓர் மரமானது தான் முளை விடுவதை மாற்றத்திர முடியாததைப் போன்று இறையாண்மையையும் மாற்றித்தர இயலாது. இது ஓர் மனிதன் தன்னை அழித்துக் கொள்ளாமல் தனது உயிர் அல்லது ஆளுமையை மாற்றித் தர இயலாததைப் போன்றதாகும்

| |
|---|
| - லைபர் |

**சுயமானத்தன்மை Originality):**

- இறையாண்மை தனது அதிகாரத்தினை சுய உரிமையினை மையமாகக் கொண்டு பெற்றிருக்கிறதே தவிர, யாருடைய தயவிலும் அல்ல.

**இறையாண்மையின் இரண்டு அம்சங்கள் யாவை?**

**உட்புற இறையாண்மை (Internal Sovereignty):**

- இவ்வொரு சுதந்திர அரசிலும் ஓர் மக்கள் சபையானது கட்டளையிடுவதற்கும், கீழ்பணிதலை செயலாற்றுவதற்குமான முழு சட்ட அதிகாரத்தையும் பெற்று காணப்படுகிறது. இவ்வகையான இறையாண்மை, ஓர் அரசுக்கு உட்பட்டு வாழும் அனைத்து தனிமனிதர்கள் அல்லது அவர்கள் சார்ந்த அனைத்து சங்கங்களையும் கட்டுப்படுத்துவதற்குரிய முழு அதிகாரத்தையும் பெற்றுள்ளது.

**வெளிப்புற இறையாண்மை (External Sovereignty):**

- எளிமையாகக் கூறவேண்டுமெனில் வெளிப்புற இறையாண்மை என்பது தேசிய விடுதலையாகும். அனைத்து நாடுகளும் தங்கள் வெளியுறவு கொள்கையை நிர்ணயிப்பதற்கும், அதிகாரம் படைத்த கூட்டணியோடு இணைவதற்கும் முழு அதிகாரம் பெற்று செயல்படுகின்றன. ஒவ்வொரு அரசும் ஏனைய அரசுகளை சாராமல் சுதந்திரமாக இயங்குவது வெளிப்புற இறையாண்மை எனப்படும்.

| |
|---|
| மக்கள் இறையாண்மை எனப்படுவது பெரும்பான்மை வாக்காளர்களின் அதிகாரமாகும். மேலும் இவ்வகை அதிகாரமானது, வாக்குரிமை செயல்படக்கூடிய நாட்டில் வாக்காளர்கள் பல்வேறு வழிமுறைகளின் வாயிலாக வெளிப்படுத்தும் விருப்பமாகும் - கார்னர் (னுச. புயசநெச) |

**இறையாண்மையின் வகைகள்:**

**"நடைமுறை மற்றும் சட்டப்படியான இறையாண்மை"**

**நடைமுறை இறையாண்மை (De-facto sovereignty)**

இவ்வகை இறையாண்மை சட்ட பூர்வமாக இல்லாது, உண்மையான அதிகாரத்தை பெற்று சட்டத்தை நிறைவேற்றும் இறையாண்மையாகும்.

**சட்டப்படியான இறையாண்மை (De-jure sovereignty)**

இவ்வகை இறையாண்மை உண்மையாக நடைமுறையில் இல்லாது, சட்டபூர்வமாக மட்டுமே காணப்படுவதாகும்.

**இறையாண்மையின் வகைகள்:**

1. பெயரளவு மற்றும் உண்மையான இறையாண்மை
2. சட்ட இறையாண்மை
3. அரசியல் இறையாண்மை
4. மக்கள் இறையாண்மை

| பெயரளவு மற்றும் உண்மையான இறையாண்மை | சட்ட இறையாண்மை | அரசியல் இறையாண்மை | மக்கள் இறையாண்மை |
|---|---|---|---|
| ஆதிகாலத்தில் பல அரசுகளில் முடியாட்சியே இருந்தது. மன்னர்கள் | அரசின் அதிகாரத்துவமானது இறுதிக் கட்டளைகளை | பிரதிநிதித்துவ மக்களாட்சியில் அரசியல் இறையாண்மை | மக்கள் இறையாண்மை என்பது பொது மக்களை மேலான தன்மையுடையவர்களாக |

| | | | |
|---|---|---|---|
| உண்மையான இறையாண்மையைப் பெற்று ஆண்டு வந்தனர். | வெளியிட சட்டப்படியான அதிகாரம் உண்டு. | என்பது ஒட்டுமொத்த மக்களையும் குறிப்பதாகும். அதாவது வாக்களர் முறைமை மற்றும் பொதுக் கருத்தாகும். | பாவிக்கின்றது. |
| பிரெஞ்சு புரட்சி (1789) முடியாட்சியை முடிவுக்கு கொண்டு வந்த ஒரு வரலாற்று நிகழ்வாகும். இந்த புரட்சி அச்சூழ்நிலையை மாற்றியமைத்தது | சட்ட அதிகாரத்துவம் படைத்தவர்கள் மூலம் சட்டத்தை நிறைவேற்றி செயல்படுத்துவதால் இது சட்ட இறையாண்மை ஆகும். | அரசியல் இறையாண்மை என்பது பொது மக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் பெற்ற வர்க்கத்தை குறிப்பதாகும். | ஆதிகாலங்களில் மக்கள் இறையாண்மையானது, முடியாட்சியின் ஏதேச்சதிகாரத்தை எதிர்க்கும் ஆயுதமாக விளங்குகிறது. |
| மன்னர் பெயரளவிலும், மந்திரிசபை உண்மையான இறையாண்மையையும் பெற்றிருந்தது. | சட்ட இறையாண்மை எப்போதும் உறுதியாகவும், ஆற்றல் படைத்ததாகவும் இருப்பதுடன் இறையாண்மையாளரின் அதிகாரம் முழுமையாகவும் மேலானதாகவும் விளங்குகிறது. | | |

ஜான் ஆஸ்டின் (1780 – 1859) இங்கிலாந்து நாட்டை சார்ந்த சட்ட வல்லுனரான இவர் சட்ட இறைமைக்கு தன்னுடைய நீதிபரிபாலனமும் விரிவுரைகள் (1832) என்ற நூலில் விளக்கம் அளித்துள்ளார் இவர் ஒருமைவாத இறையாண்மை கோட்பாட்டின் தீவிர ஆதரவாளர் ஆவார்.

**பன்மைவாதம் என்றால் என்ன?**

- பன்மைவாதம் என்பத ஒருமைவாத இறையாண்மைக் கோட்பாட்டை எதிர்த்து உருவான வலிமை வாய்ந்த இயக்கமாகும். இவ்வகை இறையாண்மை அரசினுடைய மேலான மற்றும் அளவில்லாத அதிகாரத்திற்கு வகை செய்கின்றது.

- அரசிற்கு முன்னரே, பல சமூக, அரசியல், பண்பாடு மற்றும் பொருளாதார சார்ந்த அமைப்புகள், சமுதாயத்தில் அங்கம் வகித்து இருக்கின்றன. உதாரணத்திற்கு குடும்பம் மற்றும தேவாலயங்கள் அரசு தோன்றுவதற்கு முன்பே செயல்பட்டு வந்தன.

**பன்மைவாதக் கோட்பாட்டின் சிந்தனையாளர்கள்:**

- ஹெரால்ட் ஜெ. லாஸ்கி (ர்நசழடன து. டயளமை)
- ஜெ.என். பிக்கீஸ் (து.ே குபைபளை)
- எர்னஸ்ட் பார்க்கர் (நுசநௌவ டீயசமநச)
- ஜி.டி.ஹெச். கோல் (பு.னு.ர். ஊழடந)
- மேக் ஐவர் (ஆயஉ ஐஎநச)

**பன்மைவாதக் கோட்பாட்டின் தோற்றம்:**

- மக்கள் நல அரசானது மக்களின் தேவைகளை நிறைவேற்றாத போது, புரட்சிகளையும், எதிர்நடவடிக்கைகளையும் சந்தித்து இருக்கிறது. இப்படிப்பட்ட எதிர்வினை என்பது மேலான

மற்றும் இறையாண்மை மிக்க அரசுக்கு எதிராகத் தோன்றியதால் புரட்சி ஏற்பட்டு அதன் விளைவாகப் பன்மைவாதம் மலர்ந்தது.

**பன்மைவாதம் முக்கியமானதா?**

- பன்மைவாதம் என்பது, கூட்டமைப்புகளின் முக்கியத்வத்தையும், அதன் சுயாட்சி கோரிக்கையையும் தாங்கி நிற்கிறது.
- மக்காட்சி மலர வேண்டுமெனில், இறையாண்மை மிக்க அரசானது சட்ட அதிகாரத்துவத்திற்கு கட்டுப்படாததாக இருத்தல் அவசியமாகும்.
- இறையாண்மையில் ஏற்படும் பிரிவினைகள் என்பது அதன் அழிவுக்கு வழிவகுப்பது உறுதியாகிறது. இறையாண்மை இல்லாத தருணத்தில் சமுதாயத்தில் அமைப்பெதிர்வாத சூழலே இருக்கும்.

**பன்மைவாதத்தின் மீதான குற்றச்சாட்டுகள் யாவை?**

- இறையாண்மை மிக்க அரசு ஒற்றுமையை ஏற்படுத்தி, சமுதாயத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் அனைத்து கூட்டமைப்புகளையும் ஒன்றுபடுத்தி ஒழுங்குமுறைப்படுத்துகிறது.
- பன்மைவாத நம்பிக்கைக்கு ஒவ்வாததாக அரசே சட்டங்களை இயற்றுகிறது.
- கூட்டமைப்புகளின் எண்ணிக்கை மிகுதியாக அதிகரிக்கும் பட்சத்தில், மக்களை பாதுகாப்பதற்கு அரசின் தேவை இன்றியமையாததாகிறது.

**ஜான் ஆஸ்டினின் இறையாண்மை கோட்பாடு:**
**கோட்பாட்டின் மறு பெயர்கள்:**

- முழுமை இறையாண்மை கோட்பாடு
- ஒருமைவாத இறையாண்மை கோட்பாடு
- பன்மைத்துவமில்லாத கோட்பாடு
- ஒற்றைக்கோட்பாடு

| **இந்திய அரசமைப்பு மற்றும் இறையாண்மை:** |
|---|
| இந்திராகாந்த ஏள ராஜ்நாராயணன் (1975) வழக்கில், “இந்தியா என்பது, இறையாண்மை பொருந்திய, மக்களாட்சிக் குடியரசு என்றும், இதுவே அடிப்படைக் கூறாக அரசமைப்பின்படி காணப்படுகிறது” என்றும் கூறியுள்ளது. மேற்கூறியவற்றின் மூலம், இந்திய அரசமைப்பின்படி இறையாண்மை என்பது அரசமைப்பின் முக்கிய அம்சமாக விளங்குவதுடன் முகப்புரையின் மூலமாக மக்களே இறையாண்மை மிக்கவர்கள் என்பது தெரியவருகிறது. கருங்கக்கூறின், இறையாண்மை என்பது அரசமைப்பைச் சார்ந்துள்ளது. மக்களே அத்தகைய அரசமைப்பின் இறுதி அதாரமாக விளங்குகின்றனர். |

## சமத்துவம்

**அறிமுகம் :**
**சமத்துவத்தினைப் புரிந்து கொள்ளுதல்**

மனிதர்கள் அனைவரும் சமம் என்ற கருத்து இன்று வரை புரியாத புதிராகவே விளங்குகிறது. சமத்துவத்தை விரும்புகின்ற நாடானது சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சட்டங்களை உருவாக்குகிறது. வளர்ந்த நாடானாலும், வளர்ச்சிகுன்றிய நாடானாலும், சமத்துவம் தொடர்பான சட்டம் போதுமானதாக இல்லை. பன்மைத்துவ சமுதாயம் நிலைநாட்டப்பட்டுவிட்டதால் சமத்துவ சட்டம் அதிகமாக எதிர்க்கப்படுகிறது. அரசியல் கோட்பாட்டில் அமைந்துள்ள சுதந்திரம் மற்றும் உரிமைகள என்ற கொள்கைகள் சமத்துவம் என்ற மூன்றாவது கொள்கை அமைவதற்குக் காரணமாக உள்ளன. உரிமைகள் என்பவை குடிமக்களுக்கும், மக்கள் குழுமங்களுக்கும் அரசால் விநியோகம் செய்யப்படுவதை சமத்துவ கொள்கையே நிர்ணயிக்கிறது.

- சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவது என்பது நடைமுறையில் சாத்தியமில்லாத கற்பனைவாத நம்பிக்கையாகத் தெரிந்தாலும் அதனைப் புறக்கணிக்கும்பட்சத்தில், அமைப்பெதிர்வாதமும், குழப்பமும் ஏற்பட்டு மக்கள் நல அரசு என்பது பொருளற்றதாகிவிடும்.
- மாறுபட்ட பின்னணியிலிருந்து படிக்கும் மாணவர்களுக்கு சமத்துவம், சமத்துவமின்மை, சமூகம் பற்றிய கருத்துகளை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது.
- பெண்கள், சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்டோர், மாற்று மொழி சார்ந்த குழுமங்கள், போன்றோரின் சமத்துவத்திற்கான போராட்டங்களின் தேவையினை கண்டறிதல்.
- தேசத்தின் குடிமகனாக நீதியை நிலைநாட்டி சமத்துவத்தை உருவாக்க தனிமனிதர்களின் பங்கேற்பினை மேம்படுத்தவும், தேசிய இலக்காக இதை நிர்ணயிப்பது அவசியமாகும்.

ஒரு நாட்டின் மக்களுக்கு உரிமைகள் சரிசமமாக வழங்கப்பட்டாலும், அதனை நிர்ணயிக்கும் காரணியாக சமத்துவமே செயல்படுகிறது. எந்த அடிப்படையில் அரசு அல்லது பொது அதிகாரத்துவம் குடிமக்களையும், தனிமனிதர்களையும், மக்கள் குழுமங்களையும் வெவ்வேறு விதமாக நடத்துகிறது? சமத்துவத்தைப் பற்றி அலசுகிறபோது, வெவ்வேறு கால கட்டங்களில் வேறுபட்ட பரிதல் இருந்திருக்கிறது. சுதந்திரத்துவத்தின் பார்வையில், பொருளாதார சமத்துவத்தைவிட, சட்ட மற்றும் அரசியல் சமத்துவம் ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. அதுவே சமதர்ம மற்றும் மார்க்சிய கொள்கை கட்டமைப்பிலான பார்வையில் அணுகுகிறபோது பொருளாதார சுதந்திரம் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. பெண்ணியவாதிக்கு பாலின சமத்துவமும், சாதி அடிப்படையிலான இந்திய சமுதாயத்தில் சமூக சமத்துவமும் முக்கியத்துவம் பெறுகின்றன.

**சமத்துவம் என்பதன் பொருள் :**

சமத்துவம் என்பது “இக்குவாலிஸ்” (யநயரயடளை) என்ற வார்த்தையிலிருந்து உருவானதாகும். இது “நியாயமான” என்று பொருள்படுகிறது. ஒரே மாதிரியான உரிமைகள், சலுகைகள், நிலைகள், வாய்ப்புகள் மற்றும் நடத்தப்படும் முறைகள் போன்றவை, சமூகத்தில் மக்களுக்குச் சமமான உரிமையுடன் கிடைத்தல் ஆகியவை சமத்துவத்தை குறிப்பதாகும். மேலும் சமத்துவம் பங்கீட்டு கொள்கையாக பாவிக்கப்பட்டு உரிமைகள், வாய்ப்புகள், நடத்தும் முறைகள் ஆகியவை பயனாளிகளுக்கு நியாயமான முறையில் வழங்கப்படுதலைக் குறிக்கிறது.

மேலும் பங்கீட்டுக் கொள்கை என்பது, அனைவரையும், அனைத்து சூழ்நிலைகளிலும் ஒரே மாதிரியாக நடத்துவதல்ல, மாறாக சமமாக இல்லாதவர்களை சமமற்ற வகையில் நடத்துதலும் சமத்துவ கொள்கையில் ஒரு அம்சமாகும். ஆகவே சமத்துவம் என்பது சம நீதியை அடிப்படையாகக் கொண்டதாகவும் விளங்குகிறது.

**சமத்துவத்தின் முக்கியத்துவம்**
**ஏன் சமத்துவம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது?**

சமத்துவ கொள்கையானது, மனிதர்களை, நிறம், பாலினம், இனம், தேசம் போன்றவர்களின் பாகுபாடு காட்டாமல் சமமான மதிப்புடன் நடத்தும் அரசியல் லட்சியமாக சமத்துவம் விளங்குகிறது. மனிதநேயம் எவ்வாறு பொதுவானதோ, அதே போன்று சகமனிதர்களை மரியாதையுடனும், மனிதாபிமானத்துடனும் நடத்த வேண்டியது அவசியம் என சுதந்திரம் வலியுறுத்துகிறது. இம்மனிதநேய நம்பிக்கையே அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் உருவாகக் காரணமாக அமைந்தது.

சமூக அமைப்புகளையும், அரசுகளையும் எதிர்த்துப் போராட சமத்துவ முழக்கம் மிகவும் உதவிகரமாய் இருந்தது. ஏனெனில் நவீனயுகத்தில் பணி, செல்வவளம், நிலை மற்றும் சலுகை அடிப்படையில் தற்பொழுதும் பிரிவினை இருக்கத்தான் செய்கிறது.

18-ம் நூற்றாண்டில் நிலப்பிரபுத்துவ ஆட்சியையும், முடியாட்சியையும் எதிர்த்து, 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்'' என்ற முழக்கத்தை பிரெஞ்சு புரட்சியாளர்கள் ஓங்கி முழங்கினர். 20-ம் நூற்றாண்டில் ஆசிய மற்றும் ஆப்பிரிக்க கண்டங்களில், சமத்துவக் கொள்கையை நிலைநாட்டக் காலனியாதிக்கத்திற்கு எதிராக புரட்சி நிகழ்த்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, மேற்கூறிய சமுதாயங்களில் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்களும், பெண்களும் தங்களின் சமத்துவத்திற்காக புரட்சியை மேற்கொண்டனர்.

சமத்துவம் என்பது தற்பொழுது உலகெங்கிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மாபெரும் இலட்சியவாதமாக உலக அளவில் சட்டங்களிலும், அரசமைப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான புரட்சிகளும், எழுச்சிகளும் ஆங்காங்கே எழுந்தபோதிலும் சமத்துவமின்மை என்பது உலக சமுதாயத்தில் தற்பொழுதும் உள்ளது என்பதே வெளிப்படையான உண்மை ஆகும். அனைத்து நாடுகளிலும் வீடு மற்றும் வசதிமிக்க வாழ்க்கைக்கு நடுவே சரிவர பராமரிக்கப்படாத கழிவறைகளும், குடிநீரற்ற நிலையும் கொண்ட பள்ளிகள் உள்ளன. உணவை வீணடிக்கும் சிலரும், பசிக்கொடுமையால் வாடும் சிலரும் இருக்கின்ற நிலை பலவித சங்கடங்களை அளிக்கிறது. சட்டப்படியான உத்திரவாதங்களுக்கும், நடைமுறையில் நாம் பார்ப்பவற்றிற்கும் இடையே நிறைய வேறுபாடுகளைக் காணலாம்.

இந்தியா, தன் அரசமைப்பின் மூலமாக பணக்காரவர்க்கத்திற்கும், ஏழை வர்க்கத்திற்கும் இடையேயான இடைவெளியினை குறைப்பதற்கு இயன்ற வரையில் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

**3.2.3. சமத்துவத்தின் பரிமாணங்கள் :**

**சமத்துவம் என்றால் என்ன?**

மனித வாழ்க்கையானது பல்வேறு வேற்றுமைகளுக்கிடையில் அமைந்துள்ளது. மனிதர்களுக்கிடையே நிறம், இனம் போன்ற வேற்றுமைகள் இருப்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. மனசாட்சியின் அடிப்படையில் தவறானது என தெரிந்தபோதிலும், சம மனிதர்களிடையே மரியாதையும், அங்கீகாரமும் மறுக்கப்படுவது வேதனைக்குரிய நிகழ்வு ஆகும். எந்த ஒரு சமுதாயமும் அனைத்து மக்களையும் சரிசமமாக நடத்துவது இல்லை. மனிதர்களுக்கிடையேயான தேவைகள், திறமைகள் மாறுபடுகின்ற போழுது அனைத்து மக்களையும் சரிசமமாக பார்ப்பதும், பாவிப்பதும் இயலாததாகக் கருதப்படுகிறது. சமமாக உள்ளவர்கள் சமமில்லாமல் நடத்தப்படுவதும், சமமில்லாதவர்களை சமமாக நடத்துவதும், அநீதிக்கு வழி வகுக்கின்றன. இயற்கை அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளுக்கு அப்பாற்பட்டு சமூக ரீதியான பிறப்பு, செல்வவளம், அறிவு, மதம் போன்றகைளில் சமத்துவமின்மை காணப்படுகிறது.

எவ்வித வரலாற்றின் இயக்கமும், சமத்துவத்தை நோக்கிச் செல்வது இல்லை. ஏனெனில் ஓர் ஏற்றத்தாழ்வு நிலையை சரிசெய்கின்றபோது மற்றொரு ஏற்றத்தாழ்வு நிலை உருவாகுகிற சூழ்நிலை நிலவுகிறது. இதன் விளைவாக அறியப்படுவது என்னவென்றால், அழிக்கப்படுகின்ற ஏற்றத்தாழ்வுநிலை நியாயமற்றதாகவும், புதிதாக உருவாக்கப்படுகின்ற நிலை நியாயமானதாகவும் கருதப்படுகிறது. இதனால் அரசியல், சமூக மற்றும் கல்வி சமத்துவத்தை வலுப்படுத்தவும், ஒருமுகப்படுத்தவும், பதிய தலைமுறை கடமைப்பட்டிருக்கிறது. சுதந்திரத்தைப்போன்று, சமத்துவ கொள்கையும் நேர்மறை மற்றும் எதிர்மறை சமத்துவம் என்பது யாருக்கும் எந்தவித சலுகைகளும் காட்டாத சமூக நிலையையும், நேர்மறை சமத்துவம் என்பது அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் உள்ள சமூக நிலையையும் பற்றியதாகும்.

**லாஸ்கியின் (டுயளமை) கூற்றுப்படி சமத்துவத்தின் விளக்கம்:**

- ❖ இது சலுகைகள் இல்லாத நிலையாகும். இது சமுதாயத்தில் வாழும் ஒருவருடைய விருப்பமானது வேறொருவருடைய விருப்பத்திற்கு சமமாகக் கருதப்படுகின்ற சூழ்நிலை ஆகும். சமுதாயத்தில் வாழும் அனைவருக்கும் உரிமைகள் சமமானதாக வழங்கப்படம். இதுவே சமத்துவ உரிமை ஆகும்.
- ❖ போதுமான வாய்ப்புகள் அனைத்து மக்களுக்கும் வழங்கப்படுதல். ஒவ்வொரு தனிமனிதனும் தன் ஆளுமைத்தன்மையை உணருவதற்கு வாய்ப்பான சூழ்நிலைகளை உருவாக்கித்தருதல்.
- ❖ சமூகத்தின் பலன்கள் அனைவருக்கும் சமமான அளவில் கிடைக்கும்படியாகவும், எந்தவொரு அடிப்படையிலும் யாரையும் இதனை அடையவிடாமல் தடுக்கக்கூடாது. ஒரு மனிதனின் பிறப்பினை அடிப்படையாகக் கொண்ட ஏற்றத்தாழ்வுகள், ஆகியவை பாரம்பரியம் மற்றும் மரபுவழி காரணங்களின் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் அர்த்தமற்றவையாகும்.
- ❖ பொருளாதார மற்றும் சமூக சுரண்டல் இல்லாத சமுதாயமாக விளங்குதல்.

> பெருமளவில் இருக்கக்கூடிய ஏழை வர்க்கமும், சிறியளவில் வாழும் பணக்காரவர்க்கமும் உள்ள அரசில், அரசாங்கத்தின் செயல்பாடுகள் பணக்கார வர்க்கத்தின் உடைமைகளை பாதுகாக்கும் பொருட்டே அமையும்.
>
> - ஹெரால்ட் லாஸ்கி (ர்நசழடன டுயளமை)

**பார்க்கரின் கூற்றுப்படி சமத்துவத்தின் கருத்தாக்கம் :**

- ❖ அனைவருக்கும் அடிப்டை சமத்துவம்
- ❖ சமமான வாய்ப்புகள்.
- ❖ வாழ்வுக்கான சமதளத்தை உருவாக்கும் சமத்துவ நிலைகள்.
- ❖ விளைப்பயன்களில் சமத்தவத்தினை ஏற்படுத்துதல்.

**வாய்ப்புகளில் சமத்துவம் :**

சமத்துவம் என்பது அனைத்து மக்களுக்கும் சம உரிமைகளையும், வாய்ப்புகளையும் அளித்து அவர்களின் இலக்குகள் மற்றம் இலட்சியங்களை அடைவத்றகுண்டான திறமைகளையும், திறன்களையும் வளர்ப்பது ஆகும்.

**இயற்கை சமத்துவமின்மை மற்றும் சமூக சமத்துவமின்மை :**

இயற்கை சமத்துவமின்மை என்பது மக்களுக்கு இடையேயான திறன் மற்றும் திறமைகளுக்கு இடையேயான வேறுபாட்டினால் உருவாகிறது. இது பொன்ற சமூக சமத்துவமின்மையானது. மக்களுக்கு வழங்கப்படும் சமமில்லாத வாய்ப்புகள் மற்றம் சில சமுதாயக் குழுக்களினுடைய சுரண்டலின் மூலமாக உண்டாக்கப்படுகிறது. இயற்கை சமத்துவமின்மை என்பது பிறப்பிலிருந்து உருவாகின்ற பல இயல்புகள் மற்றம் திறமைகளின் வெளிப்பாடாகும்.

ஆனால் சமூக சமத்துவமின்மை என்பத சமுதாயத்தினால் சமமற்றமுறையில் நடத்தப்படுவதால் உண்டாக்கப்படுகின்ற நிலையைக் குறிக்கின்றது. மேலும் இவ்வகை சமத்துவமின்மை என்பது இனம், ஜாதி, மதம், பாலினம், நிறம் போன்றவற்றின் அடிப்படையில் சமுதாயத்தில் மக்களை வேற்றுமைப்படுத்தி நடத்துவதால் உருவாகிறது. பல நூற்றாண்டுகளாக பெண்களுக்கான சம உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அதேபோல, அடிமைத்தனம் பற்றிய எதிர்க்கேள்வி கேட்கப்படும்வரை, கறுப்பின மக்கள், அமைகளாக நடத்தப்பட்டார்கள். மேலும் பிறப்பிலேயே உடல் ஊனமுற்றோராக பிறந்த சிலர் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவி கொண்டு இயல்பான மக்களுக்குச் சமமாக சமூகத்திற்குத் தங்களின் பங்களிப்பினைச் செய்கின்றனர். சமீபத்தில் மறைந்த ஸ்டீபன் ஹாக்கிங்ஸின் இயற்பியல் கல்விக்கான பங்களிப்பு அவருடை உடல் ஊனத்தையும் தாண்டிய குறிப்பிடத்தகுந்த பங்களிப்பாகும். அரசியல் தத்துவஞானிகள் பலர் தங்களின் கோட்பாடுகள், தத்துவங்கள் மற்றும் சித்தாந்தங்கள் மூலமாக சமமான மற்றும் நியாயமான சமூகத்தினை உருவாக்கும் வழிமுறைகள் பற்றி எழுதியுள்ளனர்.

## சமத்துவத்தின் வகைகள் (Types of Equality) :

| சமத்துவத்தின் பல்வேறு வகைகள் யாவை? |
|---|
| **குடிமை சமத்துவம்** |
| • மதம், மற்றும் நம்பிக்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடு இல்லாதிருத்தல் |
| **அரசியல் சமத்துவம்** |
| • அதிகாரத்துவத்தை அணுகுவதற்கான வாய்ப்பு |
| • வாக்குரிமை |
| **சமூக சமத்துவம்** |
| • சமமான வாய்ப்புகள் |
| • சலுகைகள் |
| **இயற்கை சமத்துவம்** |
| • இயற்கை உரிமைகள் |
| **பொருளாதார சமத்துவம்** |
| • செல்வ வளம் |

## சமத்துவத்தின் வகைகள் (Types Equlity)

### சமூக சமத்துவம்

சமூக சமத்துவம் என்பது பிறப்பு, சாதி, மதம், இனம், நிறம், பாலினம் மற்றும் சமூக நிலை போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டு உரிமைகள், சலுகைகள் மற்றும் வாய்ப்புகளை வழங்குதல், பாகுபாடில்லாத சமூக அமைப்பு போன்றவை ஆகும். ஒவ்வொருவருக்கும், தங்கள் ஆளுமைகளை மேம்படுத்துவதற்கு சமமான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். சமூக சமத்துவம் என்பது சில முக்கிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. அவை, சமூக நிலையை அடிப்படையாகக் கொண்ட பாகுபாட்டினை நீக்குதல், சிலருக்கு மட்டுமே உரித்தான சிறப்புச் சலுகைகளை நீக்குதல் மற்றும் அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது ஆகியவை ஆகும்.

பிரான்சு நாட்டின் ''மனிதர்கள் மற்றும் குடிமக்களின் உரிமைப் பிரகடனம்'' குறிப்பிடுகையில், ''மனிதர்கள் சுதந்திரமாக பிறந்த உடன் எப்பொழுதும் சுதந்திரமான மற்றும் சமமான உரிமைகளை பெற்றிருக்கிறார்கள்'' என்று கூறுகிறது. 1948, டிசம்பர் 10-ஆம் நாளன்று வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் அச்சபையின் மனித உரிமைகள் பிரகடனம் உலகமக்களின் சமூக சமத்துவத்தை உறுதி செய்துள்ளது.

| |
|---|
| அகிம்சை அடிப்படையிலான அமெரிக்க குடிமை உரிமைகள் இயக்கத்தின் ஈடு இணையற்ற தலைவராக மார்ட்டின் லூதர்கிங் ஜீனியர் கருதப்படுகிறார். 1950 மற்றும் 1960-களில் சமூக நீதிக்காக கறுப்பினத்தவர்கள், அமெரிக்காவில் ஏற்படுத்திய சம உரிமைகளைப் பெறுவதற்கான புரட்சியே குடிமை உரிமைகள் இயக்கமாகும். இந்தியாவில் டாக்டர் ர்.பி.ஆர். அம்பேத்கர் துவங்கிய கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கான இயக்கமானது வரலாற்று சிறப்புமிக்கதாக இந்தியாவில் கருதப்படுகிறது. மேலும் இவ்வியக்கம் சமூக சமத்துவத்திற்கான விதையாகும். |

### குடிமை சமத்துவம்

சிவில் என்கின்ற வார்த்தை சிவில்ஸ் (ஊளைடைள) அல்லது சிவிஸ் (ஊளைளை) என்ற லத்தீன் மொழிச்சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டு ஆங்கிலத்தில் ''குடிமக்கள்'' எனப்பெயர் பெறுகிறது. குடிமை சமத்துவம் எனப்படுவது சமமான குடிமையுரிமைகளும், பிற சுதந்திரங்களும் ஒரு குடிமகனுக்குத் தரப்படுவதாகும். குடிமை சமத்துவம் என்பது அனைத்து குடிமக்களுக்கும் ஒரே மாதிரியான குடிமை சுதந்திரங்கள் மற்றும் குடிமை உரிமைகளை உள்ளடக்கியதாகும். சமுதாயத்தில் உயர்த்தோர், தாழ்த்தோர், ஏழை பணக்காரர், ஜாதி, இன, மத அடிப்படையில் வேறுபாடு காட்டுதல் கூடாது என்பதாகும்.

**அரசியல் சமத்துவம்**

அரசின் நடவடிக்கைகளில் பங்குபெறுவதற்கு எத்தகைய பாகுபாடுமின்றி அனைத்து மக்களுக்கம் அளிக்கப்படும் சமமாந உரிமைகள் அரசியல் சமத்துவம் எனப்படுகிறது. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்பதன் மூலம் இந்த அரசியல் உரிமை உறுதி செய்யப்படுகிறது.

**குடிமக்களின் அரசசியல் உரிமைகளை உறுதி செய்யும் பிற காரணிகள்**

- வாக்குரிமை
- தேர்தலில் போட்டியிடும் உரிமை
- அரசாங்கப்பதவிகளை வகிப்பதற்கான உரிமை
- அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக மனு செய்தல் மற்றும் பொதுக் கொள்கைகள் மீதான விமர்சனம் செய்யும் உரிமைகள்.

அரசியல் சமத்துவம் என்பது உண்மையில் மக்களாட்சி பரிசோதனைகளுக்கான தேர்வாகும். அரசியல் அதிகாரத்தை மக்களிடையே பரவச் செய்வதற்கு அரசியல் சமத்துவம் மட்டுமே போதாது. மேலும் சமூக, பொருளாதார சமத்துவம் என்பது அரசியல் சமத்துவத்தை அடைய அவசியமாகிறது.

**இயற்கைச் சமத்துவம்**

மனிதன் பிறக்கும்போதே ஜாதி, மதம், இனம், மொழி, நிறம். பால், பிறப்பிடம், மற்றும் இருப்பிடம் போன்ற ஏற்றத்தாழ்வு இன்றி இருக்கும் நிலையே இயற்கை உரிமை என்கிறோம்.

**பொருளாதார சமத்துவம் :**

பொருளாதார சமத்துவம் என்பதை அனைத்து மக்களும் தங்களை முழுமையாக மேம்படுத்திக் கொள்வதற்கு நியாயமான வாய்ப்புகள் இருந்தால் மட்டுமே நியாயப்படுத்த இயலும். தகுந்த வேலை வாய்ப்பு உரிய கூலி, போதுமான ஓய்வு மற்றும் பொருளியல் மேலாண்மையில் சமபங்கு ஆகிய இவையனைத்தும் பொருளாதார சமத்துவத்தினை அர்த்தமுள்ளதாக்குகின்றன.

பேராசிரியர் லாஸ்கி பொருளாதார சமத்துவத்தைப் பற்றிக் கூறும்பொழுது 'அரசியல் சமத்துவம் என்பது பொருளாதார சுதந்திரமின்றி, மெய்மையாவதில்லை என்றும் அப்படியில்லாத நிலையில் வழங்கப்படும் அரசியல் அதிகாரம் என்பது பொருளாதார அதிகாரத்தின் கைப்பாவையாகும்' என்று கூறுகிறார்.

இங்கு பொருளாதார சமத்துவம் என்பது சமமான வாய்ப்புகளை அனைத்து மக்களுக்கும் அளிக்கும்போது பொருளாதாரம் மேம்பாடு அடையும் எனப் பொருள்படுகிறது. மேற்கூறிய முறையானது சமதர்மத்தில் சாத்தியமாகுமேயன்றி இலட்சியவாத்தின் அடிப்படையில் முதலாளித்துவத்தில் நடக்காது எனலாம்.

**பொருளாதார சமத்துவமின்மையும், அரபு நாடுகளில் எழுச்சியும்**

ஒரு நாட்டின் நிலைத்தன்மைக்கு வறுமை என்னும் பிரச்சனை அச்சுறுத்தலாக இரக்கிறது. உதாரணத்திற்கு துனீயாவில் நடைபெற்ற 'மல்லிகைப்' புரட்சியில் ஆச்சரியப்படும் விதமாக, அந்நாட்டு மக்கள் ஏதேசசதிகார ஆட்சியை எதிர்த்து அரபு உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. 29 நாட்கள் நடந்த புரட்சியில், அந்நாட்டில் 23 வருடங்கள் ஆட்சி செய்த 'பென் அலி' என்பவரின் சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. முஹமத் புவாஸ்ஸி என்ற வேலைவாய்ப்பு கிடைக்காத மனிதரை காவலர்கள் துன்புறத்தியதால் அவர் டிசம்பர் 17, 2010-ஆம் நாள், சிடி புஸித் என்ற துனீய நகத்தல் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டது ஒட்டுமொத்த புரட்சிக்கு வித்திட்டது. மக்கள்

இதன் விளைவாக 'மல்லிகைப் புரட்சியை'' தொடங்கினார்கள். (மல்லிகை, துனீரியாவின் தேசிய மலராகும்). பொருளாதார வாய்ப்பில்லாமை மற்றும் தொடர்ச்சியான காவலர் துன்புறுத்தலிலும் சிக்கித் தவித்த, அந்நகரத்து மக்கள், ''ஒரு கையில்அலைபேசியையும், மற்றொன்றில் பாறையையும்'' கொண்டு புரட்சியை மேற்கொண்டனர்.

கோபம், விரக்தி, இணக்கமற்ற சூழ்நிலை மற்றும் மக்களாட்சி கோரிக்கைக்கா ஒன்றிணைந்த இந்த அலையானத அரபு நாடுகள் அத்தனையையுமே உலுக்கியது. அரபு உலகத்தல் எழுந்த இந்த கிளர்ச்சிப் போராட்டம் மக்களாட்சிக்கும், சர்வாதிகாரத்திற்கும் இடையே நடந்த போராட்டம் மட்டுமல்ல, மாறாக இப்புரட்சியானது நியாயமற்ற பொருளாதார முறைமையை எதிர்த்து உண்டான மாபெரும் எதிர்ப்புப் புரட்சியாக அமைந்தது.

– ப்ரெண்ட்லைன், பிப்ரவரி 26, 2011.

**வாய்ப்பு மற்றும் கல்வியில் சமத்துவம் :**

வாய்ப்பு மற்றும் கல்வியில் சமத்துவம் என்பதன் பொருள் அரசு என்பது அனைத்து மக்களுக்கும் சமமான மற்றும் ஒரே மாதிரியான வாய்ப்புகள் அளிக்க வேண்டும் என்பதாகும். அனைத்துக் குடிமக்களுக்கும் தங்களது ஆளுமைகளை மேம்படுத்திக் கொள்வதற்காக சமமான மற்றும் ஒரே மாதிரியான வாய்ப்புகள் அரசினால் அளிக்கப்படவேண்டும். சாதி, மதம், இனம், மொழி, ஏழை, பணக்காரர், பாலினம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட பாகுபாடுகள் நீக்கப்பட வெண்டும். இந்திய அரசமைப்பு அனைத்து மக்களுக்கும் சமமான வாயப்புகள் மற்றம் சமமான கல்வியை அளிக்கிறது.

''பசியோடு வாழும் ஒரு மனிதனுக்கு சுதந்திரம் என்ன நன்மையை அளிக்கமுடியும்? அவனால் அந்த சுதந்திரத்தை சாப்பிடவோ அல்லது குடிக்கவோ முடியாது.

- தாமஸ் ஹாப்ஸ் (வுாழஅயள ர்ழடிடிநள)

**3.2.4 சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்கும் இடையேயான உறவுகள் :**

சமத்துவம் இல்லாமல் சுதந்திரதந்திற்கு எந்தவொரு விழுமியமும் கிடையாது. இவற்றை பல்வேறு பார்வைகளில் புரிந்து கொண்டு அரசயில் சிந்தனையாளர்களான ஆக்டன் பிரபு, டி டாக்வில், ஹெரால்டு லாஸ்கி (டுழசன யுஉவழஜெ னுந வுழஉஙரநஎடைடந யனெ ர்யசழடன து. டுயளமப) போன்றோர் அறிவார்ந்த விறக்கங்களை அளித்துள்ளனர்.

**வேறுபடுத்தி நடத்துதல் மூலம் எவ்வாறு சமத்துவம் அடையப்படுகிறது?**

ஆக்டன் பிரபு, டி டாக்வில் (டுழசன யுஉவழஜெ னுந வுழஉஙரநஎடைடந) போன்ற அறிஞர்கள் சுதந்திரக் கொள்கையின் ஆதரவாளர்கள் ஆவர். 'சுதந்திரம் இருக்குமிடத்தில் சமத்துவம் இருக்காது எனவும் அதே போல சமத்துவம் இருக்கும் இடத்தில் சுதந்திரம் இருக்காது' என்பது மேற்கூறிய சிந்தனையாளர்களின் கருத்து ஆகும். ஆக்டன் பிரபு (டுழசன யுஉவழஜெ) கூறும்போழுது, ''சமத்துவத்தை நோக்கிய உணர்வுப்பூர்வமான பயணமானது சுதந்திரத்திற்கான நம்பிக்கையை வீணாக்குகறிது'' என்கிறார். ஹெரால்ட் லாஸ்கி சுதந்திரத்தைப் பற்றிக் கூறும்பொழுது, ''சுதந்திரமும், சமத்துவமும் ஒன்றுடன் ஒன்று இணைந்து இருப்பது நல்லியல்பு'' எனக் கூறுகிறார். மேலும் அவர் கூறும்பொழுது தடையற்ற சுதந்திரம் அளிக்கப்படும்போது, தனிமனிதர்கள் சக மனிதர்களுக்குத் தீங்கு இழைக்கிறார்கள். இவ்வகை சுதந்திரம் சமுதாயத்தில் குழப்பத்தை உண்டாக்குகிறது என்கிறார். 19-ஆம் நூற்றாண்டில், தனிமனிதத்துவவாதிகள் ''சுதந்திரத்திற்கு'' தவறான வரையறையை அளித்துவிட்டார்கள். அவர்கள் பொருளாதார சமத்துவத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் அரசாங்கத்தின் தாராளமயக் கொள்கைக்கு மட்டுமே அழுத்தம் அளித்தார்கள் என்று ஹெரால்ட் லாஸ்கி கூறுகிறார்.

மேலும் ஹெரால்ட் லாஸ்கி, கூறுகையில் ‘‘எங்கு பணக்கார வர்க்கம் - ஏழை வர்க்கம், படித்தவர்கள் - படிக்காதவர்கள் என்ற பிரிவினை இருக்கிறதோ, அங்கு கண்டிப்பாக முதலாளி, பணியாளர் என்ற வகுப்புவாத நிலையினை காணமுடியும் என்று தெரிவித்துள்ளார்.

‘தனியாருக்கு இடையேயான பரிமாற்றங்கள் அரசாங்க தலையீடுகளான கட்டுப்பாடு, சலுகைகள், வரி, மானியம் போன்றவை இல்லாமல் சுமூகமாகவும், சுதந்திரமாகவும் நடக்கும் பொருளாதார முறைமையே தாராளமயக் கொள்கை (டுயளைளணச குயசசைந) எனப்படும்’’.

மற்றுமொரு பொருளாதார நிபுணரான ஆடம் ஸ்மித், ‘‘முதலாளிகளுக்கும், தொழிலாளர் சங்கத்தலைவர்களுக்கும் இடையே சுதந்திரமான போட்டி நிலவ வேண்டும்’’ என்ற தனிமனிதத்துவவாதிகளின் கூற்றை ஆதரிக்கிறார். அரசாங்கமானது, பொருளாதாரம் தொடர்பான விவகாரங்களில் தலையிடுவதை தனிமனிதத்துவவாதிகள் விரும்புவதில்லை. அரசாங்கத்தினால் தேவை-வழங்கல் சூத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொருளாதாரம் தொடர்பான பிரச்சனைகள் இந்த சூத்திரத்தின் மூலமாக நீங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஐரோப்பாவில் இதன் மூலம் ஆபத்தான விளைவுப் பயன்களை சந்நதிக்க நேரிட்டது.

முதலாளிவர்க்கமானது வாய்ப்புகள் அனைத்தையும் அதிகபட்சமான சுரண்டலுக்குப் பயன்படுத்தினால், ஏழை வர்க்கத்திற்கும், பணக்காரவர்க்கத்திற்குமான இடைவெளி பெரிதும் அதிகமாகிறது. இதனால் உழைக்கும் வர்க்கம் அதிகம் பாதிக்கப்படுவதால் உண்டான பின்விளைவு, தனிமனிதத்துவத்தினை எதிர்க்கவும் அதனால் சமதர்மம் உதயமாகவும் காரணமாகிறது. இவ்வாறு எழுச்சிபெற்ற சமதர்மமானது தனி மனிதத்துவவாதத்தின் கொள்கைகளை மறுக்க ஆரம்பித்தது. இந்த மாற்றம் ‘பொருளாதார சமத்துவமில்லாமல் சுதந்திரம் என்பது பொருளற்றது’’ என்ற நிலை உருவாகக் காரணமாக அமைந்தது.

அரசியல் சுதந்திரம் ஏற்படுவத்றகு பொருளாதார சமத்துவம் மிகவம் அத்தியாவசியமாகிறது. இது சாத்தியம் இல்லாதபோது, அரசாங்கமுறையானது முதலாளித்துவ மக்களாட்சியாக மாறி அதன் விளைவாக தொழிலாளர் வர்க்கம் என்பது வாக்குரிமையை மட்டுமே பெற்று, அதன் மூலம் அவர்களுக்கு எந்தவித பயனுமில்லாமல் போகும் சூழ்நிலை உருவாகும். சுதந்திரமும், சமத்துவமும் சமதர்ம மக்களாட்சியில் மட்டுமே ஒன்றோடு ஒன்றாக இணைந்து பயணம் செய்ய முடியும். சுதந்திரத்திற்கு ஒரே ஒரு தீர்வுதான் உண்டு. அது என்னவெனில் சமத்துவம் மட்டுமே. ‘‘இதனால் சுதந்திரமும், சமத்துவமும் ஒன்றுடன் மற்றொன்றுநெருக்கம் பாராட்டுகின்றன’’ என்று கூறுகிறார் பொல்லார்டு.

**சமத்துவத்தை எவ்வாறு ஊக்குவிக்கலாம்?**

சுதந்திர வாதிகளுக்கும், சமதர்மவாதிகளுக்கும் இடையேயான வேறுபாட்டை நாம் உணரும்பட்சத்தில், சமத்துவ இலக்கை அடையும் வழிமுறையும் நமக்கு தெளிவடைகிறது. பின்வரும் சமத்துவத்தை ஊக்குவிக்கும் வழிமுறைகளைப் பற்றிய பரந்த விவாதம் நம்மை சில முறைகளுக்கு வழிகாட்டுகிறது. அவற்றினைப் பற்றித் தெரிந்து கொள்வோம். அவைகள்,

- முறைசார்ந்த சமத்துவத்தை உருவாக்குதல்.
- வேறுபடுத்தி நடத்துதலின் மூலம் சமத்துவத்தை ஏற்படுத்துதல்.
- உடன்பாடான நடவடிக்கைகள் மூலமட் சமத்துவம்.

**ஆண்ட்ரூ ஹேவுட் (Andrew Heywood) கூறும் பல்வேறுவகை சமத்துவ இலட்சியங்களைப் பற்றிய பார்வை:**

**சுதந்திரவாதிகள் :**

சுதந்திரவாதிகள், நம்புவது என்னவெனில் பிறக்கும்போது அனைத்து மக்களும் சமமாவர். இவர்க்ள நீதிநெறி அடிப்படையில் சமமாகக் கருதப்படுகிறார்கள். இது முறையான சமத்துவத்தை

உணர்த்துவதாகவும், குறிப்பாக சட்ட மற்றும் அரசியல் சமவாய்ப்புரிமை என்றாலும், சமூக சமத்துவம் என்பது சுதந்திரத்தை தியாகம் செய்து பெறக்கூடியதாகும்.

**பழமைவாதிகள் :**

சமூகம் இயற்கையிலேயே படிநிலை அமைப்புடையது என்றும், சமத்துவம் என்பதை எப்போதுமே அடைய முடியாத ஒரு கற்பனை இலக்காக கருதுகின்றனர்.

**சமதர்மவாதிகள் :**

சமதர்மச் சிந்தனையாளர்கள் சமத்துவத்தை அடிப்படையான விழுமியமாகவும், அதிலும் குறிப்பாக சமூக சமத்துவத்தை முக்கியமாக ஒப்புக் கொள்கிறார்கள். சமூக மக்களாட்சி தொடர்பான கருத்தாக்கத்தில் பல பரிமாணங்கள் இரந்தாலும், இவ்வகையான சமத்துவம் நிச்சயமாக சமூக ஒருங்கிணைப்பிலும், சகோதரத்துவத்திலும் கால்தடம் பதிக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

**அமைப்பெதிர்வாதிகள் :**

இவ்வகை கொள்கைவாதிகள் அரசயில் சமத்துவத்தை மையப்படுத்தி தங்கள் கருத்தாக்கத்தை வலிமைப்படுத்தியுள்ளார்கள். அரசியல் சமசத்துவம் தனிநபர் சுதந்திரத்தை வழங்கும் என்றும் அனைத்து விதமான அரசியல் சமத்துவமின்மையும் எதிர்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கிறார்கள். பயன்தரக்கூடிய வளங்களைக் கூட்டு சொத்துடைமை ஆக்குவதன் மூலம் சமூக சமத்துவத்தை அடையலாம் என்பது அமைப்பெதிர்வாத பொதுவுடைமைவாதிகளின் (யுயெசஉாழ-ஊழஅஅரளைவள) நம்பிக்கையாகும்.

**பாசிசவாதிகள் :**

மனித குலமே இன அடிப்படையிலான சமத்தவமின்மையுடன் இருக்கிறது. இவ்வுலகில் இப்பாகுபாடு தலைவர், தொண்டர், நாடுகள் மற்றும் பல இனங்களுக்கு இடையேயும் இவ்வுலகத்தில் காணப்படுகிறது. ஒரு தேசமோ அல்லது இனமோ எதுவானாலும், அதில் அங்கம் வகிக்கும் நபர்கள் சமமாக பாவிக்கப்படுகிறார்கள். அவர்களின் பிரதான அடையாளமே அவர்களைக் கண்டறிய பயன்படுகிறது.

**பெண்ணியவாதிகள் :**

பாலின சமத்துவமே இக்கொள்கைவாதிகளின் குறிக்கோள் ஆகும். ஆண்களுக்கு சமமாகப் பெண்களும் சம உரிமைகள், சமவாய்ப்புகள் பெறுவதோடு மட்டுமல்லாமல், சமூக, பொருளாதார நிலைகளிலும் சம அதிகாரம் பெறுவதை இவர்கள் ஆதரிக்கிறார்கள். ஆனால் இவ்வாறு சமத்துவத்தைக் கோருவது என்பது பெண்கள், ‘‘ஆண்களின் மூலம் அடையானம்’’ காணப்படுவதாக சில முற்போக்கு பெண்ணியவாதிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

**சூழலியல்வாதிகள் :**

உயிரி மைய சமத்துவமானது, வாழ்வின் அனைத்து வடிவங்களும் வாழவும், மலர்ந்து வளம் பெறவும் சம உரிமைக உள்ளது என வலியுறுத்துகிறது.

**இந்திய அரசமைப்பில் சமத்துவம் :**
**இந்திய அரசமைப்பின் சமத்துவக் கருத்தாக்கம் :**

இந்திய அரசமைப்பின் உறுப்பு -14-ன்படி ‘சட்டத்தின்முன் அனைவரும் சமம் அல்லது அனைவருக்கும் சட்டத்தின் மூலம் சமமான பாதுகாப்பு’ அளிக்கப்படுகிறது. இது முறை சார்ந்த சமத்துவமாகவும், முகவுரையில் கூறப்பட்டுள்ளது போல, ‘‘சமமான நிலை மற்றும் வாய்ப்புகளை’’ குறிக்கிறது. மேலும் இது நாட்டின் சட்சடமானது அனைத்து மக்களுக்கும் சமமாகப் பொருந்தும்

என்றும் பிறப்பிடம், சாதி, மதம், மொழி, இனம், பாலினம், நிறம் போன்றவை அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது என்றும் தெரிவிக்கிறது என்றும், இதைப்போல உறுப்பு – 15, உறுப்பு – 14-ஐ உறுதிப்படுத்தும் நோக்குடன் இவ்வகை பாகுபாடுகளைத் தடை செய்துள்ளது. ‘சட்டத்தின்முன் சமம்’ மற்றும் ‘சமமான சட்டப் பாதுகாப்பு’ ஆகியவை இந்திய அரசமைப்பின் உறுப்பு – 21-ன் மூலம் வலிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி ‘எந்தவொரு தனி நபரும், சட்ட நடைமுறையன்றி அவரது வாழ்வு அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தினை இழக்க வைக்க முடியாது’ என்றும் விளக்குகிறது. இதன் மூலம் அறிவது யாதெனில், ஒரு தனிநபரை தண்டிக்க வேண்டும் என்றால், அதை சட்டத்தின் நடைமுறை மூலம் மட்டுமே செயல்படுத்த முடியும். இது போல ஒருதலைபட்சமாகவோ, பாகுபாடான முறையிலோ அல்லது சமமற்ற முறையில் பல தனி மனிதர்களை நடத்துதலோ தவறு ஆகிறது’.

## சுதந்திரம்

மனிதர்களுடைய வளர்ச்சிக்கும், அரசின் மேம்பாட்டிற்கம் சுதந்திரம் அதிமுக்கியமான அடிப்படைக் கூறாகும். முற்காலத்திலும், இடைக்காலத்திலும், இங்கிலாந்து முடியாட்சி மக்களுக்குத் தேவையான சுதந்திரத்தை மறுதலித்தது வரலாற்றுப் பதிவாகும் மக்களின் பொறுமையை சோதித்த முழுமையான முடியாட்சி புரட்சியை சந்திக்க நேரிட்டது. இங்கிலாந்து பேரரசர் ஜான் பணிய நேர்ந்ததுடன் குடிமக்களுக்கு சுதந்திரத்தை அளித்து பதவியை விட்டு விலகியதிற்கு பிறகே இந்த புரட்சி ஓய்ந்தது.

டியூட்டர் மற்றும் ஸ்டுவர்ட் பேரரசர்களுக்குப் பின்னால் வந்தவர்களும் முழுமையான முடியாட்சி முறையைத் தொடர்ந்ததால் ‘உள்நாட்டுப்போர்’ வெடித்தது. சுதந்திர வேட்கையினால் உந்தப்பட்டு இப்போராட்டத்தில் அனைத்து குடிமக்களும் பங்கேற்றனர். சார்லஸ் மன்னர் சிரச்சேதம் செய்யப்பட்டு, பின்னர் க்ரோம்வெல் ஆட்சியில் இருந்தபோதும் கூட மக்களுக்குத் தேவையான அடிப்படை சுதந்திரம் கிடைக்கவில்லை என்பது வரலாற்று நிகழ்வு ஆகும்.

பிரெங்சு குடியரசுகள் என்பவை 1792-ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சிக்கான பிரகடனத்திற்குப் பின்னர் தொடர்ச்சியாக உருவான குடியரசுகளைக் குறிப்பதாகும். இவ்வாறு பிரான்சின் வரலாற்றில் ஐந்து குடியரசுகள் இருந்துள்ளன. முதலாவது பிரெஞ்சு குடியரசு (1972-1804), இரண்டாவது பிரெஞ்சு குடியரசு (1848-1852), மூன்றாவது பிரெஞ்சு குடியரசு (1870-1940), நான்காவது பிரெஞ்சு குடியரசு (1946-1958) என்றும் அதன் பின்னர் ஐந்தாவது பிரெஞ்சு குடியரசு அக்டோபர் 5, 1958-ல் ஏற்படுத்தப்பட்டது. ஐந்தாவது குடியரசானது நலிந்த மற்றும் உட்கட்சி பூசல் சார்ந்த நாடாளுமன்ற அரசாங்கத்திலிருந்து மாற்றியமைக்கப்பட்ட ஒரு வலிமை வாய்ந்த மைய நோக்கு மக்களாட்சியாகும்.

**சமத்துவ உரிமை (உறுப்பு 14 – 18)**

- சட்டத்தின் முன் சமம் (உறுப்பு – 14)
- மத அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு தடை (உறுப்பு – 15)
- பொது வேலைவாய்ப்பில் சம வாய்ப்புரிமை (உறுப்பு – 16)
- தீண்டாமை ஒழிப்பு (உறுப்பு – 17)
- பட்டங்கள் ஒழிப்பு (உறுப்பு – 18)

சில நேரங்களில் தனிநபர்களை வேறுபடுத்தி நடத்துதல் மூலம், சம உரிமைகள் உறுதிசெய்யப்படுவது அவசியமாகிறது. இது போலவே சமத்துவம் பாதிக்கப்படாமல் இருக்க, அரசாங்கத்தின் மூலம் சில கொள்கைகள் அவசியமாகிறது. உதாரணத்திற்கு இந்தியாவில் இடஒதுக்கீடு கொள்கையும், ஏனைய பிற நாடுகளில் “உடன்பாட்டு நடவடிக்கை’யும் (யுகககைஅயவளைந யுஉவழைெ) பின்பற்றப்படுகிறது.

- சுதந்திரத்தின் பொருள், மற்றும் முக்கியத்துவத்தினை பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களை விளக்குவதன் மூலம் அறிமுகப்படுத்துதல்.
- சுதந்திரத்தின் வகைகளை தெரிந்து கொள்வதின் மூலம் மாணவர்களுக்கு பல வகையான

சுதந்திரங்களையும், அதனைப் பற்றி அரசினுடைய கருத்துக்களையும் விளக்குதல்.

- ஓர் சமுதாயத்தில் குடிமகனுக்கு சுதந்திரத்தின் விழுமியங்களைப் புரிய வைப்பது மூலம், அரசு மற்றும் அரசமைப்பு அதிகாரத்துவம் பற்றியும் விளக்கி சுதந்திரம் எனும் கருத்தாக்கத்தின் முக்கியத்துவத்தினை அறிய வைத்தல்.
- சட்டத்தின் மூலமான கட்டுப்பாடு என்பதும் ஒரு வகை சுதந்திரம் என்பதை மாணவர்களுக்கு போதித்தல்
- மக்களாட்சி மற்றும் சுதந்திரமான நீதித்துறையும், சுதந்திரத்தின் விழுமியங்களை உட்புகுத்துவதற்கான காரணிகள் என்றும், சுதந்திரத்தின் பாதுகாவலர்கள் என்றும் புரிய வைத்தல்.

இவ்வாறு மக்கள் போராட்டத்தின் விளைவாக, இங்கிலாந்தில் 1688-இல் “மகத்தான புரட்சி” முடியாட்சியை எதிர்த்து அரங்கேறியது. இதில் மக்களுக்கு மகத்தான வெற்றி கிடைத்ததுடன் சில காலம் முழுமையான முடியாட்சி கட்டுப்படுத்தப்பட்டது. இதற்குப் பிறகு வெடித்த “பிரெஞ்சு புரட்சி” 1789-ல் ஏற்பட்டது. இது பல மாற்றங்களை ஏற்படுத்தினாலும், மக்களின் விடுதலை வேட்கைக்கு சரியான அளவில் தீர்வு ஏற்படாதிருந்தது. ஏனெனில் நெப்போலியனுக்கு பின்னர் ஆட்சியில் அமர்ந்தவர்களும் முடியாட்சியைத் தொடர்ந்தார்கள். மூன்றாம் நெப்போலியனின் வீழ்ச்சிக்கு பிறகு மூன்றாவது பிரெஞ்சு குடியரசு நிறுவப்பட்டது. 1940-இல் இதன் வீழ்ச்சிக்குப் பின்னர் வரிசையாக நான்காம் குடியரசும், 1958-.இல் அதன் வீழ்ச்சிக்குப் பின்னர் ஐந்தாம் குடியரசும் நிறுவப்பட்டது. இதற்கிடையே காலனி ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகள் விடுதலைக்கான நீண்ட நெடிய புரட்சிக்குப் பின்னர் சுதந்திரத்தை பெற்றன. 19-ஆம் நூற்றாண்டில் இத்தாலியும், 20-ம் நூற்றாண்டில் இந்தியாவும் மிகுந்த தியாகங்களுக்கு பின்னரே தேசிய சுதந்திரம் அடைந்தன.

**சுதந்திரத்தின் பொருள் விளக்கம்:**

சுதந்திரம் என்பது ‘லிபர்’ என்கிற லத்தீன் வார்த்தையிலிருந்து உருவாகி ஆங்கிலத்தில் “கட்டுப்பாடில்லாதது” என்று பொருள் பெறுகிறது. ‘லிபர்’ என்கிற வார்த்தைக்கு ‘தடைகள் இல்லாத’ எனப் பொருள்படுகிறது.

மனிதர்கள் சிறப்பாக செயல்படும் வாய்ப்பிற்குரிய சூழ்நிலையை நிர்வகிப்பதே சுதந்திரம் ஆகும் - ஹெரால்ட் லாஸ்கி

**சுதந்திரம் தொடர்பான அறிஞர்களின் கருத்துக்கள்**

சுதந்திரம் என்பது தனிமனிதர்கள், தங்கள் ஆளுமைத்தன்மையில் எந்தவித பாதிப்பும் இல்லாமல் தங்களை வெளிப்படுத்துவதாகும்.

- ஜி.டி.எச்.கோல் (பு.னு.ர். ஊழடந)

சுதந்திரம் என்பதன் பொருள் தடைகள் இல்லாத நிலை என்பதல்ல, மாறாக சுதந்திரத்தை மேம்படுத்துவதில் உள்ளது

\- மகாத்மாகாந்தி (ஆயாயவஅய புயனொை)

- சுதந்திரம் என்பது அடக்குமுறையிலிருந்தும், வெளிகட்டுப்பாடுகளிலிருந்தும் விடுபெறும் விடுதலை நிலை ஆகும்.
- ‘எஜீஸ்டெம் ஜெனரிஸ்’ (இலத்தின் வார்த்தை) எனும் சட்டமொழியில் கூறுவதுயாதெனில் ‘சுதந்திரம்’ என்ற சொல் உறுப்பு 19-ல் உள்ள பொதுவான வார்த்தையாகும். உறுப்பு 21-ல் ‘சுதந்திரம்’ என்ற சொல்லுக்கு முன்பாக ‘தனிப்பட்ட’ என்னும் குறிப்பிட்ட வார்த்தை மட்டுமே பயன்படுத்தப்பட்டது.

**சுதந்திரத்தின் இரண்டு கட்டங்கள (Two Phases of Liberty)**

**சுதந்திரத்தின் இரண்டு கட்டங்கள் (Positive Liberty):**

நேர்மறை சுதந்திரம் என்பது சிலவற்றை செய்வதற்கான சுதந்திரம் ஆகும். இது தனிமனிதன் தன்னுடைய உரிமைகள் மூலம் ஆளுமை தன்மையை மேம்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கின்றது.

**எதிர்மறை சுதந்திரம் (Negative Liberty):**

ஜே.எஸ்.மில்லின் கூற்றுப்படி சுதந்திரம் என்பது எதிர்மறையானதாகும். இது சுதந்திரம் என்ற நூலில் உள்ளது மனிதனின் மீதும், அவனது செயல்பாட்டின் மீதும் எவ்வகை கட்டுப்பாடுகளும் விதிக்கப்படக் கூடாது என்கிறார். மேலும் மனிதனின் பாதையில் எவ்வகை தடைகளும் இருக்கக் கூடாது என வலியுறுத்துகிறார்.

**சுதந்திரத்தின் வகைகள் (Types of Liberty)**

**இயற்கை சுதந்திரம் (Natural Liberty)**

ஒருவர் நினைப்பதைத் தங்கு தடையில்லாமல் நடத்தி முடிப்பதற்கான சுதந்திரமே இயற்கை சுதந்திரம் ஆகும். முற்றிலும் தடைகளில்லாத, கட்டுப்பாடுகளற்ற மற்றும் ஒருவர் நினைக்கக்கூடியதை செய்யக்கூடிய சுதந்திரமே இயற்கை சுதந்திரமாகும்.

| |
|---|
| அனைவருக்குமே சுதந்திரத்தைப் பற்றிய தெளிவற்ற பார்வைகள் உண்டு. அது அவரவர்களின் விருப்பத்தைப் பொறுத்து அமைகிறது. பத்து நபர்கள் சுதந்திரத்தைப் பற்றி கருத்துரைக்கிறார்கள் எனும் போது ஒரு வேளை எந்த இருவேறு நபர்களும் அவர்களின் சுதந்திரத்தைப் பற்றிய வரையறையில் ஒன்றுவது இல்லை. மேலும் சுதந்திரத்தின் கருப்பொருளையும் அவர்கள் விரும்பியவகையில் தெளிவாக்கூறுவதில்லை. இந்தப் பொதுப்படையான அறிவியல் சார்பில்லாத சொற்பிரயோகத்தினையே இயற்கை சுதந்திரம் என்கிறோம். ஆர்.என். கிஸ்ரீஸ்ட் (சு.ே. புடைஉாளைவ) |

சட்டத்தின் ஆட்சியை பிரதிபலிப்பதே குடிமை சுதந்திரமாகும். இது குடிமக்கள் சமுதாயத்தில் அனுபவிக்கும் சுதந்திரம் அரசில் உள்ளது என்பதைக் குறிப்பதாகும். சட்டத்தின் வரன்முறைகளுக்கு உட்பட்டு அச்சுதந்திரம் அனுபவிக்கப்படுகிறது. குடிமை சதந்திரத்தை, பாதுகாப்பதற்கு உண்டான உத்திரவாதத்தை அரசின் சட்டங்கள் வழங்குகின்றன.

**அரசியல் சுதந்திரம் (Political Liberty)**

அரசியல் சுதந்திரம் என்பது குடிமக்கள் அரசியல் வாழ்வில் பங்கேற்பதுடன், அரசின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதும் ஆகும். 1. வாக்குரிமை 2. தேர்தலில் போட்டியிடும் உரிமை, 3. பொதுக்கருத்து உரிமை 4. அரசாங்கத்தின் குறைபாடுகளை எடுத்துரைக்கும் உரிமை 5. மனு செய்யும் உரிமை போன்றவை ஆகும்.

**தனிப்பட்ட சுதந்திரம் (Personal Liberty)**

தனிமனிதர்கள் தாங்கள் நினைக்கும் காரியங்களை செயல்படுத்தும் நிலையினை இச்சுதந்திரம் ஏடுத்துரைக்கின்றது. மேலும் எந்த ஒரு தனிநபரின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், அடுத்தவர்கள் குறுக்கிட அனுமதிக்காத உரிமையும் ஆகும். அனைத்து தனிநபர்களுள்க்குமே உடுத்துதல், உண்ணுதல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், திருமணம் மற்றும் குழந்தைகளின் கல்வி போன்றவைகளில் தனிப்பட்ட உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு, தனிநபர் விவகாரத்தில் தலையிடுவது ஆகாது.

| |
|---|
| ஒரு செம்மறியாட்டின் கழுத்தை பிடித்திருக்கும் ஓநாயை, மேய்ப்பவன் துரத்தியடிக்கிறான். அதற்காக அந்த செம்மறியாடு அவனுக்கு நன்றியை தெரிவிக்கிறது. ஆனால் அந்த ஓநாயோ, அவனை சதந்திரத்தை ஒழிப்பவன் என குறை கூறுகிறது. ஏனெனில் குறிப்பாக அந்த ஓநாய்க்கும், கறுப்பு செம்மறியாட்டிற்கும் சுதந்திரம் தொடர்பான ஒத்த கருத்துகள் அமைவதில்லை. இதைப் போலவே தான் மனித இனத்திற்கு இடையேயும் தற்பொழுது சுதந்திரத்தைப் பற்றிய வேறுபாடுகள் உள்ளன. ஆப்ரகாம் லிங்கன் (யுடிாயசயஅ டுைெஉழடட) |

சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்துவதாலும். மேலும் சுதந்திரத்தின் மூலம் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாலும் சுதந்திரத்திற்கு ஆபத்தான நிலை உருவாக்கப்படலாம்.
ஜேம்ஸ் மாடி சன் James Madison

**பொருளாதார சுதந்திரம்**

ஒருவரின் அன்றாட வாழ்வாதாரத்திற்கான உணவை தேடி கொள்ளும் தனிநபர் சுதந்திரம் பொருளாதார சுதந்திரம் ஆகும். சாதி, நிறம், இனம், மற்றும் பாலினம் போன்றவைகளுக்கு அப்பாற்பட்டு சுதந்திரமாக வருவாய் ஈட்டுவதே பொருளாதார சுதந்திரம் ஆகும்.

**நிதி சுதந்திரம்:**

பிரதிநிதித்துவம் இன்றி வரிவிதிப்பு கூடாது. தங்களுடைய வரிப்பணம் எவ்வாறு செலவிடப்பட வேண்டும். யாருக்கு போய் சேர வேண்டும் என்பதில் தெளிவு வேண்டும் என்பது நடுத்தர வர்க்கத்தின் கோரிக்கையாகும்.

**குடும்பம் சார்ந்த சுதந்திரம்**
பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் கல்வியுரிமை வழங்க வேண்டும் என்பதே குடும்ப சுதந்திரத்தின் சிறப்பு அம்சங்களாகும். கொடுமையாக நடத்துதல் மற்றும் சுரண்டல் போன்ற அநாகரீகமான செயல்களுக்கு எதிராக அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

**தேசிய சுதந்திரம்:**

ஒரு நாட்டில் நிலவக்கூடிய சுதந்திர சூழ்நிலையை தேசிய சுதந்திரம் என்கிறோம். ஒரு நாடு இறையாண்மையுடன் கூடிய நிலையை அடையும் போது தேசிய சுதந்திரம் இருக்கிறது எனலாம்.

சுதந்திரம் என்பது மனிதர்களை நோக்கி வருவது அல்ல, மாறாக மனிதர்களே சுதந்திரத்தை நோக்கி எழுச்சி கொண்டு செல்ல வேண்டும். மகிழ்வுடன் வாழ்வதற்காக சிரமப்பட்டு பெறப்படுகின்ற சுதந்திரம் ஓர் ஆசீர்வாதமாகும்.
- புது தில்லி, மத்திய செயலகத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

**பன்னாட்டு சுதந்திரம்:**
உலக நாடுகளிடையே கூட்டாட்சியையும், பன்னாட்டு கூட்டுறவையும் மற்றும் பன்னாட்டு அமைதியையும் பேணுவதையே பன்னாட்டு சுதந்திரம் ஆகும்.

**குறியீட்டு பொருள்**
சுதந்திரதேவி சிலைக்கென்று ஒரு குறிக்கோள் உள்ளது. அது விடுதலையை பற்றிய உலகளாவிய நினைவூட்டலாகவும், அமெரிக்க குடிமக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாகவும் அமைந்துள்ளது.

**சுதந்திரம், இறையாண்மை மற்றும் சட்டம் ஆகியவை எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது?**

அரசு ஒருங்குமுறையில் இயங்கினால் மட்டுமே சுதந்திரம் செயல்படுகிறது.

அரசு சட்டங்களை இயற்றுகிறது. இறையாண்மை மிக்க அரசு செயல்படுவது சட்டங்களால் மட்டுமே ஆகும். சுதந்திரம், இறையாண்மை, மற்றும் சட்டம் ஆகியவற்றிற்கு இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது.

**சட்டம் எவ்வாறு சுதந்திரத்தை பாதுகாக்கிறது?**

- சட்டம் குற்றவாளிகளை தண்டித்து தனிமனிதர்களின் உரிமைகளை பாதுகாக்கின்றது.

- தனிமனித உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு சட்டம் உத்திரவாதம் அளிப்பதுடன் அவற்றை பாதுகாக்கவும் செய்கிறது. சக மனிதர்களுக்கு, ஒருவர் தீங்கு விளைவிக்கும்போதும், அவர்களின் வழியில் குறுக்கீட்டு சீர்குலைக்கும் போதும் அரசு அவர்களை தண்டிக்கிறது.
- சுதந்திரத்தின் பாதுகாவலனாக அரசமைப்பு விளங்குகிறது. அரசின் அதிகாரத்துவத்தை கட்டுப்படுத்துவதுடன் மக்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்கின்றது.

**சுதந்திரம் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது?**

**மக்களாட்சி**

- சுதந்திரம் என்பது மக்களாட்சியில் பாதுகாப்பாக இருக்கிறது. மக்களின் அரசாங்கமாக மக்களாட்சி செயல்படுகிறது.

**அரசமைப்பு:**

ஒரு நாட்டின் அரசமைப்பில் இருந்து தான் அரசின் அதிகாரத்துவம் ∴ ஆணையுரிமை பெறப்படுகிறது. மக்களாட்சியைப் பற்றிய கவிதையாக இந்திய அரசமைப்பின் முகவுரை விளங்குகிறது. இது ஒட்டுமொத்த இந்திய அரசமைப்பினுடைய அடிப்படை தத்துவத்தை தன்னுள் கொண்டதாகும். அரசாங்கத்தால் உருவாக்கப்படுகின்ற சட்டமும், அதனால் நிறைவேற்றப்படுகின்ற மக்கள் நல நடவடிக்கைகளும். மக்கள் நலனுற்கு என்பதை ஆராய்ந்து மதிப்பிடும் தன்மை படைத்தது அரசமைப்பு முகவுரையாகும். இந்திய அரசமைப்பின் ஆன்மாவாக முகவுரை கருதப்படுகிறது.

**அடிப்படை உரிமைகள்**

அரசின் அதிகாரத்துவத்தை வரையறுப்பது அடிப்படை உரிமைகள் ஆகும். தனிமனிதர்களின் சொந்த விவகாரங்களில் அரசாங்கத்தின் தலையீடின்றி இருப்பதற்கு இவ்வகை உரிமைகள் உறுதியளிக்கின்றன.

| **அடிப்படை உரிமைகள்** |
| --- |
| சமத்துவ உரிமை (உறுப்பு 14 – 18) |
| சுதந்திர உரிமை (உறுப்பு 19 – 22) |
| சுரண்டலுக்கு எதிரான உரிமை (உறுப்பு 23 – 24) |
| மதச்சுதந்திர உரிமை (உறுப்பு 25 – 28) |
| பண்பாடு மற்றும் கல்வி உரிமை (உறுப்பு 29 – 30) |
| அரசமைப்பு பரிகார உரிமைகள் (உறுப்பு 32 – 35) |

**அதிகாரப் பரவலாக்கம்**

சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு அதிகாரப் பரவலாக்கம் அவசியமாகின்றது. அதிகாரங்கள் முறையே மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அரசாங்கத்திற்கு பகிர்ந்து அளிக்கும் பட்சத்தில் நிர்வாகம் திறம்பட செயலாற்ற இயலும்.

**சுதந்திரமான நீதித்துறை:**

இந்திய அரசமைப்பு, நீதித்துறை சுதந்திரமாக செயல்படத் தகுந்த முறையிலான அம்சங்களை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் சுதந்திரமாக செயல்படும் நீதித்துறையே, மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும். அரசமைப்பின் மேலான தன்மையையும் பாதுகாக்கிறது.

- நீதிபதிகளின் நியமனத்திற்கு பாகுபாடற்ற நடைமுறை பின்பற்றப்படுகிறது.

- நீதிபதிகளுக்கு, உயர்ந்த தகுதிகளை நிர்ணயித்துள்ளது.
- உச்சநீதிமன்ற நீதிபதிகள் 65 வயது வரையிலும், உயர்நீதிமன்ற நீதிபதிகள் 62 வயது வரையிலும் பணியாற்றுவார்கள்.

**பொருளாதார இடர்காப்பு:**

சுதந்திரத்தின் நிபந்தனையாக பொருளாதார சுதந்திரம் அமைகிறது. ''ஏழை மற்றும் பணக்காரர், படித்தவர் மற்றும் படிக்காதவர் என்ற பிரிவினை சமூகத்தில் நிலைக்கும் வரையிலும் எஜமானர் மற்றும் பணியாளர் என்ற உறவுமுறை நீடிக்கும்''.

**சட்டத்தின் ஆட்சி**

சட்டத்தின் ஆட்சி என்பது இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ளது. சாதி. இனம், நிறம், மற்றும் நம்பிக்கை போன்றவைகளில் வேறுபாடுகள் இல்லாத சமமான ஆட்சியே சட்டத்தின் ஆட்சியாகும். சட்டத்தின் பார்வையில் அனைவரும் சமம். குற்றங்களில் ஈடுபடும் போது தண்டனைக்கு உள்ளாக வேண்டிய நிலை அனைவருக்குமே ஏற்படுகிறது.

**அரசியல் கல்வி மற்றும் காலவரம் பற்ற கண்காணிப்பு:**

சுதந்திரம் என்பதை நிரந்தரமாக பாதுகாக்க முடியும். கல்வியறிவு பெற்றவர்கள் முற்றிலுமாக உரிமைகளையும் கடமைகளையும் பற்றி அறிவர். காலவரம்பற்ற கண்காணிப்பு இருந்தாலொழிய, மக்கள் தவறுகள் செய்வதை நாம் கண்டறியமுடிவதில்லை. அரசாங்கம் தன் அதிகார எல்லையை மீறி மக்களின் தனிப்பட்ட வாழ்வில் தலையிடும்போது அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் புரட்சி செய்கிறார்கள்.

**நிரந்தரச்சட்டம் (Statues):** ஒரு நாட்டின் சட்டமன்ற அமைப்பின் மூலமாக எழுதப்பட்ட சட்டமாக ஏற்படுத்தப்படுத்தப்படுவதாகும். இவை தகுந்த விவாதங்களுக்கும் பின்னர் நாடாளுமன்ற சட்டங்களில் இணைக்கப்படும்.

**சட்டப்படியான (De-jure):** சட்டத்தின் மூலமாக அதிகாரம் பெற்றிருத்தல்.

**நடைமுறை (De-facto):** உண்மையில் யார் ஒருவர் நடைமுறையில் நிலையான அதிகாரம் பெற்றிருக்கின்றனர் என்பதாகும்.

## 11வது அரசியல் அறிவியல்

## அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் - பகுதி II
## அலகு - 4

**சட்டம்**
**அறிமுகம்**

அரசின் இறையாண்மையால் உத்திரவாதம் அளிக்கப்படுகின்ற விதிமுறைகளும், கட்டுப்பாடுகளும் சட்டம் எனப்படுகிறது. போடின் (Bodin) கூறுவது போல, இறையாண்மையின் கட்டளையே சட்டம் ஆகிறது.

இதனைப் போன்று அரிஸ்டாட்டிலும், "சட்டம் செயல்படாத நிலையில் மனிதர்கள் விலங்குகளாக மாறுகிறார்கள்" என்று சரியாக சுட்டிக்காட்டுகிறார். சமுதாயத்தின் கட்டுக்கோப்பினைப் பாதுகாக்கவும், தேசத்தின் வளர்ச்சியை மேம்படுத்தவும், சட்டமானது உலகம் முழுமைக்கும் இன்றியமையாததாகிறது. சமுதாய ஒழுங்கினைப் பராமரிக்க, சட்டத்தின் அபரிமிதமான சக்தி மட்டுமே முழு தீர்வாக விளங்க முடியாது. ஏனெனில் சட்டத்திற்கு என்று ஒரு குறிப்பிட்ட வரையறை உள்ளது. குற்றவாளிகளுக்கு சட்டம் கொடுங்கோலனாகவும், குடிமக்களுக்கும் நல்லவர்களுக்கும் அதே சட்டம் பாதுகாவலனாகவும் விளங்குகிறது.

உலகத்தின் ஒரு பகுதியில் சட்டம், கடினமானதாகவும் மறுபக்கம் இணக்கமாகவும் விளங்கக்கூடிய காரணம் என்பது எப்போதும் சர்ச்சைக்குரியதாகவும், விவாதத்திற்குரியதாகவும் தொடர்கிறது. மேற்கூறிய வாதமும், விவாதமும் தத்தம் நாடுகளின் பணிகள், குறிப்பாக தண்டனைகளை பொறுத்து அமைகிறது. உதாரணத்திற்கு மக்களாட்சி நாடுகளில் நிறைவேற்றப்படக் கூடிய சட்டம், முற்றதிகார நாடுகளின் சட்டங்களை விட வேறுபட்டதாகவும், மக்கள் நலனுக்காகவுமாக செயல்படுகிறது. இதை தவிர்த்து சட்டம், ஒரு நாட்டு மக்களுக்கு எந்த அளவிற்கு சுதந்திரத்தை வழங்குகிறது என்பது குறிப்பிட்ட சட்டத்தை நிர்வகிக்கும்போதும், செயல்படுத்தும் போதும் தெரிய வருகிறது. உலகின் எந்த நாட்டிலுமே சட்டத்தினை அறியாமை என்பது தண்டனையிலிருந்து தப்பிக்கும் ஒரு காரணியாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனவே சட்டத்தின் கருத்தாக்கத்தினை இளைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்துவதும், அவை அரசமைப்பு வழங்கும் அடிப்படை சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறை என புரிய வைப்பதும் இன்றியமையாததாகிறது.

**சட்டம் - நீதி ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு**

- சமூகத்தில் நீதியை அடைவது சட்டத்தின் குறிக்கோள் ஆகும்.
- நீதி என்பது எது சரி. எது தவறு, எது நல்லது, எது சமத்துவம் போன்றவைகளை விளக்கக்கூடிய ஓர் புலனாகாத கருத்தாகும்.
- எனவே ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எது சரியானதோ அல்லது எது நியாயமானதோ அதைச் செய்வதாகும்.

**சட்டம் பற்றிய கருத்துகள்:**

- சட்டம் என்பது இறையாண்மையின் கட்டளை – ஜான் ஆஸ்டின்
- நீதி நிர்வாகத்தை செயல்படுத்துவதற்காக அரசு அங்கீகரித்த விதிமுறைகளின் தொகுப்பே சட்டம் ஆகின்றது – சல்மாண்டு
- சட்டங்கள் இல்லையென்றால் அங்கே சுதந்திரம் இல்லை – ஜான்லாக்

**சட்டத்தின் நோக்கங்கள்**

- அடிப்படை மனித உரிமைகளை பாதுகாத்தல்
- நியாயத்தை ஊக்குவித்தல்
- சச்சரவுகளை தீர்த்தல்

- நீதியை ஊக்குவித்தல்
- ஒழுங்கையும், நிலைத்தன்மையையும் ஏற்படுத்துதல்
- விரும்பத்தகுந்த சமூக மற்றும் பொருளாதார நடத்தையை ஊக்குவித்தல்
- பெரும்பான்மை விருப்பத்தை பிரதிநிதித்துவப்படுத்துதல் (சில பிரச்சனைகளில்)
- சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல்

**சட்டத்தின் பொருள்**

சட்டம் என்கிற வார்த்தை பண்டைய டியூட்டோனிக் (Teutonic) மொழியிலுள்ள "லாக்" என்ற வேர்ச்சொல்லிலிருந்து உருவானதாகும். 'லாக்' என்ற சொல்லானது நிலைத்தன்மை அல்லது ஒரே சீரான என்று பொருள்படுகிறது. சட்டமில்லாத சமுதாயம் மற்றும் ஆட்சி, குழப்பவாதத்திலும், கலகத்திலும் முடிவுறும். உண்மையில் சட்டமே வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகிறது. சட்டம் என்ற சொல் 'சீரானது' என்பதைக் குறிக்கிறது. சட்டத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை, இயற்கை சட்டம் மற்றும் மனிதச் சட்டம் ஆகியவையாகும். இயற்கை சட்டம் இயற்கையையும், மனிதச் சட்டம் மனிதர்களின் வாழ்க்கையையும் ஒழுங்குபடுத்துகிறது. அரசியல் அறிவியலில் சட்டம் என்பது மனித நடவடிக்கைகளை வழிநடத்துகிற விதிகளைக் கொண்ட தொகுப்பு ஆகும். அரசின் கடமைகளை அரசாங்கம் செயல்படுத்துகிறது. அதைப் போலவே அரசாங்கம் அரசின் விருப்பத்தை சட்டத்தின் வாயிலாக நிறைவேற்றுகிறது.

**சட்டத்தின் நோக்கம் என்ன?**

மேக்ஐவர் (MacIver) என்பாரின் கூற்றுப்படி, "அரசின் ஆதரவில்லையெனில் ஒரு சட்டம், சட்டமாகவே இருக்க முடியாது. சட்டத்தின் நோக்கமானது உறுதியான அடித்தளங்களை நிறுவவும், மனிதர்களின் மெய்யுறுதியை வலிமையாக்கி அதன் மூலம் சமூகத்தின் கட்டமைப்பை மேம்பட செய்வதுமாகும்". "சட்டம்" எனும் சொல்லானது, அரசியல் அறிவியல் மூலம் மனிதர்களின் நடவடிக்கைகளின் மீது ஆளுகை செய்யவும், அவர்களின் வாழ்வை நெறிமுறைப்படுத்துவதற்குமான விதிகளின் தொகுப்பாகக் கருதப்படுகிறது. "சட்டம் அரசை உருவாக்குவது அல்ல. மாறாக அரசின் அழுத்தமே சட்டத்தை உருவாக்குகிறது" என்று நம்பிக்கையாக ஹாக்கிங் (Hocking) கூறுகிறார்.

**சட்ட வகைகளை அறிவீர்களா?**
**அ) தனியார் சட்டங்கள் (Private Laws)**

குடிமக்களிடையேயான உறவுகளும், அவ்வுறவுகளை கட்டுப்படுத்தும் விதிமுறைகளும் தனியார் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

**ஆ. பொதுச் சட்டங்கள்** (Public Laws)

குடிமக்களுக்கும், அரசுக்கும் இடையேயான உறவுகளை முடிவு செய்வது பொது சட்டமாகும். உறவுகளை முடிவு செய்வது பொது சட்டமாகும். இவ்வகை சட்டத்தில் அரசு நடுவராகவும், கட்சிகாரராகவும் பார்க்கப்படுகிறது.

**இ. அரசமைப்பு சட்டங்கள் (Constitutional Laws)**

அரசை வழி நடத்தக்கூடிய அடிப்படை சட்டங்கள் அரசமைப்பு சட்டங்கள் ஆகும். அரசாங்கத்தின் செயல்பாடுகளை வரையறுத்து, தெளிவுபடுத்தக்கூடிய சட்டங்களே அரசமைப்பு சட்டங்களாகும். உதாரணத்திற்கு, குடியரசு தலைவர் தேர்தல், உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் பொதுச்சட்டம், சட்டமன்றத்தால் இயற்றப்படக் கூடிய நிரந்தர சட்டத்திலிருந்து வேறுபடுகிறது. பொதுச்சட்டம் முன் நிகழ்வுகளை அடிப்படையாக கொண்டு உருவாவதாகும். சட்டமன்றத்தால் இயற்றப்படும் நிரந்தர சட்டமானது, எழுதப்பட்ட சட்டங்களால் ஆன முறை சார்ந்த ஒன்றாகும். இச்சட்டத்தில் பொதுமக்களின் நடவடிக்கைகளை கட்டாயப்படுத்தவோ அல்லது தடைசெய்யவோ சட்டங்களும், ஒழுங்குமுறை விதிமுறைகளும் அமைந்துள்ளன. பொது சட்டமானது நீதிபதிகள்

தங்கள் தீர்ப்புகளை, முந்தைய தீர்ப்புகளை முன்னுதாரணமாக கொண்டு, அதனடிப்படையில் வழங்க அனுமதிக்கிறது. செயல்பாடுகள், ஆளுநர் நியமனமுறை போன்றவை அரசமைப்பு தொடர்பான நிகழ்வுகளாகும்.

அரசாங்கத்தின் செயல்பாடுகளையும், அடிப்படை உரிமைகளையும், அதிகாரங்களையும் பற்றியதாக இல்லாமல், குடிமக்களுடைய சமூக மற்றும் பொருளாதார நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தால் அவை சாதாரண சட்டங்கள் எனப்படும். உதாரணத்திற்கு குழந்தை திருமணங்கள் மற்றும் மதுபானத்தின் மீதான கடை போன்றவைகள் சாதாரண சட்டங்களின் கீழ் அமைகிறது.

### ஈ. நிரந்தர சட்டங்கள் (Statute Laws)

நிரந்தர சட்டங்கள் என்பவை மாநில சட்டமன்றத்தின் மூலமாகவும், நாடாளுமன்றத்தின் மூலமாகவும் இயற்றப்படும் சட்டங்களாகும். மக்களாட்சி நாடுகளில் பெரும்பான்மையான சட்டங்கள் நாடாளுமன்றத்தின் மூலமாகவே இயற்றப்படுகின்றன.

### உ. அவசர சட்டம் (Ordinance)

பொதுவாக அரசினுடைய சட்டங்களின் அடிப்படையில், அரசாங்கத்தின் செயலாட்சி துறை மூலம் இது பிறப்பிக்கப்படுகின்றது. இவ்வகை சட்டம், குறைந்த கால கட்டமே நீடிக்கும். நாடாளுமன்றம் இயங்காத காலங்களிலும், அவசர காலங்களிலும் குடியரசு தலைவர் மூலம் அவசர சட்டம் பிறப்பிக்கப்படும்.

### ஊ. பொதுச் சட்டங்கள் (Common Laws)

பொது சட்டங்களானது மரபுகளையும், பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் அடிப்படையாக கொண்டது. ஆனால் நிரந்தர சட்டங்களை போல நீதிமன்றங்களால், அமலாக்கம் செய்யக்கூடிய தன்மை உடையதாகும். பொது சட்டங்கள் இங்கிலாந்தில் மிகவும் பிரசித்தி பெற்ற சட்டங்கள் ஆகும்.

### எ. நிர்வாக சட்டங்கள் (Administrative Laws)

அரசாங்க பணியாளர்களின் அலுவல் மற்றும் பொறுப்புகளை பற்றி விளக்கமளிப்பதுடன், ஆளுகையை முறைப்படுத்துவதற்கான சட்டம் நிர்வாக சட்டம் எனப்படும். தனி மனிதர்களுக்கும், பொதுநிர்வாக அதிகாரிகளுக்கும் இடையே சட்டத்தையும், அதன் செயல்பாட்டையும் பிரித்து நடைமுறைப்படுத்துவது நிர்வாக சட்டமாகும். மேலும் இது அரசாங்க அதிகாரிகளின் சலுகைகளை பற்றி விளக்கம் அளிக்க முயலுகிறது. இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நிர்வாக சட்டம் பிரபலம் அடையவில்லை. பிரான்ஸ் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் இவை பிரபலமாக உள்ளன. உதாரணத்திற்கு குடிமக்களுக்கும், அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையே சர்ச்சை ஏற்படும் பட்சத்தில் நிர்வாக நீதிமன்றம், நிர்வாக சட்டத்தின் மூலம் தீர்வு காண்கிறது.

### ஏ. பன்னாட்டு சட்டங்கள் (International Laws)

பன்னாட்டு சூழலில் நாகரீகமடைந்த நாடுகளுக்கு இடையேயான உறவுமுறைகளையும், நடத்தையையும் நிர்ணயிக்கும் சட்டம், பன்னாட்டு சட்டமாகும். பன்னாட்டு உறவுகளை ஒழுங்குபடுத்துவதற்கென்று, தனித்தன்மையுடைய பன்னாட்டு சட்டம் என்ற ஒன்று வழக்கில் இல்லை. ஆனால் ஐக்கிய நாடுகள் சபையும், உலக பொதுமக்களின் கருத்துமே, ஒவ்வொரு நாடும் தங்கள் இறையாண்மையை முழுவதுமாக அனுபவிக்க வழிவகை செய்கின்றது.

மேலும் கடல் எல்லை பாதுகாப்பு சட்டம், வான்எல்லை சட்டம் என்றும் பன்னாட்டு சட்டங்களின் பிரிவுகள், தரைவழி, கடல்வழி, ஆகாய வழி என்று நாடுகளுக்கிடையே சர்வதேச எல்லைகளை வரையறுக்கிறது. வான்எல்லைச் சட்டங்களின் மூலம் ஒரு நாட்டின் ஆகாய விமானம் இன்னொரு நாட்டின் வான் எல்லையில் பறக்கும்போது அனுமதி பெற்ற பிறகே பறக்க வழி செய்கிறது.

**சட்டத்தின் மூல ஆதாரங்களை நீங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா?**

**அ. வழக்காறுகள்** (Customs)

சட்ட உருவாக்கத்திற்கு பழக்கவழக்கங்கள் மிகவும் உதவி புரிந்துள்ளன. பழக்கவழக்கங்களின் மூலமாக பயன்படுத்தப்பட்டு வந்த வழக்காறுகள் யாவும் நாளடைவில் அரசால் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாகின. ஆதி காலத்திலிருந்து பழங்குடியினரிடையேயான சர்ச்சைகளும், பிரச்சினைகளும் அக்குடியினுடைய தலைவரின் மூலமாக அவர்களின் வழக்காறுகள் மற்றும் மரபுகளின் வழியே தீர்வு காணப்பட்டு வருகிறது. பழங்குடிகள் நாளடைவில் அரசுடன் இணைத்துக் கொள்ளப்படும் போது அம்மக்கள் பின்பற்றிய பழக்கவழக்கங்களும் படிப்படியாக சட்டங்களாக்கப்பட்டன. ஒரு நாட்டின் மரபுகளையும், பழக்க வழக்கங்களையும் அரசால் மறுதலிக்க முடிவதில்லை. இன்றளவில் இங்கிலாந்தின், பொது சட்டமானது வழக்காறுகளில் இருந்து பெறப்பட்டது என்பது ஒரு முக்கிய உதாரணமாகும்.

உதாரணத்திற்கு இந்தியாவில் தமிழ் மக்களிடையே “ஏறு தழுவுதல்” (Bull Taming Sport) என்ற பண்பாடு சார்ந்த விளையாட்டானது 2017-ஆம் ஆண்டு ‘ஜல்லிக்கட்டு சட்டம்’ என்ற புதிய சட்டம் உருவாகக் காரணமாக அமைந்தது.

## ஆ. மதம் (Religion)

ஆதிகால சமூகங்கள் பின்பற்றிய மத சம்பிரதாயங்களும் அரசினுடைய, சட்ட உருவாக்கத்தில் பெரிதான பங்கை ஆற்றியுள்ளது. பெரும்பான்மையான நாடுகளில் மதமே சட்டத்தின் அடிப்படையாக அமைந்துள்ளது. இந்து மதச் சட்டமானது பெரும்பாலும் மனுவின் விதிமுறையிலிருந்து பின்பற்றப்பட்டு வருகிறது. இஸ்லாமியச் சட்டமானது ஷரியத் சட்டங்களின் மூலத்திலிருந்து பின்பற்றப்படுகிறது. தெய்வீகச் சட்டமானது. மனிதனின் மூலமாக கடவுள் வழங்கிய சட்டங்கள் என்று கருதப்படுகிறது. தெய்வீக சட்டத்தின் ஆதிமூலமாக கடவுளே இருப்பதாகக் கருதப்படுகிறது. கிறித்துவர்களுக்கு, அவர்களின் பரமபிதா முதன் முதலில் அருளிய பத்து கட்டளைகளே சட்டத்தின் அடிப்படையாகக் கருதப்படுகிறது.

**அலங்காநல்லூர் -ஜல்லிக்கட்டு**

இந்த படம் ஏறுதழுவுதல் என்ற தமிழரின் பண்பாடு விளையாட்டான ஜல்லிக்கட்டு பற்றியது ஆகும். இது மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் நடைபெறும். அலங்காநல்லூர் என்றால் ஜல்லிக்கட்டு என்றும், ஜல்லிக்கட்டு என்றால் அலங்காநல்லூர் என்றும் அழைக்கப்படுமளவுக்கு அவ்வூரின் பண்பாடு மற்றும் வரலாற்றுடன் அவ்விளையாட்டு ஒன்றிணைந்துள்ளது. இது பொதுவாக பொங்கல் கொண்டாடப்படும் ஜனவரி மாதத்தில் தமிழகத்தில் நடைபெறும் ஒரு தமிழர் பண்பாட்டு விழாவாகும். நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு சமூகத்தினருக்கும் வாழ்வதற்கான உரிமை, சுதந்திரத்திற்கான உரிமை மற்றும் தங்கள் பண்பாட்டையும், மரபையும் காப்பதற்கான உரிமை ஆகியவை உண்டு. ஆனால் ஜல்லிக்கட்டு என்பதில் பண்பாட்டிற்கும், விலங்குகளின் உரிமைக்கும் இடையே முரண்பாடு தோன்றியது.

அரசமைப்பின் பகுதி மூன்றில் அடிப்படை உரிமை உறுப்பு 29(1) -இல் கல்வி மற்றும் பண்பாடு உரிமைகளுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. 2014-இல் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் “விலங்குகளும் புலன் உணர்வு கொண்டவை. ஆதலால் அடிப்படை உரிமை உறுப்பு 29(1) -படி வாழும் உரிமையைப் பெறுகின்றன என்றும் ஆதலால் அவற்றை துன்புறுத்துவதை அனுமதிக்க இயலாது” என தீர்ப்பு கூறியது. இந்த முரண்பாடுகள் இவ்விளையாட்டை முறைப்படுத்துவதில் பல்வேறு விளக்கங்களுக்கு வித்திட்டன.

## இ. வழக்கு மன்றங்களின் முடிவுகள் (Judicial Decisions)

கெட்டல் (Gettel) கூற்றின்படி, “அரசு என்பது சட்டத்தை உருவாக்க மட்டுமல்லாது, அதனை

தெளிவுபடுத்துவதற்காகவும், வழக்காறுகளை செயல்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. நீதித்துறையின் செயல்பாடானது சட்டங்களை தெளிவுபடுத்தவும், சட்டங்களை நடைமுறைப் படுத்துவதுமாக அமைகிறது. நீதிமன்றங்கள் செயல்படும்போது, அவைகளின் தீர்ப்புகள் புதிய சட்டங்களாக உருவாகின்றன. அதன் பிறகே இவ்வகை சட்டங்கள் அரசு மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுகின்றன. எனவே, நீதிமன்ற தீர்ப்புகள் இவ்வகையில் புதிய பல சட்டங்களை உருவாக்குவதற்கு மூல ஆதாரமாக அமைகிறது. சில சமயங்களில், உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றங்களின் தீர்ப்புகள் சட்டங்களாக பாவிக்கப்படுகின்றன.

### ஈ. சமச்சீராக்கம் (Equity)

சட்டங்கள் எப்போதெல்லாம், தெளிவற்று சூழ்நிலைக்கு பொருந்தாமல் இருக்கிறதோ, அந்தச் சமயங்களில் இந்த சம நீதி பங்கிலான கொள்கைகளும், நல்லியல்புகளும், பொது அறிவு அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு அக்குழப்பமான சூழலுக்கான தீர்வு காணப்படுகிறது.

**சமச்சீராக்கம்**

- ❖ ஆங்கிலேய பொதுச் சட்ட மரபை பின்பற்றும் நாடுகளில் உள்ள சட்ட விதிகளின் தொகுப்பிற்கு சமச்சீராக்கம் (Equity) என பெயரிடப்பட்டுள்ளது. இது இயற்கை நீதி என்று சில நேரங்களில் குறிப்பிடப்படுகின்ற ஒன்றை அடைய கடுமையான சட்டங்களையும் கண்டிப்பான அமலாக்கத்தையும் துணையாக கொண்டுள்ளது.
- ❖ சமச்சீராக்கம் நியாயத்தை நிலைநாட்டுவதாகவும் உள்ளது.
- ❖ சமச்சீராக்கம் என்பது பொதுச் சட்டத்திற்கு துணையாக வர்ணிக்கப்படுகிறது. இது ஆங்கிலேய பொதுச் சட்டத்தில் இடம் பெறாத பகுதிகளையும் ஒன்றிணைத்து அச்சட்ட அமைப்பை ஒரு முழுமையான ஒன்றாக ஆக்குகிறது.
- ❖ ஆங்கிலேய சட்டத்தின்படி, சமச்சீராக்கம் என்பது இங்கிலாந்து உயர்நீதி மன்றத்தால் மட்டுமே அமல்படுத்த கூடிய விதிகளின் தொகுப்பாகும்.

### உ. அறிவியல் விளக்கவுரைகள் (Scientific Commentaries)

சட்ட வல்லுநர்களின் அறிவியல் விளக்கவுரைகள், மற்றுமொரு சட்டமூலமாக விளங்குகின்றன. முதன் முதலில் இத்தகைய அறிவியல் விளக்கவுரைகள் தோன்றியபோது, அனைவரும் அதனை ஒரு வாதமாக மட்டுமே வர்ணித்தார்கள். நாளடைவில் இதன் சிறப்புத் தன்மையும், அதிகாரமும், நீதி மற்றும் நீதிமன்ற முடிவுகளையும் விட அதிகாரத்துவம் பெற்று விளங்கியது.

### ஊ. சட்டமன்றம் (Legislature)

தற்காலத்தில் பெரும்பான்மையான சட்டங்கள் சட்டமன்றத்தின் மூலமே இயற்றப்படுகிறது. சட்டத்தின் மிக முக்கிய ஆதாரங்களுள் ஒன்றாக இது உள்ளது. பிற நாட்டு அரசமைப்புகளில் உள்ள சிறந்த அம்சங்களைப் பெற்று அதை தன் சொந்த நாட்டின் நன்மைக்கு பயன்படுத்துவதற்கு சிறந்த உதாரணமாக இந்திய அரசமைப்பு உள்ளது.

### இந்திய அரசமைப்பின் ஆதாரங்கள் (Sources of the Indian Constitution)

- ❖ இந்திய அரசாங்க சட்டம் 1935 - கூட்டாட்சி முறை, ஆளுநர், நீதித்துறையின் பங்கு, நெருக்கடி நிலை அதிகாரங்கள்.
- ❖ பிரிட்டன் அரசமைப்பு – சட்ட உருவாக்கமுறைகள், நாடாளுமன்ற அரசாங்கம். சட்டத்தின் ஆட்சி, ஒற்றைக்குடியுரிமை, ஈரவை அரசாங்கம்.
- ❖ அமெரிக்க அரசமைப்பு – அடிப்படை உரிமைகள், சுதந்திரமான நீதித்துறை, நீதிப்புனராய்வு, குடியரசுத் தலைவர் பதவி நீக்க நடைமுறை, உயர்நீதிமன்ற மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் மீதான குற்ற விசாரணை, துணைக்குடியரசுத் தலைவரின் பங்கு.

**சட்டம் எவ்வாறு அரசுடனும், நீதி நெறியுடனும் தொடர்பு கொண்டுள்ளது?**

சட்டமும், நீதிநெறியும் சமமாக பாவிக்கப்படுகிறது. நீதிநெறியானது குடிமக்களுக்கு ஒழுக்க விதிகளை போதிக்கிறது. அதே போல, அரசால் இயற்றப்படுகின்ற சட்டமும் இந்த லட்சியத்தை அடைய பாடுபடுகிறது. மக்களின் நலனை மேம்படுத்தும் ஒரே நோக்கத்துடன் அரசு செயல்படுகிறது. சட்டத்திற்கும், நீதிநெறிக்கும் உள்ள நல்லுறவை போலவே, சட்டத்திற்கும் அரசிற்கும் இடையே உள்ளது.

சட்டமும் ஒழுக்கமும் ஒன்றோடு ஒன்று மிகுந்த தொடர்புடையன ஆகும். ஒழுக்க விதிமுறைகள் என்பவை குடிமக்களின் நன்னடத்தைகளுக்கு அடிப்படையாகும். நல்லியல்பு அரசு நற்குடிமக்களை பெற்று சிறந்து விளங்குகிறது. நல்லியல்பற்ற அரசானது, ஒழுக்கம் தவறிய குடிமக்களைப் பெற்று சீரழியும். அரசின் உயிர்மூச்சான செயல்பாடாக 'நீதி நெறிகள்' விளங்குகின்றன.

தீண்டாமையை ஒழிப்பதற்கு இந்திய அரசாங்கம் கடந்த பல ஆண்டுகளாக போராடிக்கொண்டிருக்கிறது. தீண்டாமைக்கு எதிரான பல சட்டங்களையும் இயற்றியுள்ளது. தீண்டாமை போன்ற சமூக அவலங்களுக்கெதிராக சட்டங்கள் இருந்தாலும், சாதி, மதம், இனம், வர்க்கம், நிறம் அடிப்படையில் பாகுபாடு காட்டும் கொள்கையானது பாவம் என்பதை அறிய வேண்டும். மேற்கூறியவைகளின் அடிப்படையில் சமூகத்தில் எழும் இன்னல்களுக்கு அளவே இல்லாததாக இருக்கிறது. அரசாங்கம் மக்கள் உடல்நிலைக்கும், மனநிலைக்கும் பங்கம் விளைவிக்கும் மது மற்றும் குழந்தை திருமணம் போன்றவற்றை தடுக்கும் பல சட்டங்களை இயற்றி வருகிறது. பொதுவாக மக்களாட்சியில் ஒழுக்க நெறிகளுக்கு எதிரான சட்டம் என்று ஒன்று இல்லை.

வில்சன், ''அரசின் சட்டங்கள் என்பவை நீதிநெறியிலான சமூகத்தை உருவாக்குவதாகும்'' என்று தெளிவாக தெரிவித்துள்ளார். இதனாலேயே சட்டத்தை உருவாக்கும் இறையாண்மையானது, சட்டத்திற்கும், நீதிநெறிக்கும் ஒரு நெருங்கிய உறவை ஏற்படுத்த விழைகிறது.

**சட்டத்திற்கும் நீதிநெறிக்கும் உள்ள வேறுபாடுகள்**(The Distinction between Law and Morality)

- அரசு சட்டங்களை அமலாக்கம் செய்கிறது. சட்டத்தின் கட்டளைகளையும், கட்டுப்பாடுகளையும் மீறுபவர்கள் சட்டத்தினால் தண்டிக்கப்படுகிறார்கள்.
- சமூக விதிகளையும், சமூக நீதிநெறிகளையும் மதியாதவர்களுக்கும் எதிராக நடப்பவர்களுக்கும் சமூக புறக்கணிப்பு என்பதே மாபெரும் தண்டனையாக அமைகிறது.
- நீதிநெறி என்பது மனிதர்களின் அக மற்றும் புற நடவடிக்கைகள் தொடர்புடையதாகும். ஆனால் சட்டமோ மனிதர்களின் புற நடவடிக்கைகளுடன் மட்டுமே தொடர்புடையதாகும். இதனாலேயே மனிதர்கள் தங்கள் புற நடவடிக்கைகளின் மூலம் சட்டத்தை மீறும்போது, தண்டிக்கப்படுகிறார்.
- அதே போல், ஒரு நபர் சமூகத்தில் பொய் கூறினாலோ அல்லது ஏமாற்றினாலோ அதே சட்டத்தினால் தண்டிக்கப்படுகிறார்.
- பொய் கூறுவதும், பிறருக்கு கண்டனம் தெரிவிப்பதும், விசுவாசமற்று இருப்பதும் பாவங்களாக கருதப்படுகின்றதே ஒழிய குற்றங்களாக அல்ல. ஒழுக்கமற்ற செயல்கள் கூட அரசிற்கு நன்மை பயக்குமெனில் அது சட்டபூர்வமானது தான் என்று மாக்கியவல்லி கூறுகிறார்.

**பொதுக்கருத்தும், சட்டமும் ஒன்றுக்கொன்று எவ்வாறு தொடர்புடையவை?**

மக்களாட்சி நடைமுறையில், தங்களின் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதன் மூலம் மக்கள் அரசியலில் பங்கேற்பதுதான். மக்களாட்சியை வலிமையுள்ளதாக மாற்றுகின்றது. சட்ட உருவாக்கத்தில் மக்கள் நேரடியாக பங்கு பெறவில்லையென்றாலும், சட்ட மன்றத்தின் பிரதிநிதிகளை அவர்களே தேர்ந்தெடுக்கின்றார்கள். வாக்காளர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்வதற்காகவும், திருப்திபடுத்துவதற்காகவும் இப்பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவ்வாறு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றமானது மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கின்றது. சட்டத்திற்கும், பொதுக் கருத்திற்கும் இடையேயான நெருங்கிய தொடர்பை பார்ப்போம்.

மக்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டே மக்களாட்சியில் சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. மக்கள் தங்கள் அதிருப்தியையும், கோபத்தையும் அமைதியான போராட்டங்களின் மூலமாக அரசுக்கு வெளிப்படுத்துகிறார்கள். மக்களின் பொதுநலனும், சமூக மேம்பாடும், பொதுக் கருத்தின் இரு கண்களாகும்.

தற்கால அரசானது, நீதிநெறி, மதம் மற்றும் இயற்கை சட்த்தின் லட்சியவாத அடிப்படையில் நீடிக்கிறது எனலாம். அதே சமயத்தில் அரசு தனது சுயபாதுகாப்பிற்காக மேற்குறிப்பிட்ட ஒன்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுகிறது – கோட்ஸீ

சட்டமும், ஒழுங்கும் நீதியை நிலைநாட்டுவதற்காக இயங்குகிறது. அதை செய்ய தவறும்பட்சத்தில், சமூக வளர்ச்சியை தடுக்கும் ஆபத்தான தடுப்பு அணைகளாக இவை மாறுகின்றன.

## குடியுரிமை

**அறிமுகம்:**

அரசியல் கோட்பாட்டில், குடியுரிமை என்பது குடிமக்களுக்கான சட்டப்பூர்வமான அங்கீகாரம் மட்டுமல்லாது. நெறிமுறை நல்லியல்பிற்கு இணங்க, அரசியல் செயல்பாடுகளில் முழுமையாகவும், சமமாகவும் பங்கேற்கின்ற உரிமையையும் அனைத்து குடிமக்களுக்கும் அளிப்பதாகும். மக்களாட்சியும், குடியுரிமையும் எப்போதும் ஒரே நேர்க்கோட்டில் செல்லக்கூடியது ஆகும். மக்களாட்சி என்பது அரசியல் கட்சிகள், தேர்தல் முறைமைகள், சட்டத்தின் ஆட்சி போன்றவைகளிலும், குடியுரிமை என்பது தனிமனிதர்களிடத்தும் முக்கிய கவனம் செலுத்துகின்றன.

குடியுரிமையானது ஒவ்வொரு நாட்டிற்கும் வேறுபட்டதாக இருக்கிறது. தற்கால அரசுகளில், குடியுரிமையானது, குடிமக்களுக்கான உரிமைகள் மட்டுமல்லாது மக்கள் அரசுக்கு ஆற்றவேண்டிய கடமைகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது. நீங்கள் இயற்கை குடியுரிமை (Natural Citizenship) உடையவரா அல்லது தங்கியிருத்தல், திருமணம் போன்றவற்றால் தகுதி ஆக்கப்பட்டு பெறப்படும் (Naturalized Citizenship) குடியுரிமையை வேண்டிபெற்றவரா? இவ்விரண்டிற்கும் வித்தியாசம் யாவை?

**இயற்கை குடியுரிமை**

இயற்கையான குடிமக்கள் என்பது இம்மண்ணில் பிறந்ததன் மூலமாக இயற்கையாக அந்த குடியுரிமையை அடைவது ஆகும். ஆனால் இயற்கையாதலான குடிமக்கள் என்போர் பின்னர் குடியுரிமையைப் பெற்றவர்களாவர்.

அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி, குடியுரிமை என்பது பிறப்பிடம், குடும்பம், பரம்பரை மற்றும் பண்பாட்டைச் சார்ந்து அமைவதாகும். 'ஸ்டாயிக்குகளின்' (Stoics) கருத்து வளர்ச்சியடைந்த பெருநகரங்களில் வசிப்பவர்களுக்கே குடியுரிமை வழங்கப்பட வேண்டும் என்பதாகும். கன்பூசியசின் (Confusius) கருத்து பொது நலத்தை சீரமைத்து அதில் அனைவரும் தங்கள் நலனிற்காகவும், இணக்கச் சூழலுக்காகவும் பாடுபட வேண்டும் என்பதாகும். இந்தியாவிலும் இதே போன்று வசுதேவக் குடும்பகம் (Vasudeva Kudumbakam) (ஒரே உலகம், ஒரே குடும்பம்) என்பது ஒரு நல்லியல்பு கருத்தாக்கமாக காணப்படுகிறது.

**குடியுரிமை மற்றும் நகர அரசு (Citizenship and City - State)**

கிரேக்க மற்றும் ரோமானிய குடியரசுகளில் முக்கியத்துவம் பெற்ற குடியுரிமை என்பது நிலப்பிரபுத்துவ காலங்களில் முற்றிலுமாக மறைந்தது. மறுபடியம், மறுமலர்ச்சி காலக்கட்டத்தில் மனிதத்தன்மையின் விரும்பத்தக்க பகுதியாக குடியுரிமை மலர்ந்தது. பண்டைய ஏதென்சின், நகர அரசில் குடியுரிமை என்பது அரசின் கடமைகளில் பங்கேற்பதாக அறியப்பட்டது.

குடியுரிமை என்பதை அரிஸ்டாட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதினார். ஏனெனில் லட்சிய அரசு என்பது சட்டத்தின் அடிப்படையிலான, சட்டத்தை மதிக்கும் குடிமக்களாலேயே சாத்தியப்படும் எனக் கருதினார். அவர் மேலும் கூறுகையில், ஒவ்வொரு மனிதனும் அரசியல் விலங்கு என்றும், நகர அரசில் மட்டுமே அவன் முழுமையடைவான் என்றும் கூறுகிளார். எனவே அரசியல் பதவிகளை விரும்புவது இயற்கை என்கிறார். மேலும் அப்பெருமகனார், குடியுரிமை என்பது குடிமக்களையும், வேற்றுநாட்டவர்களையும் மட்டுமல்லாது பிறநாட்டு அடிமைகளையும் உள்ளடக்கியதாக ஓர் ஆட்சியில் காணப்படுவதாக விளக்குகிறார். ஒரு நாட்டின் குடிமகன் என்பவன் சட்டத்துறை, நீதித்துறை தொடர்பான அலுவல்கள் மட்டுமல்லாமல் அரசமைப்பின்படி அரசியல் உரிமைகளையும், அனுபவிக்கும் உரிமை பெற்றவனாக விளங்குகின்றான்.

**மார்ஷலின் பகுப்பாய்வு (Marshall's Analysis)**

சுதந்திர சமூக மக்களாட்சிவாதியான மார்ஷல், குடியுரிமையையும், சமூக நிலைமைகளையும், முதலாளித்துவ அடிப்படையில் ஆராய்கிறார். அவரது கருத்தின்படி, குடியுரிமை மூன்று வகைப்படுகிறது. அவை குடிமை, அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த குடியுரிமைகளாகும்.

அனைத்து தனிமனிதர்களுக்கும் சுதந்திரம் என்பது குடிமை விவகாரங்களில் தேவைப்படுகிற ஒரு முக்கிமான அம்சமாகும். சட்டத்தின் ஆட்சியில், குடியுரிமை என்பது ஒரு தனித்துவம் பெற்ற அம்சமாக விளங்குகிறது. ஒரு குடிமகனாக, நமக்கு அரசியல் தொடர்பான முடிவெடுக்கும் முறைமையில் பங்குபெறுவதற்கு முழு உரிமை உண்டு. இது அரசியல் வகைப்பாட்டில் பிரதிபலிக்கிறது.

அரிஸ்டாட்டிலின் வரையறையின் படி ''எவர் ஒருவருக்கு விவாதங்களிலும் அரசின் நீதி நிர்வாக அமைப்பிலும் பங்கேற்க அதிகாரம் இருக்கிறதோ அவரே குடிமகன் ஆவர்''.

கிரேக்கர்கள் மக்களாட்சியின் கீழ் வாழும் பேறுபெற்றவர்கள். அவர்களின் அரசாங்கம் சாதாரண மக்களால் உருவாக்கப்பட்டது. அவர்கள் தங்கள் பேச்சு உரிமையின் மூலமாக மிகப்பெரிய பேச்சு சுதந்திரத்தை பெற்றிருந்தனர்.

**குடியுரிமை மற்றும் கல்வி (Citizenship and Education)**

இப்பிரிவில், கல்விக்கும், குடியுரிமைக்கும் உண்டான தொடர்பை பல்வேறு தத்துவஞானிகளின் கருத்துகள் வாயிலாக பார்க்கலாம்.

அரிஸ்டாட்டிலின் கூற்றின்படி, அனைத்து வகை மனிதர்களுக்கும் மூன்று பண்புகள் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

- ❖ அரசமைப்பிடம் விசுவாசம்.
- ❖ கடமைகளில் அதிகபட்ச திறனுடன் இருத்தல்.
- ❖ நல்லியல்பு மற்றும் நீதி வழுவாமை.

மக்களாட்சி நாடானது, அரசியல் மற்றும் பொருளாதார சமத்துவத்தை எப்போதும் நிலை நாட்டுகிறது. இதனால் நல்லியல்பு கொண்ட மனிதனுக்கும், நல்ல குடிமகனுக்குமான அடையாளம் எளிதில் காணப்படுகிறது.

பிளாட்டோவின் கருத்துப்படி, கல்வியே நாட்டில் நிலவும் ஊழலுக்கும், நிலைத்தன்மையற்ற அரசியலுக்குமான தீர்வாக கருதப்படுகிறது. இதனால், அப்பெருமகனார், கல்வியானது பயனுள்ளதாகவும், பொறுப்புள்ளதாகவும் அமைய வேண்டும் என கூறுகிறார். அரிஸ்டாட்டில் (Aristotle), ஹியூம் (Hume), மற்றும் ரூசோ (Rousseau), ஆகியோரின் கூற்றுப்படி ஓர், நாட்டின் குடிமக்களுக்கு, தங்களது நாட்டின் சக குடிமக்களின் அணுகுமுறை, எதிர்பார்ப்பு ஆகியவை பற்றிய அறிவு வேண்டும் என கூறுகின்றனர். J.S.மில் (J.S.Mill), மற்றும் அலெக்ஸ் டோக்யூவில்லி (Tocque Ville) ஆகியோர் மேலே குறிப்பிட்டதற்கு மாறாக ''குடிமக்களுக்கு, அரசியலில் பங்குபெறவும்,

உள்ளாட்சி அரசாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தன்னார்வ மற்றும் நீதி கடமைகள் ஆற்றவு, சங்கங்களை நிர்வகிக்கவும், கல்வி அதிகமாக தேவைப்படுகிறது'' என கூறுகிறார்கள்.

**இந்தியாவில் குடியுரிமை (Citizenship in India)**

இந்தியா ஒரு மதச்சார்பற்ற, மக்களாட்சி மற்றும் தேசிய அரசு ஆகும். சுதந்திர இயக்கம் எதனால் உண்டானது? பல்வேறுபட்ட மதங்கள், பிராந்தியங்கள் மற்றும் பண்பாட்டினை ஒன்றிணைக்கும் காரணகர்த்தாவாக இவ்வியக்கம் தொடங்கப்பட்டது. இந்திய பிரிவினையில் முஸ்லீம் லீக் கட்சியுடன் வேறுபாடுகள் இருந்த போதிலும், சுதந்திர போராட்ட இயக்கத்தின் இந்திய தேசிய தலைவர்களின் மூலம், மதச்சார்பற்ற மற்றும் அனைத்து மக்களையும் உள்ளடக்கிய இந்திய தேசமாக வலிமைப்படுத்தியது.

வயதான பெற்றோர், முதியோர் பராமரிப்பு மற்றும் நலன் சார்ந்த சட்டம் (MWPSC Act) 2007-ல் முதியவர்கள் மற்றும் பெற்றோர் நலனுக்காக இயற்றப்பட்டது.

இச்சட்டத்தின் படி…

- முதியோருக்கு துரிதமாகவும் பயனுள்ளதாகவுமான நிவாரணத்தை வழங்க "பராமரிப்பு தீர்ப்பாயத்தினை" (Maintenance Tribunal) நிறுவியது.
- இச்சட்டத்தின்படி பராமரிப்பு என்பது உணவு, உடுத்த உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ சிகிச்சையையும் உள்ளடக்கியது ஆகும்.
- இச்சட்டத்தின் ஒரே நிபந்தனையாக, எவரெல்லாம் தன் சொந்த வருமானத்திலும், உடைமையின் மூலமும் தன்னை பராமரிக்க இயலாதவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் இப்பராமரிப்பின் கீழ் உட்படுவார்கள்.
- இச்சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகபட்ச பராமரிப்புச் செலவாக மாதம் ரூ.10,000 அளிக்க கட்டாயமாக்கப்பட்டது. பராமரிப்புத் தொகையானது. உரிமை கோருபவர்களின் தேவைகள் மற்றும் அவர்கள் இயல்பு வாழ்க்கையை வாழ்வதற்கான தேவைகளைப் பொருத்தும் அமைகிறது.
- பெற்றோர்களும், முதியோர்களும் அரசாங்கத்தின் இச்சலுகையை அனுபவிக்க, பராமரிப்பு தீர்ப்பாயத்தின் முன் பராமரிப்பு அதிகாரியிடம் தங்கள் விருப்பங்களை முறையிடலாம். இச்சட்டத்தின்படி, வழக்கறிஞர்கள், தீர்ப்பாயத்தின் முன் எவருக்காகவும் வாதாட இயலாது.
- முதியோர் நலனைப் பாதுகாக்கும் பொறுப்பில் இருக்கக்கூடிய யாரேனும் நன்கறிந்தே அவர்களை கைவிடும்பட்சத்தில் ரூ.5,000 அபராதமோ அல்லது மூன்று மாதம் சிறை தண்டனையோ அல்லது மேற்கூறிய இரண்டு தண்டமையுமோ வழங்கப்படலாம்.

இவ்வலிமையான தீர்மானத்தை நாம் அரசமைப்பில் கண்கூடாக பார்க்கலாம். இந்திய அரசமைப்பானது பாரபட்சமின்றி அனைத்து மக்களுக்கும் குடியுரிமை வழங்குகிறது. பெண்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும பழங்குடியினர், அந்தமான் நிக்கோபரின் கடைக்கோடி சமூகங்கள் போன்றோர் இதுகாறும் அனுபவித்திராத குடியுரிமை தற்போது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

குடியுரிமை பற்றிய சட்டங்கள், அரசமைப்பின் பகுதி இரண்டிலும் மற்றும் அவை தொடர்பான நாடாளுமன்ற சட்டங்களிலும் காணப்படுகிறது. இந்தியாவில் குடியுரிமையானது, பிறப்பு வம்சாவழி, பதிவு, இயல்புரிமை மற்றும் பிரதேச உள்ளடக்கத்தின் மூலம் பெறப்படுகிறது. அரசமைப்பின்படி அரசாங்கம் குடிமக்களை இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் போன்ற நிலைகளில் வேற்றுமைப்படுத்துதல் ஆகாது. மேலும் மதம் மற்றும் மொழி சார்ந்த சிறுபான்மையின மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படுகிறது.

**உலக குடியுரிமை மற்றும் தேசியக் குடியுரிமை**

தேசியக் குடியுரிமை என்பது, நாம் குடியிருக்கும் நாட்டின் அரசாங்கம் நமக்களிக்கும் பாதுகாப்பும் உரிமையுமாகும். ஆனாலும் அரசிற்கு தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் பெருமளவில்

இருப்பதால், தனிமனித உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டு சட்டத்தினால் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.

உலக குடியுரிமை என்பது தேசிய எல்லைகளை கடந்த குடியரிமையாகும். இவ்வுரிமையானது, பலதரப்பட்ட மக்களும், நாடுகளும் சேர்ந்த கூட்டுறவு நடவடிக்கையை வலியுறுத்துகிறது. இதனால் குடியுரிமை என்பது பல்வேறுபட்ட சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை தீர்க்கக்கூடியதாக அமைகிறது. மேலும் உலகளாவிய குடியுரிமை, உலக நாடுகளின் ஒற்றுமையையும், கூட்டுறவின் வலிமையையும் பறைசாற்றுகிறது.

## உரிமைகள் மற்றும் கடமைகள்

### அறிமுகம்

- உரிமைகள் என்பது பொதுவாக உலகில் காணப்படுவது. மேலே உள்ள நீதிநெறி, சட்டம், அரசியல் ஆகிய அனைத்தும் ஒன்றாக இணைந்து உருவானதே மனித உரிமைகள் ஆகும். இந்த உரிமைகள் இன்றியமையாதவையாக நவீன காலத்தில் அமைந்துள்ளதற்கு அது அரசமைப்பிலும், பன்னாட்டு மனித உரிமை பிரகடனங்களிலும் இடம்பெற்று இருப்பது காரணம் ஆகும். மனித இனத்தில் பிறந்த அனைவரும் மனிதனாக பிறந்ததற்கான அடிப்படையில் மனித உரிமைகளை கொண்டு இருக்கின்றார்கள். இந்த அடிப்படையில் அனைத்து மனிதர்களும் சாதி, மத, இன, வகுப்பு வேறுபாடுகளைக் கடந்து நீதிநெறியிலான சமத்துவத்தின் அடிப்படையில் மனித உரிமைகளைப் பெறுகிறார்கள்.

- உரிமைகளின் பொருள் மற்றும் அதன் இயல்புகள்
- உரிமைகள் மற்றும் பொறுப்புக்களுக்கிடையே உள்ள வேற்றுமைகள்
- பல்வேறு வகையான உரிமைகள்
- அரசின் வழிகாட்டும் நெறிமுறைகள்
- குடிமக்களின் அரசியல் கடட்டுப்பாடுகள்
- குடியுரிமை
- சொத்து பற்றிய கோட்பாடுகளின் பார்வை

### இயல்புகள்:

- உரிமைகள் என்பது மக்களின் சமூக மேம்பாட்டிற்கு முக்கியமானதாக அமைந்துள்ளது.
- உரிமை என்பது மதம், சாதி, இனம், பாலினம் என்று பாராமல், அனைவருக்கும் கிடைக்க கூடியது.
- உரிமைகள் மற்றும் கடமைகள் இவ்விரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்ததாகும். ''கடமைகள் இல்லை என்றால் உரிமைகள் இல்லை''.
- உரிமைகள் அனைத்தும் நீதி மன்றத்தில் வழக்கிட்டு பெறக்கூடியது ஆகும்.
- மக்களின் உரிமைகளை பாதுகாப்பது அரசின் கடமை ஆகும்.

### இயற்கை உரிமைகள் (Natural Rights):

- இந்த வகையான உரிமைகள் மனித இயல்பு மற்றும் பகுத்தறிவின் ஒரு பகுதியாகும். இதனை பற்றி அரசியல் கோட்பாடுகள் கூறுவது என்னவென்றால் ஒவ்வொரு மனிதனும் சில அடிப்படை உரிமைகளைப் பெற்றுள்ளான். இதனை அரசாங்கங்கள் கூட மறுக்க இயலாது.

### நீதிநெறி உரிமைகள் (Moral Rights):

- நீதிநெறி உரிமை என்பது நன்னடத்தை, மரியாதை, நல்லொழுக்கம் ஆகியன பற்றியது ஆகும். இது அறநெறியின் படி மக்களை முழுமையாக வழி நடத்தி செல்கின்றது.

### சட்ட உரிமைகள் (Legal Rights):

- சட்ட உரிமைகள் என்பது நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் சமமாகக் கிடைக்க கூடிய ஒன்றாகும். இதில் எவ்வித பாகுபாடும் இன்றி பின்பற்றப்படுகிறது. சட்ட உரிமைகள் என்பது அரசினால் ஏற்றுகொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட விதிமுறைகள் ஆகும். சட்ட உரிமைகள் என்பது மூன்று வகைப்படும்.

### குடிமை உரிமைகள் (Civil Rights):

- இந்த வகையான உரிமைகள் ஓர் மனிதன் சமூகத்தில் நாகரிகமான வாழ்க்கையை வாழ்வதற்கு அடிப்படை உரிமைகளை வழங்குகிறது. இது அரசினால் பாதுக்காக்கப்படுகிறது. அதாவது உயிர் வாழுகின்ற உரிமை, சுதந்திரம், மற்றும் சமத்துவம் ஆகிய குடிமை உரிமைகளை அரசு நிலைநாட்டி பாதுகாக்கிறது.

### அரசியல் உரிமைகள் (Political Rights):

- மக்கள் தங்களது நன்னடத்தையின் மூலம் அரசியல் நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு வழிவகை செய்வது அரசியல் உரிமைகள் ஆகும். இது வாக்களிக்கும் உரிமை, தேர்ந்தெடுக்கப்படும் உரிமை, பொதுப் பதவி வகிக்கும் உரிமை போன்றவை ஆகும்.

### பொருளாதார உரிமைகள் (Economics Rights):

- இந்த உரிமைகள் தனிமனினுக்கு பொருளாதார பாதுகாப்பு அளிப்பதாகும். இதன் மூலம் மக்கள் தங்களது குடிமை மற்றும் அரசியல் உரிமைகளைப் பயன்படுத்த அதிகாரம் அளிக்கப்படுகிறது. பொருளாதார உரிமை என்பது ஒருவருக்கு வேலைவாய்ப்பு உரிமை, தகுந்த பாதுகாப்பு உரிமை, சமூக பாதுகாப்புரிமை ஆகியவற்றினை அளிப்பது போன்றவை ஆகும்.

### ஒப்பந்தம் மூலம் பெறும் உரிமைகள் (Contractual Rights):

- இவ்வகையான உரிமைகள் என்பது தனி மனிதனுக்கு ஒரு குறிப்பிட்ட நிகழ்வில் வழங்கப்படுகிற வாக்குறுதிகள் அல்லது ஒப்பந்தங்கள் வாயிலாக தோற்றுவிக்கப்படுகிறது.

### மனித உரிமைகள் (Human Rights):

- மனித உரிமைகள் என்பவை உரிமைகளில் மிகவும் உயர்ந்து இருப்பதாகும். இது உள்நாட்டு அளவிலும், சர்வதேச அளவிலும் சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் மூலமாக ஆதரவளிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறது. இது ஒரு சட்ட அமைப்பினால் பல்வேறு காலக்கட்டங்களில் உருவாக்கப்பட்டு முக்கியத்துவம் பெற்ற ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் - 10 நாள் பன்னாட்டு மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படுகிறது.

### உரிமைகள் மசோதா மற்றும் அடிப்படை உரிமைகள்

உரிமைகள் மசோதா என்பது அமெரிக்காவில் டிசம்பர் 15-இல் 1791-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இது தனிமனித உரிமைகளின் உத்திரவாதங்களை மிகுந்த வலிமையுடன் மத்திய மற்றும் மாநில அரசுகளால் கருத்திணைவு அடிப்படையில் செயல்படுத்த வழிவகை செய்தது.

> ஜேம்ஸ் மேடிசன் இந்த ‘உரிமைகள் மசோதா’வை அறிமுகப்படுத்தினார். இது, அவர் 1776 இல் வெளியிட்ட புகழ்பெற்ற ஜெர்ஜீனியா மனித உரிமைகள் பிரகடனத்தின் அடிப்படையில் அமைந்தது ஆகும். உரிமைகள் மசோதா என்பது இங்கிலாந்தின் மகாசாசனம் மற்றும் ஆங்கில உரிமைகள் மசோதா (1689) மற்றும் ஆங்கில உரிமைகள்
>
> ஜேம்ஸ் மேடிசன் (James Madison)

### அடிப்படை உரிமைகள்:

அரசமைப்பு நிர்ணயசபையானது இந்திய அரசமைப்புச் சட்டத்தினை வரையறை செய்ய 2 ஆண்டுகள் 11 மாதங்கள் 20 நாட்கள் எடுத்துக்கொண்டது.

இந்திய அரசமைப்பின் சட்டப் பகுதி III - இல் அடிப்படை உரிமைகள் உள்ளன.

**சமத்துவ உரிமை (Right to Equality):**

- சமத்துவ உரிமை என்பது சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற உத்திரவாதத்தினை அளிக்கிறது. இது சாதி, மதம், மொழி, இனம், பாலினம் ஆகியவற்றிலான பாகுபாட்டை தடை செய்கின்றது.

**சுதந்திர உரிமை (Right to Freedom):**

- சுதந்திரமான பேச்சு மற்றும் கருத்து உரிமை, பொதுஇடத்தில் ஆயுதங்களின்றி அமைதியாகக் கூடுதல், சங்கம் அமைக்கும் உரிமை, நாடு முழுவதும் சுதந்திரமாக உலவுகின்ற உரிமை போன்றவற்றை வழங்குகிறது.

**வாழும் உரிமை மற்றும் தனிநபர் சுதந்திரம் (Right to Life and Personal Liberty):**

- எந்த ஒரு குடிமகனுக்கும் தனிநபர் சுதந்திரம் மறுக்கப்பட கூடாது. அதாவது எந்த ஒரு மனிதனும் கைது செய்யப்படும் போது அதற்கான காரணத்தை அவனுக்கு தெரிவிக்காமல் காவலில் வைக்கக் கூடாது. மேலும் அவர் தனது சார்பாக வாதாட ஒரு வழக்குறைஞரை தேர்தெடுத்து கொள்ளும் உரிமை வழங்கப்பட வேண்டும். அவர் கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள்ளாக நீதிமன்றத்தின் முன்பாக ஆஜர்படுத்தப்பட வேண்டும்.

**தடுப்புக் காவல் (Preventive Detention):**

- தடுப்புக் காவல் என்பது காலத்தின் கட்டாயத்தினால் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவரின் செயலை தடுப்பதற்கானதாகும். தடுப்பு காவல் என்பது ஒருவர் சட்டம் மற்றும் ஒழுங்கை அச்சுறுத்தும் வகையிலும், தேசப்பாதுகாப்பு மற்றும் அமைதிக்கு குந்தகம் விளைவிப்பதையும் தடுப்பதற்காக அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை ஆகும். இதற்காக அந்த நபரைக் கைது செய்யவோ அல்லது காவலில் வைக்கவோ அரசாங்கத்திற்கு அதிகாரம் உள்ளது.

**மக்களாட்சி மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்**

- பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் கல்வி அறிவு வழங்கப்பட்டால் அது அவர்களுடைய குடும்பம் மற்றும் சமுதாயத்தின் வளர்ச்சியை அதிகப்படுத்துகிறது.
- பெண்கள் எப்போதும் ஆண் துணைகளைச் சார்ந்தே இருப்பார்கள். உதாரணமாக தந்தை, கணவர், சகோதரர், மற்றும் மகன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.
- பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு கல்வி அளிக்கப்பட்டால் பொருளாதாரம் வளரும். உடல்நலம் மேம்பாடும், நாடு எழுச்சியுறும்.
- பெண்கள் வீட்டை பராமரிப்பதற்கும். சமையல் செய்யவும் மட்டுமே உள்ளனர்.
- பெண்கள் மற்றும் சிறுமிகள் ஆகியோர் பொதுவாக நடனம். ஓவியம். மற்றும் சமையல் போன்றவற்றில் சிறந்தவர்களாக விளங்குவார்கள்.
- கல்வி அறிவு என்பது பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு வாழ்க்கை பாதையை அமைத்துக் கொடுக்கும். மேலும் அமைதியையும், அதிகாரத்தையும் அளிக்கும்.
- மாலாலா யூசுப்சாய் (Malala Yousufzai) என்ற 17 வயது பாகிஸ்தான் நாட்டு இசுலாமிய இளம்பெண் ஒருவர் பெண் கல்விக்கு தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றார்.

**சுண்டலுக்கு எதிரான உரிமை (Right Against Exploitation):**

- குழந்தைத் தொழிலாளர் முறை, ஆட்கடத்தல் செய்தல் மற்றும் கட்டாயப்படுத்தி பிச்சையெடுக்க வைத்தல் குழந்தைகளைக் கட்டாயப் பணி செய்ய வைத்தலின் வடிவங்களாகும். மேலும் இது பதினான்கு வயதிற்குட்பட்ட சிறார்களை தொழிற்சாலைகள், சுரங்கங்கள் அல்லது உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய எத்தொழிலும் ஈடுபட வைப்பதை தடை செய்கிறது.

**மத சுதந்திர உரிமைகள் (Right to freedom of Religion):**

- இந்தியாவில் அனைத்து மக்களும் தங்களது மதம் மற்றும் நம்பிக்கையினைத் தேர்தெடுத்து அதன்வழி செல்லும் உரிமையை அரசமைப்பு சட்டம் வழங்கி உள்ளது அரசமைப்பின் உறுப்பு 26-ன் படி ஒவ்வொருவரும் மத விவகாரங்களின் அடிப்படையில் சேவை புரிவதற்காக நிறுவனங்களை உருவாக்கி, அதற்கென அசையும் மற்றும் அசையா சொத்துக்களை உரிமையாக்கி சட்டத்தின் அடிப்படையில் நிர்வகிப்பதாகும்.

**பண்பாடு மற்றும் கல்வி உரிமைள் (Cultural and Educational Rights):**

- இந்தியாவின் மதம், மொழி மற்றும் பண்பாடு அடிப்படையிலான சிறுபான்மையினர், குழுக்கள் அல்லது பிரிவினருக்கு அரசமைப்பின் மூலம் இந்த அரசியல் சாராத உரிமைகள் வழங்கப்படுகிறது.

- எந்த குடிமகனும் அரசு நடத்தும் அல்லது அரசின் நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் கல்விபெறுவதற்கு உரிமையுண்டு என்பதனை மறுக்க இயலாது. இந்த உரிமையை சாதி, மதம், இனம், பாலினம், நம்பிக்கை போன்றவற்றைக் காரணம் காட்டி மறுக்க இயலாது. குடிமக்கள் தாங்கள் விரும்பும் பள்ளிகள் அல்லது கல்லூரிகளில் கல்வி கற்றும் உரிமை உள்ளது. எந்த ஒரு கல்வி நிறுவனமாவது இந்த அடிப்படையில் பாகுபாடு காட்டுமாயின் அரசின் நிதி உதவி அந்தக் கல்வி நிறுவனமாவது இந்த அடிப்படையில் பாகுபாடு காட்டுமாயின் அரசின் நிதி உதவி அந்தக் கல்வி நிறுவனத்திற்கு மறுக்கப்படும். மேலும் இந்த சிறுபான்மை கல்வி நிறுவனங்க்ள எவ்விதமான கல்வி முறையை பின்பற்ற வேண்டும் என்பதனை அரசு வலியுறுத்த முடியாது. அந்தக் கல்வி நிறுவனங்களை அவரவர்களது பண்பாட்டினை பாதுகாக்கும் வகையில் செயலாற்ற அனுமதிக்க வேண்டும்.

**அரசமைப்பு சட்ட பரிகார உரிமைகள் (Right to Constitutional Remedies):**

- ஒரு குடிமகன் தனது உரிமையை பாதுகாத்து கொள்வதற்கு உச்ச நீதிமன்றம் அல்லது உயிர்நீதிமன்றத்தினை அணுகுவதற்கு இந்த உரிமை வழி வகை செய்கின்றது. அரசமைப்பின் உறுப்பு 32-இன்படி உச்ச நீதிமன்றம் பரிகாரம் செய்யலாம். அதுவே அரசமைப்புச் சட்டம் உறுப்பு 226-இன் படி உயர்நீதிமன்றம் பரிகாரம் செய்கின்றது. அதுவே அரசமைப்புச் சட்ட உறுப்பு 226-இன் படி உயர்நீதிமன்றம் பரிகாரம் செய்கின்றது. இதற்காக நீதிமன்றம் நீதிப்பேராணைகளை பிறப்பிக்கிறது. இவைகள், ஐந்து வகைப்படும்.
- ஆட்கொணர்வு நீதிப்பேராணை (Writ of Hebeas Corpus)
- கட்டளை நீதிப்பேராணை (Writ of Mandamus)
- சான்றாய்வு நீதிப் பேராணை (Writ of Certiorari)
- தகுதி வினவும் நீதிப் பேராணை (Writ of Quo Warranto)

ஆகவே அடிப்படை உரிமைகள் என்பது தனிமனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை பாதுகாக்கின்ற கருவியாக நம் நாட்டில் பயன்படுகிறது. அந்த வகையில் அடிப்படை உரிமைகளை செயல்படுத்தும்போது, மக்களாட்சி அடிப்படையிலான வாழ்க்கை முறையும் அதன் அடிப்படைக்கொள்கைகளான சமத்துவம் மற்றும் நீதியையும் சமூகத்தில் நிலைநிறுத்துகிறது. அடிப்படை உரிமைகள் நம் நாட்டின் சுதந்திரத்தில் ஒரு மைல்கல் ஆகும். இது வழக்கு விசாரணை மற்றும் பெருந்துன்பதற்குப் பிறகு நமக்கு கிடைத்துள்ளதாகும்.

**புதிய உரிமைகள்:**

**தகவல் அறியும் உரிமை (Right to Information):**

- தகவல்உரிமை சட்டம் 2005 அரசாங்கத்திடம் மக்கள் தகவல்கள் கேட்பதனை சட்டப்பூர்வமாக்கியுள்ளது. இந்தச்சட்டமானது அரசாங்கங்களை வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும், குடிமக்களுக்கு பொறுப்புணர்வு கொண்டதாகவும் மாற்றியுள்ளது. இதன் மூலமாக அரசின் நடவடிக்கைகளை தகவலறிந்த குடிமக்கள் எளிதாகக் கண்காணிக்க முடியும். இதனால் அரசாங்கம் மக்களுக்கு கடமைப்பட்டதாக மாற்றப்பட்டுள்ளது.

**தனியுரிமை (Right to Privacy):**

- அரசிடம் தனி மனிதனின் அனைத்து உரிமைகளை சமர்ப்பிக்க வேண்டியதில்லை. தனியுரிமை என்பது மனிதனின் மாண்புடன் ஒன்றிணைந்ததாகும். தனியுரிமையைப் பாதுகாப்பதற்கு அரசமைப்பின் உறுப்பு 21 - இல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது வாழ்வுரிமை மற்றும் தனிநபர் சுதந்திரத்தின் உள்ளார்ந்த பகுதியாகும். இந்த உரிமைகள் அரசமைப்பின் பகுதி – III இல் இடம் பெற்றுள்ளது.

**மாற்றுப்பாலினத்தவரின் உரிமைகள் (Rights of Transgenders):**

- மாற்றுப்பாலினத்தவர் தங்களது குணாதிசயங்களில் ஆடவர் அல்லது மகளிரிடமிருந்து மாறுபட்டு காணப்படுவார்கள். அவர்கள் காலங்களைக் கடந்தும் அனைத்து பண்பாடுகள், இனம் மற்றும் அனைத்து வகுப்புகளிலும் இருக்கிறார்கள். வெகு சமீப காலங்களில்தான் அவர்களின் பிரச்சனைகள் பேசப்படுகின்றன. அவர்கள் இப்போது 'மூன்றாம் பாலினம்' என்று அழைக்கப்படுகின்றனர். உச்சநீதிமன்றமானது மத்திய – மாநில அரசுகளுக்கு ஓர் உத்தரவை வழங்கியுள்ளது. அதில் இவர்களின் பாலின அடையாளத்தினை சட்டபூர்வமாக அங்கீகரிக்கும்படி கூறியுள்ளது. இவர்களுக்கும் மற்றவர்களுக்கு அளிக்கப்பட்ட அனைத்து அடிப்படை உரிமைகளையும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவர்கள் பொது நலம் மற்றும் சுகாதாரம், சமூக பொருளாதார உரிமைகளாகிய அனைத்தும் பெறும் உரிமையுடையவர்கள் அவர்.

## <u>அரசியல் கட்டுப்பாடு (Political Obligation)</u>

### அரசியல் கட்டுப்பாடு (Political Obligation)

அரசியல் கடப்பாடுகள் என்பது அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளை ஒருவர் நிறைவேற்றுவதற்கான பிணைப்பாகும். ஒவ்வொரு தனி மனிதனும் தன் சுய நலத்திற்காகவும், சமுதாய நலத்திற்காகவும் அரசமைப்புச் சட்ட உறுப்புகள் மற்றும் ஒழுங்குமுறைகளை பின்பற்றுகிறான். அரசாங்கம் எப்படி குடிமக்களுக்கு பொறுப்பானதோ, அதே போன்று குடிமக்களும் அரசாங்கத்திற்கு பொறுப்பானவர்கள் ஆவர்.

### அரசியல் கட்டுப்பாடு மற்றும் அரசியல் அதிகாரத்துவம் (Political Obligation and Political Authority)

ஒரு அரசு, அரசியல் அதிகாரத்துவம் கொண்டு இருந்தால் அதனால் கீழ்ப்படியாதவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தமுடியும். உதாரணமாக அரசால் வரி விதிக்கப்படுகிறது எனில் வரி செலுத்தாதவர்கள் மீது நடவடிக்கை எடுத்து வரி வசூல் செய்ய அரசால் முடியும். எனினும் அரசு அவ்வாறு செய்ய வில்லை என்றால் கூட குடிமகன் தார்மீக அடிப்படையில் அரசின் சட்டத்தினை மதித்து அதற்கு கீழ்ப்படிய வேண்டும். எனவே அரசியல் கடப்பாடு என்பது எங்கும் நிறைந்திருக்கக்கூடிய தற்கால தேசிய அரசில் ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டியதாகும்.

**அரசியல் கடப்பாடுகள் மூன்று முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாகும்**

1. அடையாளம் காண கூடிய அதிகாரத்திடம் அரசியல் கடப்பாடுகளை காண்பித்தல்
2. எதுவரை அரசியல் கடப்பாடுகளை ஆற்ற வேண்டும்?
3. அரசியல் கடப்பாடுகளின் அடிப்படை (The Basis of Political Obligations)

### அரசியல் கடப்பாட்டின் இயல்புகள் (Features Political Obligations)

- அரசியல் ஆர்வம் கொள்வதும், சமூகப் பணி செய்தலும் விரும்பத்தக்கதாக உள்ளது.
- பொதுப்பணி செய்பவர்களுக்கு நாணயம் மற்றும் நேர்மை ஆகியவை இன்றியமையாத அம்சங்களாகும்.
- சட்டபூர்வ தன்மை மற்றும் திறனை மேம்படுத்துதல் ஆகியவை இருக்க வேண்டும்.
- குடிமக்கள் தங்களது காப்பாளரை பாதுகாக்கின்ற பொறுப்பினைக் கொண்டுள்ளனர்.

**அரசியல் கடப்பாடுகளின் வகைகள்:**

அரசியல் கடப்பாடுகள் நான்கு வகைப்படும்.

1. **நீதிநெறி கடப்பாடு (Moral Obligation)**

   வீட்டிற்கு வரும் விருந்தினரை உபசரிக்கிறீர்களா? ஏழைகளுக்கு உதவுகிறீர்களா? வயதான பெற்றோரை பேணுகீறிர்களா? இவை உங்களின் நீதி நெறி சார்ந்த கடப்பாடுகள் ஆகும். இது சமூகத்தில் சட்டத்தின் படி நடைபெறுவதில்லை. மேலும் இவற்றை நீங்கள் நிறைவேற்றவில்லை என்றால் உங்களுக்கு சட்டப்படியான தண்டனை எதுவும் கிடையாது.

2. **சட்டப்படியான கடப்பாடு (Legal Obligation)**

   நம் நாடு மக்கள் நல அரசு கொள்கையைக் கொண்ட நாடாகும். இதில் அரசாங்கமானது நாட்டிற்கு உள் கட்டமைப்பு, வசதிகளை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது. சாலை வசதி, சுகாதார மையங்கள், மருத்துவம். கல்வி. போன்றவற்றை வழங்குவது அரசின் கடமை என்பதற்கான சில உதாரணங்களாகும்.

3. **நேர்மறை கடப்பாடு (Positive Obligation)**

   அரசு சில விதிமுறைகளை உருவாக்கி செயல்படுத்துகிறது. அவற்றை நம்மால் கீழ்ப்படியாமல் இருக்க முடியாது. இவற்றைத்தான் நேர்மறை கடப்பாடு என்று கூறுகிறோம். உதாரணமாக வரி செலுத்துதல், நாட்டின் பாதுகாப்பு பணியில் ஈடுபடுதல்.

4. **எதிர்மறை கடப்பாடு (Negative Obligation)**

   அரசால் தடுக்கப்பட்ட எந்தவொரு செயலையும் ஒரு குடிமகன் செய்யாமல் இருப்பதே எதிர்மறை கடப்பாடு ஆகும். குற்றம் செய்தல் என்பதே ஓர் எதிர்மறைக் கடப்பாடாகும்.

**அரசமைப்புச் சட்டம் கூறும் முக்கிய கடப்பாடுகள்**

எந்தவொரு சட்டமும் நல்லது செய்யவில்லை என்றால் அதனை மாற்றிவிட வேண்டும். சில சமயங்களில் சில சட்டங்களை அரசு உருவாக்கும் போது அவை மக்களுக்கு தீங்கு விளைவித்தாலும் அதற்கு ஆதரவு அளிக்கப்படுகிறது. இத்தகைய சட்டமே நீராவி உருளைச் சட்டம் என்று அழைக்கப்படுகிறது. இத்தகைய சட்டங்களை கடுமையாக எதிர்ப்பது குடிமக்களின் கடமை ஆகும். இதன் மூலமாக நாம் அறிவது அரசியல் கடப்பாடுகள் என்பது சட்டத்தினை மதித்து நடப்பது மட்டுமல்ல சில சமயங்களில் சமுதாய நலனுக்கு எதிராக இருந்தால், சட்டத்தினை எதிர்க்கச் சொல்வதும் அரசியல் கடப்பாடுகளே ஆகும்.

**அரசியல் கடப்பாடு பற்றிய கோட்பாடுகள் (Theories of Political Obligation)**

வாழ்க்கையில் நாம் அனைவரும் பல கோட்பாடுகளை பின்பற்றி வருகிறோம். அதேபோன்று அரசியல் கடப்பாடுகள் பற்றி சில கோட்பாடுகளை இங்கு காண்போம்.

**தெய்வீகக் கோட்பாடு (Divine Theory):**

முற்காலத்தில் மக்கள் நினைத்தது என்னவென்றால் 'அரசினை கடவுள் படைத்தார் என்றும், அரசர் கடவுளின் பிரதிநிதியாவார்'' என்றும் அவர்கள் நம்பினார்கள். இந்தப் கோட்பாடு முற்காலத்திலும். இடைக் காலத்திலும் புகழ்பெற்று இருந்தாலும் தற்காலத்தில் இந்தக் கோட்பாட்டுக்கு இடமில்லை.

**ஒப்புதல் கோட்பாடு (Consent Theory)**

அரசின் அதிகாரம் அனைத்தும் மக்களின் ஒப்புதல் அடிப்படையிலானதாகும். ஹாப்ஸ், லாக், ரூசோ போன்றோர் இந்த கோட்பாட்டினை நியாயப்படுத்துவதுடன், அரசின் அதிகாரம் மக்களின் ஒப்புதல் அடிப்படையிலேயே அமைகிறது என்று கூறுகிறார்கள். ஆனாலும் பிற்காலத்தில் இது ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

**பரிந்துரைக் கோட்பாடு (Prescriptive Theory):**

இக்கோட்பாடானது அரசியல் நிறுவனங்கள் என்பவை பழங்காலத்தொட்டு அமைந்து இருத்தன என்று கூறுகிறது. இக்கருத்தினை எடமண்ட் பர்க்கும் (Edmund Burke) ஆதரிக்கிறார். ஆனாலும் காலப்போக்கில் இது செயல் இழந்து போனதற்கு காரணம் அளவுக்கு அதிகமாக நன்கு கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகளை வலியுறுத்தியதாகும்.

**இலட்சியவாதக் கோட்பாடு (Idealistic Theory)**

இந்த கோட்பாடு மனிதன் மற்றும் அரசு ஆகிய இரண்டும் தனித்தனியான குணகூறுகள் கொண்டவை என்று குறிப்பிடுகிறது. 'மனிதன்' என்பவன் அரசியல் மற்றும் பகுத்தறிவினால் உருவானவன் என்றும், அரசு என்பது சுயசார்புடைய சமூக அமைப்பு என்றும் கூறுகிறது. மேலும் இக் கோட்பாடானது மனிதன் தன் அதிகாரத்தை அரசிடம் இருந்து மட்டுமே பெறுகிறான் எனும் பொது அவன் அரசிடம் இருந்து மாறுபடுகின்ற அதிகாரத்தை இழக்கின்றான் என்பதே சரியானது ஆகும் என்று கூறுகிறது. இந்த கோட்பாட்டின் கருத்துக்கள் பெரும்பாலும் மனிதனால் புரிந்து கொள்ள முடியாத அளவிற்கு கற்பனையாக அமைந்துள்ளது.

**மார்க்சின் கோட்பாடு (Marxian Theory)**

மார்க்சின் கோட்பாடு மூன்று நிலைகளாகப் பிரிக்கப்படுகிறது.

**புரட்சிக்கு முந்தைய நிலை**

இந்நிலையில் மனிதன் முழுவதும் அரசியல் கடப்பாடுகளின்றி இருப்பதை கூறுகிறது.

**புரட்சிக்கால நிலை**

அரசியல் கடப்பாடு இல்லாத நிலையில் இருந்து மேம்பட்டு முழுவதுமாக அரசியல் கடப்பாட்டுக்கு உட்படுகின்ற நிலைக்கு மாறுவதைப் பற்றியது. இந்த புரட்சிக்கால நிலையாகும்.

**புரட்சிக்குப் பிந்தையநிலை:**

இந்த நிலையானது முழுவதுமான அரசியல் கடப்பாடுகளில் இருந்து சமூக மேம்பாட்டிற்கு மாறும் நிலை பற்றியதாகும்.

மார்க்சிய அரசியல் கோட்பாடு கூறுவது என்னவென்றால் அரசு என்பது பாட்டாளி வர்க்கத்தனார் ஆளும் அமைப்பு ஆகும். வெற்றிகரமான புரட்சியின் மூலமாக முதலாளித்துவ அரசு மாற்றப்பட்டு சமதர்ம முறைமை உருவாக்கப்படுவதுடன் இதில் அரசுகள் படிப்படியாக உதிர்ந்து போகும்.

**நாம் ஏன் அரசுக்கு கீழ்படிய வேண்டும்? அது தேவையானதா?**

இக்கோட்பாடுகள் அரசியல் கடப்பாடு பற்றியவையாக இருந்தாலும் சில புலனாகாதவை மற்றும் சில கோட்பாடுகள் தர்க்க அடிப்படையில் பொருத்தமற்றவையாகும். எந்த காரணத்திற்காக தனி மனிதன் அரசிடம் கீழ்ப் படிகிறான் என்பதைக் காண்போம்.

**அ. தண்டணை பற்றிய பயம்**

நமது கடமைகளை ஒழுங்காகச் செய்யாத போது பயம் வருகிறது. அதே போன்று தண்டனை கிடைக்கும் என்ற பயத்தின் காரணமாகவே தனிமனிதர்கள் தங்களின் பணிகளைச் செய்கிறார்கள். அரசு தனது அதிகார வலிமையைப் பயன்படுத்தியே மனிதனை முறைமைக்குத் தக்கவாறு விதிகளை பின்பற்றவைக்கின்றது.

**ஆ. தேசப்பற்று**

தேசிய கீதத்திற்கு ஏன் எழுந்து நிற்கிறீர்கள்? அவ்வாறு நிற்பதற்குக் காரணம் தேசப்பற்று ஆகும். நாம் நமது நாட்டினை நேசிக்கிறோம். ஆதலால் நாட்டின் மீது குடிமகன் என்ற முறையில் அக்கறை உணர்வுடன் செயல்பட வேண்டும்.

**இ. சமூக ஒழுங்கின்மை மற்றும் அமைப்பெதிர்வாதம் பற்றிய பயம்**

மனித இனம் அமைதியையும், ஒழுங்கினையும் விரும்புவது பொதுவான கொள்கையாகும். சட்டத்திற்கு கீழ்படிதலையும மனிதர்கள் விரும்பியே ஏற்றுக்கொள்கின்றனர். அவ்வாறு சட்டத்திற்கு கீழ்படியாதவர்களை மனிதன் தனித்துப் பார்க்கிறான்.

**ஈ. மரபுகள் மற்றும் பழக்கங்கள்**

நாம் அனைவரும் துணிவு, நேர்மை, வீரம், ஒழுக்கம், கீழ்படிதல் போன்ற நல்லொழுக்கங்களை பழக்கங்களாகவே பின்பற்றி வருகிறோம். இது நமக்கு மரபார்ந்த விழுமியங்களால் ஏற்பட்டதாகும். இதே போன்று நாட்டில் குடிமக்கள் நல் மரபுகளை நிறுவ விரும்புவதுடன் அரசுக்குக் கீழ்படிதல், போன்ற செயல்களும் பழக்கமாகின்றன.

ஆகவே அரசியல் கடப்பாடு என்பது தேசிய அளவில் சிறந்த முறைமையை நிர்வகிக்க அவசியமாகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். ஆதலால் ஒவ்வோருவரும் அரசிடமிருந்து சிறந்த கைமாறு எதிர்பார்த்தால் சட்டத்தினை மதித்து கீழ்படிய வேண்டும்.

## .சொத்து

சொத்து என்பது இயற்கை உரிமையாகும். அது மனித மாண்பு, சுதந்திரம் மற்றும் மாண்பமை வாழ்விற்கு அவசியமாகிறது. சொத்து என்பது மனிதனுடன் சட்ட தொடர்புடைய பொருள்களாகவோ அல்லது புலனாகாதவைகளாகவோ இருக்கலாம்.

**லாக் மற்றும் பயன்பாட்டு வாதத்தினரின் நியாயவாதம்** (Locke and the Utilitarian Justification)

லாக்கின் கூற்றுப்படி அரசாங்கத்தின் முக்கிய பணி என்பது குடிமக்களின் உரிமைகளைக் காப்பதுடன், அமைதியான முறையில் தங்களின் சொத்துக்களை அனுபவிக்கும் நிலையினை உருவாக்கி அவர்களை மகிழ்ச்சியுடன் வாழச் செய்வதாகும். மனித இனம் வாழ்வதற்கு சொத்து அடிப்படைத்தேவை எனக் கூறுகிறார். மனிதர்கள் ஒவ்வொரு தருணத்தைப் பற்றியும் திட்டமிடுவதில்லை. ஆனால் அதே மனிதன் தனது எதிர்கால பொருளாதாரப் பாதுகாப்பிற்காகத் திட்டமிடுகிறான்.

இதனையே பயன்பாட்டு வாதம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது. “சொத்துரிமை என்பது தனிநபர்க்குத் தேவையானது. அதுவே அவனுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கையைக் கொடுக்கிறது. எந்தவோரு அரசாங்கமும் மக்களுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கையைக் அளிக்க நினைத்தால், முதலில் மக்களின் சொத்துரிமைக்குத் தகுந்த பாதுகாப்பு அளித்து உற்பத்தியை அதிகரிக்க

வேண்டும். எந்த ஒரு அரசும் சொத்துக்களை மக்களிடம் இருந்து பறிக்கக்கூடாது. சொத்து என்பது மக்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருவது என்பது உறுதியாகும்''.

**இருபதாம் நூற்றாண்டில் ஏற்பட்ட மேம்பாடுகள்**

இரண்டாம் உலகப் போருக்குபின் பெரும்பாலான வளர்ந்த மற்றும வளரும் நாடுகள், சமூக நலக் கொள்கையை பின்பற்றுகின்றன. அக்கொள்கையின் முக்கியக் கூறுகளாக இருப்பது சொத்து வரிவிதிப்பு, அடிப்படை தொழிற்துறையில் மாறுதல், பொது மக்களின் அடிப்படை வசதிகளான சுகாதாரம், கல்வி போன்ற அரசு கட்டுப்பாட்டில் உள்ளவை போன்றவைகளாகும்.

**பெண்ணியவாதிகளின் கண்ணோட்டம்** (Feminist Perspectives)

21-ஆம் நூற்றாண்டில் பெண்களில் ஆற்றலாதல் துவங்கியவுடன் சம உரிமைக் கோரிக்கை பெண்களால் முன் வைக்கப்பட்டது. இந்த பெண்ணியவாதிகள் கூறுவது என்ன என்றால் பெண்களின் இன்றைய அடிமை நிலைக்குக் காரணம் அவர்களுக்கு வருவாய், நிலம் போன்ற ஆதாரங்கள் மறுக்கப்படுவதாகும். சொத்து உரிமைகள் முழுவதும் ஆண்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு அவர்களால் கட்டுப்படுத்தப்படுவதால் பெண்கள் ஆண்களை சார்ந்தே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்தச் சார்பு நிலைதான் பெண்கள் தங்களது உரிமைகளையும், சொத்து உரிமையையும் கோருவதற்கு காரணமாக அமைந்து இருக்கின்றது.

இந்திய அரசமைப்பு சொத்து உரிமையை அடிப்படை உரிமையில் இருந்து நீக்கியது. 1978 – ஆம் ஆண்டு 44 வது அரசமைப்பு சட்ட திருத்தம் மூலம் சொத்துரிமை நீக்கம் மேற்கொள்ளப்பட்டது எனினும் சொத்துரிமை என்பது விதி 300(A) யில் சாதாரண உரிமையாக வழங்கப்பட்டுள்ளது. இதன்படி சட்டத்தினால் வழங்கப்பட்ட யாருடைய சொத்துரிமையையும் மறுக்க இயலாது என கூறப்பட்டுள்ளது. ஆகவே சொத்துரிமை தற்பொழுது சட்ட அங்கீகாரம் உள்ளதாக விளங்குகிறது.

இன்றைய குடிமைச் சமூகத்தில் வலியுறுத்தியோ அல்லது அதிகாரப்படுத்தியோ, சொத்துக்களை கையகப்படுத்தும் முறை குறைக்கப்பட வேண்டும். எனினும் சூழ்நிலையின் காரணமாக அல்லாமல் வலிமையைப் பயன்படுத்தி மக்களின் சொத்துகளை கையகப்படுத்துவதை செய்யக் கூடாது. அரசு பல நேரங்களில் பெரிய தொழிலதிபர்களுக்கு முகவர்களாகவும், இடைத்தரகர்களாகவும் செயல்படாமல் விவசாயிகளின் உறுதியான சொத்துரிமைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

அலகு– 5

## மக்களாட்சி

### மக்களாட்சியின் வரையறை மற்றும் வகைகள்

- மக்களாட்சி என்ற சொல், கிரேக்க சொற்களான ''டெமோஸ்'' மற்றும் ''கிரேட்டோஸ்'' என்ற இரு சொற்களில் இருந்து உருவானது. கிரேக்க மொழியில் டெமோஸ் என்றால் மக்கள் என்றும் ''கிரேட்டோஸ்'' என்றால் ஆட்சி என்றும் பொருள்படும். இவ்விரு வார்த்தைகளின் இணைப்பிலிருந்து தான் மக்களாட்சி என்ற சொல் பிறந்தது. இதற்கு மக்களின் ஆட்சி அல்லது மக்களால் ஆளப்படுகின்ற ஆட்சி என்பது பொருள்.

- இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து மக்களாட்சி என்பது பெரிதும் விவாதிக்கப்படுகிற ஒரு முக்கியமான கருத்தாக இருந்து வருகிறது. இருபத்தியோராம் நூற்றாண்டில் இதன் முக்கியத்தவம் மேலும் அதிகரித்துள்ளது. இதன் பொருளானது சமூக, அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புகளில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப, கால இடைவெளிகளில் பல அறிஞர்கள், ஆட்சியாளர்கள் மற்றும் தத்துவஞானிகளால் வெவ்வேறு விதமாக விளக்கம் கூறப்பட்டு வந்துள்ளது. சக்தி வாய்ந்த கருத்தாக்கங்களான உரிமைகள், சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் மற்றும் அனைத்து மதங்களையும் மக்களாட்சியானது தன்னகத்தே கொண்டுள்ளது. இறையாண்மையுள்ள மக்களாட்சியில் இவை அனைத்துமே மக்களுக்கு கிடைக்க பெறும். மக்களாட்சியின் தொடக்கம் பண்டைய கிரேக்கத்தில் இருந்தாலும் தற்போதைய நவீன கால மக்களாட்சி முறையானது பிரிட்டனில் இருந்தே தொடங்கி வந்துள்ளது.

- ஒரு நாட்டின் சமூக அமைப்பின் வகைமுறை அல்லது தேசியத்தின் அடிப்படையில் அங்கு மக்களாட்சி அமைகிறது. மக்களாட்சியின் வகையையும், அதன் செயல்பாட்டையும் ஒரு நாட்டின் சமூக அமைப்பு முறையே தீர்மானிக்கிறது. சுதந்திரம் மற்றும் சமத்துவத்தை உருவாக்க மக்களாட்சி அவசியமாகிறது. மேலும் அரசியல் மற்றும் பிற அமைப்புகள் மூலமாக சமத்துவ சமுதாயத்தை நிலைநாட்ட இது உதவுகிறது.

| மக்களாட்சி: தத்துவவாதிகளின் வரையறை |
|---|
| **சாக்ரடீஸ் (Socrates)**<br>மக்களாட்சி என்பது ஒரு மகிழ்ச்சியான அரசாங்க வகையாகும். இவ்வகை அரசில் எவ்வளவு குழப்பங்கள் இருந்தாலும் எந்த வித பாகுபாடுமின்றி அனைவரும் சமமாக நடத்தப்படுவதற்கும் அதன் மூலம் சமத்துவ சமுதாயத்திற்குமான வழி உள்ளது. |
| **பிளாட்டோ (Plato)**<br>ஓர் அரசின் மகிமையே அதன் மக்களாட்சியில் உள்ள சுதந்திரம்தான். எனவே மக்களாட்சியானது இயற்கையாகவே அரசில் சுதந்திரம் இருக்குமாறு உருவாக்கப்பட்டுள்ளது. |
| **அரிஸ்டாட்டில் (Aristotle)**<br>ஓர் மக்களாட்சி அரசமைப்பின் அடித்தளமே சுதந்திரம்தான். மக்கள் இதை விரும்பக் காரணமே, இந்த அரசமைப்பில்தான் அனைவருக்கும் சமமான அளவில் சுதந்திரம் வழங்கப்பட்டிருக்கும். |

- தற்காலத்தில் மக்களாட்சி, மக்களால் மிகவும் விரும்பக்கூடிய ஒரு அரசாங்க முறையாகத் திகழ்கிறது. மேலும் உலக மக்களால் உயர்ந்த அரசியல் கருத்தாக்கமாக இது உருவாகி உள்ளது. இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில் இருந்து மக்களாட்சி முறையானது பல்வேறு நாடுகளில் பரவத் தொடங்கியது. பேச்சு சுதந்திரத்திற்கு ஒரு முக்கியமான கருவியாக மக்களாட்சி முறை உள்ளது.

### மக்களாட்சியின் பண்புகள்

- அ) மக்களாட்சி என்பது தனிமனித சுதந்திரத்தை காப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட கொள்கைகள் மற்றும் செயல்முறைகள் உள்ள ஓர் ஆட்சி முறையாகும்.

- ஆ) தனிமனித உரிமைகள், மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகளை உள்ளடக்கிய பெரும்பான்மையோரின் ஆட்சி என்ற கொள்கை அடிப்படையில் மக்களாட்சி அமைந்துள்ளது.

- இ) மக்களாட்சியானது ஆட்சி அதிகாரத்தை வட்டார மற்றும் உள்ளூர் அளவில் மக்களுக்கருகே கொண்டு செல்கிறது. இது, ஒட்டு மொத்த அதிகாரமும் மத்தியிலே குவிக்கப்பட்டிருக்கும் முந்தைய அரசு முறைக்கு எதிரானது. இதன் முக்கிய அம்சமே, மக்களுக்கு தாங்கள் தேர்ந்தெடுத்த அரசிடம் கேள்வி கேட்கும் உரிமை உள்ளது என்பது மற்றும் மக்களின் தேவைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு மக்கள் எளிதாக அணுகக் கூடிய அளவிலும், அவர்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுப்பதும் அரசின் கடமை என்பதும் ஆகும்.

ஈ) மக்களாட்சியின் தலையாய பணியே

1. சட்டத்தின் முன் அனைவரும் சமம்,
2. அனைவருக்கும் சமமான சட்ட பாதுகாப்பு
3. பேச்சுரிமை
4. மத சுதந்திரம்
5. அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டு நிகழ்வுகளில் பங்கேற்கவும் அவற்றை சமுதாயத்தில் ஏற்பாடு செய்யவுமான உரிமை போன்றவைகளும் மற்றும் மனிதனின் அடிப்படை உரிமைகளை காப்பதுமேயாகும்.

உ) மக்களாட்சியில் மட்டுமே சுதந்திரமான மற்றும் நேர்மையான அனைத்து குடிமக்களும் பங்கேற்கும் வகையில் தேர்தல் நடைபெறும்.

ஊ) மக்களாட்சியானது, அரசாங்கங்கள் சட்டத்தின் ஆட்சிபடி செயல்படுவதை உறுதிசெய்கிறது. மேலும் அனைத்து குடிமக்களும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படுவதையும், அவர்களது உரிமைகள் அரசமைப்பு சட்டங்களினால் பாதுகாக்கப்படுவதையும் உறுதிசெய்கிறது.

எ) மக்களாட்சி என்பது பல்வேறு அரசியல் முறைகளைக் கொண்ட ஒன்றாகும். மக்களாட்சி முறையானது ஒவ்வொரு நாட்டின் அரசியல், சமூக மற்றும் பண்பாட்டு வாழ்வினைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கும்.

ஏ) அரசியல் அமைப்பில் குடிமக்களின் பங்கேற்பை மக்களாட்சி உறுதி செய்கிறது மேலும் அவர்களின் உரிமைகளையும், மற்றும் சுதந்திரங்களையும் பாதுகாக்கிறது.

ஐ) அரசியல் சார்ந்த அமைப்புகளில் குடிமக்கள் பங்கேற்பதையும் அவர்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்படுவதையும் மக்களாட்சி உறுதிசெய்கிறது. உயர்ந்த விழுமியங்களான சகிப்புத்தன்மை, ஒத்துழைப்பு மற்றும் ஒருமித்த கருத்துக்கள் ஆகியவை மக்களாட்சி நிலைபெற்ற சமுதாயங்களில் காணப்படுகின்றன.

ஒ) நம் தேசத்தந்தை மகாத்மா காந்தியின் வார்த்தைகளில் கூறினால்,''சகிப்பின்மையே கூட ஒரு வகையான வன்முறைதான், உண்மையான மக்களாட்சி மலர இதுவே மிகப்பெரிய தடையாகும்''.

ஓ) மக்களாட்சி முறை அரசாங்கத்தில் அதிகார மற்றும் குடிமை பொறுப்புகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடமே உள்ளது.

- மக்களாட்சி முறை என்பது மக்களால் நடத்தப்படும் ஆட்சி என்ற கொள்கையை வலியுறுத்துகிறது. நேரடி மக்களாட்சி அல்லது பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை மூலமாக சட்டமியற்றுதல், கொள்கை உருவாக்கம் மற்றும் அரசின் செயல்பாடுகளில் அனைத்து குடிமக்களின் பங்கேற்பை இது உறுதிசெய்கிறது. மேலும் அனைத்து குடிமக்களும் தங்களது

கருத்தை சுதந்திரமாக வெளிபடுத்தும் வாய்ப்பையும் இது வழங்குகிறது. மக்களாட்சி என்பது பொதுவாக மக்களால் நடத்தப்படும் அரசாங்கம் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த அரசாங்கத்தில் இறையாண்மையானது ஒட்டுமொத்த மக்களிடம் உள்ளது. இது மக்களால் நேரடியாகவோ அல்லது இவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் மூலமாகவோ செயல்படுத்தப்படுகிறது.

**மக்களாட்சியின் வகைகள்**
**(Types of Democracy)**

மக்களாட்சி அதன் செயல்பாட்டையும் நோக்கங்களையும் பொறுத்து பல்வேறு விதங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

அ) அரசியல் மக்களாட்சி (Political Democracy)
ஆ) சமூக மக்களாட்சி (Social Democracy)
இ) தொழில்சார் மக்களாட்சி (Industrial Democracy)
ஈ) பொருளாதார மக்களாட்சி (Economic Democracy)
உ) முற்றதிகார மக்களாட்சி (Totalitarian Democracy)
ஊ) தீவிர முன்னேற்றவாத மக்களாட்சி (Radical Democracy)
எ) பொது வாக்கெடுப்பு முறை மக்களாட்சி (Plebiscitary Democracy)

**அ) அரசியல் மக்களாட்சி**

- அரசியல் மக்களாட்சியில் அரசாங்கத்தில் குடிமக்கள் தங்களின் பங்கேற்பின் மூலமாக பிரதிநிதிகளை நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுப்பர். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மக்களுக்கு பதில்சொல்ல கடமைப்பட்டவர் ஆவர். மக்களின் நேரடி ஈடுபாட்டின் மூலமோ அல்லது அவர்களால் தேர்வு செய்யப்பட்ட பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் இயற்றும் சட்டங்களின் மூலமோ மக்களாட்சி செயல்படுகிறது. இது மக்களின் துவக்கமுறை (Popular Initiative) என்று அறியப்படுகிறது. இதை போலவே ஒரு சட்ட முன்வரைவை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் உருவாக்கும் போது அதற்கு மக்கள் தங்கள் வாக்கின் மூலமாக ஒப்புதல் அளிக்கின்றனர். இது பொது மக்கள் வாக்கெடுப்பு (Referendum) என்று அறியப்படுகிறது.

- இதில் இரண்டாவது வகை மக்களாட்சி முறை, பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை எனப்படும். இதில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை குறிப்பிட்ட சில காலத்திற்கு தேர்ந்தெடுக்கிறார்கள். இப்பிரதிநிதிகள் மக்களின் சார்பாக கொள்கைகளை தீர்மானிக்கிறார்கள். இந்த பிரதிநிதித்துவ மக்களாட்சி முறையே உலகின் பிரதான மக்களாட்சி முறையாக பல்வேறு நாடுகளில் உள்ளது. அதே சமயத்தில் நேரடி மக்களாட்சி முறையானது கூட்டாட்சி குடியரசான சுவிட்சர்லாந்து நாட்டில் மட்டுமே நடைமுறையில் உள்ளது.

**ஆ) சமூக மக்களாட்சி**

- சமூக, பொருளாதார கொள்கைகளுக்கு ஊக்கம் அளிக்கும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் கருத்தகளின் ஒன்றிணைந்த சேர்க்கையாக இது உள்ளது. இம் மக்களாட்சி முறையானது பொருளாதாரத்தையும், மக்களின் பங்களிப்பையும் வலுப்படுத்தி சமூக நீதியையும், சமூக சமத்துவத்தையும் மேம்படுத்துகிறது. சமூக மக்களாட்சியானது பாலினம், பண்பாடு, நம்பிக்கைகள், மரபுகள் மற்றும் விழுமியங்களில் சமூக சமத்துவத்தை நிலை நாட்டுவதை அடிப்படைக் கொள்கையாக கொண்டுள்ளது. புகழ்பெற்ற பிரெஞ்சு சிந்தனையாளர் அலெக்ஸ் டி டக்வில்லி (Alexis De' Tocquville) அமெரிக்காவின் அரசியல் முறையை சிறந்த மக்களாட்சி முறைகளுள் ஒன்று என்று புகழ்கிறார். இது பிரபுத்துவ முறைக்கு எதிரானது என்கிறார். அனைவருக்குமான சுதந்திரம் மற்றும் அனைவருக்கும் சமமான வாய்ப்புகளே மனித உரிமைகளுடனான வாழ்விற்கு அடிப்படை என்று சமூக மக்களாட்சி வலியுறுத்துகிறது. மேலும்

ஒவ்வொரு தனிமனிதனையும் அவர்களின் உழைப்பின் மூலம் வாழ்வில் வெற்றிபெற அவனை இயன்றவனாக்குகிறது.

- சமத்துவவளர்ச்சியே சுதந்திரத்திற்கும், சுதந்திரத்தின் வளர்ச்சியே ஒரு நாட்டின் சிறந்த மக்களாட்சிக்கும் அடிப்படை என்று சமூக மக்களாட்சி வலியுறுத்தகிறது.

**இ) தொழில்சார் மக்களாட்சி**

- தொழில்சார் மக்களாட்சி என்பது தொழிற்சாலைகளில் மக்களாட்சி கொள்கைகளின் அடிப்படையில் தொழிலாளர்களின் பாதுகாப்பையும், உரிமைகளையும் மேம்படுத்தி அவர்களைப் பொறுப்புடன் செயலாற்ற வைக்கும் முறையாக இம் மக்களாட்சி முறை உள்ளது.

- முடிவுகள் எடுப்பதில் நிர்வாகத்துடன் தொழிலாளர்கள் இணைந்து செயல்படுவதை இம்மக்களாட்சி முறை ஊக்குவிக்கிறது. மேலும் இது தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்துக்கிடையே ஒரு இணக்கமான சூழல் ஏற்படவும், அதன் மூலம் பணியாளர்களின் திறன் மேம்படவும் உதவுகிறது. இதனால் நிர்வாகத்தின் நோக்கமே தொழிலாளர்களின் நோக்கமாக மாறி அதிக உற்பத்திக்கு வழிவகுக்கிறது.

- இந்த மக்களாட்சி முறையானது சமுதாய மற்றும் தனிமனித தேவைகளை நிறைவேற்றி, அவற்றின் ஒட்டுமொத்த நலனிற்கு பயன் விளைவிப்பதாக உள்ளது. மேலும் இது தொழிலாளர்களைத் தொழிலின் பங்குதாரர்களாக ஆக்குவதன் மூலம் அவர்களை ஆற்றலுறச் செய்கிறது. நிர்வாகம் மற்றும் தொழிலாளர்களின் இணைந்த செயல்பாட்டின் மூலமாகவே சமுதாய வளர்ச்சி மற்றும் நாட்டின் வளர்ச்சி சாத்தியப்படும், உற்பத்தி பெருகும் என்று இம்மக்களாட்சி முறை வலியுறுத்துகிறது. சிறந்த உற்பத்தி மற்றும் இணக்கமான சுழலின் வழியே இந்த மக்களாட்சி முறை நாட்டின் மேம்பாடு. வளர்ச்சி மற்றும் அமைதிக்கு வழிவகுக்கிறது.

**ஈ) பொருளாதார மக்களாட்சி**

- பொருளாதார மக்களாட்சி என்பது பல்வேறு வகுப்புகளுக்கிடையே சமத்துவத்தை ஏற்படுத்தவும் அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி, சமூக மற்றும் பொருளாதார வேறுபாடுகளையும் ஏழை – பணக்காரன் என்ற இடைவெளியை குறைப்பதுடன் பொருளாதார உற்பத்தி பெருக மக்களாட்சி முறையில் தகுந்த சூழலை ஏற்படுத்துவதும் பொருளாதார மக்களாட்சியின் அடிப்படைப் பண்புகளாகும்.

- ''பணியிடத்தில் மக்களாட்சி'' மற்றும் ''தொழிலாளர்கள் நிறுவனத்தை தங்களது உடைமையாகக் கருதுதல்'' போன்றவை சமத்துவத்தை ஊக்குவித்து வளத்தை மக்களாட்சி முறையில் மேம்படுத்த உதவுகிறது. பொருளாதார சுதந்திரத்தின் மூலமாக, மனிதனின் கண்ணியமான வாழ்விற்கு சமுதாயத்தையும் மற்றும் பொருளாதாரத்தையும் சரியான விகிதத்தில் இணைப்பதே சாத்தியமான வழியாகும் என்று பொருளாதார மக்களாட்சி கூறுகிறது. பொருளாதார உரிமைகளும், சமூக சமத்துவமும் இந்த மக்களாட்சி முறையின் அடிப்படையாக உள்ளது.

**உ) முற்றதிகார மக்களாட்சி**

- முற்றதிகார மக்களாட்சி முறையில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்த பின் வேறு எந்த முடிவையும் எடுக்கும் அதிகாரமற்றவர்கள் ஆவர். மக்கள் பிரதிநிதிகளே நாட்டின் அனைத்து முடிவுகளையும் மக்கள் பிரதிநிதிகள் தேர்தல்கள் மூலம் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தாலும் அவர்கள் வாக்களித்த மக்களை விட மேம்பட்டவர்களாகவே உள்ளனர். மக்களாட்சி முறையில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி இருந்தாலும் சர்வாதிகார முறையிலேயே ஆட்சி புரிகின்றனர். மக்களின் விருப்பங்களை விட ஆட்சியாளர்களின் கொள்கைகளும் ஆளும் கட்சியின் சித்தாந்தமுமே உயர்வாக இந்த மக்களாட்சி முறையில் காணப்படுகிறது. மக்களின் நலன் என்ற பெயரில் மக்களின் ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு எதிராக வன்முறையை கட்டவிழ்த்து விடுவதும், பேச்சு மற்றும் எழுத்து சுதந்திரத்தை பறித்து ஒட்டுமொத்த மக்களையும் முழுமையான

கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் இதன் பண்புகள் ஆகும். முற்றதிகார மக்களாட்சி என்பது நாட்டின் பொருளாதாரத்தின் மேல் முழுமையான கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது. மேலும் அதன் மூலம் இது மக்களையும் கட்டுப்படுத்துகிறது.

**ஊ) தீவிர முன்னேற்றவாத மக்களாட்சி**
**(Radical Democracy)**

- இந்த மக்களாட்சி முறையை புகழ்பெற்ற இந்திய அரசியல் சிந்தனையாளர் எம்.என்.ராய் அவர்கள் சிறந்த மக்களாட்சி முறை என்று பரிந்துரைத்தார். இந்த முறையில் மட்டுமே உண்மையான மக்களாட்சி மலரும் என்று நம்பினார். இந்த மக்களாட்சி முறையில் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள் மக்களுக்கு நேரடியாக பதிலளிக்க கடமைப்பட்டவர்கள் ஆவர். தீவிர முன்னேற்றவாத மக்களாட்சியானது மனித நேயத்தின் மீது மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்டு சட்டமியற்றுபவர்களை விட மக்களே அரசியல் அதிகாரத்தின் உண்மையான தலைவர்கள் என்று இது கூறுகிறது.

- மக்களிடமே அதிகாரம் உள்ளது. மக்களே நாட்டின் மன்னர்கள் ஆவர். ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசு ஆகும். அவைகளின் ஒன்றிணைப்பில் அரசும் மற்றும் அரசாங்கமும் உருவாகின்றன. இந்த கிராம குடியரசுகளே மத்திய மாநில அரசுகளில் ஆதிக்கம் செலுத்துகின்றன.

- மக்கள் பங்களிப்புடன் கூடிய உண்மையான மக்களாட்சியை தீவிர முன்னேற்றவாத மக்களாட்சி நிலைநாட்டுகிறது இதில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் அதிகாரிகளும் மக்களுக்கு பொறுப்புடையவர்களாக உள்ளனர். தேவைப்பட்டால் அரசாங்கத்தை மாற்றும் அதிகாரம் மக்களிடம் உள்ளது.

**எ) பொது வாக்கெடுப்பு முறை மக்களாட்சி**
**(Plebiscitary Democracy)**

- பொது வாக்கெடுப்பு முறை மக்களாட்சியில் மக்கள் தங்கள் பிரதிநிதிகளை அல்லது கட்சியை தேர்ந்தெடுத்தல், பொதுவான பிரச்சனைகளில் முடிவெடுத்தல், புதிய அரசியல் அமைப்பைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் மாகாண சுய நிர்ணயம் போன்றவற்றில் பொது வாக்கெடுப்பின் மூலம் தங்களது நிலைப்பாட்டினை தெரிவிக்கின்றனர்.

- மக்கள் விரும்பினால் ஒரு சட்ட முன்வரைவை கொண்டுவருவதற்கும், கொள்கை உருவாக்குவதற்கும் உரிமை இந்த மக்களாட்சி முறையில் உள்ளது. ஒரு குறிப்பிட்ட அளவு ஆதாரவை மக்கள் தாங்கள் கையெழுத்திட்ட மனு மூலம் தெரிவித்து தாங்கள் விரும்பிய மாற்றங்களை செய்ய அரசுக்கு பரிந்துரைக்கலாம்.

- மேலும் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி சரியாக செயல்படாதபோது அல்லது மக்கள் விருப்பத்திற்கு மாறாக செயல்படும் போது, மக்கள் ஒரு குறிப்பிட்ட அளவு கையெழுத்துக்களை அவருக்கு எதிராக சேகரித்து அதன் மூலம் அவரை திரும்ப அழைக்கலாம்.

**G.D. கோவார்டு கோல்**
**(G.D. Howard Cole)**

மக்களாட்சி என்பது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் தளத்தில் வாழும் ஓர் நிதர்சனம் / மெய்மையாகும்

**தாமஸ் ஜெ.ஃபரசன்**
**(Thomas Jefferson)**

1.மக்களாட்சி என்பது மக்களால் நடத்தப்படும் அரசாங்கம், குறிப்பாக பெரும்பான்மை மக்களால்

ஆகும்.
2. மக்களாட்சி அரசாங்கத்தில் மேலான அதிகாரம் மக்களிடம் இருக்கும். இந்த அதிகாரத்தை மக்கள் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்க பயன்படுத்துவர். இங்கு தேர்தல்கள் சீரான இடைவெளியிலும் மற்றும் சுதந்திரமாகவும் நடைபெறும்.

**மக்களாட்சி கோட்பாடுகள் (Theories of Democracy)**

- ஒரு கருத்தாக்கத்தின் மேம்பாட்டினை வரலாற்று ரீதியாகவும் மற்றும் பல்வேறு நிலைகளில் அதன் வளர்ச்சியையும் விளக்குவதே கோட்பாடு எனப்படும். ஒரு கோட்பாடானது அதன் முக்கியத்துவம் மற்றும் உபயோகித்தலுக்காக பல்வேறு நாடுகளில் பல்வேறு பண்பாடுகளில் சோதித்தறியப்படுகிறது. ஒன்றுக்கொன்று தர்க்கரீதியாக பிணைக்கப்பட்ட உண்மைகளின் அடிப்படையில் கோட்பாடானது அமைத்துள்ளது. மக்களாட்சி என்ற ஒரு கோட்பாடு பல்வேறு வரலாற்று காலகட்டங்களில் பல்வேறு நாகரீகங்களில் பல்வேறுவிதமாக உபயோகிக்கப்பட்டு வந்துள்ளது.

- மக்காட்சியின் தொன்மை கோட்பாடானது பண்டைய கிரேக்கத்தில் தோன்றியது ஆகும். கிரேக்கத்தின் புகழ்பெற்ற நகர அரசுகள் யாவும் நேரடியான தேர்தல், பொதுக்கொள்கை மீதான விவாதங்கள், மற்றும் பொதுமக்களே முடிவெடுக்கும் முறை போன்ற மக்களாட்சி விழுமியங்களைக் கொண்டிருந்தன. கிரேக்கப் பண்பாடு, நாகரிகம் மற்றும் மொழியானது ஐரோப்பா, வட மற்றும் தென் அமெரிக்கா நாடுகளில் மெல்ல பரவத் தொடங்கிய போது இந்த மக்களாட்சியும் ஒரு ஆட்சி முறையாக அங்கெல்லாம் பரவியது.

- மக்களாட்சி கோட்பாடுகள் அதன் நோக்கம் மற்றும் விளைவுகளை பொறுத்து பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**மக்களாட்சியின் தொன்மைக் கோட்பாடு (Classical Democracy)**

- பண்டைய கிரேக்கத்தில் நேரடியான மக்களாட்சி முறையாக தொன்மை மக்களாட்சி முறை உருவானது. இந்த மக்களாட்சி முறையானது ஏதென்ஸ் நகரத்தில் தான் முதன் முதலில் கிமு 800 மற்றும் கிமு 500 க்கும்.

- கிரேக்க மக்களாட்சி முறையானது மெல்ல பிரதிநிதித்துவ மக்களாட்சியாக வளர தொடங்கியவுடன் அதன் முக்கியத்தவமும் அதன் தற்காலத்தைய பொருத்தமும் அதிகரித்தன. பின்பு பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை அறிவொளி காலகட்டங்களில் ஒரு பிரதான ஆட்சி முறையாக பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் பரவத்தொடங்கியது. அமெரிக்க புரட்சி (1775 - 1783) மற்றும் பிரெஞ்சு புரட்சி (1789 - 1799) காலங்களில் மக்களாட்சியானது அனைத்து தரப்பு மக்களின் பெரும் கோரிக்கையாக உருவெடுத்தது.

- தற்காலத்தில் மக்களாட்சி என்பது பல்வேறு மக்களாலும், பண்பாடு மற்றும் நாடு, மொழி ஆகியவற்றைக் கடந்து அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு ஆட்சி முறையாக மாறிவிட்டது. ஒவ்வொரு நாட்டிலும் அவற்றின் பண்பாடு, மரபுகள் மற்றும் விழுமியங்கள் அந்நாட்டின் மக்களாட்சி முறையில் எதிரொலிக்கின்றன. அவை மக்களாட்சி முறையை செழுமைப்படுத்தியுள்ளன.

- இடையே உருவானது. ஏதென்ஸ் நகரின் நேரடி மக்களாட்சி முறையில் நகர அரசின் (City State) குடிமக்கள் அனைவரும் சட்டமன்றத்தின் உறுப்பினர்கள் ஆவர். அவர்கள் சட்டமியற்றுதலிலும், முடிவுகள் எடுப்பதிலும் நேரடியாக பங்கேற்றனர். குடியுரிமை பெற்ற குடிமக்கள் குறைவான எண்ணிக்கையில் இருந்ததால், அவர்கள் நகரின் பிரதான இடத்தில் கூடுவதற்கும், கூடி விவாதிப்பதற்கும் எளிதாக இருந்தது. அனைத்து குடிமக்களும் தங்களது கருத்தகளை சுதந்திரமாக வெளிப்படுத்தவும், விவாதிக்கவும், மற்றும் வாக்களிக்கவும் முழு உரிமை இருந்தது. இதுவே தொன்மை மக்காட்சி என அழைக்கப்படுகிறது.

- மக்கள் தொகை மெல்ல அதிகரிக்க தொடங்கியவுடன் நேரடியாக கூடுவதும் விவாதிப்பதும் கடினமானது. எனவே மக்கள் பிரதிநிதிக்ள மூலம் அரசாங்கத்தை நடத்தும் முறை உருவானது. இதில் சட்டமன்றம், மக்கள் நீதிமன்றம், நீர்வாக சபை என மக்களாட்சியின் மூன்று தூண்களும் பின்பு உருவாகின. தொன்மை மக்களாட்சி வெற்றிகரமாக இயங்க இரண்டு நிபந்தனைகள் உள்ளன.

அ) குடிமக்களின் எண்ணிக்கை குறைவாக இருத்தல் வேண்டும். அப்போது தான் அவர்கள் விவாதங்களில் பங்கு பெறவும் முக்கிய பிரச்சனைகளில் வாக்களிக்கவும் இயலும்.

ஆ) அனைத்து குடிமக்களையும் அரசியலில் ஈடுபடவைக்கும் அளவிற்கு தொன்மை மக்களாட்சியின் பொருளாதாரம் இருத்தல் வேண்டும்.

**தொன்மை மக்களாட்சியின் விதிகளாக கீழ்க்கண்டவைகள் உள்ளன.**

அ) அரசியலின் முதன்மை கருத்தியல்களாக மக்களிடையே சமத்துவம், சுதந்திரம், சட்டம் மற்றும் நீதிக்குரிய மதிப்பு ஆகியவை இருத்தல்.

- ஆ) அனைவருக்கும் பொதுவான மற்றும் அனைவரையும் சமமாக நடத்தும் நீதி அமைப்பு சமுகத்தின் எல்லா தளங்களிலும் இருத்தல், எளிதானதாக மற்றும் அனைவருக்குமான சுதந்திர அரசியல் வாழ்க்கை முறையும் இருப்பதாகும்.

- தொன்மை மக்களாட்சியின் சிறப்பியல்பே அரசின் அனைத்து நிலைகளிலும் மக்களின் பங்களிப்பு இருப்பதே ஆகும். மேலும் உரிமைகள் மற்றும் சலுகைகளை தொன்மை மக்களாட்சியானது அனைத்து குடிமக்களுக்கும் சமமாக வழங்குகிறது.

**பாதுகாக்கும் மக்களாட்சி (Protective Democracy)**

- தொன்மை மக்களாட்சி மெல்ல வளர்ந்து பின்பு பாதுகாக்கும் மக்களாட்சியாக மாறியது. உரிமைகளைப் பாதுகாக்கும் மக்களாட்சி முழற அரசாக இது இருப்பதால் இந்த மக்களாட்சி முறையானது 'பாதுகாக்கும் மக்களாட்சி' என்றழைக்கப்படுகிறது. இந்த முறை மூலம் தனிமனிதரகள் தங்களது உரிமையையும், சுதந்திரத்தையும் பாதுகாத்துக்கொள்கிறார்கள். பதினேழு மற்றும் பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய இந்த பாதுகாக்கும் மக்களாட்சி, உரிமைகளை அடிப்படையாக கொண்டது. இது நாட்டு மக்களின் மனித உரிமைகள் மற்றும் சுதந்திரங்களைக் காப்பதற்கான வழிமுறைகளை கொண்டுள்ளது. பிரிட்டனின் புகழ்பெற்ற அரசியல் சிந்தனையாளரான ஜான் லாக் (1631 - 1704) இந்த மக்களாட்சி முறையை பரிந்துரைப்பவர்களின் முதன்மையானவர் ஆவார். இயற்கை உரிமைகளான வாழ்வதற்கான உரிமை, சுதந்திர உரிமை மற்றும் சொத்துரிமை எந்த அளவுக்கு ஒவ்வொரு மனிதனுக்கும் கிடைக்கிறதோ அந்த அளவிற்கு தான் அவர்களின் சுதந்திரமும், வாக்குரிமையும் இருக்கும் என்று லாக் கூறுகிறார்.

- ஜெரமி பெந்தம் (1748 - 1832), ஜேம்ஸ் மில் (1773 - 1836) மற்றும் ஜான் பயன்பாட்டுவாத சிந்தனையாளர்கள் பாதுகாக்கும் மக்களாட்சி முறையை ஆதரிக்கின்றனர். மக்களாட்சியின் அடிப்படை அம்சங்களான தனிமனித சுதந்திரம் மற்றும் உரிமைகளை பாதுகாத்தலே பயன்பாட்டு வாதத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும். உரிமைகளை பாதுகாத்தலே மக்களாட்சியைப் பாதுகாத்தல் ஆகும்.

- ஜெரமி பெந்தம், ஜேம்ஸ் மில் மற்றும் ஜான் ஸ்டுவாரட் மில் போன்றோர் மக்களாட்சி மட்டுமே ஒரு மனிதனின் அனைத்து உரிமைகளையும் உறுதியளித்து அவனை பாதுகாப்பதுடன் முன்னேற்றும் என்கிறார்கள். உரிமைகளை அடிப்படையாக கொண்ட பாதுகாக்கும் மக்களாட்சியானது தாராளவாத மக்களாட்சியின் ஓர் அம்சமாகும் என்று இம்மூவரும் கூறுகின்றனர்.

**பாதுகாக்கும் மக்களாட்சியின் அடிப்படை அம்சங்கள்**

- பாதுகாக்கும் மக்களாட்சியானது மக்கள் இறையாண்மையில் நம்பிக்கை கொண்டுள்ளது.
- மக்கள் இறையாண்மை மற்றும் பிரதிநிதித்துவ மக்களாட்சி இரண்டுமே சட்டப்பூர்வமானவை ஆகும்.
- குடிமக்களின் சுதந்திரம் மற்றும் உரிமைகளைக் காப்பதே ஓர் அரசின் அடிப்படைக் கடமையாகும்.
- அதிகாரத்துவம் மக்களுக்குப் பொறுப்புடையதாக உள்ளது. இதை நிறுவ அவ்வப்போது தேர்தல்கள் நடைபெறும்.
- நீதி, நிர்வாகம் மற்றும் சட்டமன்ற அதிகாரங்களை அதிகாரப் பிரிவினை செய்தல் மூலமே உரிமைகள், சுதந்திரம் போன்றவற்றைக் காப்பதும், சலுகைகளை அனைவருக்கும் சமமாக அளிப்பதும் சாத்தியமாகும்.
- உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட பாதுகாக்கும் மக்களாட்சி அரசமைப்புவாதத்தைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டது. அரசமைப்பு வாதத்தில் ஆள்பவர் மற்றும் ஆளப்படுவோர் அனைவரும் அரசமைப்பு வகுத்த விதிகளுக்கும், கொள்கைகளுக்கும் கட்டுப்பட்டவர்கள் ஆவர். அரசமைப்பு மட்டுமே அதிகாரத்தின் ஊற்றாகக் கருதப்படும். இதுவே உரிமைகளுக்கும், சுதந்திரத்திற்கும் உத்திரவாதமளிக்கிறது. அரசமைப்பில் தனிமனித உரிமைகள், சங்கங்களின் உரிமைகள், உரிமை மீறல்கள், சுதந்திரத்தின் மீதான அத்துமீறல்கள் என அனைத்தையும் கையாள்வதற்கு சட்ட விதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இது சட்டமன்றம், நீதிமன்றம் மற்றும் நிர்வாக அமைப்புகளில் பாதுகாக்கும் மக்களாட்சியை நிலைநாட்டுகிறது. இது அரசுக்கும் குடிமை சமூகத்துக்கும் இடையே உள்ள வேறுபாட்டை தெளிவாக காட்டுகிறது.

**மக்களாட்சியின் மார்க்சிய கோட்பாடு**

- மார்க்சிய கோட்பாடானது மக்களாட்சியை சமூகத்தில் உள்ள வர்க்க அமைப்பின் பின்னணியில் காண்கிறது. இந்த வர்க்க பிரிவினையானது தொழிற்புரட்சி காலத்தில் தோன்றியதாகும். சமூகம் இரு வர்க்கங்களாக பிரிந்திருந்தது. அவை முதலாளிகள் அல்லது உரிமையாளர்கள் வர்க்கம் என்றும் தொழிலாளிகள் அல்லது பாட்டாளிகள் வர்க்கம் என்றும் அழைக்கப்பட்டன. மார்க்சின் மக்களாட்சிக் கோட்பாடானது எப்போதுமே முதலாளித்துவத்தின் மேலாதிக்கத்திற்கு சவால் விடும் வகையிலும், பாட்டாளி வர்க்கம் சுரண்டப்படுவதற்கு எதிரான வகையிலும் தனது அரசியல் நிலைப்பாட்டைக் கொண்டிருந்தது. மார்க்சின் கோட்பாடு தேர்தல் தொடர்பான உரிமைகளை வலியுறுத்தவில்லை. மாறாக பொருளாதார உரிமைகளையே வலியுறுத்தி சமதர்ம மக்களாட்சி உருவாக வேண்டும் என்கிறது.

- மார்க்சிய மக்களாட்சி, முதலாளித்துவத்தின் வீழ்ச்சியையும் அதன் பின் புரட்சியின் மூலம் சமூக மாற்றத்திற்கும் அறைகூவல் விடுக்கிறது. சமதர்ம சித்தாந்தத்தின் மூலமே அரசியல் அதிகாரம் சாத்தியம் என்றும் இது நாட்டில் வளத்தையும், உற்பத்தி மீதான உரிமையையும் சரிசமமாக மக்களுக்கு பிரித்தளிப்பதன் அடிப்படையில் மட்டுமே நிகழும் என்றும் கூறுகிறது. வர்க்க வேறுபாடுகள, சிறப்பு சலுகைகள் போன்றவற்றை நீக்குவதன் மூலமே சுதந்திரம், சமூக நிலை மற்றும் மக்களாட்சி போன்றவை சாத்தியப்படும் என்று மார்க்சிய மக்களாட்சிவாதிகள் வாதிடுகின்றனர்.

- சமதர்ம சிந்தனையாளர்கள் அனைவருக்குமான கல்வி மூலம் மக்கள் தங்களை தாங்களே ஆள கற்றுக்கொள்வர் என்கின்றனர். மார்க்சின் கோட்பாடு தாராளவாத மக்களாட்சியைப் போலியானது என்று விமர்சிக்கின்றது. அது ஆளும் வர்க்கத்துக்கு ஆதரவாக இருப்பதாக கூறுகிறது. பொருளாதார ஏற்ற தாழ்வே வர்க்க பிரிவினைக்கு அடிப்படை என்றும் உற்பத்தி மற்றும் அதன விநியோகம் மீதான உரிமையே வர்க்க பிரிவினையை ஏற்படுத்துகிறது என்றும் மார்க்சிய கோட்பாடு கூறுகிறது.

- ஐரோப்பாவில் உள்ள மார்க்சிய மக்களாட்சிவாதிகள் தேர்தல் மூலமான மக்களாட்சியின் வலிமையான ஆட்சியை ஆதரிக்கின்றனர். அதுவே சமதர்ம சமுதாயத்தை அடைய அமைதியான

மற்றும் சட்டபூர்வ வழியாகும். கீழ்கண்ட மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் மக்களாட்சியில் சமதர்மம் மலர முடியும் என்கின்றனர்.

அ) மார்க்சிய மக்களாட்சிவாதிகள் அரசை மக்களுக்கு எதிராக குற்றமிழைக்கின்ற ஒரு நிறுவனமாக பார்க்கின்றனர். நாட்டின் இராணுவத்துக்கு பதிலாக குடிமக்கள் அடங்கிய குடிமக்களின் படை ஏற்படுத்தப்படுதல்.

ஆ) அரசை நடத்துவோர் தேர்ந்தெடுக்கப்படுதல் மற்றும் அவர்கள் செயல்படாத நிலையில் அவர்களைத் திரும்ப அழைத்தல்.

இ) அரசியல் சார்புடைய காவல்துறை முழுவதுமாக நீக்கப்படல்.
ஈ) முடியாட்சியை அகற்றுதல்.

| மக்களாட்சியே சமதர்மத்திற்கான பாதை ஆகும். |
|---|
| **கார்ல் மார்க்ஸ் (Karl Marx)**<br>மக்களாட்சியே சமதர்மத்திற்கான பாதை ஆகும்.<br><br>**ஆப்ரகாம் லிங்கன் (Abraham Lincoln)**<br>மக்களாட்சி என்பது மக்களால் மக்களுக்காகவே மக்களாலான அரசாங்க முறை ஆகும்.<br><br>**மகாத்மா காந்தி (Mahatma Gandhi)**<br>எளியோருக்கும் வலியோருக்கும் சமவாய்ப்பு வழங்குதல் மக்களாட்சியில் மட்டுமே நடைபெறும் என்பதே என் கருத்து. இது வன்முறையற்ற வழியில் மட்டுமே சாத்தியப்பட வேண்டும். |

**மக்களாட்சியின் உயர்ந்தோர் குழாம் கோட்பாடு:**
**(Elitist Theory)**

- மக்களாட்சியில் சமூக மற்றும் பொருளாதாரத்தில் உயர் அடுக்கில் உள்ளோரின் பங்கு தவிர்க்க முடியாதது. பல நூற்றாண்டுகளாக உயர் அடுக்கில் இருப்போர் முக்கிய வளங்களை தங்கள் கட்டுக்குள் வைத்துள்ளனர். ஒரு ஆட்சியின் முக்கிய முடிவுகளை எடுக்கின்றனர். தொழில் சார்ந்த அல்லது விவசாயம் சார்ந்த சமூகத்தில் சொத்துக்களின் மீதான உரிமையும் உற்பத்தி மீதான, அதிகாரமும் முக்கிய காரணிகள் ஆகும். இச்சமூகங்களில் உயர் அடுக்கில் உள்ளோர் நிலப்பிரபுக்களாகவும் தொழிற்சாலை முதலாளிகளாகவும் உள்ளனர். பின்னர் அவர்கள் ஆட்சி அதிகாரத்தையும் கைப்பற்றி ஆளத் தொடங்கிவிடுகின்றனர்.

- உயர்ந்தோர் குழாம் மக்களாட்சி கோட்பாட்டாளர்களுள் வில்பிரெடோ பரோட்டோ (1848-1923) கெய்டன் மோஸ்கா (1857-1941) மற்றும் ராபர்ட் மைக்கேல் (1876-1936) ஆகிய மூவரும் முக்கியமானவர்கள் ஆவர். பரேட்டோமக்களை ஆளும் உயர்ந்தோர் மற்றும் ஆளாத உயர்ந்தோர் என்று இரண்டாக பிரிக்கிறார். ஆளும் உயர்ந்தோரிடம் ஆட்சி அதிகாரம் உள்ளது. அவர்கள் தங்களது அதிகாரத்தை கல்வி, சமூக நிலை அரசியல் பதவி தொடர்புகள் மற்றும் செல்வம் மூலம் அடைகின்றனர். இவர்களுடைய பண்புகளை பரேட்டோ உளவியல் ரீதியாக இரண்டாக பிரிக்கிறார் (அ) நரிகள்: தந்திரத்தின் மூலம் மக்களை ஏமாற்றி ஆள்வர், சூழ்ச்சியின் மூலமாக மக்களின் ஆதரவை பெறுவர். (ஆ) சிங்கங்கள்: மேலாதிக்கம் பலவந்தப்படுத்துதல் மற்றும், வன்முறை மூலமாக ஆட்சி அதிகாரத்தை அடைவர்.

- மக்களாட்சி மற்றும் சமதர்மம் முதலிய சமத்துவ கருத்துக்களை விமர்சித்து அதற்கெதிராக உயர்குடியின வாதம் வளர்ந்தது. ஆனால் ராபர்ட் மைக்கேல் (Robert Michels) எனும் சிந்தனையாளர் மக்களாட்சி பற்றி மாறுபட்ட கருத்தினைக் கொண்டுள்ளார். மக்களாட்சி முறையில் மக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு நிர்வாகத்தில் மக்களின் அல்லது மக்கள் பிரதிநிதிகளின் பங்கு இருக்கும்படி இருந்தாலும் அவர்களுள் சிறு குழுவினரே அனைவரின் சார்பாகவும் முடிவுகள் எடுத்துக் கொள்கைகளை உருவாக்கி நிர்வாகத்தில் ஆதிக்கம்

செலுத்துகிறார்கள். இதை சிறுகுழு ஆட்சியின் இரும்புச்சட்டம் (Iron of Law of Oligarchy) என்று இவர் கூறுகிறார்.

- **ஜோசப் அலாய்ஸ் சம்பீட்டர்** (Joseph Alois Schumpeter) (1883-1950) என்பவர் உயர்குடி மக்களின் ஆட்சி என்ற கருத்தியலை முன் வைக்கிறார். மக்களாட்சி என்பது ஒரு சிறந்த அரசியல் முறையாகும் இதில் சுதந்திரமான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் அதிகாரம் ஒப்படைக்கப்படுகிறது. நிர்வாக மற்றும் சட்ட முடிவுகள் இந்த அதிகாரத்தின் மூலம் அரசின் அனைத்து தரப்பு மக்களுக்காகவும் அவர்களால் எடுக்கப்படுகிறது. இந்த உயர்ந்தோர் குழாம் கோட்பாடானது ஓரளவுக்கு மார்க்சிய மக்களாட்சி கோட்பாட்டுடன் ஒத்துப்போகிறது. பொருட்கள் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் பெரிய நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்துகிறது என்ற மார்க்சிய கோட்பாட்டுடன் ஒத்து போகின்ற அதே வேளையில் மக்களாட்சியின் மார்க்சின் அதிகாரவர்க்க கருத்துக்களை இது மறுதலிக்கிறது. உயர்ந்தோர் குழாம் கோட்பாடானது ஓரளவுக்கு மார்க்சிய மக்களாட்சி கோட்பாட்டுடன் ஒத்துப்போகிறது. பொருட்கள் உற்பத்தி மற்றும் விநியோகத்தில் பெரிய நிறுவனங்கள் ஆதிக்கத் செலுத்துகிறது என்ற மார்க்சிய கோட்பாட்டுடன் ஒத்து போகின்ற அதே வேளையில் மக்களாட்சியின் மார்க்சின் அதிகாரவர்க்க கருத்துக்களை இது மறுதலிக்கிறது. உயர்ந்தோர் குழாம் கோட்பாடானது தனிமனிதர்கள் மற்றும் குழுக்களுடன் ஒன்றிணைந்து இயங்கி அவர்களின் கருத்து வேறுபாடுகளைக் களைந்து அவர்களின் நோக்கம் நிறைவேற வழிவகை செய்கிறது.

**மக்களாட்சியின் பன்மைவாத கோட்பாடு**
**(Pluralist Theory of Democracy)**

- பன்மைத்தன்மை என்பது அனைத்தையும் உள்வாங்குகிற, வேறுபட்டவைகளையும் உள்ளடக்கமாக கொண்ட ஒரு கருத்தாக்கம் ஆகும். இது சிறுபான்மையினரின் விருப்பங்கள் மற்றும் உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கிறது. எனவே இது தாராளவாத மக்களாட்சியின் அடிப்படைப் பண்புகளை கொண்டுள்ளதாக கூறலாம். இது அதிகாரமானது, அரசு மற்றும் குடிமைச்சமூகத்திடமிருந்து தள்ளி இருக்க வேண்டும் என்றும், பொருளாதாரம், அரசியல் முதலானவை அதிகாரத்திடமிருந்து பிரித்துவைக்கப்பட வேண்டும் என்றும் கூறுகிறது. மக்களாட்சி நடைமுறைகளுக்காக சில அமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கூறுகிறது. குறிப்பாக சட்டமன்றத்திற்கு இரு அவைகள், ஆட்சி அமைப்பிற்கு கூட்டாட்சி முறை என சிலவற்றை இந்த கோட்பாடு பரிந்துரைக்கிறது. பன்மைவாத மக்களாட்சியில் சமூகத்தின் பல்வேறு வகையான குழுக்களும் பங்கேற்று தங்கள் உரிமைகளை பாதுகாத்திட இயலும். இந்த முறையிலான மக்களாட்சியில் சமூகத்தின் பல்வேறு வகையான குழுக்களிடம் அதிகாரமானது பகிர்ந்தளிக்கப்படுகிறது.

- அனைத்துக் குழுக்களையும் சமநிலைக்கு ஆற்றலுறச்செய்து அவர்களுக்குள்ளே ஒரு ஆரோக்கியமான சமநிலை போட்டியை இடம்பெறச்செய்கிறது. இதன் மூலம் சமூகத்தின் அனைத்து பிரிவுகளும் பயன்பெறுகின்றன.

- மக்களாட்சியில் சீரான கால இடைவெளியில் தேர்தல்கள் நடைபெற வேண்டும். அதில் கட்சிகள், குழுக்கள் மற்றும் தனிமனிதர்களிடையே அரசியல் போட்டியை பன்மைவாத மக்களாட்சி முறை ஊக்குவிக்கிறது. பயன்பாட்டுவாத சிந்தனை முறையானது பன்மை மக்களாட்சியை தீவிரமாக ஆதரிக்கிறது. ஜேம்ஸ் மேடிசன், (James Madison) ஜான் ஸ்டுவர்ட் மில் (John Stuart Mill) மற்றும் டி டாக்வில் (Tocqueville) போன்ற பயன்பாட்டுவாத சிந்தனையாளர்கள் தேர்தல்களின் மூலமே மாறுபட்ட மற்றும் பல்வேறுவிதமான மக்களின் விருப்பங்கள் வெளிப்படும் என்கின்றனர். இது சமூகத்தில் சிறுபான்மையினருக்கு தங்கள் உரிமைகளையும் அதிகாரத்தில் தங்கள் உரிமைகளையும் அதிகாரத்தில் தங்கள் பங்கினையும் கேட்டுப்பெறும் சக்தியை அளிக்கிறது.

- பல்வேறு சிறுபான்மையினரும் இணைந்து பணியாற்றக்கூடிய, ஆளக்கூடிய குழுவாட்சி (Polyarchy) என்னும் ஒரு அரசியல் கட்டமைப்பை ஏற்படுத்துகிறது.

- ராபர்ட் டால் (Robort Dhal) எனும் அறிஞர் மக்களாட்சியின் சாராம்சமே குழுவாட்சி (Polyarchy) எனப்படும் பல்வேறு சிறுபான்மை சமூகத்தினரும் இணைந்து பணியாற்றும் அரசியல் அமைப்பில் தான் சிறப்பாக வெளிப்படும் என்கிறார். இந்த முறையில் அரசாங்கத்தின் அதிகாரம் மற்றும் அதிகார வரம்பில் அனைத்து மாறுபட்ட குழுக்களும் சுதந்திரமாக செயல்பட முடியும் என்கிறார். இந்த முறையில் அரசாங்கத்தின் அதிகாரம் மற்றும் அதிகார வரம்பில் அனைத்து மாறுபட்ட குழுக்களும் சுதந்திரமாக செயல்பட முடியும் என்கிறார். இந்த அமைப்பின் சிறப்பான செயல்பாட்டிற்கு முக்கிய நிபந்தனைகளாக சட்ட செயல்முறைகள், கொள்கைகள்,அரசியல் நடவடிக்கைகளுக்கான சட்டப்படியான ஒருமித்த வாய்ப்பு ஆகியன இருத்தல் வேண்டும்.

**ராபர்ட் டாலின்** கோட்பாட்டில் பின்பு ஒரு திருத்தம் செய்யப்பட்டது. அமெரிக்காவில் மக்களாட்சி செயல்படும் விதத்தை சிறப்பாக விவரிப்பதற்காக உருவக்குலைந்த குழுவாட்சி என்ற கோட்பாட்டினை முன்னிறுத்த அந்த திருத்தத்தை ராபர்ட் டால் செய்தார்

**மக்களாட்சியின் ஆழ்விவாதக் கோட்பாடு**
**(Deliberative Theory of Democracy)**

- மக்களாட்சியின் நோக்கமே ஆழ்ந்த பொது விவாதங்கள், பரப்புரைகள், மற்றும் வாத பிரதிவாதங்கள் வழியே பொதுமக்களின் நலன் காக்கப்படுவதாகும். இதையே இம்மக்களாட்சி முறை வலியுறுத்துகிறது. பொதுமக்களின் பங்கேற்பு மற்றும் விவாதங்கள் ஆகியவை கிராம அளவில் வெகுகாலமாகவே உறுதியாக உள்ளன. அரசாங்கத்தின் செயல்பாட்டை கீழ்மட்டத்தில் பஞ்சாயத்து அமைப்புகள் வலுப்படுத்துகின்றன. ஜேம்ஸ் மில்லரின் கூற்றுப்படி ஆழ் விவாத கோட்பாடானது பங்கேற்பாளர்களின் பொதுவிவாதம், அதன் மூலம் அனைவரின் கருத்தையும் உள்ளடக்கிய முடிவுகள் என்ற அம்சங்களை கொண்டுள்ளது. இதன் சிறப்பம்சமேமக்கள் பொறுமையாக மாற்றுக்கருத்தை கேட்பதும், அதன் அடிப்படையில் தங்களது கருத்தில் மாற்றங்கள் கொண்டுவருவதும் தான். பொதுவிருப்பமும், பொது கருத்துமே ஆழ் விவாத கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்ட மக்களாட்சியின் முக்கிய பண்புகளாகும். செல்வாக்கின் அடிப்படையில் இல்லாமல் கருத்துக்களை விவாதித்து ஏற்பதன் மூலமே முடிவுகள் எட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறது. உரிமைகளின் அடிப்படையிலான அணுகுமுறையே வளர்ச்சிக்கு வித்திடும். குழுக்களிடையே விருப்பு வெறுப்புகளின் அடிப்படையில் கருத்துமோதல் வரும்போது அவற்றை மக்களாட்சி நெறி முறையில் ஏற்கத்தக்க வகையில் தீர்வைக் காண இம்முறை ஏதுவாகிறது.

- இந்த மக்களாட்சி முறையானது மாறக்கூடிய தன்மையை அடிப்படையாக கொண்டது. இது ஆழ்ந்து ஆராய்தலையும், விவாதத்தையும் மையமாகக் கொண்டுள்ளது. இது வாக்களித்தலை மட்டுமே அடிப்படையாக கொண்டுள்ள பண்டைய மக்களாட்சி முறையிலிருந்து முற்றிலும் வேறுபடுகிறது. இதன் ஆழமான விவாதங்களே சட்டமியற்றும் முறைக்கு சரியான அடிப்படையாகும்.

- இந்த மக்களாட்சி முறையானது பிரதிநிதித்துவ மக்களாட்சி மற்றும் நேரடியான மக்களாட்சியுடன் இணக்கமாக உள்ளது. நீதி கோட்பாடுகளின் புகழ் பெற்ற சிந்தனையாளர்களான ரால்ஸ் (Rawls) மற்றும் ஹேபர்மாஸ் (Habermas) இருவரும் அரசியல் தேர்வானது முறையாக சட்டப்படியாக இருத்தல் வேண்டும் என்றும், ஒரு தெளிவான இலக்கை நோக்கிய சுதந்திரமான விவாதம் சமமான மற்றும் பகுத்தறியும் நபர்களிடையே நடந்து அதன் அடிப்படையில் அரசியல் தேர்வுகள் இருக்க வேண்டும் என்றும் கூறுகின்றனர்.

- அதிகாரத்தை பயன்படுத்த பொறுப்பாக்கப்பட்டுள்ள இறையாண்மையுள்ள அமைப்பில் அனைவருக்கும் முழுமையான மற்றும் சமமான உறுப்பினர் பதவி அளிக்கப்படும். அந்த அமைப்பு ஒட்டுமொத்த உறுப்பினர்களின் பொது விருப்பத்தின் அடிப்படையில் செயல்படும். இந்த முறையில் ஆழ் விவாதக் கோட்பாட்டை அடிப்படையாக கொண்ட மக்களாட்சியானது செயல்படுகிறது.

**நேபாள நாட்டில் ஏப்ரல் புரட்சியும், மக்களாட்சியும்**

- ஏப்ரல் மாதம் 2006-ஆம் ஆண்டு ஏழு கட்சி கூட்டணி என்ற மக்களாட்சியை ஆதரிக்கின்ற தலைவர்கள் நேபாள தலைநகரான காட்மாண்டுவை சுற்றி ஏழு இடங்களில் எதிர்ப்பு கூட்டங்களை நடத்த மக்களுக்கு அழைப்பு விடுத்தனர். அதை ஏற்று கூடிய லட்சக்கணக்கான நேபாள நாட்டு மக்கள் எதேச்சாதிகார முடியாட்சியை முடிவுக்கு கொண்டு வரவும், முழுமையான மக்களாட்சியை கொண்டுவரவும் நேபாள நாட்டுமுடியரசுடன் போராடத் தொடங்கினர். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு இருந்த இந்த போராட்டம் அரசர் கியானேந்திராவை (King Gyanendra) பதவி விலக வைத்து மக்களாட்சி வழி வகுத்தது.

**நவீன மற்றும் சமகால மக்களாட்சி**
**(Modern and Contemporary Democracy)**

- நவீன மற்றும் சமகால மக்களாட்சியானது 18-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கு ஐரோப்பாவில் தொழிற்புரட்சியின் விளைவாகத் தோன்றியது. அதனுடன் கூடவே தொழிலாளர்கள் எழுச்சியும் சமூக மாற்றமும் தோன்றின.

**நவீன மற்றும் சமகால மக்களாட்சியின் சிறப்பம்சங்கள்**

- எழுதப்பட்ட அரசமைப்பு. மக்களின் அன்றாட வாழ்வின் தேவைக்கேற்றார்போல் அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் இதை வைத்திருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு தனி மனிதனுக்கும், சமூக குழுக்களுக்கும், குறிப்பாக எளியோர் மற்றும் மத சிறுபான்மையினோருக்கான அரசமைப்பு உத்திரவாதமளிக்கும் அடிப்படை உரிமைகள் மற்றும் மனித உரிமைகள்.
- அரசின் பல்வேறு அமைப்புக்களுக்கிடையேயான அதிகார பிரிவினை.
- அரசாங்கம் (நிர்வாகம் அதிகாரம்) நாடாளுமன்றம் (சட்ட அதிகாரம்) மற்றும் நீதி அமைப்புகள் (நீதி அதிகாரம்).
- கருத்து, பேச்சு, எழுத்து மற்றும் பத்திரிகை சுதந்திரம்.
- மத சுதந்திரம்.
- அனைவருக்கும் சமமான மற்றும் பொதுவான வாக்குரிமை (ஒருவருக்கு ஒரு ஓட்டு) மற்றும் வயது வந்தோர் வாக்குரிமை.

- மக்களாட்சியின் முக்கிய அம்சமாக "பெரும்பான்மையினரின் ஆட்சி" கூறப்பட்ட போதிலும் அந்த நடைமுறையானது நேர்மையான மற்றும் சுதந்திரமான தேர்தல் மூலமே சாத்தியப்படுகிறது. மேலும் உரிமைகளுக்கு தரப்படும் முக்கியத்துவம் அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் மற்றும் பத்திரிகை சுதந்திரம் முதலான சுதந்திரங்கள் பிரதிநிதித்துவ மக்களாட்சியில் இன்றியமையாதவை ஆகும். மேலும் மக்கள் அரசியல் பரப்புரைகள், தேர்தல் அறிக்கைகள் மூலம் வேட்பாளர் யார் என்று அறிகிறார்கள், அதனடிப்படையில் தங்கள் வாக்குகளை முடிவு செய்கிறார்கள்.

- மக்களாட்சி முறையானது ஒரு கட்சி ஆட்சி முறையில் இருந்து பல கட்சி ஆட்சி முறை வரை பல்வேறு நாடுகளில் செயல்பட்டுவருகிறது. பல நாடுகளில் அனைவருக்கும் சமமான வாக்குரிமை என்ற கொள்கையின் அடிப்படையில் மக்களாட்சி செயல்படுகிறது. ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் மக்களாட்சி என்ற சொற்பதத்தை மக்கள் தாராளவாத மக்களாட்சியாகவே உணர்கிறார்கள். இதன் சிறப்பம்சமே அரசியல் பன்முகத்தன்மை, சட்டத்தின் முன் அனைவரும் சமம், குடிமைச் சுதந்திரங்கள் மற்றும் மனித உரிமைகள் ஆகியவைகளாகும். பேச்சு சுதந்திரமே நவீன மக்களாட்சியின் அடிப்படைத் தேவையாகும்.

- மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து அரசாங்கங்களுமே மக்களின் பேச்சு சுதந்திரத்தின் மூலம் பொறுப்புடையதாக்கப்படுகின்றன. தற்போது எளிதாக கிடைக்கின்ற தகவல்களால் மக்களும், அரசாங்கமும் சிறந்த முடிவுகளை எடுக்க முடிகின்றது.

**மக்களாட்சி கீழ்கண்டவாறு வரையறுக்கப்படுகிறது**

- அதிகாரப் போட்டி நிறைந்த அரசியல் அமைப்பு
- பொதுவாழ்வில் பங்கேற்கும் உரிமை
- சட்டத்தின் ஆட்சி

**தற்கால மக்களாட்சியின் வகைகள்:**
**பிரதிநிதித்துவ மக்களாட்சி**
**(Representative Democracy)**

- பிரதிநிதித்துவ மக்களாட்சியில் தகுதிவாய்ந்த அனைத்து குடிமக்களும் வாக்களித்தலின் மூலம் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றனர். ஒவ்வொரு தொகுதிக்கும் பிரதிநிதிகளை அந்தந்த தொகுதி மக்கள் தேர்ந்தெடுக்கின்றனர். ஒவ்வொரு தொகுதியும் மக்கள் தொகையின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருக்கும். சமூக, அரசியல் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு ஒவ்வொரு அரசியல் கட்சியும் தனித்தனியே சித்தாந்தங்கள், கொள்கைகள் மற்றும் திட்டங்களை கொண்டுள்ளன. அவற்றை சீர்தூக்கி ஆராய்ந்து மக்கள் தங்கள் பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றனர். வெற்றி வாய்ப்பு, மக்களிடம் உள்ள செல்வாக்கு போன்றவற்றின் அடிப்படையில் கட்சிகள் தங்கள் வேட்பாளர்களை தேர்ந்தெடுக்கின்றன.

- தேர்தலின் போது கட்சிகள் தங்கள் திட்டங்கள் மற்றும் கொள்கைகளை தேர்தல் அறிக்கையாக வெளியிடுகின்றன. இந்தியா போன்ற மிகப்பெரிய மக்களாட்சி நாட்டில், தேசிய மற்றும் பிராந்திய கட்சிகள் தங்கள் எதிர்காலத் திட்டங்கள், அதை அடையும் வழிகள் என அனைத்தையும் தேர்தல் அறிக்கையாக தயாரித்து அதன் மூலம் மக்களின் நம்பிக்கையை வெல்ல முற்படுகின்றன. எந்த ஒரு குடிமகனும், கட்சி சார்பின்றி தேர்தல்களில் போட்டியிட விரும்பினால் சுயேச்சை வேட்பாளராகக் களமிறங்கவும் அனுமதி உண்டு. பிரதிநிதித்துவ மக்களாட்சி அமைப்பில் அரசியல் கட்சிகளின் பங்கு முக்கியமானது. அரசியல் கட்சிகள் அவ்வப்போது நடத்தும் பொதுக்கூட்டங்கள், அரசின் கொள்கைகளை விமர்சித்தோ ஆதரித்தோ வெளியிடும் அறிக்கைகள், முதலியவற்றின் வழியே மக்களை விழிப்புணர்வடையச் செய்கின்றனர். எனவே இதன் மூலம் அரசியல் கட்சிகள் மக்கள் தங்கள் தேவையை அறியச்செய்கின்றன. மேலும் அதனுடன் முக்கிய பிரச்சனைகளில் ஒரு பொதுக்கருத்தையும் உருவாக்குகின்றன. மக்கள் பிரதிநிதிகள் அரசமைப்பால் அங்கீகரிக்கப்பட்டவர்கள். இப்பிரதிநிதிகள் மக்கள் நலனுக்கான தங்களது பொறுப்பையும், கடமையையும் செய்வதற்கு அரசமைப்பால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

- பிரதிநிதித்துவ மக்களாட்சி முறை, தாராளவாத மக்களாட்சி முறையுடன் நெருங்கிய தொடர்புடையதாக உள்ளது. தாராளவாத மக்களாட்சி முறையானது அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பாவில் தோன்றி பின்பு பல மூன்றாம் உலக நாடுகளில் பரவி தற்போது முன்னாள் சோவியத் ரஷ்ய நாடுகளிலும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும் காலுன்றியுள்ளது. தாராளவாத மக்களாட்சி அரசானது அதிபர் முறை மக்களாட்சி அல்லது நாடாளுமன்ற முறை மக்களாட்சி என இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தாலும் அவற்றுள் சில வேறுபாடுகளும் உள்ளன. பிரதிநிதித்துவ மக்களாட்சியானது ஒன்றுக்கொன்று தொடர்புடைய எண்ணிலடங்கா கொள்கைகளால் பிரதிநிதித்துவ மக்களாட்சியானது ஒன்றுக்கொன்று தொடர்புடைய எண்ணிலடங்கா கொள்கைகளால் ஆனது.

**அவற்றுள் சில:**

- ஒரே சீரான இடைவெளியில் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடைபெறும் தேர்தல், வயதுவந்தோர் வாக்குரிமை மற்றும் வாக்களித்தலின் ரகசியம் காக்கப்படுதல் அடிப்படையில் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் எனும் ஒரு சுயேச்சையான அமைப்பு.
- மக்கள் தேர்ந்தெடுப்பதற்கு வசதியாக பல கட்சிகள் போட்டியிடும் தேர்தல்.
- சுதந்திரமான நீதிமன்றத்தின் மேற்பார்வையில் இயங்கும் தேர்தல் சட்டங்கள்.
- பேச்சு மற்றும் கூட்டங்கள் கூடுவதற்கான சுதந்திரம்.

- தேர்தலில் ஒரு வேட்பாளராக பங்கேற்கும் சுதந்திரம்.

**மக்களாட்சியை அளவிடுதல் மற்றும் மதிப்பிடுதல்**

- மக்களாட்சி என்பது மக்கள் தங்களது ஒப்புதலையோ அல்லது ஒப்புதலின்மையையோ காட்டுவதற்கான ஒரு சரியான முறையான வழியாகும். இந்திய அரசமைப்பின் வரைவுக் குழு தலைவர் முனைவர் பி.ஆர்.அம்பேத்கர் இதை வலியுறுத்திக் கூறுகிறார். ‘‘அரசியலில் நமக்கு சமத்துவம் இருக்கும். ஆனால் சமூக மற்றும் பொருளாதார வாழ்வில் சமத்துவமற்ற தன்மையே நிலவும்’’ என்றார். அரசியலில் ஒருவருக்கு ஒரு வாக்கு, ஒவ்வொரு வாக்கிற்கும் ஒரே மதிப்பு என்ற விதியை தன்மையே நிலவும்’’ என்றார். அரசியலில் ஒருவருக்கு ஒரு வாக்கு, ஒவ்வொரு வாக்கிற்கும் ஒரே மதிப்பு என்ற விதியை அங்கீகரிக்கிறோம். ஆனால் நம் சமூக மற்றும் பொருளாதார கட்டமைப்பின் காரணமாக நம்முடைய சமூக பொருளாதார வாழ்வில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரே மதிப்பு என்ற விதிமுறையை தொடர்ந்து மறுத்தே வருகிறோம். மக்களாட்சியை மதிப்பிடுதல் மற்றும் அளவிடுதல் என்பது அதன் தரம் மற்றும் அளவின் அடிப்படையில் நிகழ்கிறது. தர நிலையை பகுப்பாய்வு செய்வதன் மூலம் சிறப்பான மக்களாட்சி நடைமுறைக்கான மாற்றம் எவ்வாறு உள்ளது என்று அறிய முடிகிறது.

- மக்களாட்சியின் தர நிலையினை மக்கள் பங்கெடுக்கும் ஆர்ப்பாட்டங்கள், கண்டன கூட்டங்கள், பிரச்சாரங்கள், மக்கள் கருத்து சுதந்திரத்தினை பயன்படுத்தும் விதம் மற்றும் அரசமைப்பு மக்களுக்கு கொடுத்திருக்கும் உரிமைகள் இவற்றின் மூலம் அறியவாம். சமூகத்தில் நடக்கும் நிகழ்வுகள் சமூக மாற்றத்திற்கான குறிப்பாக சாதி, மத, பாலின மற்றும் பண்பாட்டு கண்ணோட்டங்களில் முன்னோக்கி செல்ல வேண்டியதை வலியுறுத்துகின்றன. வளர்ச்சிக்கான பொருளாதார முறையானது மாறிக்கொண்டேயிருக்கிறது. இதில் கொள்கைகள் வகுப்பதன் மூலம் ஏற்றத்தாழ்வுகளை களைவதற்காக மக்களாட்சி இம் மாறிவரும் பொருளாதார முறையுடன் நேரடி தொடர்பில் உள்ளது. மனித வள மேம்பாட்டுக் குறியீடு மற்றும் தனி நபர் வருமானத்தின் மூலம் மக்களாட்சியானது மதிப்பிடப்படுகிறது. கீழ்கண்ட அடிப்படை காரணிகள் மக்களாட்சியை அளவிடவும் மதிப்பிடவும் உதவுகின்றன.

**1.இறையாண்மை:** ஒரு ஆட்சியானது எந்த அளவிற்கு மற்ற நாடுகளின் குறுக்கீடு இல்லாமல் தன் நாட்டின் உள் விவகாரங்கள் மற்றும் வெளியுறவு கொள்கைகளை கையாள முடிகிறதோ அதுவே அதன் இறையாண்மை எனப்படும்.

**2. ஆட்சி அதிகாரம்:** நாட்டின் எல்லைக்குள் எந்த அளவிற்கு மத்திய அரசாங்கத்தின் அதிகாரம் செல்லுபடியாகுமோ அந்த எல்லைகள் ஆட்சி அதிகாரத்துக்குட்பட்டவை எனப்படும்.

**3. தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம்:** இரகசிய வாக்கெடுப்பு முறை தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கையில் ஆட்சி அதிகாரம் இருப்பதை இது குறிக்கிறது.

**4. வயது வந்தோர் வாக்குரிமை:** தேர்தல்களில் ஒரு குறிப்பிட்ட வயதை கடந்த அனைத்து குடிமக்களுக்கும் எந்த வித பாகுபாடுமின்றி வாக்களிக்க கொடுக்கப்பட்டிருக்கும் உரிமை.

**5. மொத்த வாக்குப்பதிவு:** தேர்தல் நாளன்று வாக்களித்த மக்களின் வாக்கு சதவீதத்தை குறிக்கிறது.

**6. முறைப்படுத்தப்பட்ட தேர்தல்கள்:** தேர்தல் ஒரு சீரான இடைவெளியில் (5 ஆண்டுக்கு ஒரு முறை) குறிப்பிட்ட அட்டவணையில் அரசமைப்பு கூறியுள்ளபடி நடத்துதல்.

**7. சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்கள்:** அரசியல் கட்சிகளும், வேட்பாளர்களும் வாக்கு எண்ணிக்கையை பார்வையிட நியாயமான வாய்ப்புகளை வழங்குதல். மேலும் வாக்காளர்கள் எந்த வித பயமும், பாரபட்சமுமின்றி தங்கள் வாக்கை பதிவு செய்தல்.

**8. ஊடகங்களை அணுகுதல் மற்றும் பரப்புரை:** அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களுக்கும் ஊடகங்கள் மற்றும் பொதுவெளியில் பரப்புரை செய்ய அவர்களின் வாக்கு விகிதத்திற்கு எற்றார் போல் வாய்ப்பு வழங்குதல்.

**9. சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்தல்:** அரசமைப்பில் கூறியுள்ளபடியும் நீதிமன்றங்களின் விளக்கங்கள் மற்றும் வழிகாட்டுதலின் படியும் சட்டத்தை ஆட்சியாளர்கள் செயல்படுத்துதல்.

**10. சட்டமன்ற அதிகாரம்:** நாடாளுமன்ற அமைப்பின் மூலமாக சட்டமன்றமானது செயலாட்சித்துறை மீது ஏற்படுத்தும் கட்டுப்பாடு சட்டமன்ற அதிகாரம் எனப்படும்.

**11. சுதந்திரமான நீதித்துறை:** நீதித்துறையானது செயலாட்சி துறை மற்றும் எந்த ஒரு வெளிப்புற குறுக்கீடும் இல்லாமல் சுதந்திரமாக செயல்படுதலை இது குறிக்கிறது.

**12. எதிர்க் கட்சிகளின் பங்கு:** எதிர்க் கட்சிகள், ஆளும் கட்சியின் செயல்பாடுகளை தொடர்ந்து கண்காணித்தும், விமர்சித்தும் அது அரசமைப்பு வகுத்த பாதையை விட்டு விலகாமல ஆட்சி புரிய வைத்து நாடாளுமன்ற மக்களாட்சியைக் காப்பதை இது குறிக்கிறது.

**13. நீதிப் புனராய்வு:** சட்டமன்றம் இயற்றும் சட்டங்களையும், அரசாங்கத்தின் நடவடிக்கைகளையும், அரசமைப்பு விதிகளின் அடிப்படையில் சீராய்வு செய்யவும், அவை மற்ற அமைப்புகளால் எந்த அளவிற்கு மதிக்கப்படுகிறது என்பதை கண்காணிக்கவும் உள்ள நீதிமன்ற அதிகாரம்.

**14. கட்சி பலம்:** கட்சிகள் நிறுவனமயமாக்கப்பட்டு அவற்றின் அதிகாரம் மற்றும் பணிகள் பரவலாக்கப்பட்டு அவை அனைவருக்குமான கட்சிகளாக இருப்பதே அவற்றின் பலத்தை தீர்மானிக்கிறது.

**15. கட்சியின் சித்தாந்தம்:** அரசியல் கட்சிகள் நன்கு வரையறுக்கப்பட்ட நிலையான மற்றும் ஒத்திசைவான கட்சி சித்தாந்தங்களை வகுத்துள்ளன.

**16 கட்சி முறை அமைப்பு:** சட்டமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை.

**17. பத்திரிகை சுதந்திரம்:** பத்திரிகைகள் சுதந்திரமாகவும், பயமின்றியும் தங்களது பல்வேறு வகையான அரசியல் பல்வேறு வகையான அரசியல் கருத்துக்களையும், விமர்சனங்களையும் மக்களிடம் கொண்டு செல்ல எந்த அளவிற்கு முடிகிறதோ அதுவே பத்திரிகை சுதந்திரமாகும்.

**18. சுதந்திரமான குடிமைச்சமூகம்:** குடிமைச் சமூகமானது அரசுக்கு எதிரான அரசியல் தலைவர்களுக்கு எதிரான தங்களது கருத்துக்கள் மற்றும் விமர்சனங்களை எந்த வித அச்சுறுத்தலுமின்றி வெளிப்படுத்தும் சூழல்.

**19. குடிமைச்சுதந்திரம்:** அரசமைப்பில் பேணப்பட்டுள்ள அடிப்படை மற்றும் மனித உரிமைகள் அனைத்து குடிமக்களுக்கும் வழங்கப்படுதல்.

**20. சொத்துரிமை:**அரசமைப்பில் பாதுகாப்பளிக்கப்பட்டிருக்கும் சொத்து உரிமைகள்.

**21. மத சுதந்திரம்:** மதங்களிடையே நல்லிணக்கத்தை பேணுவதற்கும் அரசியல் கொள்கைகள் மற்றும் திட்டங்களில் மதச்சார்பின்மையை நிலைநாட்டவும் மத சுதந்திரமானது அரசமைப்பால் ஒவ்வொரு இந்திய குடிமகனுக்கும் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ளது.

**22. வளங்கள் மீதான அனைவருக்குமான வாய்ப்பு:** வளங்கள் சரிசமமாக அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டு பொருளாதார சமநிலையை வருவாய். கல்வி மற்றும் சுகாதாரத்தின் மூலம் ஏற்படுத்துதல். இது அரசியலில் அனைவரும் பங்கேற்பதற்கான ஒரு சிறந்த யுத்தியாகும்.

**23. இயற்கைச் செல்வங்கள் மற்றும் பொதுச்சொத்துக்கள் மீதான அனைவருக்குமான வாய்ப்பு:** இயற்கை செல்வங்கள் மற்றும் பொதுச் சொத்துக்கள் மீது அனைவருக்கும் சரிசமமான வாய்ப்பு

மற்றும் அதை எளிதில் பயன்படுத்தும் வழிகள் இருப்பின் அது அனைவரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் மற்றும் சமூக விடுதலைக்கு வித்திடும்.

**24. பாலின சமத்துவம்:** சட்டமன்றம், சமூக அமைப்புகள் மற்றும் அரசின் பல்வேறு பதவிகளில் பெண்ணுக்கும், ஆணுக்கும் இணையான பிரதிநிதித்துவம் மற்றும் அவர்களை கண்ணியமாக நடத்துதல்.

- **25. ஏழை எளியோரின் சமூக பொருளாதார நிலை மேம்பட அரசியல் சமத்துவம்:** சாதி, இன, பழங்குடியினர் மற்றும் மத சிறுபான்மையினருக்கு அரசமைப்பில் சமஉரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் மூலம் அவர்கள் தங்களின் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை எட்டவும் அரசின் நிர்வான அதிகாரத்தில் பங்கேற்கவும் ஏதுவாகிறது. மேலும் சட்டமன்றத்தில் அவர்களுக்கான பிரதிநிதித்துவத்தை பெறவும், ஆட்சி அதிகாரத்தில் பங்கேற்பதையும் அவர்கள் தங்களின் அரசியல் பங்கேற்பின் மூலம் பெறுகின்றனர்.

**இந்திய மக்களாட்சியின் சாதனைகள்:**

- இந்தியாவையும், இந்திய அரசமைப்பையும் உருவாக்கிய நம் முன்னோர்கள் ஒரு வலிமையான மக்களாட்சிக்கு அடித்தளத்தை இட்டுச் சென்றுள்ளனர். இது நம் இந்தியாவை சிறந்த ஒரு நாடாகத் திகழச்செய்கின்றது. நமது மக்களாட்சியின் அடித்தளமானது நம் அரசமைப்பின் சமூக அரசியல் மற்றும் பொருளாதார மாற்றத்திற்கு வலு சேர்க்கும் விதமாக அமைந்துள்ளது. நம் அரசமைப்பின் முகவுரையானது அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள், வழிகாட்டு நெறிமுறைகள், நாடாளுமன்ற மக்களாட்சி முறை மற்றும் சட்ட திருத்த நடைமுறைகள், நீதிப் புனராய்வு மற்றும் அரசமைப்பின் அடிப்படை அம்சக்கோட்பாடுகள் என அரசு செயல்பட வேண்டிய விதத்தை காட்டும் ஒரு வழிகாட்டியாக உள்ளது.

**அரசியல் தளம் (Political Front):**

- சுதந்திர இந்தியாவின் முதல் பொது தேர்தல் 1951ம் ஆண்டு நடந்த போது, களத்தில் 54 அரசியல் கட்சிகள் இருந்தன. சமீபத்தில் நடந்து முடிந்த 2014ம் ஆண்டு பொது தேர்தலின் போது அரசியல் கட்சிகளின் எண்ணிக்கை 264 ஆக கூடி இருந்தது. இதிலிருந்து அரசியல் நடைமுறை விரிவாகவும் ஆழமாகவும் மாறிவருவது புலனாகிறது.

- சுதந்திர இந்தியாவில் 1951ஆம் ஆண்டு நடந்த முதல் பொதுத்தேர்தலில் 17.30 கோடி இந்திய மக்கள் வாக்களிக்கும் உரிமை பெற்று இருந்தனர். இவர்களில் 44.87 சதவிகிதத்தினரே வாக்களித்தனர். நாட்டின் 16வது பொதுத்தேர்தல் 2014 ஆம் ஆண்டு நடந்த போது வாக்காளர்களின் எண்ணிக்கை 81.40 கோடியாக அதிகரித்திருந்தது. இதில் 66.4 சதவிகிதத்தினர் வாக்களித்தனர். இவர்களில் 67.9 சதவீதத்தினர் ஆண்கள் மற்றும் 65.6 சதவீத்தினர் பெண்கள். இந்த தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கையும் 8251 ஆக அதிகரித்திருந்தது.

- 2004ஆம் ஆண்டு முதல் வாக்குகள், மின்னணு வாக்குபதிவு இயந்திரத்தின் மூலமாக பதிவு செய்யப்படுகின்றன. இந்த இயந்திரங்கள், இந்தியாவிலேயே தயார் செய்யப்படுகின்றன. இவற்றின் துல்லியம், மற்றும் ரகசியம் காக்கப்படுதல் ஆகியவை வெற்றிகரமாக சோதித்தறியப்பட்டுள்ளது.

- நம் தேர்தல் முறையானது அதிக வாக்குகளை எண்ணிக்கை அடிப்படையில் பெற்றவர் வெற்றி பெற்றவர் என்ற அடிப்படையில் அமைந்துள்ளது. ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு பிரதிநிதி பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறார். சட்டமன்ற மற்றும் நாடாளுமன்ற தேர்தல்களில் ஒரு வாக்காளருக்கு ஒரு வாக்கு என்ற அடிப்படையில் தேர்தல் நடைபெறும். இதன் மூலம் வாக்களர்கள் தங்களின் நாடாளுமன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கின்றனர்.

- நம் நாட்டில் 1989-ஆம் ஆண்டிலிருந்து 18 வயது பூர்த்தியான அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. இது மக்களாட்சி எனும் மகுடத்தில் மேலும் ஒரு சிறகாகும்.

- உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடான இந்தியா, தனது அனைத்து தரப்பு மக்களையும் அரவணைத்து, மாநிலங்களின் பல்வேறு கோரிக்கைகளையும் ஏற்று கூட்டாட்சி தத்துவத்துடன் ஒரு வெற்றிகரமான அரசாக திகழ்கிறது.

- இந்திய அரசமைப்பின் 73-வது மற்றும் 74 வது சட்டத் திருத்தம் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கும், பெண்களுக்கும் உள்ளாட்சி அரசாங்க அமைப்புகளான கிராம ஊராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் உறுப்பினர்களாகவும், தலைவர்களாகவும் போட்டியிட இட ஒதுக்கீட்டை அறிமுகப்படுத்தியது.

- இந்திய மக்களாட்சி முறையானது இளமைத் துடிப்போடு உள்ள உத்வேகமான ஒரு மக்களாட்சியாகும். இந்திய ராணுவம் கூட அரசியல் மற்றும் ஆட்சி அதிகாரத்தின் மீது எவ்வித செல்வாக்கையும் செலுத்த முடியாது. அதேசமயத்தில் ராணுவ அமைப்புக்கு முழு அதிகாரமும், உரிய மரியாதையும் அளிக்கப்படுகிறது.

**சமூகதளம் (Social Front):**

- மக்களாட்சி முறையானது அரசியல் அதிகாரத்தில் மிக முக்கிய மாற்றத்தைக் கொண்டுவந்தது. மக்களாட்சி முறையினால், அரசியல் அதிகாரமானது மத்திய மற்றும் உயர் வர்க்கம் மற்றும் நகர சமூகத்திடமிருந்து மெல்ல விலகி அது தற்போது சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களிடம் உள்ளது. சுதந்திரத்திற்குப்பின் அரசமைப்பின் மூலமாக தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட இட ஒதுக்கீடு போலவே பிற்படுத்தப்பட்ட வகுப்பினரும் அரசு பதவிகளிலும், சட்டமன்றங்களிலும் இடஒதுகீட்டை பெற்றுள்ளனர்.

- இந்தியாவின் பத்திரிகை சுதந்திரம் மற்றும் சுதந்திரமான நீதித்துறையானது இந்திய சமூகம் தொடர்ந்து சட்டத்தின் ஆட்சியின் படி செயல்பட வழிவகை செய்கிறது.

- இந்தியர்களின் சராசரி ஆயுட்காலமானது 36 வருடங்கள் என்று 1951 ஆம் ஆண்டில் இருந்தது, இது 2014-ஆம் ஆண்டு கிட்டதட்ட இரட்டிப்பாகி 66 வருடங்கள் என்று உயர்ந்துள்ளது. இதற்கு காரணமாக மருத்துவத்துறையில் இந்தியாவின் வளர்ச்சி, அனைவரையும் சென்றடைய கூடிய வகையில் அரசின் சுகாதார திட்டங்கள், தொற்றுநோய்கள் மற்றும் கொள்ளைநோய்கள் ஒழிப்புக்கான மருந்துகள் மற்றும் அதற்கான திட்டமிடல் போன்றவற்றை கூறலாம்.

- இதை போலவே சின்னம்மை மற்றும் இளம்பிள்ளை வாதம் ஆகிய நோய்களும் முழுமையாக ஒழிக்கப்பட்டுவிட்டன. கல்வித்துறையிலும் மாபெரும் வளர்ச்சியை இந்தியா கண்டுள்ளது. 1950 – 51 ல் வெறும் 27 பல்கலைக்கழகங்களும் 578 கல்லூரிகளும் இருந்த இந்தியாவில், 2014-ஆம் ஆண்டு கணக்கின்படி சுமார் 712 பல்கலைக்கழகங்களும் 36,671 கல்லூரிகளுமாக பெருகி வளர்ந்து உள்ளன. இதை போலவே, எழுத்தறிவு விகிதமும் 1951-ல் 18.3 சதவிகிதத்திலிருந்து 2011-ல் 73 சதவிகிதமாக கிட்டத்தட்ட நான்கு மடங்குக்கு மேல் உயர்ந்துள்ளது.

## பொருளாதார தளம் : (Economic Front):

- இது பாதுகாப்பு விவாகரங்கள், அரசமைப்பு சட்டப்படியான மக்களாட்சி ஆளுகை, சமூகம் மற்றும் நாட்டின் பொருளாதாரம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

- இந்தியா தன் பொருளாதாரம், ராணுவம் மற்றும் அணு ஆற்றலின் காரணமாக ஆசியாவில் ஒரு வட்டார சக்தியாகவும், தெற்கு ஆசியாவில் ஒரு வல்லரசாகவும் உருவாகியுள்ளது.

- இதன்படி 1991 ஆம் ஆண்டு வரை நாட்டின் வளர்ச்சிக்கு ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டமிடல், வேலை வாய்ப்பிற்கு பெரிய அளவில் பொதுத்துறை நிறுவனங்களை ஏற்படுத்துதல், இளைஞர்களுக்கு அறிவியல் தொழில்நுட்ப கல்வி என்றிருந்த நிலையில் 1991 ஆம் ஆண்டு தாராளமயம் மற்றும் சந்தை சார்ந்த மாதிரியிலான உலகமயமாதல் என்ற பொருளாதாரத்தில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. இது கட்டமைப்பு, சீரமைப்பு செயல்திட்டம் என்று அழைக்கப்படுகிறது. இதற்கு பிறகு நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் மற்றும் அயல் நாட்டவரின் பங்களிப்பு அதிகரித்தது. இதன் மூலம் புதிய தொழில்முறை நடுத்தர வர்க்கம் என்ற பிரிவு உண்டாக்கியது. கல்வி, சுகாதாரம் மற்றும் போக்குவரத்தில் தொழில் நுட்ப புதுமைகள் மிகப்பெரும் வளர்ச்சியை கொண்டு வந்தன. மேலும் நகரங்களிலும், கிராமங்களிலும் உள்கட்டமைப்பு மற்றும் சாலை வசதிகள் மேம்படுத்தப்பட்டன. இதன் மூலம் மின்னனு தொழில்நுட்ப இந்தியா என்ற வளர்ந்த நிலை நோக்கி இந்தியா நகரத் தொடங்கியுள்ளது. வங்கித் துறை சீர்திருத்தங்களும் பெரிய சமூக மாற்றங்களை சாத்தியப்படுத்தியுள்ளன.

- இந்தியாவின் ஒட்டு மொத்த தேசிய வருவாயானது 1950 – 51 ல் ரூபாய் 2.92 லட்சம் கோடியாக இருந்து 2014 – 2015-ல் கிட்டத்தட்ட 35 மடங்கு வளர்ந்து ரூபாய் 105.28 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. அதை போலவே, தனி நபர் வருமானமும் 1950 – 51 ல் ரூபாய் 274 ஆக இருந்து, 2014 – 2015 ஆம் ஆண்டு ரூபாய் 88,533 ஆக உயர்ந்துள்ளது.

- இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி 1950 – 51 ஆம் ஆண்டுகளில் 50.8 கோடி டன்களாக இருந்தது. அது 2014 – 15ஆம் ஆண்டுகளில் 264.77 கோடி டன்களாக கிட்டத்தட்ட ஐந்து மடங்கு உயர்ந்துள்ளது. உணவு உற்பத்தியில் இந்தியா தன்னிறைவு அடைந்துள்ளது. இந்திய விவசாயத் துறையில் ஏற்பட்ட தொழில்நுட்ப வளர்ச்சியே இதன் முக்கிய காரணமாகும்.

### இந்திய மக்களாட்சியின் சவால்கள்

- இந்திய மக்களாட்சியில் ஒவ்வொரு தனி மனிதனுக்கும் மற்றும் ஒட்டு மொத்த சமுகத்திற்குமான சவால்கள் உள்ளன. குறிப்பாக அனைவருக்குமான கல்வித் திட்டம் சரியாக செயலாக்கப்படாததால் இன்று இந்தியாவின் மிக முக்கிய பிரச்சினையாக எழுத்தறிவின்மை உள்ளது. வறுமை, மதவாதம், மத அடிப்படைவாதம், பாலினப் பாகுபாடு, பெண்களுக்கெதிரான வன்முறை, அரசியல் வன்முறை, சீர்திருத்தங்கள் செய்யப்படாமலே இயங்கி கொண்டிருக்கும் நீதித்துறை மற்றும் நிர்வாகத் துறை, குடிமைச் சமூகத்தின் குறைவான பங்களிப்பு, அரசியலில் அதிகரித்து வரும் குற்றவாளிகளின் எண்ணிக்கை, அதிகரித்து வரும் பொருளாதார குற்றங்கள், வளர்ச்சித் திட்டங்களில் மாநிலங்களுக்கிடையே பாகுபாடு காட்டும் மத்திய அரசு மற்றும் அனைவரையும் சரிசமமாக சென்றடையாத வளர்ச்சி போன்ற பிரச்சனைகள் இந்தியாவில் தலையாய பிரச்சனைகளாக உள்ளன. மேலும் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்பு, பணிபுரிவதற்கான சுதந்திரம் மற்றும் கட்டுப்பாடுகளும் - சம நிலைகளும் (Checks and Balances) போன்ற இந்திய மக்களாட்சியின் அடிப்படை கட்டமைப்புகள் தான் தற்கால மற்றும் எதிர்கால சவால்களாக இந்தியாவிற்கு உள்ளன.

**அமைப்பெதிர் வாதம் (Anarchy):**

- தற்போது நடைமுறையில் இருக்கும் சமூக மற்றும் அரசியல் அமைப்புக்கு எதிரான சிந்தனை.

**பிரபுக்கள் ஆட்சி (Aristocracy):**

- சலுகைகளை கொண்டுள்ள சில முன்னுரிமை வர்க்கத்தினரால் ஆளப்படுகின்ற அல்லது ஒப்படைக்கப்பட்டுள்ள ஆட்சி.

**அதிகாரத்துவம் (Authority):**

- அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட, நன்கறிந்த நடைமுறையின் வாயிலாக பெறப்படும் அதிகாரத்தை செயல்படுத்தும் உரிமை மற்றும் ஒரு குறிப்பிட்ட பதவியின் செல்வாக்கு.

**முதலாளித்துவம் (Capitalism):**

- இது ஒரு சித்தாந்தம். மேலும் உற்பத்தி, பொருள்கள் விநியோகம், லாபத்தை மட்டுமே அடிப்படையாக கொண்ட வணிகம் இவற்றை அடிப்படையாக கொண்ட ஒரு பொருளாதார முறையாகும். இதில் தனிநபர் உடைமை முக்கிய அங்கம் வகிக்கிறது.

**சாதியவாதம் (Cateism):**

- ஒர படிநிலை அலகில் கட்டமைக்கப்பட்டுள்ள சமூக அமைப்பு. இதன் ஒவ்வொரு படியிலும் சமத்துவமின்மை நிலவுகிறது. இது இந்திய சமூகத்தின் அனைத்து இடங்களிலுமே ஒரு மனிதனின் நிலையை தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றுகிறது.

**குடிமைச் சமூகம் (Civil Society):**

- குடிமைச் சமூகம் என்பது சுயேச்சையான குழுக்கள் மற்றும் சங்கங்கள் தங்களுக்கென்று ஒரு தனியான தளத்தில் ஆட்சி அதிகாரத்திலிருந்து விலகியே இருக்கும் ஒன்றாகும்.

**பொது மக்கள் - ராணுவ உறவு (Civil – Military Relationship):**

- குடிமைச் சமூகத்திற்கும் மற்றும் அதைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ராணுவ அமைப்பிற்கும் இடையே உள்ள உறவை படிப்பதற்கும் மற்றும் புரிந்து கொள்ளவும் உருவாகியுள்ள ஒரு பாடம்.

**வகுப்புவாதம் (Communalism):**

- இது ஒரு அரசியல் சித்தாந்தம். பல்வேறு மதம், இனம் மற்றும் மொழியினருக்கிடையே ஏற்படும் முரண்பாடுகள், பதற்றங்கள் மற்றும் அதன் விளைவாக தோன்றும் வன்முறைகளுடன் தொடர்புடையது.

**ஊழல் (Corruption):**

- ஊழல் என்பது சட்டத்துக்கு புறம்பான வழியில் ஒருவருக்கு ஆதரவாக செயல்படுவது. மேலும் தனி நபரின் இலாபத்திற்காக பொறுப்புகளை சரிவர செயல்படாமல் இருத்தல்.

**ஆழ்விவாத மக்களாட்சி (Deliberative Democracy):**

- ஆழ்ந்த விவாதங்களின் தேவையை வலியுறுத்துகிற ஒரு மக்களாட்சி முறை. இது விவாதங்களின் வழியே பொது விருப்பத்தை வரையறுக்கிறது.

**சர்வாதிகாரம் (Dictatorship):**

- தனி ஒருவரால் ஆளப்படுகின்ற ஆட்சி தன்னிச்சையான மற்றும் தடைகளற்ற முறையில் அதிகாரத்தை பயன்படுத்துதல்.

**நீதி(Justice):**

- ஒவ்வொரு மனிதனுக்கும் அவரவர்க்கேற்றவாறு தண்டனைகள் மற்றும் வெகுமதிகளை நியாயமான பகிர்மானத்தின் அடிப்படையில் வழங்குதல்.

**உயர்ந்தோர்குழாம் (Elite):**

- அதிகாரம், செல்வம் மற்றும் கௌரவம் போன்றவற்றை கொண்டிருக்கும் ஒரு சிறுபான்மையினர் குழு.

**பாலின பாகுபாடு (Gender Discrimination):**

- ஆண்கள் மற்றும் பெண்களுக்கிடையே அவர்களின் வேறுபட்ட சமூக நிலை மற்றும் சமூகத்தில் அவர்களின் பங்கின் அடிப்படையில் பாகுபாடு காட்டுதல்.

**கடைநிலை மக்களாட்சி (Grass-root Democracy):**

- கடைநிலை மக்களாட்சி என்பது கீழ்நிலையில் மக்களின் சமூக பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்வதற்கான முடிவுகளை மக்களின் பங்களிப்போடு சுய அரசாங்கத்தின் வழியே அவர்கள் மூலமே எடுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.

**நீதித்துறை (Judiciary):**

- இது அரசாங்கத்தின் ஒரு பிரிவாகும். இது சட்டத்தின் அடிப்படையில் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும் சட்டத்தின் பொருளை விளக்குவதற்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள அமைப்பாகும்.

**முடியாட்சி (Monarchy):**

- இந்த அரசாட்சி முறையில் அரசின் தலைமைப் பொறுப்பானது பரம்பரையாகவோ அல்லது அரசு குடும்பத்தினருள் ஒருவரிடமோ இருக்கும். முடியாட்சி முழுமையானது அல்லது அரசமைப்பின்படி ஆகும்.

**பஞ்சாயத்து ராஜ் (Panchayati Raj):**

- மக்களாட்சி அமைப்பின் கடைநிலையில் அரசமைப்பின்படி செயல்படும் ஓர் அமைப்பு. இதில் மக்கள் தங்களது அரசாங்கத்தை ஏற்படுத்துவர். இதில் மக்கள் பங்கேற்று ஒரு சுய உள்ளாட்சி அரசாங்கத்தை உருவாக்கி அதன் மூலம் தங்கள் அரசியல் நடைமுறைகளையும், தங்கள் தேவைகளுக்கான முடிவுகளையும் எடுக்கின்றனர்.

**அரசியல் வன்முறை (Political Violence):**

- அரசியல் அமைப்பில் உள்ளோர் தங்களின் அரசியல் குறிக்கோளை அடைவதற்காக வன் செயல்களில் ஈடுபடுகின்றனர். மேலும், மக்களில் ஒரு சிறு பிரிவினர், அரசு தங்களின் கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காது என்று நம்புவதால் வன்முறையை அரசியல் ஆதாயத்திற்காக கையிலெடுக்கின்றனர்.

**குழுவாட்சி(Polyarchy):**

- ஒரு குழுவால் ஆளப்படுகின்ற ஆட்சி. இசைவினால் உருவான ஒரு எல்லைக்குள் விருப்பத்துடனோ அல்லது விருப்பமின்றியோ இருக்கின்ற நபர்கள் தங்களுக்குள் எந்த மோதலுமின்றியும் ஒருவர் மேல் ஒருவர் மேலாதிக்கம் செய்யாமலும் ஆட்சி செய்தல்.

**மத அடிப்படைவாதம் (Religious Fundamentalism):**

- ஒரு இயக்கம் அல்லது ஒரு சிந்தனை முறை. இது மதத்தின் அடிப்படையில் சில கொள்கைகள் அவசியம் என்றும் அதனை மாற்றமுடியாத உண்மை என்றும் கூறுகிறது.

**குடியரசு (Republic):**

- இது அரசியல் அதிகாரமானது மக்களின் கருத்திசைவிலிருந்து உருவாகிறது என்ற கொள்கையின் படி உள்ளது. முடியாட்சி மற்றும் பரம்பரை விதிகளை இது புறந்தள்ளுகிறது.

**உரிமை (Right):**

- உரிமை எனும் கருத்தாக்கமானது தனி மனித அதிகாரம், தனித்துவம், சுதந்திரம் மற்றும் மனிதர்களுக்கிடையேயான சமத்துவம் போன்ற கருத்துக்களை ஏற்றுக் கொள்கிறது. மேலும் தகுந்த காரணங்கள் இருந்தாலன்றி மனிதர்களுக்கிடையில் பாகுபாடு காட்டுதல் கூடாது என்கிறது.

**விடுதலை(Freedom):**

1. **ஒரு மனிதன் தான் விரும்பும் வகையில் சிந்திக்கவும், செயல்படவுமான** திறன், விடுதலை என்பது குறுக்கிடாமை அல்லது தனி மனித சுய வளர்ச்சி.

2. கொடுங்கோல் மன்னனின் எதேச்சாதிகாரத்திலிருந்து விடுதலை பெற்று குடிமக்கள் அரசின் செயல்பாடுகளில் பங்கேற்று தங்களை தாங்களே நிர்வகித்து கொள்ளும் மக்களின் உரிமை.

சுதந்திரம் (Liberty): ஒரு குறிப்பிட்ட வகையில் செயல்பட அதிகார அமைப்பு அளிக்கும் உரிமை.

**சமத்துவம் (Equality):**

- ஒரே மாதிரியாக இல்லாமல் அனைவருக்கும் சரியான முறையில் பகிர்ந்தளித்தல். சமத்துவம் என்பது உரிமைகள், வாய்ப்புகள் மற்றும் விளைவுகள் அனைத்திலும் இருத்தல் வேண்டும்.

**சகோதரத்துவம் (Fraternity):**

- சகோதரத்துவம் என்பது மனிதர்களுக்கிடையே ஒருவருக்கொருவர் அனுதாபம், மற்றும் தோழமை கொண்டு செயல்படுதல்.

**இறையாண்மை (Sovereignty):**

- அறுதியான மற்றும் இறுதியான அதிகாரம். இறையாண்மை என்பது அரசிடம் உள்ள உச்ச சட்ட அதிகாரம் அல்லது எதிர்க்க முடியாத அரசியல் அதிகாரம்.

**சமதர்மம் (Socialism):**

- சமதர்மம் என்பது ஒரு சித்தாந்தம். இதன்படி சொத்தானது தனி நபரின் உடைமையாக இல்லாமல் பொதுச் சொத்தாக இருக்கும். ஒரு பொருளாதார அமைப்பில் சமத்துவத்தை நிலை நாட்டுவதற்காக இது உருவானது. இதில் அரசுக்கும், சமூகத்துக்குமான உறவை தீர்மானிப்பது அரசியலின் படிநிலைகள் ஆகும்.

**மதச் சார்பின்மை (Secularism):**

- அரசானது எந்த ஒரு மதத்திற்கும் ஆதரவளிக்காமல் இருத்தல். அனைத்து மதங்களையும் சமமாக நடத்துதல்.

**அரசு (The state):**

நிலம், மக்கள், அரசாங்கம் மற்றும் இறையாண்மை ஆகிய இந்நான்கையும் ஒருங்கே கொண்ட ஒரு அரசியல் நிறுவனம்.

---

## அலகு-6
## அரசாங்கத்தின் வகைப்பாடுகள்

**அறிமுகம்**

அரசாங்கம் என்பது அரசின் மிக முக்கிய அங்கமாகும். அரசாங்கம் என்பது அரசியல் மற்றும் நிர்வாகம் சார்ந்த துறைகளின் உறுப்பினர்களை உள்ளடக்கியது ஆகும். மக்கள் நலன் சார்ந்த கொள்கை உருவாக்கத்திலும், நடைமுறைப்படுத்துவதிலும் அரசாங்கம் மிக முக்கியப்பங்கு வகிக்கின்றது. மேலும் அரசாங்கம் என்பது சட்டம் இயற்றுதல், செயல்முறைப்படுத்துதல் மற்றும் நீதிவழங்குதல் சார்ந்த பணிகளையும் மேற்கொள்கிறது. சட்டமன்றம், நீதிமன்றம் மற்றும் செயலாட்சித் துறை ஆகிய மூன்றும் சட்டம் மற்றும் அரசமைப்பின் அடிப்படையில் அரசாங்கத்தின் அங்கங்கள் அகும். இம்மூன்று அங்கங்களும் அரசின் நோக்கங்களுக்குச் செயல்முறை வடிவம் கொடுக்கின்றது. அரசாங்கத்தைப் பின்வரும் வகையில் ஒற்றையாட்சி, கூட்டாட்சி, நாடாளுமன்ற முறை, குடியரசுத்தலைவர் முறை என வகைப்படுத்தலாம்.

**குறிப்பிடத்தக்க மேற்கொள்**

**சாக்ரடீஸ் (Socrates)**
“எந்த ஒரு மனிதனும் தனக்கு தெரியாத அல்லது அனுபவம் இல்லாத துறையில் செயல்பட விரும்பவில்லை. அரசாங்கம் என்ற கடினமான மற்றும் மிகுதியான திறன் தேவைப்படும் துறையில் ஈடுபட தமக்குத் தகுதி உள்ளதாகக் கருதி அனைவரும் செயல்பட விரும்புகின்றனர்”.

**கட்டுப்பாடுகள் மற்றும் சமநிலைகள் (குடியரசுத் தலைவர் முறை)**
**ஐக்கிய அமெரிக்க குடியரசு –Checks and Balances (Presidential form)**

| யெலாட்சிப் பிரிவு (குயடிரசுத் தலைவர் சட்டங்களைச் செயல்படுத்துகிறார்) | சட்டமன்றப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள் | நீதித்துறை பிரிவின் மீதான கட்டுப்பாடுகள் |
|---|---|---|
| | • சட்டங்களை முன்மொழியலாம்<br>• சட்டங்களை ரத்து செய்தல் காங்கிரசின் சிறப்புக் கூட்டத் தொடர்களுக்கு அழைக்கலாம்.<br>• நியமனங்கள் செய்தல்<br>• வெளிநாட்டுடனான பேச்சுவார்த்தையில் ஈடுபடுதல் | • கூட்டாட்சி நீதிபதிகளை நியமிக்கிறார்<br>• கூட்டாட்சியிலுள்ள குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்குதல் |

| ப் பிவ (காங்கிரஸ் சட்டங்களை உருவாக்குகிறது) | செயலாட்சிப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள் | நீதித்துறைப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள் |
|---|---|---|
| | • குடியரசுத் தலைவரின் ரத்து அதிகாரங்களை மீறிச் செயல்படும் அதிகாரமிக்கதாகும்<br>• செயலாட்சியின் நியமனங்களை உறுதிசெய்தல்<br>• உடன்படிக்கைகளுக்கு ஒப்புதல் அளித்தல்<br>• போரைப் பிரகடனப்படுத்துதல்<br>• நிதி ஒதுக்கீட செய்தல்<br>• குடியரசுத் தலைவரை பதவி நீக்க நடைமுறையின் மூலம் அகற்றுதல் | • கூட்டாட்சியின் கீழமை நீதிமன்றங்களை உருவாக்குதல்<br>• நீதிபதிகளைப் பதவி நீக்கமுறையின் மூலம் அகற்றுதல்<br>• நீதித்துறையின் முடிவுகளை மீறும் அதிகாரம் கொண்டதுடன் சட்டத்திருத்தத்தினை முன்மொழியலாம்.<br>• கூட்டாட்சி நீதிபதிகளின் |

| | | |
|---|---|---|
| | | நியமனங்களை அங்கீகரித்தல் |

APPOLO STUDY CENTRE

| நீதித்துறைப் பிரிவு (உச்ச நீதிமன்றமானது சட்டங்களுக்கு விளைக்கமளித்தல்) | செயலாட்சிப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள் | சட்டமன்றப் பிரிவின் மீதான கட்டுப்பாடுகள் |
|---|---|---|
| | • செயலாட்சியின் நடவடிக்கைகளை அரசமைப்பிற்கு முரணானதாக பிரகடனப்படுத்துதல் | • சட்டமன்றத்தின் நடவடிக்கைகளை அரசமைப்பிற்கு முரணானதாக பிரகடனப்படுத்துதல் |

**அரசாங்கத்தை அறிந்து கொள்வதற்கான அணுகுமுறைகள்:**

பல்வேறு வகையான அணுகுமுறைகள் மூலம் அரசாங்கத்தை அறிந்து கொள்ள முயல்வது நமக்கு அரசாங்கத்தின் தோற்றம் மற்றும் அதன் செயல்பாடுகளை விரிவாக அறிந்து கொள்ள உதவுகிறது.

**ஒப்பீட்டு மற்றும் வரலாற்று அணுமுறை:**

ஒப்பீட்டு மற்றும் வரலாற்று அணுமுறையானது மேற்கத்திய அரசியல் நிறுவனங்களைப் பண்டைய காலம் முதல் தற்காலம் வரை கற்றறிந்து உள்ளது. இந்த அணுகுமுறை விளக்கரீதியான தன்மையை கொண்டது. அரிஸ்டாட்டில், மாண்டெஸ்க்யூ மற்றும் லாக் ஆகியோர் இவ்வணுகுமுறையினைக் கையாண்டு அரசாங்கங்களை பகுத்தாய்ந்தனர்.

உதாரணமாக, அரிஸ்டாட்டில் தனது மிகச்சிறந்த படைப்பான “அரசியல்“ எனும் புத்தகத்தை எழுதும்முன் 158 நாடுகளின் அரசமைப்புகளை பகுத்தாய்ந்துள்ளார். மாண்டெஸ்க்யூ இங்கிலாந்து அரசமைப்பை பகுத்தாராய்ந்து பின்னர் இங்கிலாந்து அரசமைப்பின் உறுதித்தன்மைக்கு “அதிகாரங்களின் பிரிவினையே காரணம்“ என கண்டுணர்ந்தார்.

**சட்ட மற்றும் நிறுவனம் சார்ந்த அணுகுமுறை:**

பெந்தம், ஆஸ்டின் மற்றும் டைசி போன்ற அறிஞர்கள் இந்த அணுகுமுறையினைக் கையாண்டனர். இது அரசியல் நிறுவனங்களின் முறையான சட்டக் கட்டமைப்பை மையமாக கொண்டதாகும்.

அரசாங்கம் மற்றும் சட்டத்திற்கு இடையேயான தொடர்புகளை விளக்குவதற்கு ஏதுவாக சிலகோட்பாடுகளை உருவாக்கம் செய்ய இந்த அணுகுமுறை உதவுகின்றது. பெந்தம் இங்கிலாந்து சட்த்தை சீரமைப்பு செய்த தன்னிகறற்ற அறிஞர் ஆவார். ஆஸ்டின் இறையாண்மையின் சட்டரீதியான அடிப்படையை உணர்த்தியவர் ஆவார். மேலும் இவர் இறையாண்மை என்பது பிரிக்க இயலாத, மாற்றித்தர முடியாத மற்றும் இறுதியான அதிகாரம் என்று கூறியவர் ஆவார். ஏ.வி.டைசி அரசாங்கத்தினை சட்டத்தின் அடிப்படையிலும், அரசாங்கள் பிற கிளைகளில் அதன் செயலாக்கதினைப் பொறுத்தும் மதிப்பிடுகிறார்.

**அரசியல் பொருளாதார அணுகுமுறை:**

இது அரசியலுக்குப் பொருளாதாரம் சார்ந்த விளக்கங்களை அளிக்கின்றது. மேலும் சந்தையின் பங்களிப்பு, உற்பத்தி வழிமுறைகள் மற்றும் சமூகத்திற்கு உற்பத்தி பொருட்களை கொண்டு செல்வது குறித்தும் இது விவாதிக்கின்றது. இந்த அணுகுமுறை தாராளவாத அரசியல் பொருளாதாரம் மற்றும் மார்க்சிய அரசியல் பொருளாதாரம் என இருவகையாக வகைப்படுத்தப்படுகின்றது.

**அரசியல் சமூகவியல் அணுகுமுறை:**
இந்த அணுகுமுறையானது சமூகவியல் மற்றும் மானுடவியல் சார்ந்து உள்ளது. மேலும் இதனை அமைப்புசார் அணுகுமுறை என்றும் கூறலாம். அரசாங்கம் அல்லது அரசியல் அமைப்பு என்பது சமூகம் எனும் பெரிய கட்டமைப்பில் உள்ளடக்கியது துணை அமைப்பு என்று அரசியல் சமூகவியல்

உறுதி செய்கின்றது. இந்த அணுகுமுறை பெரிய மற்றும் சிறிய அமைப்புகளுக்கடையேயான தொடர்பை ஆராய்கின்றது.

மாண்டெஸ்க்யூ அரசாங்கத்தை மூன்று விதமாக வகைப்படுத்துகிறார். அவை முறையே குடியரசு, முடியாட்சி மற்றும் கொடுங்கோல் அரசாங்கம் ஆகும்.

**குடியரசு அரசாங்கம்**

இவ்வகை அரசாங்கத்தில் மக்கள் இறையாண்மை அதிகாரத்தை பெற்றுள்ளனர்.

**முடியாட்சி அரசாங்கம்:**

இது ஒரு தனி மனிதனின் ஆட்சியாகும். அத்துடன் நிலையாக நிறுவப்பட்ட சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடத்தப்பெறுவது ஆகும்.

**கொடுங்கோல் அரசாங்கம்**

ஒரு தனிமனிதனின் விருப்பு, வெறுப்பிற்கு உட்பட்டே ஆளுகை நடைபெறும். மேலும் நிறுவப்பெற்ற மற்றும் நிலையான சட்டதிட்டங்கள் கிடையாது. மாண்டேஸ்க்யூவின் கூற்றுப்படி, அரசு தொடர்ந்து நீடித்திருப்பதற்கு "உறுதியான சமதாயத்தினுடைய குறிப்பிட்ட உத்வேகத்தின் பண்பியல் வடிவத்தை சார்த்திருக்கிறது.

**அரசாங்கத்தின் பொருள் வரையறை மற்றும் தன்மை:**

அரசாங்கம் என்பது அரசின் செயலாட்சிப் பணிகளைக் குறிப்பதாகும். இது குடிமை, பெருநிறுவனம், மதம், கல்வி மற்றும் பிற குழுக்களுக்கு சட்டம் இயற்றி செயல்படுத்தும் அதிகாரம் கொண்ட அமைப்பினைக் குறிப்பதாகும்.

அரசாங்கம் எனும் சொல்லானது பழைய பிரெஞ்சு, வார்த்தையான "ஆளுநர்" (Governor) என்பதிலிருந்து பெறப்பட்டதாகும். அது "குபர்நேட்" (Gubernate) என்ற லத்தீன் சொல்லில் இருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் இயக்குதல், ஆட்சி, வழிகாட்டு, ஆளுகை என்பதாகும்.

**மிகப்பழமையான அரசாங்க முறை எது?**
**முடியாட்சி:**
இங்கிலாந்தின் முடியாட்சியே மிகப் பழமை வாய்ந்த அசராங்க வடிவமாகும். முடியாட்சியில் மன்னர் அல்லது ராணி அரசின் தலைவராக இருப்பார். இங்கிலாந்து முடியாட்சியானது அரசமைப்பிலான முடியாட்சி என அழைக்கப்படுகிறது. மன்னர் அரசினுடைய தலைவராக இருந்தாலும், சட்டமியற்றக்கூடிய தகுதி தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்றத்திடமே உள்ளது என்பது இதன் பொருளாகும்.


**அரசாங்கத்தின் வகைப்பாடு பற்றி அரிஸ்டாட்டில்**
அரிஸ்டாட்டில் இரண்டு அடிப்படைகளின் இணைவில் அவர் பகுப்பாய்ந்த அரசமைப்புக்களை வகைப்படுத்தியுள்ளார்.

**முதலாவது அடிப்படை:**
ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை ஒன்று. சில மற்றும் பல என்பதன் அடிப்படையில் முடியாட்சி, பிரபுக்கள் ஆட்சி, தூய அரசியல் அமைப்பு முறை (Polity) என வகைப்படுத்தியுள்ளார்.

**இரண்டாவது அடிப்படை:**

அரசாங்கம் யாருடைய நலனுக்காக செயல்படுகின்றது என்ற அடிப்படையில் பொதுநலம் மற்றும் சுயநலம் என்று வகைப்படுத்தியுள்ளார். கீழ்வரும் அட்டவணை மூலம் நெறி தவறிய மூன்று வடிவங்களான கொடுங்கோலாட்சி, சிறுகுழு ஆட்சி மற்றும் மக்களாட்சியினை காணலாம்.

| **அதிகாரத்தில் உள்ளோர் எண்ணிக்கை** | **மக்கள் நலம்** | **சுயநலம்** |
|---|---|---|
| ஒன்று | முடியாட்சி | கொடுங்கோல் ஆட்சி |
| சிலர் | பிரபுக்கள் ஆட்சி | சிறுகுழுவின் ஆட்சி |
| பலர் | தூய அரசியல் அமைப்பு முறை (Polity) | மக்களாட்சி அல்லது கும்பல் ஆட்சி |
| | | |




**ஒற்றையாட்சிமுறை அரசாங்கம் (Unitary Form of Government):**
ஒற்றையாட்சி அரசாங்கம் அல்லது அரசு என்பது ஒன்றாக இணைத்து ஆட்சி செய்யப்படக்கூடிய இறையாண்மையுடைய அரசு ஆகும். ஒற்றையாட்சி முறை அரசாங்கத்தில், மத்திய அரசாங்கமே அனைத்து அதிகாரத்தையும் உள்ளடக்கியதாகும். நிர்வாக காரணங்களுக்காகத் தோன்றிய பிற பிரிவுகள் மத்திய அரசாங்கம் தற்காலிகமாகப் பகிர்ந்தளித்த அதிகாரத்தின் அடிப்படையிலேயே செயல்பட இயலும்.

**ஒற்றையாட்சி அரசாங்கத்தில் அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் முறைகள்**
**ஒற்றையாட்சி முறை அரசாங்கங்கள் - உதாரணம் : இங்கிலாந்து, பிரான்சு, ஜப்பான் மற்றும் இலங்கை:**
ஒற்றையாட்சி அரசாங்கத்தில் அனைத்து அதிகாரங்களும் மையமாக ஒரிடத்தில் குவிந்து இருக்கும். மாறாக கூட்டாட்சி அரசாங்கத்தில் அதிகாரமானது மத்திய மற்றும் மாநில அரசாங்கங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படும். ஒற்றையாட்சி அரசாங்கத்தில் ஆதிகார பகிர்வு இருப்பினும் அக்காரணத்தினால் அதனை கூட்டாட்சி முறை என முடிவு செய்ய இயலாது.

**ஒற்றையாட்சியின் வரையறை:**

சில அரசியல் சிந்தனையாளர்கள் ஒற்றையாட்சி முறை அரசாங்கத்தினை பின்வருமாறு வரையறை செய்கின்றனர்.

**ஏ.வி. டைசி:**

ஓர் மைய சக்தியே மேலான சட்டமியற்றும் அதிகாரத்தினை வழக்கமாகச் செயல்படுத்துகிறது.

**கார்னர்:**
ஓர் மத்திய அமைப்பிடம் அரசாங்கத்தின் அனைத்து அதிகாரங்களும் அரசமைப்பு மூலம் வழங்கப்பட்டிருக்கும்.

**சி.எ.ஃப்.ஸ்ட்ராங்:**
ஒற்றையாட்சி அரசாங்கத்திற்கு இரண்டு முக்கியத் தகுதிகள் உள்ளன அவையாவன:

- மத்திய அரசாங்கத்தின் மேலான தன்மை
- இறையாண்மையுடைய துணை அமைப்புகள் இல்லாதிருத்தல்

துணை சட்டமியற்றும் அமைப்புகளுக்கும், இறையாண்மையுடைய துணை அமைப்புகளுக்கும் உள்ள வேறுபாடு என்பது ஒற்றையாட்சியில் உள்ள உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கூட்டாட்சியில் அங்கமாக உள்ள அலகுகளுடனான வேறுபாடுகளுக்கு ஒப்பானதாகும்.

**K.C. வியர்:**

கோட்பாட்டின் அடிப்படையில் ஒற்றையாட்சியாக இருக்கும் ஓர் அரசமைப்பு, நடைமுறையில் பெரும்பாலும் கூட்டாட்சி அமைப்பாக இருக்க வாய்ப்புள்ளது. அதேபோல கூட்டாட்சியாக இருக்கும் ஒரு அரசமைப்பு நடைமுறையில் ஒற்றையாட்சியாக இருக்க வாயப்புள்ளது. உதாரணமாக மெக்சிகோ, வெனிசுலா, பிரேசில் மற்றும் அர்ஜென்டினா பேபான்ற கூட்டாட்சி அரசமைப்புக்களைக் கூறலாம்.

**ஒற்றையாட்சி முறை அரசாங்கத்தின் நிறைகள் (Merits of Unitary form of Government):**

- சிறிய நாடுகளுக்கு உகந்தது
- அதிகாரம் மற்றும் பொறுப்பு சார்ந்த மோதல்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை.
- ஒற்றையாட்சி முறையில் சரியான நேரத்தில் முடிவுகள் எடுக்கப்படுவதுடன் செயல்பாடுகள் விரைவாக இருக்கும்.
- ஒற்றையாட்சி முறை அரசாங்கம் குறைந்த செலவீனம் கொண்டதாகும்.
- அரசமைப்பில் திருத்தங்கள் கொண்டுவருவது எளிதாகும்.
- நாடு முழுவதற்குமான ஒரே சீரான சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நிர்வாகம் ஆகியவை இருக்கும்.

**ஒற்றையாட்சி முறை அரசாங்கத்தின் குறைகள் (De – merits of Unitary form of Government):**

- பெரியநாடுகளுக்கு ஒற்றையாட்சி முறை பொருந்தாது.
- மத்திய அரசாங்கம் பல சிக்கலான பிரச்சினைகளை சமாளிக்க நேர்வதால் நிர்வாக ரீதியான தாமதம் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் அதிகமாகும்.
- மத்திய அரசானது வட்டாரத் தேவைகள் சார்ந்த துவக்கமுறை மற்றும் பிரச்சனைகளில் கவனம் செலுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை.
- மத்திய அரசாங்கத்தில் அதிக அதிகாரங்கள் குவிந்து உள்ளதால், மத்திய அரசாங்கம் ஏதேச்சதிகாரமான போக்கை கடைபிடிக்க வய்ப்புள்ளது.

**இந்திய அரசமைப்பின் ஒற்றையாட்சி இயல்புகள்**
**உறுதியான மத்திய அரசாங்கம்**

அதிகாரப் பகிர்வானது மத்திய அரசுக்குச் சாதகமாக இருப்பதுடன், கூட்டாட்சி நோக்கில் பார்க்கும்போது அதிகாரம் சமநிலையற்று பகிரப்பட்டிருக்கும். முதலில் இந்தியாவில்

மத்தியப்பட்டியலானது மாநிலப் பட்டியலைவிட அதிக அதிகாரங்கள் கொண்டிருக்கிறது. இரண்டாவதாக முக்கியமான அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடமே இருக்கிறது. மூன்றாவதாக பொதுப்பட்டியலிலும் மத்திய அரசின் அதிகாரமே மேலோங்கி இருக்கிறது.

இறுதியாக, இந்திய அரசமைப்பின் எஞ்சிய அதிகாரங்களும் மத்திய அரசாங்கத்திடமே உள்ளது. இதற்கு மாறாக அமெரிக்க அரசமைப்பின்படி எஞ்சிய அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திடம் உள்ளது. மேற்கூறிய வகைகளில் இந்திய அரசமைப்பானது மத்திய அரசாங்கத்தினை அதிக வலிமையானதாக உருவாக்கியுள்ளது.

**மாநில நிலப்பரப்புகளின் மீதான மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாடு:**

பிற கூட்டாட்சிகளைப் போலன்றி இந்தியாவில் மாநில அரசுகளுக்குத் தங்களது நிலப்பரப்பிற்கு உட்பட்ட பகுதிகளின் மீது அதிகாரம் கிடையாது. இந்திய நாடாளுமன்றம் தன்னிச்சையாக மாநிலங்களின் பெயர். நிலப்பரப்பு மற்றும் எல்லைகளை வரையறை செய்ய இயலும்.

**ஒற்றை அரசமைப்பு:**

வழக்கமாகக் கூட்டாட்சி அமைப்பு முறையில், மாநிலங்கள் தங்களுக்கான அரசமைப்பை தனியாக இயற்றிக் கொள்ள உரிமை உண்டு. இதற்கு மாறாக இந்தியாவில் அவ்வகையான அதிகாரம் மாநிலங்களுக்கு இல்லை. இந்திய அரசமைப்பானது மத்திய மற்றும் மாநிலங்களுக்கான அரசமைப்பை உள்ளடக்கியது ஆகும். இதன்படி மட்டுமே மத்திய, மாநில அரசாங்கங்கள் செயல்பட முடியும். இதற்கு ஜம்மு காஷ்மீர் மாநிலம் மட்டுமே விதிவிலக்காகும். ஏனெனில் இம்மாநிலத்திற்கு மட்டுமே தனி அரசமைப்பு உண்டு.

**அரசமைப்பின் நெகிழும் தன்மை:**
இந்திய அரசமைப்பின் பெரும்பான்மையான பகுதியை நாடாளுமன்றம் தன்னிச்சையாக அரசமைப்ப சட்ட திருத்தத்தின் மூலமாக மாற்றலாம். இம்மாற்றங்களைச் செய்ய சாதாரண பெரும்பான்மை அல்லது சிறப்பு பெரும்பான்மை பெற்றிருந்தால் போதுவானதாகும். இருப்பினும் அரசமைப்பு சட்டதிருத்தத்திற்கான துவக்கத்தினை மேற்கொள்ளும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடமே உள்ளது. அமெரிக்காவில் மாநிலங்களுக்கும் அரசமைப்பு சட்ட திருத்தத்தை துவக்க உரிமையுண்டு. மாறாக இந்தியாவில் மாநிலங்களுக்கு அவ்வுரிமை கிடையாது.

**மாநிலங்களின் சமநிலையற்ற பிரதிநிதித்துவம்:**

கூட்டாட்சி தத்துவத்தின்படி நாடாளுமன்றத்தின் மேலவையில் மாநிலங்களுக்கு சமமான பிரதிநிதித்துவம் அளித்தல் வேண்டும். மாறாக இந்திய மாநிலங்களுக்கு சமமான பிரதிநிதித்துவம் மாநிலங்களவையில் அளிக்கப்படவில்லை.

**நெருக்கடி நிலை அதிகாரங்கள்:**

இந்தியாவில் நெருக்கடி நிலை பிரகடனத்தின் போது மத்திய அரசாங்கம் மிகவும் வலிமையாக இருப்பதுடன் மாநில அரசுகள் மத்திய அரசின் முழுக்கட்டுப்பாட்டின் கீழ் சென்றுவிடும். நெருக்கடி நிலை காலத்தில் கூட்டாட்சி நடைமுறையானது அரசமைப்புச் சட்டதிருத்தம் செய்யப்படாமலேயே ஒற்றையாட்சி நிலைக்கு சென்றுவிடும் இவ்வகையான மாற்றம் எந்தவொரு கூட்டாட்சி அமைப்பிலும் கிடையாது.

**ஒற்றைக் குடியுரிமை:**


இந்தியா ஒற்றைக்குடியுரிமை என்னும் முறையினை ஏற்றுக்கொண்டுள்ளது. நம் நாட்டில் இந்தியக் குடியுரிமை மட்டுமே உள்ளது. மாநிலங்களுக்கு தனி குடியுரிமை கிடையாது.

நம்நாட்டில் எந்த மாநிலத்திலும் பிறந்த அல்லது வசிக்கின்ற அனைத்து குடிமக்களும், மாநில வேறுபாடின்றி நாடு முழுவதும் ஒரே மாதிரியான உரிமைகளைக் கொண்டிருக்கின்றனர். அமெரிக்கா, சுவிட்சர்லாந்து மற்றும் ஆஸ்திரேலியா போன்ற கூட்டாட்சி அரசுகளில் குடிமக்கள் "இரட்டைக்

குடியுரிமை“ பெற்றுள்ளனர். அதாவது தேசியக் குடியுரிமை மற்றும் மாநிலக் குடியுரிமை ஆகியவையாகும்.

**ஒருங்கிணைந்த ஒரே நீதித்துறை:**

இந்தியாவில் உள்ள அனைத்து நீதிமன்றங்களும் உச்ச நீதிமன்றத்திலிருந்து கீழமை நீதிமன்றங்கள் வரை படிநிலை அமைப்பின் அடிப்படையில் உள்ளது. இந்திய நீதிமன்றங்களுக்கு நேரடி மற்றும் மேல்முறையீட்டு அதிகாரங்கள் உள்ளன.




**இந்திய அரசமைப்பின் கூட்டாட்சி இயல்புகள்:**

**இரட்டை அரசாங்கம்**

இந்திய அரசமைப்பின்படி மத்திய அளவில் ஒன்றியமும் அதன் பரப்பரளவிற்குள் மாநில அரசாங்கங்கள் என இரண்டு வகையான அரசாங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த இரண்டு அரசாங்கங்களும் அரசமைப்பில் கூறப்பட்டுள்ளவாறு தனக்கென தனிப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு செயல்படுகின்றன.

**எழுதப்பட்ட அரசமைப்பு:**

இந்திய அரசமைப்பு எழுதப்பட்ட விதிகளைக் கொண்டிருப்பதால் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமல் திருத்தங்கள் கொண்டுவருவது கடினமாகும்.

**அதிகாரப் பங்கீடு:**

இந்திய அரசமைப்பின் ஏழாவது அட்டவணையின்படி மத்திய மற்றும் மாநில அரசுகளிடம் மத்திய பட்டியல், மாநில பட்டியல் மற்றும் பொதுப் பட்டியல் என்ற அடிப்படையில் அதிகாரம் பங்கிட்டு அளிக்கப்பட்டுள்ளது.

**அரசமைப்பின் மேலான தன்மை:**

இந்தியாவில் அரசமைப்புச் சட்டமே நாட்டின் மிகவும் உயர்ந்த சட்டமாகும். மத்திய மற்றும் மாநில அரசுகள் இயற்றும் சட்டங்கள் அரசமைப்பு சட்டத்திற்கு உட்பட்டு இருத்தல் வேண்டும்.

**நெகிழா அரசமைப்பு:**

ஒவ்வொரு அவையிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை என்ற நடைமுறையின் மூலமே அரசமைப்புச் சட்டத்திருத்தம் மேற்கொள்ளப்பட வேணடும். மேலும் ஆளும் கட்சியினரால் மிக எளிதாக அரசமைப்பு சட்டத்திருத்தம் கொண்டுவர இயலாது.

**சுதந்திரமான நீதித்துறை:**

இந்தியாவில் நீதிமன்றமானது சட்டமன்றம் மற்றும் செயலாட்சித் துறையின் தலையீடு இல்லாமல் செயல்படும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. அதன் தேசிய மற்றும் மாநில அளவிலான அதிகார எல்லைகளின் படி அவை நேரடி, மேல் முறையீட்டு மற்றும் நீதிப்புனராய்வு பணிகளை மேற்கொள்கிறது.

## ஈரவைச் சட்டமன்றம் முறை (Bicameralism):

இந்திய நாடாளுமன்றமானது மேலவை மற்றும் கீழவை என இரண்டு அவைகள் கொண்டதாகும். மேலும் கீழவை நிதி தொடர்பான சட்டமியற்றலை மேற்கொள்ளும் அதிகாரம் கொண்டதாகும்.

**கூட்டாட்சி முறை அரசாங்கத்தின் நிறைகள்:**

- உள்ளாட்சியினுடைய தன்னாட்சி மற்றும் தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றிற்கு இடையே சமரசத்தினை ஏற்படுத்துகிறது.
- மத்திய, மாநில அரசாங்கங்களுக்கிடையே அதிகாரம் பகிரப்படுபவதால் நிர்வாகத் திறன் மேம்படுகிறது.
- அளவில் மிகப்பெரிய நாடுகள் உருவாவதற்கு வாயப்புகள் உருவாகின்றது.
- அதிகாரங்கள் பங்கீடு செய்யப்படுவதால் மத்திய அரசாங்கம் ஏதெச்சதிகாரத்துடன் செயல்படுவதைக் கட்டுப்படுத்த இயலும்.
- மிகப்பெரிய நாடுகளுக்கு கூட்டாட்சி அரசாங்கம் மிகவும் பொருத்தமானதாகும்.
- பொருளாதார மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு இது மிகவும் நன்மையாகும்.

**கூட்டாசி முறை அரசாங்கத்தின் குறைகள்**

- ஒற்றையாட்சி அரசாங்கத்தோடு ஒப்பிடும்போது கூட்டாட்சி அரசாங்கங்கள் வலிமையற்றவை ஆகும்.
- கூட்டாட்சி அரசாங்கங்கள் அதிக செலவினங்களை கொண்டதாகும்.
- பிரிவினைவாத மனப்போக்கு உருவாக பொதுவான வாய்ப்புகள் உள்ளன.
- நிர்வாகத்தில் ஒருமுகத் தன்மையை கொண்டுவர இயலாது.
- தேசிய ஒருமைப்பாட்டிற்கு இது ஒரு அச்சுறுத்தலாகும்.
- மத்திய மாநில அரசுகளுக்கிடையேயான அதிகாரப் பங்கீடு பிரச்சனைகளை ஏற்படுத்தும்.
- இரட்டைக் குடியுரிமை
- மாறிவரும் சூழல்களுக்கேற்ப நெகிழா அரசமைப்பினை எளிதாகத் திருத்துவது இயலாததாகும்.
- சில சமயங்களில் மாநில அரசாங்கங்கள் அயலுறவுச் கொள்கையில் தடையை ஏற்படுத்துகின்றன.

**கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சி அரசாங்கத்திற்கிடையேயான வேறுபாடுகள்:**

| வ.எண் | ஒற்றையாட்சி | கூட்டாட்சி |
|---|---|---|
| 1. | ஒரு அடுக்கு அரசாங்கம் மற்றும் துணை அலகுகள் | இரண்டு அடுக்கு அரசாங்கம் |
| 2. | பெரும்பாலும் ஒற்றை குடியுரிமை | இரட்டைக் குடியுரிமை |
| 3. | துணை அலகுகள் சுதந்திரமாகச் செயல்பட இயலாது | கூட்டாட்சி அலகுகள் மத்திய அரசுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும் |
| 4. | அதிகாரப் பகிர்வு என்பது கிடையாது | அதிகாரப் பகிர்வு என்பது இருக்கும் |
| 5. | அதிகாரக் குவிப்பு | அதிகாரப் பரவலாக்கம் |

| வ.எண் | நாடு | நாடாளுமன்றம் |
|---|---|---|
| 1. | இஸ்ரேல் | நெசெட் |
| 2. | ஜெர்மனி | பன்டஸ்டாக் |
| 3. | ஜப்பான் | டயட் |
| 4. | நார்வே | ஸ்டோர்டிங் |
| 5. | நேபாளம் | ராஷ்டிரிய பஞ்சாயத்து |

| | | |
|---|---|---|
| 6. | பாகிஸ்தான் | தேசிய சபை |
| 7. | ரஷ்யா | டூமா |
| 8. | அமெரிக்கா | காங்கிரஸ் |
| 9. | தென் ஆப்பிரிக்கா | நாடாளுமன்றம் |
| 10. | சுவிட்சர்லாந்து | கூட்டாட்சி சபை |

**தொகுப்பு:**


| வ.எண் | வகையினம் | வகைகள் | நாடுகள் |
|---|---|---|---|
| 1. | அரசாங்கத்தின் முறைகள் | குடியரசு தலைவர் முறை அரசாங்கம்<br>நாடாளுமன்ற முறை அரசாங்கம்<br>நேரடி மக்களாட்சி<br>மறைமுக மக்களாட்சி<br>முடியாட்சி<br>சர்வாதிகாரம் | அமெரிக்கா<br>இங்கிலாந்து<br>சுவிட்சர்லாந்து<br>இந்தியா<br>முழுமையான முடியாட்சி – ப.ஃ.ரைன்<br>அரசமைப்பிலான முடியாட்சி – ஜப்பான்<br>ஹிட்லரின் ஜெர்மனி, முசோலியின் இத்தாலி |
| 2. | மதத்தின் பங்கு | மதச்சார்பின்மை<br>சமய ஆட்சி | இந்தியா<br>பாகிஸ்தான்,ஈரான், வாடிகண், நேபாளம் |
| 3. | நிலப்பரப்பு சார்ந்த அதிகாரப் பங்கீடு | ஓரவை சட்டமன்றம்<br>ஈரவை சட்டமன்றம் | சீனா<br>இங்கிலாந்து, அமெரிக்கா |
| 4. | செயலாட்சியின் வகைகள் | ஒற்றை செயலாட்சி மாதிரி<br>பன்மை செயலாட்சி மாதிரி | அமெரிக்கா<br>பிரான்சு |
| 5. | நீதித்துறையின் வகைகள் | சுதந்திரமானது<br><br>அர்ப்பணிப்பு உறுதியுடையது | அனைத்து மக்களாட்சி நாடுகள்<br>முன்னாள் சோவியத் ரஷ்ய குடியசு |
| 6. | அரசமைப்பின் தன்மை | நெகிழாதது மற்றும் எழுதப்பட்டது<br>நெகிழும் தன்மையுடையது மற்றும் எழுதப்படாதது | அமெரிக்கா<br>இங்கிலாந்து |
| 7. | அரசின் தன்மை (நோக்கம், லட்சியம் மற்றும் கொள்கைகள் அடிப்படையிலானது ) | முதலாளித்துவம்<br>பொதுவுடைமை<br>சமதர்மம் | அமெரிக்கா<br>கியூபா, சீனா, வடகொரியா<br>ரஷ்யா |

**நாடாளுமன்ற முறை அரசாங்கம்:**

தற்கால மக்களாட்சி அடிப்படையிலான அரசாங்கங்கள் நாடாளுமன்ற முறை அரசாங்கம் மற்றும் குடியரசுத்தலைவர் முறை அரசாங்கம் என வகைப்படுத்தப்படுகின்றன. இந்த வகைப்படானது அரசாங்கத்தின் சட்டமியற்றும் அமைப்பிற்கும், செயலாட்சிக்கும் இடையேயான உறவுகளின் தன்மையில் அடிப்படையிலானதாகும். நாடாளுமன்ற முறை அரசாங்கத்தில் செயலாட்சியானது தனது கொள்கைகள் மற்றும் செயல்பாட்டிற்காக, நாடாளுமன்றத்திற்குப் பொறுப்பானதாகும். மாறாக குடியரசுத் தலைவர் முறை அரசாங்கத்தில், செயலாட்சியானது சட்டமன்றத்திற்கு தங்களது கொள்கைகள் மற்றும் செயல்பாட்டிற்காக பதில் சொல்ல அவசியம் கிடையாது. மேலும் செயலாட்சியானது அரசமைப்பின் அடிப்படையில் சட்டமன்றத்திடம் இருந்து சுதந்திரமாக இயங்குகிறது.

நாடாளுமன்ற முறை அரசாங்கம் என்பது அமைச்சரவை முறை அரசாங்கம் என்றும், கடமைப்பாடுடைய அரசாங்கம் அல்லது வெஸ்ட் மினிஸ்டர் (West Minister) அரசாங்கம் என்றும்

அழைக்கப்படுகிறது. இங்கிலாந்து, ஜப்பான், கனடா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் நாடாளுமன்ற முறை அரசாங்கத்தைப் பின்பற்றுகின்றன.




ஐவர ஜென்னிங்ஸ் நாடாளுமன்ற முறை அரசாங்கத்தை அமைச்சர் குழுமுறை என்று அழைக்கிறார். ஏனெனில் அமைச்சரவை என்பது நாடாளுமன்ற அரசாங்க முறையினுடைய அதகாரத்தின் மையக்கருவாக விளங்குகிறது. நாடாளுமன்ற முறை அரசாங்கம் என்பது கடமைப்பாடுடைய அரசாங்கமாகும். இதில் அமைச்சரவை என்பது உண்மையான செயலாட்சியாகும். மேலும் இது நாடாளுமன்றத்திற்கு பொறுப்பானதாக இருப்பதுடன் அதன் நம்பிக்கையை பெற்ற வரையிலும் பதவியில் நீடிக்கிறது. இங்கிலாந்தில்தான் நாடாளுமன்ற முறை அரசாங்கம் தோன்றியது. இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் அமைவிடம் வெஸ்ட் மினிஸ்டர் (West minister) ஆகும். எனவே நாடாளுமன்ற முறை அசராங்கம் வெஸ்ட் மினிஸ்டர் (West Minister) முறை அரசாங்கம் என்றும் அழைக்கப்படுகிறது. இங்கிலாந்தின் பிரதம மந்திரி மற்ற அமைச்சர்களை ஒப்பிடுகையில் அதிக அதிகாரம் கொண்டவர். இவர் தனது அமைச்சரவையில் சம்மானவர்களில் முதன்மையானவராக (Primus interpares) கருதப்படுகிறார். தற்போதைய காலகட்டத்தில் பிரதம மந்திரியின் அதிகாரங்கள் அதிகரித்துள்ளது. பிரிட்டனின் அரசியல் மற்றும் நிர்வாகத்தில் தற்போதைய பிரதம மந்திரி ஆதிக்கம் செலுத்துகிறார்.

**நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் இயல்புகள்:**
**பெயரளவு செயலாட்சி மற்றும் உண்மையான செயலாட்சி:**

குடியரசுத் தலைவர் பெயரளவு அதிகாரம் கொண்ட செயலாட்சியாவார் (de-jure executive (or) titular executive). மாறாக பிரதம மந்திரி உண்மையான அதிகாரம் கொண்ட செயலாட்சியாக விளங்குகிறார் இவ்வகையில் குடியரசுத் தலைவர் நாட்டின் தலைவர் என்றும் பிரதம மந்திரி அரசாங்கத்தின் தலைவர் என்றும் கருதப்படுகிறார்.

**பெரும்பான்மை பெற்ற அரசியல் கட்சியின் ஆட்சி:**

நாடாளுமன்றத்தின் கீழவையில் பெரும்பான்மைப் பெற்ற கட்சியே ஆட்சி அமைக்கின்றது. அக்கட்சியின் தலைவர் குடியரசுத் தலைவரால் பிரதம மந்திரியாக நியமிக்கப்படுகிறார். பிற அமைச்சர்கள் பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில் குடிரயசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். எந்த ஒரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் கட்சிகளின் கூட்டணியை குடியரசுத் தலைவர் ஆட்சி அமைக்க அழைப்பு விடுப்பார்.

**கூட்டுப் பொறுப்புணர்வு:**

அமைச்சர்கள் நாடாளுமன்றத்திற்கு கூட்டுப் பொறுப்பாகும் கடமைப்பட்டவர்கள். இதுவே நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் அடிப்படை கோட்பாடாகும்.

**இரட்டை உறுப்பினராதல்:**

அமைச்சர்கள் ஒரே நேரத்தில் நாடாளுமன்றத்திலும் செயலாட்சிப் பிரிவிலும் உறுப்பினர்களாக இருப்பர்.

**பிரதம மந்திரியின் தலைமை:**

நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் பிரதம மந்திரியே தலைமை பொறுப்பு வகிக்கிறார். அவரே அமைச்சரவை குழு, நாடாளுமன்றம் மற்றும் ஆட்சியிலுள்ள கட்சியின் தலைவர் ஆவார். இவ்வகையில் பிரதம மந்திரி அரசாங்கத்தின் செயல்பாடுகளில் குறிப்பிடத் தகுந்த மிக முக்கிய பங்கு வகிக்கிறார்.

**நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் நிறைகள்**
**சட்ட மன்றம் மற்றும் செயலாட்சி இடையேயான நல்லிணக்கம்**

நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் மிகப்பெரிய நன்மையாதெனில் அது அரசாங்கத்தின் அங்கங்களான சட்டமன்றம் மற்றும் செயலாட்சிக்கு இடையே. நல்லிணக்கமான உறவுகள் மற்றும் கூட்டுறவினை ஏற்படுத்துகிறது. செயலாட்சி பிரிவு உறுப்பினர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாகவும் இருப்பதால் அவர்களுக்கிடையே சிக்கல்கள் எழுவதிற்கான சாத்தியம் குறைவாகிறது. எனவே அவர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.

**கடமைப்பாடுடைய அரசாங்கம்:**

நாடாளுமன்ற முறை அரசாங்கம் ஒரு கடமைப்பாடுடைய அரசாங்கம் உருவாவதற்கு வழிவகுக்கின்றது. அமைச்சர்கள் அவர்களுடைய அனைத்து செயல்களுக்கும் நாடாளுமன்றத்திற்கு கடமைப்பட்டவர்கள் ஆவர். நாடாளுமன்றமானது கேள்வி நேரம், விவாதங்கள், ஒத்திவைப்பு தீர்மானம் மற்றும் நம்பிக்கையில்லா தீர்மானம் போன்ற கருவிகள் மூலம் அமைச்சர்கள் மீது கட்டுப்பாடுகள் செலுத்துகின்றது.

**எதேச்சாதிகாரத்தை தடைசெய்தல்:**

அதிகாரங்கள் ஒரு தனி நபரிடம் இல்லாமல் அமைச்சரவை என்ற ஒரு குழுவிடம் உள்ளதால் தனிநபர் தன்னிச்சையாக செயல்படும் வாய்ப்புகள் குறைவாகும். இதன் மூலம் அமைச்சர்கள் சர்வாதிகாரியாக செயல்பட இயலாது. மேலுமட் அமைச்சர்கள் நாடாளுமன்றத்திற்கு பதில் சொல்ல கடமைப்பட்டவர்களாக இருப்பதுடன் அவர்களை நம்பிக்கையில்லா தீர்மானத்தின் மூலம் நீக்கம் செய்வதற்கும் வாய்ப்புகள் உண்டு.

**பரவலான பிரதிநிதித்துவம்:**

நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் அனைத்து வகுப்பினர் மற்றம் அனைத்து பகுதியினர் என அனைவருக்கும் பரந்துபட்ட பிரதிநிதித்துவம் அளிக்க வாய்ப்புள்ளது. ஏனெனில் பிரதமந்திரி இக்காரணிகளை தனது அமைச்சரவையை முடிவு செய்யும் போது கருத்தில் கொள்வார்.

**நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் குறைகள்:**

**நிலைத்தன்மையற்ற அரசாங்கம்:**
நாடாளுமன்ற முறையானது நிலைத்தன்மை உடைய அரசாங்கத்தைத் தராது. அரசாங்கம் தன்னுடைய பதவி காலத்தை நிறைவு செய்வதற்கான எந்த ஒரு உத்திரவாதமும் கிடையாது. அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நம்பிக்கையின் அடிப்படையிலேயே பதவியை தொடர இயலும். ஒரு நம்பிக்கையில்லா தீர்மானமோ, கட்சி தாவலோ அல்லது நிலைத்தன்மையற்ற கூட்டாட்சி அரசாங்கமோ எந்நேரத்திலும் அரசாங்கத்தின் நிலைத்தன்மையை பாதிக்கும் வாய்ப்புகள் உள்ளன.

**கொள்கைகளில் தொடர்ச்சி இல்லாமை:**

நீண்ட கால கொள்கைகளையோ, திட்டங்களையோ நாடாளுமன்ற முறை அரசாங்கத்தின் மூலம் உருவாக்கி செயல்படுத்துவது கடினமாகும். இதற்கு காரணம் அரசாங்கத்தின் நிலைத்தன்மையற்ற பதவிக் காலமே ஆகும். ஆளுங்கட்சி மாறும் நிலையில் அரசாங்கத்தின் கொள்கைகள் மாறுவது சாதாரணமாக நடக்கக்கூடியதாகும்.

**அமைச்சரவையின் சர்வாதிகாரம்:**

ஆளுங்கட்சி நாடாளுமன்றத்தில் ஒரு உறுதியான பெரும்பான்மை பெறும் நிலையில் அமைச்சரவையானது எல்லையற்ற அதிகாரம் பெற்று ஒரு சர்வாதிகார தன்மையுடன் செயல்பட வாய்ப்புகள் உண்டு.

ஹரால்டு J. லாஸ்கி (Harold J. Laski) கூற்றுப்படி நாடாளுமன்ற முறை அரசாங்கம் செயலாட்சி பிரிவிற்கு சர்வ வல்லமையுடன் செயல்படுவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

ராம்சே முர் (Ramsay muir) முன்னாள் பிரிட்டிஷ் பிரதம மந்திரி இதனை அமைச்சர் குழுவின் சர்வாதிகாரம் என்று குற்றம் சாட்டுகிறார்.

**அதிகார பிரிவினைக்கு எதிராக இருத்தல்:**

நாடாளுமன்ற முறை அரசாங்கத்தில் செயலாட்சியும், சட்டமன்றமும் ஒருங்கிணைந்து உள்ளது. அமைச்சரவையானது சட்டமன்றம் மற்றும் செயலாட்சி பிரிவிற்கு தலைமை ஏற்கிறது. இக்காரணத்தால் நாடாளுமன்ற முறை அரசாங்கம் அதிகார பிரிவினை அடிப்படையிலான கோட்பாட்டிற்கு எதிராக செயல்படுகிறது என்றே கூறலாம்.

**ராஜு ராமசந்திரன்:**

இந்த விவாதம் நடைமுறைக்குப் பொருந்தாதது. இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படைக் கொள்கைகளின்படி, நாம் அதன் தன்மையை மாற்றவே முடியாது என்பதால், இப்போதுள்ள நாடாளுமன்ற மக்களாட்சி முறையைக் கைவிட்டு, அதிபர் ஆட்சிக்கு மாற முடியாது, 1973-ல் உச்ச நீதிமன்றத்தில் நடந்த வழக்கில், எந்தவிதத் தயக்கமும் இன்றி இந்திய அரசியல் வர்க்கமும் இதை ஏற்றுக்கொண்டுவிட்டதால், அதிபர் ஆட்சி முறை பற்றி மீண்டும் மீண்டும் பேசுவதில் பொருள் இல்லை. நெருக்கடி நிலை அமலில் இருந்த காலத்தில், இந்திரா காந்தி தலைமையிலான அரசு, அதிபர் ஆட்சிமுறையைக் கொண்டுவர முயற்சித்துக் கைவிட்டது.

இங்கிலாந்தில் கடைப்பிடிக்கப்படும் நாடாளு மன்ற மக்களாட்சி முறை (வெஸ்ட்மினிஸ்டர் மாடல்), அமெரிக்க அதிபர் பதவி ஆட்சிமுறை என்ற இரண்டையும் முன்வைத்து, இந்தியாவுக்கு இதில் ஏற்றது எது என்று தேர்வுசெய்யும் வாய்ப்பை அரசியல் சட்டத்தை வகுப்பதற்கான சபையின் தலைவர் அம்பேத்கர் ஒரு வாய்ப்பை அளித்தார். இரு அமைப்புகளின் சாதக, பாதகங்களையும் உறுப்பினர்கள் நன்கு புரிந்துகொள்ளப் பட்டியலும் இட்டார். விரிவான விவாதத்துக்குப் பிறகே, நாடாளுமன்ற மக்களாட்சி முறையை அரசியல் சட்டத்தை உருவாக்குவதற்கான நிர்ணய சபை தேர்ந்தெடுத்தது. இதை இப்போது மாற்றுவது அரசியல் சட்டத்தின் அடிப்படைத் தன்மையையே மாற்றுவதாகிவிடும். அதே வேளையில், அரசியல் சட்டத்தின் அடிப்படைத் தன்மையை மாற்றக் கூடாது என்ற கருத்து எனக்கு உடன்பாடானது அல்லது என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன் என்றார்.

**அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் பற்றிய கவலைகள்:**
அதிபர் ஆட்சி முறையில் நாட்டின் நிர்வாக அதிகாரம் அனைத்தும் ஒரு தனி நபரின் கையில் குவிகிறது. நாடாளுமன்ற மக்களாட்சி மத்திய அமைச்சரவையின் "பிற அமைச்சர்களுக்குச் சமமான முதலாமவர்" என்ற அந்தஸ்து மட்டும் தான் பிரதமருக்கு, ஒரேயொருவரின் அதிகாரத்துக்கு முன் அனைவரும் மண்டியிடுவது என்ற அதிபர் ஆட்சிமுறை மக்களாட்சிக்கு ஆபத்தானது. ஒரேயொருவரிடம் எல்லா அதிகாரங்களும் குவிந்துவிடாமல் நாம் எச்சரிக்கையாகப் பார்த்துக்கொள்ள

வேண்டும். அதிபர் ஆட்சிமுறையை ஆதரிப்பவர்கள், அதிபர் தன்னுடைய அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்திவிடாமல் தடுக்கப் போதிய கண்காணிப்பு எற்பாடுகளும், பாதுகாப்பு ஏற்பாடுகளும் சட்டபூர்வமாகச் செய்துகொள்ளப் படலாம் என்கின்றனர். அதிகாரம் மிகுந்த அதிபராக இருந்தாலும், அதிகாரமுள்ள நாடாளுமன்றத்தால் அவரைத் தடுத்து நிறுத்திவிட முடியும் என்கின்றனர். அதிபர் பதவியில் இருப்பவருடைய கட்சியே நாடாளுமன்றத்திலும் பெரும்பான்மை வலுவுடன் இருந்தால் மக்கள் செல்வாக்குள்ள அதிபர் அல்லது அதிகாரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு அடக்கி ஒடுக்கும் அதிபர், நாடாளுமன்றம் தனக்கு எதிராகச் செயல்படாமல் தடுக்க முடியும். அதிபருடைய கட்சிக்கு எதிரான கட்சி நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வலுவுடன் இருந்து, அதிபருக்குக் கடிவாளம் போடுவது என்று தீர்மானித்துவிட்டால், முக்கியமான பிரச்சினைகளில் முட்டுக்கட்டை நிலைதான் நிலவும். ஏனென்றால், நாடாளுமன்ற நியதிப்படி, அதிபரும் நாடாளுமன்றமும் அவரவர் நிலையில் சட்டப்படியான அங்கீகாரம் பெற்ற அமைப்புகள்.

பன்முகத்தன்மை கொண்ட இந்தியா போன்ற நாட்டில், கருத்தொற்றுமை இல்லாமல் முக்கிய முடிவுகளை எடுக்க முடியாது. “வெற்றியாளருக்கே எல்லா பரிசுகளும்“ என்ற கோட்பாட்டின்படி, ஆட்சிமுறையே அதிபருக்கு அதிகாரம் வழங்கிவிட்டால் பல்வேறு சமூகங்களின் நலனை, விருப்பத்தை ஒரு தனி நபர் புறக்கணித்து முடிவெடுக்க வாய்ப்பு இருக்கிறது.

அரசுகள் எப்படி?

அதிபர் ஆட்சிமுறைக்கு மாறினால், திறமை உள்ளவர்களை அமைச்சர்களாக நியமித்துக்கொள்ளலாம் என்று வாதாடப்படுகிறது. நாடாளுமன்ற முறையிலும் அதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. சிந்தாமணி தேஷ்முக், டி.ஏ. பை, மன்மோகன் சிங், எம்.ஜி.கே. மேனன், ராஜா ராமண்ணா போன்ற திறமைசாலிகள் மாநிலங்களவை மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களாக்கப்பட்டனர். தங்களுடைய திறமையை நாட்டுக்கு அர்ப்பணித்த அவர்கள், நாடாளுமன்றத்துக்குக் கட்டுப்பட்டவர்களாகவும், இருந்தார்கள். அதிபர் ஆட்சிமுறையில், ஒருவரை அமைச்சராக நியமித்தாலும் அவர் தன்னை நியமித்தவருக்கு மட்டும் தான் பதில் சொல்ல அல்லது விசுவாசம் காட்ட கடமைப்பட்டவராக இருப்பார்.

அதிபர் ஆட்சிமுறையை ஆதரிப்பவர்கள் மத்திய அரசை மட்டுமே மனதில் கொண்டு பேசுகின்றனர். மாநிலங்களுக்கு என்ன மாதிரியான அரசைக் கொண்டுவருவது? மத்தியில் அதிபர் ஆட்சி என்றால், மாநிலங்களில் ஆளுநரின் (கவர்னர்) ஆட்சி என்பது தர்க்கரீதியாக ஏற்கும் படியாகிவிடும். அதற்கும் நாம் தயாராக இருக்கிறோமா?

**மக்களாட்சி செயல்படுவதை உறுதிசெய்வதற்குச் சிறந்த வழி குடியரசுத் தலைவர் முறைக்கு மாறுவதாகும்.**

நம்முடைய நாடாளுமன்ற முறையை, இங்கிலாந்து நாட்டினர் போன்ற விபரீத சிந்தனையாளர்களால் மட்டும் தான் உருவாக்க முடியும். வாக்குச்சீட்டு மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் மூலம் “நிர்வாக அமைப்பை ஏற்படுத்தும் முறையை அவர்கள்தான் கொண்டுவந்தனர். சட்டம் இயற்றுவதற்கு உரிய தகுதிகள் இல்லாத, ஆனால் தேர்ந்தெடுக்கப்படுவதால் நிர்வாக அதிகாரத்தையும் மேற்கொள்வதற்கான உரிமை படைத்தவர்கள் ஆட்சி அதிகாரத்துக்கு வருகின்றனர். அதிகாரப் பகிர்வு தெளிவாகச் செய்யப்பட்டிருக்கவில்லை. நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற பிறகு, சட்டமியற்றும் அமைப்புக்க நிர்வாகத்துறை சார்ந்து பதில் செல்லும் பொறுப்புகள் எதுவும் இல்லை. நாடாளுமன்ற நிர்வாக முறையில் சட்டமியற்றும் நாடாளுமன்றமும், அதிகாரம் செலுத்தும் ஆட்சியாளர்கள் அமைப்பும் தெளிவாகப் பிரிக்கப்பட்டிருக்கவில்லை. நாடாளுமன்றமும் நிர்வாகமும் கூட்டாகச் சிந்தித்து சட்டங்களை இயற்றும் நிலை காணப்படுகிறது.

தொடர்ந்து 25 ஆண்டுகளாக அதாவது 2014 வரையில் மத்தியில் கூட்டணி அரசுகள் ஆட்சி செய்துவந்துள்ளன. அவை அரசின் கொள்கை மற்றும் நிர்வாக ஆகியவற்றை விட அரசியல் விவகாரங்களில்தான் அதிகம் கவனம் செலுத்தின. சிறிய கட்சிகூட ஆதரவை விலக்கிக் கொண்டுவிட்டால் ஆட்சி கவிழ்ந்துவிடும் என்பதால், எல்லாக் கட்சிகளின் இழுப்புக்கும் எற்ப வளைந்து கொடுக்கவே சரியாக இருந்தது. நாடாளுமன்ற முறையானது எந்தத் தனி நபர் உங்களுக்குத் தேவை என்று பார்த்து வாக்களிக்கும் வாய்ப்பைத் தந்ததே தவிர, எந்தக் கட்சி அல்லது எந்தக் கொள்கைகள் உங்களுக்குத் தேவை என்று தேர்வுசெய்ய இடம் தரவே இல்லை.

**அமைப்பின் தோல்விகள்:**

இந்தியாவுக்குள்ள பல்வேறு சவால்களுக்குத் திட்டவட்டமான செயல்களை அனுமதிக்கும் அரசியல் ஏற்பாடுகள் தான் தேவை. ஆனால், முடிவெடுக்க முடியாத நிலையும், தீர்வு காண முடியாமல் தத்தளிக்கும் நிலையும்தான் கண்ணில்படுகின்றன. எப்படியாவது தொடர்ந்து பதவியில் நீடிக்க வேண்டும் என்பதுதான், பெரும்பாலான அரசியல் தலைவர்களின் உத்தியாகத் தெரிகிறது. ஊராட்சித் தலைவர்கள், மாநகரத் தந்தைகள், முதலமைச்சர்கள் (அல்லது ஆளுநர்கள்), தேசியத் தலைவரான குடியரசுத் தலைவர் என்று அனைவருமே குறிப்பிட்ட ஆண்டுகாலப் பதவிகளுக்கு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்தியா எதிர்கொண்டுள்ள பொருளாதார, சமூக சவால்களை எதிர்கொள்ள உதவியாக இருக்கும். நாடாளுமன்றத்தின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்பத்தான் செயல்பட முடியும் என்பது திட்டவட்டமான முடிவுகளை எடுக்க அனுமதிக்காது. மத்திய அமைச்சரவைப் பதவிகள் என்பது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மட்டும்தான் என்றில்லாமல், திறமைசாலிகள் அனைவருக்கும் பதவிகள் என்ற நிலைக்கு இட்டுச்செல்லும் மக்களவைக்கு இப்போதுள்ள ஐந்தாண்டு பதவிக் காலம் என்பதைப் போல, அது முடிந்ததும் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதில் அதிபர் என்ன செய்தார். முதலமைச்சர் என்ன செய்தார் என்று எடைபோட முடியும். இப்போதைய கவனம் எல்லாம் அரசு கவிழ்ந்து விடாமல் முழுப் பதவிக் காலமும் ஆட்சியில் இருக்க வேண்டும் என்பதாக இருக்கிறது.

**நேரடி பொறுப்புணர்வு:**

சட்டமியற்றும் அதிகாரம் உள்ள அதிபர் பதவியை ஏற்படுத்தினால், அவர் சர்வாதிகார ஆகிவிடுவார் என்ற அச்சம் தேவையற்றது. அதிபரைப் போலவே மாநிலங்களின் தலைமைப் பொறுப்புக்கு (முதலமைச்சர்கள் அல்லது ஆளுநர்கள்) தேர்ந்தெடுக்கப் படுகிறவர்களும் நேரடியாக மக்களுடைய ஆதரவின் பேரில்தான் தேர்ந்தெடுக்கப்படப் போகிறார்கள். அதிபர் எல்லையை மீறிவிடாமல் அவர்கள் பார்த்துக்கொள்வார்கள். சர்வாதிகாரி என்பவர் அரசின் அமைப்பு முறை காரணமாக உருவாவதில்லை.

தன்னுடைய வரவு – செலவு அறிக்கைக்கு ஒப்புதல் பெற அல்லது குறிப்பிட்ட மசோதாக்களுக்கு ஆதரவு பெற நாடாளுமன்றத்துடன் அதிபர் இணைந்து செயலாற்றியாக வேண்டும். இந்திய அரசியலில் பலநூறு கட்சிகள் இருப்பதால், அமெரிக்காவில் உள்ளதைப் போல இருகட்சி ஆட்சிமுறை இப்போதைக்குச் சாத்தியமில்லை. இந்திய அதிபர், தான் எடுத்துக்கொள்ளும் பிரச்சினைகளுக்கு ஏற்ப வெவ்வேறு கட்சிகளுடன் உடன்பாடு கண்டு கூட்டணியை அமைக்க முடியும். அதிபர் பதவி என்றாலே, எதிர்ப்பாளர்களைக் கீழேபோட்டு மிதித்து நசுக்கிவிட்டுத் தன்னுடைய கொள்கையைத்தான் அமல்படுத்துவார் என்ற அச்சத்துக்கு முற்றிலும் மாறான யதார்த்தம் இது.

இந்தியாவை அதிபராக ஆட்சி செய்ய விரும்பும் எந்த அரசியல்வாதியும் தன்னுடைய மாநிலம் சார்ந்தவர்களையும் தாண்டி, மற்றவர்களுடைய ஆதரவையும் பெற்றாக வேண்டும். எனவே, வெவ்வேறு குழுக்கள், சிறுபான்மையினர் ஆகியோரை அரவணைத்துச் செல்பவராக இருக்க வேண்டும். நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படும் அதிபர், தன்னுடைய தோல்விக்கு அல்லது செயல்படாத தன்மைக்குத் தோழமைக் கட்சி எதையும் பலிகடாவாக்க முடியாது என்பதால மக்களுக்குப் பலன் அளிக்கிற செயல்களை ஐந்து ஆண்டுகளுக்குள் செய்துமுடித்தாக வேண்டும். நாட்டின் நிர்வாகத்துக்கு அவர் நேரடியாகவும் தனிப்பட்ட முறையிலும் பொறுப்பேற்றாக வேண்டும்.

இந்தியா ஒரு நாடாகத் தொடர்ந்து நீடிக்க மக்களாட்சி மிக மிக அவசியம். அதை நாம் சரியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறோம் என்பதில் பெருமை கொள்வோம். ஆனால், நம்முடைய மக்களாட்சி நமக்களித்துள்ள அரசியல் குறித்து மிகச் சிலர்தான் பெருமைப்பட முடியும். உலக மக்களில் ஆறில் ஒரு பகுதி வாழும் மக்களின் தேவைகள், அவர்களுக்கு முன்னாலிருக்கும் சவால்கள் ஆகியவற்றை மனத்தில் கொண்டு அவற்றைப் பூர்த்திசெய்யும் அரசாக இருக்க வேண்டும். மக்களாட்சி நன்கு செயல்பட அதிபர் ஆட்சி முறைக்கு மாறுவதுான் இருப்பதிலேயே சிறந்த வழி. இது மாறுவதற்கான நேரம்.

**நிர்வாக அமைப்பை மாற்றுவதைவிட, தேர்தல் நடைமுறையைச் சீர்திருத்துங்கள்!**

இந்த விவாதத்துக்கென்று தனியே ஒரு வாழ்க்கைச் சுழல் இருக்கிறது. அறுதிப் பெரும்பான்மைக்கும் மேல் பெற்று, ஒரு கட்சி ஆட்சிக்கு வரும்போதெல்லாம் இப்படியொரு விவாதம் கிளம்புகிறது. ஜவாஹர்லால் நேரு காலம் தொடங்கி, இந்திரா காந்தி காலம் வரை தொடர்ந்து இப்போதும்

நீடிக்கிறது. இந்த விவாதம் இரண்டு அம்சங்களைச் சுற்றி மையம்கொள்கிறது. முதலாவது, இது விரும்பத்தக்கதா? இரண்டாவது, இது சாத்தியமானதா?

இரண்டாவதை முதலாவதாகப் பரிசீலித்தால், உச்ச நீதிமன்றம் தனது மனதை மாற்றிக் கொண்டால்தான் இது சாத்தியம் என்பது விளங்கும். ஆட்சிமுறையை மாற்றக் கொண்டுவரும் எந்தத் திருத்தமும், அதன் அடித்தளக் கட்டமைப்பை மாற்றக் கூடாது என்று கேசவானந்த பாரதி வழக்கு காலத்திலிருந்து வலியுறுத்தப்பட்டு வருகிறது. எனவே, உச்ச நீதிமன்றம் இந்த விஷயத்தில் வேறு கண்ணோட்டத்துடன் அணுகத் தயாரானால்தான் இப்படி ஆட்சி முறையை மாற்றுவது சாத்தியம்.

**பல்வேறு மாதிரிகள்:**

அதிபர் ஆட்சிமுறை விரும்பத்தக்கது என்று முடிவுசெய்தால், எந்த நாட்டிலிருக்கும் அதிபர் முறையை நாம் கொண்டுவரப் போகிறோம்? அமெரிக்க அதிபர் தேர்தல் முறைக்கும், இங்கிலாந்தில் வெஸ்ட்மினிஸ்டர் பாணி நாடாளுமன்ற மக்களாட்சிக்கும் உள்ள வேறுபாடுகள் என்ன? அமெரிக்க நடைமுறையில் அதிபர் தனக்கான அதிகாரிகளை நியமித்துக்கொள்கிறார். அவர்களுக்குக் குறிப்பிட்ட ஆண்டு பதவிக்காலம்தான். அவர்களுடைய நியமனங்கள் செனட் சபையால் (மேலவை) உறுதிப்படுத்தப்பட வேண்டும். கியூபா போன்ற தென் அமெரிக்க நாடுகளில் அதிபருக்கு அவருடைய ஆயுட்காலம் வரையிலும் பதவி தரப்படுகிறது. இப்படி எராளமான மாதிரிகள் உள்ளன. ஒவ்வொன்றிலும் சாதகங்களும் பாதகங்களும் வேண்டும் என்று கேட்பவர்கள் இதில் எதைக் கேட்கிறார்கள்?

நம்முடைய மாநிலங்களவையை அமெரிக்க நாடாளுமன்றத்தின் செனட் மாகாணங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி அரசியல் சட்டங்கள் உள்ளன. அவற்றை அம்மாகாணங்களால் மாற்றிக்கொள்ள முடியும். அங்கே ஃபெடரல் (மத்திய) அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் உள்ள உறவு அசாதாரணமானது. அந்த நீதிமன்றங்களின் நிலையும் நீதிபதிகளை நியமிக்கும் விதமும் அப்படியே. இவற்றையெல்லாம், அதிபர் ஆட்சிமுறை வேண்டும் என்பவர்கள் சிந்தித்திருப்பார்கள் என்று தோன்றவில்லை. நாம் கேட்கும் அதிபர் ஆட்சி முறையில் அதிபருடைய பதவிக்காலம் எவ்வளவு? அவர் மீண்டும் தேர்ந்தெடுக்கப்படும் உரிமை பெற்றவரா? அப்படியென்றால், எத்தனை முறை அவர் அப்பதவியை வகிக்க முடியும்? மாற்றங்களை யார் தீர்மானிப்பது? நாடாளுமன்றமா? இவையெல்லாவற்றுக்கும் இந்திய அரசியல் சட்டத்தின் கட்டமைப்பையே பெருமளவுக்கு மாற்ற வேண்டியிருக்கும். அரசியல் சட்டத்தின் கட்டுமைப்பு குறித்து உச்ச நீதிமன்றம் தன்னுடைய நிலையை ஏற்கெனவே தெரிவித்துவிட்டது.

ஒரு கருத்தைத் தெரிவிப்பது என்பது வேறு. தீர்ப்பு என்பது எல்லா அம்சங்களையும் கவனமுடன் பரிசீலித்த பிறகே அளிக்கப்படுவது, இப்போதுள்ள நாடாளுமன்ற மக்களாட்சி முறை வேண்டாம். அதிபர் ஆட்சிமுறைதான் வேண்டும் என்பவர்கள் தங்களுடைய கருத்துக்கு வலு சேர்க்கும் அம்சங்களை வெகு கவனமுடன் தயாரிக்க வேண்டும். அடுத்து, அதிகாரங்களைப் பிரித்துத் தருவதும் முக்கியமானது. அமெரிக்க அமைப்பில் அதிபராக இருப்பவர், முப்படைகளுக்கும் தலைமைத் தளபதியாகவும் பதவி வகிக்கிறார். அத்துடன், நாடாளுமன்றத்தின் தீர்மானங்களை கூட ரத்து அதிகாரம் மூலம் நிராகரிக்கும் அதிகாரம் படைத்திருக்கிறார். இந்தியாவுக்கு இப்படிப்பட்ட அதிபர் பதவி அவசியமா? அமெரிக்காவில் அதிபரைப் பதவியிலிருந்து நீக்குவதற்கான நாடாளுமன்ற நடைமுறைகள் மிகவும் சிக்கலானவை. அதிபருடைய அதிகாரங்களைக் கூட்டிக்கொண்டே போவதற்கான சாத்தியக் கூறுகளும் உண்டு. நாடாளுமன்ற நடைமுறையில்கூட இப்படிப்பட்ட இடர்கள் இருக்கின்றன. எனவே, முழுமையாகச் சிந்தித்து முடித்துவிட்டதாகச் கருதவில்லை. ஆட்சி முறையை மாற்றுவது தொடர்வான விவாதம் இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

**நடைமுறையில் சீர்திருத்தங்கள்:**

மக்களாட்சியை மேலும் வலுப்படுத்த தேர்தல் நடைமுறையைச் சீர்திருத்துவது தொடர்பான கருத்துகள் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன அரசியல் கட்சிகள் செய்யும் செலவுகளைக் கட்டுப்படுத்துவது, தேர்தல் செலவுக்கு உச்ச வரம்பை நிர்ணயிப்பது, சட்டப் பேரவைகளுக்கும், மக்களவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவது, தொகுதிவாரியாகத் தேர்தல் முடிவுகளை அறிவிக்காமல் வாக்குச்சாவடிகளின் தொகுப்பு வாரியாக என்பவை அவற்றில் சிலவாகும். இவற்றையெல்லாம் விவாதித்து, தேர்தல் நடைமுறைகளில் உள்ள ஓட்டைகளை விரைவாக

அடைப்பது பலன் தரும். ரஷ்யா மற்றும் இலங்கை போன்ற நாடுகள் குடியரசுத்தலைவர் முறை அரசாங்கத்திற்கு உதாரணமாகும்.

**குடியரசுத்தலைவர் முறை அரசாங்கத்தின் இயல்புகள்:**

அமெரிக்க குடியரசுத் தலைவர் அரசு மற்றும் அரசாங்கத்திற்கு தலைவர் ஆவார். அரசின் தலைவர் என்ற முறையில் அவர் பெயரளவிலான நிலையினை வகிக்கிறார். அரசாங்கத்திற்குத் தலைவர் என்ற முறையில் அரசாங்கத்தின் செயலாட்சி பிரிவை தலைமையேற்று நடத்துகிறார்.

குடியரசுத் தலைவர் வாக்காளர் குழுவினால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அவரது பதவிக்காலம் நான்கு ஆண்டுகள் ஆகும். அமெரிக்கா நாடாளுமுன்றத்தின் (காங்கிரஸ்) பதவி நீக்க முறையின் மூலம் அரசமைப்பிற்கு எதிரான தீவிரமான செயல்பாட்டின் காரணமாக மட்டுமே அவரை பதவி நீக்கம் செய்ய முடியும்.

குடியரசுத் தலைவர் தனது அமைச்சரவை குழு அல்லது சிறிய அமைப்பின் உதவியுடன் அரசாங்கத்தை நடத்துகிறார். அது "சுயவிருப்ப அமைச்சரவை" (Kitchen cabinet) என அழைக்கப்படுகிறது. இது தேர்ந்தெடுக்கப்படாத துறை செயலாளர்களைக் கொண்ட ஓர் ஆலோசனைக் குழுவாகும். இந்த அமைச்சரவை குழுவில் உள்ளவர்கள் அனைவரும் குடியரசு தலைவராலேயே தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் செய்யப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் குடியரசுத் தலைவருக்கு கடமைப்பட்டவர்கள் ஆவர். மேலும் அவர்கள் குடியரசுத் தலைவரால் எந்த நேரத்திலும் பதவி நீக்கம் செய்யப்படலாம்.

குடியரசுத் தலைவரும் அவருடைய செயலாளர்களும் (அமைச்சர்கள்) அமெரிக்க நாடாளுமன்றத்திற்குப் (காங்கிரஸ்) பொறுப்பானவர்கள் அல்ல. மேலும் அவர்கள் நாடாளுமன்றத்தில் (காங்கிரஸ்) உறுப்பினர்களாக இருக்க வேண்டுமென்பதோ அதன் கூட்டத்தொடரில் பங்குகொள்ள வேண்டுமென்ற அவசியமோ கிடையாது.

குடியரசுத் தலைவருக்கு நாடாளுமன்றத்தின் கீழவையான பிரதிநிதிகள் சபையினைக் கலைக்கும் அதிகாரம் இல்லை. அமெரிக்க குடியரசுத் தலைவர் முறையின் அடிப்படை சாராம்சமானது "அதிகார பிரிவினைக் கோட்பாடு" ஆகும். மேலும் சட்டமன்றம், செயலாட்சி மற்றும் நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள் தனித்தனியே பிரிக்கப்பட்டு மூன்று வெவ்வேறு சுதந்திரமான அங்கங்களிடம் வழங்கப்பட்டுள்ளது.

**நாடாளுமன்ற முறை அரசாங்கத்திற்கும், குடியரசுத்தலைவர் முறை அரசாங்கத்திற்கும் இடையேயான வேறுபாடுகள்:**

| வ.எண் | குடியரசுத் தலைவர் முறை அரசாங்கம் | நாடாளுமன்ற முறை அரசாங்கம் |
|---|---|---|
| 1. | குடியரசுத் தலைவர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுகிறார் | நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்ட அரசியல் கட்சியின் தலைவரே பிரதம மந்திரியாவார். |
| 2. | குடியரசுத் தலைவரே மேலான அதிகாரம் பெற்றவர் | மத்திய சட்டமன்றமே மேலான அதிகாரம் கொண்டதாகும். |
| 3. | அதிகாரப் பிரிவினை | அதிகாரப் பிரிவினை கிடையாது அதிகாரம் மையப்படுத்தப்பட்டிருக்கும் |
| 4. | சுதந்திரமான கிளைகள் | ஒன்றுடன் ஒன்று கலந்த பணிகளை உடைய சுதந்திரமான கிளைகள் |
| 5. | குடியரசுத் தலைவரே அரசின் தலைவராவார் | குடியரசுத் தலைவரே அரசின் தலைவராவார் |
| 6. | குடியரசுத் தலைவரே அரசாங்கத்தின் தலைவராவார் | பிரதமமந்திரியே அரசாங்கத்தின் தலைவராவார் |
| 7. | குடியரசுத் தலைவரே தலைமைப் பணியை ஏற்கிறார் | கூட்டுத்தலைமை |
| 8. | குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்திற்கு | நாடாளுமன்றத்தில் கூட்டுப் பொறுப்புணர்வு |

| | | |
|---|---|---|
| | (காங்கிரஸ்) பொறுப்பானவர் கிடையாது. | மற்றும் தனிப்பொறுப்புணர்வு உண்டு |

**அரசுக்க எதிரான சந்தை பற்றிய விவாதம் (Debate on state Vs Market)**
**“உலக வங்கி – உலக மேம்பாட்டு அறிக்கை 1997 : மாறிவரும் சூழலில் அரசின் நிலை”**

இந்த அறிக்கையானது வேகமாக மாறிவரும் உலக சூழலில் அரசு எவ்வகையில் நாட்டின் வளர்ச்சியில் சிறப்பாகப் பங்களிக்கலாம் என்பதைக் குறித்ததாகும். அரசு என்ன செய்ய வேண்டும் எவ்வாறு செய்ய வேண்டும் என்பதுடன் அரசு தன்னை எவ்வாறு மேம்படுத்திக் கொள்ளலாம் என்பன குறித்தும் இவ்வறிக்கையில் விவாதம் செய்யப்பட்டுள்ளது. மையப்படுத்தப்பட்ட திட்டமிடல் மற்றும் கலப்பு பொருளாதாரம் சார்ந்த அரசாங்கங்கள் தற்போதைய காலகட்டத்தில் சந்தை சார்ந்த பங்கினைக் குறைத்துக் கொண்டு வருகின்றன. இதற்குத் தோல்வியில் முடியும் அரசின் தலையீடுகள் காரணமாகும்.

இவ்வறிக்கை மேற்கூறிய கருத்துக்கு எதிராக சில முக்கியமான தருணங்களில் அரசின் தலையீடு சந்தையில் தேவை என்பதை வலியுறுத்துகிறது. பொருளாதாரம் சார்ந்த நிறுவனச் சூழலில் சட்டத்தின் ஆட்சியைச் செயல்படுத்தும் பங்கு அரசிற்கு உள்ளது. மேலும் நாட்டின் மேம்பாட்டிற்கு அரசின் சந்தை சார்ந்த தலையீடு அத்தியாவசியம் என கருதுகிறது. அரசாங்கத்தை குறைந்தபட்ச அரசாக சுருக்குவதற்கு இது எதிர்ப்பு தெரிவிக்கிறது. மேலும் தனியார் தொழில்கள் மற்றும் தனிமனிதர்களின் செயல்பாடுகளுக்கு தகுந்த ஊக்கம் மற்றும் அதரவினை நல்கும் சிறப்பான அரசே மேம்பாட்டிற்குத் தேவை என விளக்குகிறது.

இவ்வறிக்கை அரசிற்கு சில சீர்திருத்தங்களை வலியுறுத்துகிறது. முதலாவதாக, அரசின் செயல்பாடுகளையும், அதன் திறன்களையும் சமன்படுத்துதலில் கவனம் செலுத்துதல் மற்றும் இரண்டாவதாக, அரசின் திறன்களை மேம்படுத்துவதற்கு அரசு நிறுவனங்களை மாற்றியமைப்பதற்கான வழிமுறைகளை கண்டுணர வேண்டும்.

இவ்வறிக்கையின்படி, பின்வரும் ஐந்து அடிப்படைப் பணிகளை அரசாங்கம் தனது நோக்கங்களாக மேற்கொள்ள வேண்டும். இவை இல்லையென்றால் நிலையான, வறுமையில்லாத மற்றும் அனைவருக்குமான வளர்ச்சியை நாம் அடைவது சாத்தியமற்றதாகும்.

அவையாவன:
1. நாட்டில் அடிப்படைச் சட்டத்தை நிறுவுதல்
2. பேரியல் பொருளாதார நிலைத்தன்மையை பாதுகாத்தல்
3. அடிப்படைக் கட்டமைப்பு மற்றும் சமூகப் பாதுகாப்பில் முதலீடு செய்தல்
4. சமூகத்தில் எளிதில் இலக்காகும் நிலையில் உள்ளவர்களை பாதுகாத்தல்
5. சுற்றுச் சூழல் பாதுகாப்பு

**அரசாங்கத்திலிருந்து ஆளுகை வரை பற்றிய கருத்தாக்கம்:**
நல் ஆளுகை என்ற சொல்லானது பொது நிறுவனங்கள் எவ்வாறு மக்களின் பிரச்சனைகளை நிர்வகித்து நாட்டின் வளங்களையும் சரியான முறையில் மேலாண்மை செய்கின்றன என்பதைப் பற்றியதாகும். ஆளுகை என்பது “முடிவுகள் எந்த நடைமுறையில் எடுக்கப்பட்டு அவை எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றன என்பதே ஆகும்”.

**அரசாங்கத்திலிருந்து ஆளுகை வரை:**
- கூட்டு ஆளுகை அடிப்படையிலானது
- நெகிழ்வானது
- வெளிப்படையானது
- புதுமையானது
- துணிந்து முடிவெடுப்பது
- மக்களுக்கானது
- உள்நோக்கமுடையது

“அரசாங்கம்“ மற்றும் “ஆளுகை“ ஆகிய இரண்டுமே ஒரே பொருளைக் கொண்டதாகும். இது ஒர் அமைப்பு, நிறுவனம் அல்லது அரசில் அதிகாரத்தைச் செயல்படுத்துவதைக் குறிப்பதாகும். கீழ்க்கண்ட பரிமாணங்களில் அரசாங்கம் மற்றும் ஆளுகையை வேறுபடுத்தலாம்.

1. ஆளுமை செயல்பாட்டிலுள்ள நடவடிக்கைகள் யாவை?
2. ஆளுமையில் உள்ளடக்கிய செயலமைப்புகள் யாவை?
3. இம் மறுவரையறையைத் தேவையாக்கிய நடைமுறைகள் யாவை?
4. நல் ஆளுகையை மதிப்பீடு செய்ய பயன்படுத்தப்பட்ட வரைகூறுகள் யாவை?
5. இதனை அடைவதற்காக மேம்படுத்தப்பட வேண்டிய திறன்கள் யாவை?

ஆளுகை என்பது ஒரு தேசத்தின் விவகாரங்களை நிர்வகிப்பதற்காக அரசியல், பொருளாதார மற்றும் நிர்வாக அதிகாரத்தினை செயல்படுத்துவதாகும். ஆளுகை என்பது அனைத்து முறைகளையும் உள்ளடக்கியதாகும். நன்மையோ, தீமையோ ஆனாலும் சமுதாயங்கள், அதிகாரத்தினைப் பங்கிட்டு பொது ஆதாரங்கள் மற்றம் பிரச்சனைகளைகையாளுகின்றன. (UNDP, 1997)

ஒரு நாட்டின் மேம்பாட்டிற்காக அதன் சமூக மற்றும் பொருளாதார வளங்களை மேலாண்மை செய்வதற்காக அதிகாரத்தினை செயல்படுத்தும் பாங்கே ஆளுமையாகும். (ADB, 2000)

அரசாங்கத்திலிருந்து ஆளுமைக்கு செல்வது என்பது புதிய அமைப்புக்களை உருவாக்குவது மட்டுமல்லாமல் பழைய அமைப்புக்களையும் புதுப்பிப்பதாகும். தனத புதிய பங்கினை ஆற்றுவதற்கு அரசு வலுப்படுத்தப்பட வேண்டும். மக்களாட்சி என்பது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல்களைச் சந்திப்பது மட்டுமல்ல. அமைப்பின் செயல்திறனை விழிப்புடன் கண்காணித்து அவ்வாண்டுகளில் அதனை பொறுப்பானதாக்குவது குடிமைச் சமுதாயத்தின் பணியாகும்.

**குடிமைச் சமுதாயத்துடனானகூட்டுப்பங்காண்மை:**
ஆட்சியை ஆளுகையாக மாற்றும் முனைப்பில் குடிமைச் சமுதாயத்தின் பங்கு குறிப்பிடத்தகுந்ததாகும். அதன் பங்கினை இருவகையான இழைகளாகப் பார்க்கலாம்.

1. சமூக இயக்கங்கள்
2. அரசு சாரா அமைப்புகள்

சமூக இயக்கங்கள் வறுமை நிலையில் உள்ள மக்கள் மற்றும் விளிம்பு நிலையில் உள்ள மக்களுக்காக போராடுவதன் மூலம் அரசாங்கத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். இவ்வகையான அழுத்தத்தினால் அரசாங்கமும் மக்களுக்காக நிறுவனங்கள், சட்டங்கள் மற்றும் நடைமுறைகளில் சில மாற்றங்களை கொண்டுவருகிறது.

அரசு சாரா அமைப்புகளும் பல்வேறு வகையில் மக்கள் நலனுக்காக செயல்படுகின்றன. மேலும் அவர்கள் அரசாங்கத்தின் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் உதவிக்கரமாக உள்ளனர்.

சமூக இயக்கங்களும், அரசு சாரா அமைப்புகளும் தற்போதைய காலகட்டத்தில் அரசியல் செயல்பாடுகள் மற்றும் பொது சேவைகள் ஆகியவை மக்களைச் சென்றடைவதில் மிகப் பெரிய பங்காற்றுகின்றன.

**மூன்று குழுவிலான நாடுகள்:**
அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகள் தங்களின் ஹைட்ரோ ப்ளூரோ கார்பன் பயன்பாட்டினை 2019-ஆம் ஆண்டுவாக்கில் பத்து சதவீதம் 2011 – 2013 – ஆம் அளவிலிருந்து குறைப்பதுடன் 203-ஆம் ஆண்டுவாக்கில் என்பத்து ஐந்து சதவீதம் வரை குறைக்க வேண்டும்.
இரண்டாவது குழுவானது சீனா மற்றும் சில ஆப்பிரிக்க நாடுகளைக் கொண்ட வளரும் நாடுகள் இம்மாற்றத்தினை 2024-ஆம் ஆண்டிற்குள் செய்து முடிக்க உறுதிபூண்டுள்ளன. இவை 2020 – 2022-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் பத்து சதவீதமாவது 2029-ஆம் ஆண்டுவாக்கில் குறைப்பதுடன் இதனை நீட்டித்து 2045-ஆம் ஆண்டுவாக்கில் எண்பத்து ஐந்து சதவீதம் வரை

குறைக்க வேண்டும் என எதிபார்க்கப்படுகிறது.

இதில் மூன்றாவது குழுவாக, வளரும் நாடுகளான இந்தியா, பாகிஸ்தான்,ஈரான்,ஈராக் மற்றும் வளைகுடா நாடுகள் உள்ளன. இவை இந்நடைமுறையை 2028-ல் தொடங்குவதுடன் 2024-206-இல் அளவிலிருந்து கணக்கிடும் போது பத்து சதவீதம் வரை 2032 – ல் குறைக்க வேண்டும். இது 2047-ல் எண்பத்து ஐந்து சதவீதமாக இருக்க வேண்டும்.

**கிகாலி (ருவாண்டா) –Kigali (Rwanda):**

புவி வெப்பமயமாதலைத் தடுப்பதற்கான ஒரு முக்கியப் படியாக 200 நாடுகளின் பிரதிநிதிகள் சந்தித்து குளிர்பதனப் பெட்டி மற்றும் காற்றுப் பதனி ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் அச்சுறுத்தலான பசுமை வாயுக்களை படிப்படியாக நீக்குவதற்கு ஒப்பந்தம் மேற்கொண்டனர். 1987, ஆம் ஆண்டு ஓசோன் படலப் பாதுகாப்பிற்காக மேறகொள்ளப்பட்ட மாண்ட்ரீயல் நெறிமுறைகளில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டு பணக்கார நாடுகள், வளரும் நாடுகளைக் காட்டிலும் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ரூவாண்டாவின் தலைநகர் கிகாலியில் இரவு முழுவதும் கண்விழித்து ஹைட்ரோ ப்ளூரோ கார்பன் உற்பத்தி மற்றும் நுகர்வினை படிப்படியாக குறைப்பதற்கான ஒப்பந்தத்தை உருவாக்கும் இறுதி கட்டத்தில் இருந்த பிரதிநிதிகள் மகிழ்வுடன் கைதட்டி இதனை வரவேற்றனர்.

இருப்பினும் சில பிரதிநிதிகள் இந்தியா, பாகிஸ்தான் மற்றும் வளைகுடா நாடுகள் ஆகியவை இம்மாற்றத்தினை பிற நாடுகளைக் காட்டிலும் பின்னே மேற்கொள்வதற்கு வருத்தம் தெரிவித்தனர். மார்ஷல் தீவுகள் என்ற குட்டி பசிபிக் நாட்டின் பிரதிநதி கூறுகையில் “இது மார்ஷல் தீவுகள் முழுமையாக விரும்பியதாக இல்லாவிடினும், சிறந்த ஒப்பந்தமாகும்“ என்றார். ஹட்ரோ ப்ளூரோ கார்பன்கன் அகற்றப்பட்டால் 2100-ஆண் ஆண்டுவாக்கில் புவிவெப்பமயமாதல் 0.5 சதவீதம் குறையும் என 2015-ல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு தெரிவிக்கிறது.

இருப்பினும் இந்தியா போன்ற அதிக உஷ்ணமான தட்பவெப்ப நிலையை கொண்ட வளரும் நாடுகள் ஹைட்ரோ ப்ளூரோ கார்பன்களுக்கு மாற்றாக அம்மோனியா, தண்ணீர் அல்லது ஹைட்ரோ ப்ளூரோலெபீன்ஸ் (Hydro flurolefins) போன்ற வாயுக்களை பயன்படுத்தினால் செலவினம் அதிகரிக்கும். இந்த ஒப்பந்தம் அறிவிக்கப்படுவதற்கு முன்னர் இந்திய சுற்றுச்சூழல் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகத்தைச் சேர்ந்த அஜய் நாராயண ஜா கூறுகையில் “இதில் செலவினப் பிரச்சனை, தொழில் நுட்ப பிரச்சனை, நிதிப்பிரச்சனை ஆகியவை உள்ளன” என்கிறார். அவர் மேலும் கூறுகையில் “எந்த ஒப்பந்தமாக இருந்தாலும் அது ஒரு பக்கத்திலிருந்து நெகிழ்வானதாக இருக்க வேண்டுமே தவிர மறுபக்கத்தில் இருந்தல்ல என்பதை நாம் வலியுறுத்த விரும்புகிறோம்” என்றார்.

ஓசோன் படலத்தை ஹைட்ரோ ப்ளூரோ கார்பன்களின் முன்னோடியான குளோரோ ப்ளூரோ கார்பன்கள் அழிப்பதை உணர்ந்த விஞ்ஞானிகள் அவற்றினை மாண்டரியல் நெறிமுறைகளின் அடிப்படையில் கைவிட்டனர். தற்பொழுது சரியாகி வரும் ஓசோன் படலத்திற்கு ஹைட்ரோ ப்ளூரோ கார்பன்கள் பாதுகாப்பானவையாக தெரிந்தாலும் முக்கிய பசுமை வாயுவான கரியமில வாயுவை விட வெப்பமாக்குதலில் ஆயிரம் மடங்கு மோசமானதாக இருக்கிறது.

**புதிய இந்தியன் எக்ஸ்பிரஸ் 16.10.2016**

**உலகளாவிய பார்வையிலான ஓர் சிந்தனை**

ஓர் உலகளாவிய பார்வை என்பது உங்களை நான், எனது குடும்பம், எனது பள்ளி, எனது சமூகம், எனது கிராமம், எனது மாவட்டம், எனது மாநிலம் அல்லது நான் வாழும் நாடு என்பதைத் தாண்டி சிந்திக்க வைக்கிறது. செய்திகளில் வரும் பிரச்சனைகள் உலகளாவிய தன்மையுள்ளவையாகும். உதாரணமாக சுற்றுச்சூழல் பிரச்சனையைக் கூறலாம்.

பெரும்பாலும் உலகளாவிய பிரச்சனைக்கு ஓர் உலகளாவிய தீர்வு தேவைப்படுகிறது. பருவநிலை மாற்றம் என்ற உலகளாவிய பிரச்சனையை உள்ளூர் தீர்வுகளால் சரிசெய்ய இயலாது. இருப்பினும்

உள்ளூரில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் உலகளாவிய தீர்வுக்கு வழிசெய்ய உதவுகிறது. பருவநிலை மாற்றம் தொடர்பான பிரச்சனைக்கு உதாரணமாக உள்ளூர் அளவிலான விழிப்புணர்வினை தெரு நாடகங்கள், கண்காட்சி, மனிதச் சங்கிலி மற்றும் சுவரொட்டி பிரச்சாரன் போன்றவற்றின் மூலமாக மக்களை உலகளாவிய அளவில் சிந்திக்க வைத்து உள்ளூர் அளவில் செயல்பட வைக்கிறது எனலாம்.

**நல்ஆளுகையின் பண்பியல்புகள்**

**அ) பங்கேற்பு**

நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆண்களும், பெண்களும் அரசாங்கத்தின் முடிவெடுத்தலில் குரல் கொடுக்க வேண்டும். அதனை அவர்களின் விருப்பங்களைப் பிரதிபலிக்க கூடிய சட்டப்பூர்வமான இடைநிலை அமைப்புகளின் வாயிலாக பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். இத்தகைய பரந்த பங்கேற்பானது மக்களின் பேச்சுரிமை, ஒன்று கூடும் உரிமை மற்றும் ஆக்கப்பூர்வமான பங்கேற்புத்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகிறது.

**ஆ) சட்டத்தின் ஆட்சி**

சட்டக்கட்டமைப்பு என்பது நியாயமாகவும், நடுநிலையுடனும் செயல்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக மனித உரிமைகள் தொடர்பான சட்டங்களைக் கூறலாம்.

**இ) வெளிப்படைத்தன்மை**

கட்டுப்பாடற்ற சுதந்திரமான தகவல் பரிமாற்றமே வெளிப்படைத்தன்மையை கட்டமைக்கிறது. நடைமுறைகள், நிறுவனங்கள் மற்றும் தகவல்கள் ஆகியவை அவற்றுடன் சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாக அணுகத்தக்க வகையில் இருப்பதுடன் புரிந்து கொள்ளக்கூடிய அளவிலான தகவல்கள் வழங்கப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும்.

**ஈ) மறுமொழி பகிர்தல்**

நிறுவனங்களும் அவைசார்ந்த செயல்பாடுகளும் மக்களின் தேவைக்கேற்ப செயலாற்ற முயல வேண்டும்.

**உ) ஒருமித்த கருத்தினை திசைப்போக்கு**

நல் ஆளுகை என்பது மாறுப்பட்ட விருப்பங்களுக்கு இடையே ஓர் பரந்த ஒப்புதலை ஏற்படுத்த நடுவுநலைப் பங்காற்றுகிறது. இது குழுவினுடைய சிறந்த நலன்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின்படி அவை எவ்வாறு சாத்தியமாகும் என்பது பறிறயதாகும்.

**நல்ல அரசாங்கம்**

- ஒரு மித்த கருத்தினை திசைப்போக்கு
- சிறப்பானது மற்றும் செயல்திறன் வாய்ந்தது
- சட்டத்தின் ஆட்சியைப் பின்பற்றுகிறது
- சமநீதிப்பங்கிலானது மற்றும் உள்ளடக்கியது
- பொறுப்பானது
- பங்கேற்பிலானது
- மறுமொழி பகிர்தல்

❖ வெளிப்படையானது

**ஊ) சமசீராக்கம்**

ஆண்களும் பெண்களும் தங்களை மேம்படுத்திக் கொள்வதற்கான, சமமான வாய்ப்புகள் அல்லது தங்களின் நலனை நிர்வகிப்பதாகும்.

**எ) சிறப்பான தன்மை மற்றும் செயல்திறன்**

நிறுவனங்கள் மற்றும் நடைமுறைகள் ஆகியவை தேவைகளை நிறைவேற்றும் விதத்தில் சிறப்பான வளங்களைப் பயன்படுத்தி முடிவுகளைத் தரவேண்டும்.

**ஏ) பொறுப்புடைமை**

அரசாங்கத்தின் முடிவு எடுக்கும் நிலையில் உள்ளவர்கள், தனியார் துறையினர் மற்றும் குடிமைச் சமூக அமைப்புகள் ஆகியவை பொதுமக்களுக்கும், அமைப்பின் பங்கேற்பாளர்களுக்கு பதில் சொல்ல கடமைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். இப்பொறுப்புடைமை என்பது அமைப்புக்களைப் பொறுத்து மாறுபடுவதுடன் அமைப்பில் எடுக்கப்படும் முடிவானது உட்புறமானதா பொறுத்தாகும்.

**ஐ) திறன் சார்ந்த தொலைநோக்கு பார்வை**

தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் நல்ஆளுகை மற்றும் மனித மேம்பாட்டினை நீண்டகால தொலைநோக்கு பார்வைளுட்ன் அணுகுதல் வேண்டும். மேலும் வரலாறு, பண்பாடு மற்றும் சமூக சிக்கல்களையும் தொலைநோக்குப் பார்வைக்காகக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஆதாரம்: (ஐக்கிய நாடுகள் சபையின் மேம்பாட்டுத் திட்டம் -1999 ( நிலையான மனித மேம்பாட்டிற்கான ஆளுகை பற்றிய ஐ.நா.வின் மேம்பாட்டுத் திட்டம்)

**அரசாங்கத்தின் செயல்திறனை எவ்வாறு மதிப்பிடுவது?**

ஒரு அரசாங்கத்தின் செயல்பாடுகளை ஏதோ ஒரு காரணியைக் கொண்டு பகுப்பாய்தல் என்பது இயலாத காரியமாகும். ஆகவே உண்மையான மதிப்பீட்டினை மேற்கொள்ள ஆளுகையின் பல்வேறு அம்சங்களான சமூக பண்பாட்டு காரணிகள், ஆகியவற்றின் பரிசீலிக்க காரணிகள் ஆகியவற்றினை பரிசீலிகக் வேண்டும். எனவே கீழ்க்காணும் காரணிகளைக் கருத்தில் கொண்டு அரசாங்கத்தின் செயல்பாடுகளை மதிப்பிடலாம்.

**சமுக பண்பாட்டு காரணிகள்**

❖ பாலின சமநிலை குறியீடு
❖ மதச் சுதந்திரம்
❖ சாதி அடிப்படையிலான சமநிலை
❖ மதம் மற்றும் மொழி அடிப்படையிலான சிறுபான்மையினர் உரிமைகளின் பாதுகாப்பு
❖ பாலினம் சார்ந்த வரவுசெலவு திட்டம்

**அரசியல் காரணிகள்**

❖ மக்களாட்சி நடைமுறையின் சிறப்பான செயல்பாடு
❖ சுதந்திலமான மற்றும் நியாயமான தேர்தல்கள்
❖ ஊழலவற்ற அரசியல் மற்றும் நிர்வாகம்
❖ நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மை

- சுதந்திரமான பத்திரிக்கைகள்
- சுதந்திரமான நீதித்துறை
- மனித உரிமைகள்

**பொருளாதாரக் காரணிகள்**

- மனித வளமேம்பாட்டுக் குறியீடு (HDI)
- மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP)
- வாங்கும் திறன் சமநிலை(PPP)
- வளர்ச்சி V, மேம்பாடு
- சமமாக வளங்களைப் பங்கிடுதல்

**சுற்றுச்சூழல் காரணிகள்**

- நிலையான மேம்பாட்டு இலக்குகள்
- பருவநிலை மாற்றத்திற்கான தேசிய செயல்திட்டம் (NAPC)
- பசுமை வரவு செலவு திட்டம்
- பேரிடர் மேலாண்மை

**தேசிய ஒட்டு மொத்த மகிழ்ச்சி குறியீடு (GNH):**

தேசிய ஒட்டு மொத்த மகிழ்ச்சி குறியீடு என்பது தற்பொழுது மேம்பாட்டு வரும் ஒரு தத்துவம் மட்டுமல்லாமல் குறிப்பிட்ட எந்தவொரு தேசத்தின் கூட்டு மகிழ்ச்சியினை அளவீடு செய்யும் “குறியீடு ஆகும். இக்கருத்து முதன்முதலில் 18 ஜூலை 2008-ல் இயற்றப்பட்ட பூடான் நாட்டினுடைய அரசமைப்பில் குறிப்பிடப்பட்டது.

1970 களில் பூடானின் நான்காவது மன்னரான ஜிக்மே சிங்யே வாங்சுக் அவர்களால் “ ஒட்டுமொத்த தேசிய மகிழ்ச்சி” ( Gross National Happiness) என்ற சொல் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது. “ ஒட்டுமொத்த தேசிய மகிழ்ச்சி” என்பதன் மைய சால்புகள் “நிலையான மற்றும் சமநீதிப்பங்கிலான சமூக – பொருளாதார மேம்பாடு: சுற்றுச்சூழல் பாதுபாப்பு: பண்பாட்டினை வளர்த்தல் மற்றும் பாதுகாத்தல் நல் ஆளுகை” ஆகியவையாகும்.

“ஓட்டுமொத்த தேசிய மகிழ்ச்சி” யை வேறுபடுத்திப் பார்ப்பதற்கு உதாரணமாக கூட்டு மகிழ்ச்சிளை ஆளுகையின் இலக்காகக் கொள்வதுடன் இயற்கை மற்றும் மரபார்ந்த விழுமியங்களுக்கிடையேயான நல்லிணக்கத்தையும் வலியுறுத்துவதைக் கூறலாம்.

---

அலகு – 7
அரசியல் சிந்தனை
பிளாட்டோ
(பொ.ஆ.மு. 427-பொ.ஆ.மு.347)

**பிளாட்டோ**

- சாக்ரடீசின் மாணவர்.
- அகாடெமியைத் தோற்றுவித்தார் - இது முதலாவது உயர் கல்வி நிறுவனமாகும்.
- தற்பொழுது வரை தனது படைப்புகள் நீடித்திருக்கக் கூடிய முதலாவது மேற்கத்திய சிந்தனையாளர்.
- சாக்ரடீசைப் பற்றி நாம் அறிவதன் பெரும் பகுதி பிளாட்டோவின் படைப்புகளால் ஆகும்.
- இவ்வுலகைப் புரிந்துகொள்ள கணிதம் அடிப்படையானது என்ற பிதாகரசின் கருத்தினை ஏற்றுக் கொண்டார்.

**தலைப்புகள்:**

பிளாட்டோவின் வாழ்வும் காலமும் - பிளாட்டோவின் படைப்புகள் - பிளாட்டோவின் சிந்தனை: லட்சிய அரசு – பிளாட்டோவின் நீதி பற்றிய கருத்துக்கள் - கல்வி பற்றி கருத்தாக்கம் - மக்களாட்சி பற்றி கருத்துக்கள் - அரசமைப்பின் வகைப்பாடுகள் - குழந்தைகள் வளர்ப்பு – பிளாட்டோவின் தர்க்கவாதமுறை – மதிப்பீடு – செயல்பாடு – வினாக்கள்

**பிளாட்டோவின் வாழ்வும் காலமும்**

இந்த அறிமுக அலகில் அரசியலின் பொருள் மற்றும் அது எவ்வாறு மனித வாழ்வை பாதிக்கிறது என்பதைப் பற்றிய உட்பார்வை தரப்பட்டுள்ளது.

பிளாட்டோ பொ.ஆ.மு.427-ல் பிறந்தார். இவர் கிரேக்க நகர அரசில் உள்ள ஏதென்சில் பிரபுத்துவ குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரின் இயற்பெயர் 'அரிஸ்டோகிள்ஸ்' (யுசளைவழஉடநள) என்பதாகும். இது அவருடைய தாத்தாவின் பெயராகும். சில வரலாற்று அறிஞர்கள், பிளாட்டோவின் பயிற்சியாளரான ஆர்காசின் அரிஸ்டன் (யுசளைவழெ ழக யுசபழள) என்பவர் பிளாட்டோவின் பரந்த உடலமைப்பின் காரணமாக அவரை 'பரந்த' எனப் பொருள்படும் 'பிளாட்டோன்' (ீடயவழெ) எனப்பெயரிட்டு அழைத்ததாகக் கூறுகின்றனர். இவர் கிரேக்கத்தின் முன்னணி தத்துவ ஞானிகளில் ஒருவரான சாக்ரடீசின் சீடராவார். இவருடைய காலத்தில் கிரேக்கத்தின் நகர அரசான ஏதென்சன் அரசியல் வாழ்வு பெரும் குழப்பம் நிறைந்ததாக இருந்தது. இதன் விளைவாக ஏதென்சின் அரசாங்கம் சாக்ரடீசின் போதனைகளுக்காக அவருக்கு மரணதண்டனை அளித்தது. இது பிளாட்டோவின் ஏதென்ஸ் அரசியல் பற்றிய பார்வையில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது.

பிளாட்டோ தனது 'அகாடெமியை' (யுஉயனநஅல) பொ.ஆ.மு. 387-ஆம் ஆண்டுவாக்கில் தோற்றுவித்தார். அக்காலத்தில் ஏதென்சின் மிகவும் புகழ்வாய்ந்த நபரான 'அகடெமோஸ்' (யுமயனநஅழள) என்பவரின் பெயரால் 'அகாடெமி' அமைந்தது. இதில் பிளாட்டோ அரசியல், நன்னெறி, கணிதம் மற்றும் சமூகவியல் ஆகியவற்றை உள்ளடக்கிய அரசியல் தத்துவத்தினைப் போதித்தார்.

**பிளாட்டோவின் படைப்புகள் :**

குடியரசு (வுாந சுநிரடிடஉை) – (பொ.ஆ.மு. 386), ராஜதந்திரி (வுாந ளுவயவநளஅயெ) – (பொ.ஆ.மு. 360) மற்றும் சட்டங்கள் (வுாந டுயறள) – (பொ.ஆ.மு. 347) ஆகியவை பிளாட்டோவின்

மூன்று முக்கியப்படைப்புகளாகும். இப்படைப்புகளைத் தவிர பல சிறிய புத்தகங்களையும் பிளாட்டோ எழுதியுள்ளார்.

**பிளாட்டோவின் சிந்தனை**

பிளாட்டோவின் முக்கியக் கருத்துக்களை அவரது மூன்று முக்கியப் படைப்புகளில் காணுவதுடன் அவற்றினைப் பின்வருமாறு தொகுத்துரைக்கலாம்.

## இலட்சிய அரசு (Ideal State)

'அரசு' என்பது அரசியல் அறிவியலைக் கட்டியெழுப்பும் மிக முக்கியமான கருத்தாக்கமாகும். அவரைப் பொறுத்தவரை லட்சிய அரசு (பிளாட்டோவின் கூற்றுப்படி மனிதன் வாழ்வதற்கு மிகவும் உகந்த அரசு) என்பது ஆளும் வர்க்கம். இராணுவ வர்க்கம் மற்றும் பொருளாதார வர்க்கம் என மூன்று வர்க்கங்களைக் கொண்டதாகும். இது எவ்வாறு சாத்தியம் என அவர் தனது பின்வ்ரும் நீதி மற்றும் கல்வி பற்றிய கருத்துக்களில் விவரிக்கிறார்.

## நீதி பற்றி கருத்து (Idea of Justice)

நீதி என்பது ஒரு தனி மனிதனிடம் மட்டுமல்லாமல் அரசிடமும் இருக்க வேண்டும் என பிளாட்டோ நம்புகிறார். ஒவ்வொரு மனிதனிடமும் மூன்று தகுதிகள் வெவ்வேறு விகிதாச்சாரங்களில் இயல்பாக அமைந்திருப்பதாகக் கூறுகிறார். அவை ஒரு மனிதனின் தலைப்பகுதியை உறைவிடமாகக் கொண்ட பகுத்தறிவு, இதயத்தை உறைவிடமாகக் கொண்ட உத்வேகம் மற்றும் வயிற்றுப்பகுதியை உறைவிடமாகக் கொண்ட உணவு நாட்டம் ஆகியவை ஆகும். இவையே மனித ஆத்மாவின் மூன்று பாகங்களாகும் எனக் கூறுகிறார்.

- ❖ முதலாவதாக, உண்மையான நீதி என்பது ஒரு மனிதனை முழுமையாகக் இம்மூன்று பகுதிகளும் தங்களின் பணிகளை சரியாகச் செய்ய வேண்டும் என்றார்.
- ❖ இரணடாவதாக, ஒரு மனிதனிடம் உள்ள இம்மூன்று பகுதிகளும், அரசிடம் பிரதிபலிக்க வேண்டும் என்றார்.

ஏனென்றால் அரசு என்பது ஒட்டுமொத்த மனிதர்களையும் முழுமையாக உள்ளடக்கியதாகும். இதனால் தான் ஆளும் வர்க்கம், இராணுவ வர்க்கம் மற்றும் பொருளாதார வர்க்கம் ஆகியவற்றுடன் பிளாட்டோவின் இலட்சிய அரசு உருவாக்கம் பெற்றது.

| மனிதன் | அரசு |
|---|---|
| பகுத்தறிவு | ஆளும் வர்க்கம் |
| உத்வேகம் | இராணுவ வர்க்கம் |
| உணவு நாட்டம் | துணை வர்க்கம் |
| | |

**கல்வி பற்றி கருத்தாக்கம்** (Concept of Education)

குழந்தைப் பருவத்திலிருந்து வளர்ந்த பருவம் வரை மாணவர்களின் வயதுக்குத் தகுந்த பல்வேறு நிலைகளை அடிப்படையாகக் கொண்டு கல்வி முறையை பிளாட்டோ வடிவமைத்தார். மனிதர்களுடைய ஆன்மாவின் மூன்று பகுதிகளான பகுத்தறிவு, உத்வேகம் மற்றும் உணவு நாட்டம்

ஆகியவற்றின் விகிதங்கள் அடிப்படையில் கல்வியின் உயர்நிலைகளில் வெளியேற்ற முறையினை உருவாக்கியுள்ளார்.

- ❖ அரசின் பொருளாதாரக் கடமைகளை நிறைவேற்றத் தகுந்தோர் கண்டறியப்பட்டு ஆட்சி மற்றும் இராணுவப் பணிகளில் இருந்து பிரிக்கப்படுவர்.
- ❖ இரண்டாம் கட்டமாக தகுதியற்றவர்கள் நீக்கப்பட்டு ஆள்வதற்குத் தகுந்தவர்களுக்கு சிறப்புப் பயிற்சி கொடுக்கப்பட்டு பிளாட்டோவின் இலட்சிய அரசினை ஆளுவதற்கான தத்துவ அரசனாக உருவாக்கப்படுகின்றனர்.

ஒவ்வொரு தத்துவ ஞானியும் அவர் வாழ்ந்த காலத்தின் வெளிப்பாடாவார். கிரேக்கத்தின் மிகப்பெரும் ஞானியான சாக்ரடீசின் படுகொலையால் பிளாட்டோ மக்களாட்சியின் மீது அவமதிப்புக் கொண்டார். அதனால் மக்களாட்சிக்குப் பதிலாக ஞானிகளின் ஆட்சி மீது நம்பிக்கை கொண்டார்.

**மக்களாட்சி பற்றிய கருத்துக்கள்**

பிளாட்டோ தனது குடியரசு என்னும் நூலில் மக்களாட்சிக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார். இவரின் கருத்து யாதெனில் அனைவரும் ஆள்வதற்குக் தகுதியானவர்கள் அல்ல. ஆள்வதற்காக சிறப்புப் பயிற்சி பெற்ற தத்துவ ஞானிகளே ஆட்சி செய்ய வேண்டும். ஏதென்சின் மக்களாட்சியே தனது ஆசிரியரான சாக்ரடீஸ் கொல்லப்படக் காரணம் என பிளாட்டோ எண்ணிய அவர் மக்களாட்சிக்கு கண்டனம் தெரிவிக்கக் காரணமாகும்.

**அரசமைப்புக்களை வகைப்படுத்துதல்:**

'அரசமைப்பு' என்ற சொல்லின் தற்காலப் புரிதலில் இருந்து அதனைப் பற்றிய பிளாட்டோவின் கருத்து முற்றிலும் மாறுபட்டதாகும். அவரின் புரிதால்படி அரசமைப்பு என்பது ஓர் சமுதாயத்திலுள்ள மக்கள் தங்களின் நலனுக்காக குறிப்பிட்ட வாழ்க்கை முறையைத் தேர்ந்தெடுப்பதாகும். இது சமூகப் பழக்கவழக்கங்கள், பாரம்பரியங்கள், நடைமுறைகள் மற்றும் இவற்றினை மேற்பார்வையிடும் அரசியல் மற்றும் அரசாங்கத்தினை உள்ளடக்கியதாகும். பிளாட்டோ தான் வாழ்ந்த காலத்தில் உலகத்தின் பல பகுதிகளில் இருந்த அரசமைப்புக்களை உள்ளவாறே விவாதித்தார். இவர் அரசமைப்புகளை பிரபுக்களாட்சி, புகழ் விரும்புபவர் ஆட்சி, சிறு குழு ஆட்சி, மக்களாட்சி மற்றும் கொடுங்கோலாட்சி என ஐந்து வகைகளாகப் பிரிக்கிறார். அவர் கூறுகையில் பிரபுக்களாட்சி தன் இயல்பிலிருந்து சிதைவுற்று புகழ் விரும்புபவர் ஆட்சியாகவும், பின்னர் அது சிறுகுழு ஆட்சியாக உருமாறி அதன் பின்னர் மக்களாட்சியாகிறது. மக்களாட்சியும் தன் பண்பிலிருந்து சிதைவுறும்போது கொடுங்கோலாட்சி ஆகிறது என்கிறார்.

**குழந்தைகள் வளர்ப்பு**

பிளாட்டோவின் கூற்றுப்படி குழந்தைகளை தேசிய சொத்துக்காளக் கருதி அவர்களின் மனப்பாங்கிற்குத் தக்கவாறு வளர்ப்பது அரசின் கடமையாகும்.

**கோட்பாடாக பிளாட்டோவின் கருத்துகள்**

பிளாட்டோ இம்முறையினை தனது 'குடியரசு' என்னும் நூலில் பின்பற்றினார். இந்நூலானாது அவர் தம்மை ஒரு மாணவராகக் கருதிக் கொண்டு சாக்ரடீசிடம் வினாக்களை எழுப்புவது போன்றும் அதற்கு ஆசிரியரான சாக்ரடீஸ் பதிலளிப்பது போன்று அமைந்துள்ளது. 'தர்க்கவியல்' என்பது ஒரு

கேள்வி பதில் முறையிலான வகையாகும். இதில் மாணவர்கள் சிலவற்றைப் பற்றிய தெளிவற்ற சிந்தனையுடன் ஆசிரியரிடம் கேள்விகள் கேட்பர். அதற்கு ஆசிரியர் அளிக்கும் பதிலிலிருந்து மீண்டும் கேள்விகள் கேட்பர். இதன் மூலமாக ஆசிரியர் தமது மாணவர்களுக்குச் சிந்தனையை உருவாக்கவும், மறு உருவாக்கம் செய்து புரிந்து கொள்ளவும் உதவுகிறார்.

**பிளாட்டோவின் தர்க்கவாத முறை** (Plato's Dialectical Method)

பிளாட்டோ தனது 'குடியரசு' நூலில் இம்முறையினைப் பின்பற்றினார். இவர் இந்நூலினை எழுதும் போது தம்மை ஒரு மாணவனாகக் கருதி கேள்விகள் கேட்க ஓர் ஆசிரியராக சாக்ரடீஸ் அதற்குப் பதிலளிக்கும் வகையில் அமைத்துள்ளார். ஓர் ஆசிரியர் அனைத்தும் அறிந்தவராக பாடத்தினை மாணவர்களுக்குக் கற்பிக்கும் "அறிவு போதனை" (னுனையஉவைஉள) போலன்றி 'தர்க்கவாதம்' (னுயைடநஉவைஉள) என்பது கேள்வி பதில் முறையிலானதாகும். இம்முறையில் சிலவற்றைப் பற்றிய தெளிவற்ற சிந்தனையில் மாணவர்கள் ஆசிரியர்களிடம் கேள்வி கேட்பர். அதற்கு ஆசிரியர்கள் அளிக்கும் பதிலில் இருந்து மீண்டும் கேள்விகள் கேட்பர். இதன் மூலமாக மாணவர்கள் தங்களின் கருத்தினை உருவாக்கவும், மறு உருவாக்கம் செய்யவும் ஆசிரியர் உதவி செய்கிறார். இறுதியாக மாணவர்கள் ஓர் கருத்தைப் பற்றிய சரியான புரிதலுக்கு வருகின்றனர்.

**மதீப்பீடு**

பிளாட்டோ முதல் தத்துவஞானி மட்டுமல்லாமல் சந்தேகத்திற்கு இடமின்றி குறிப்பிடத்தகுந்த படைப்புகளையும் முற்காலத்தில் நமக்கு விட்டுச் சென்றிருக்கிறார். மக்களுக்குத் தொல்லை தரக்கூடிய பல்வேறு வி'யங்களைக் கேள்விகளாகக் கேட்டு அதற்கான பதில்களை அளிப்பதில் தம் பெரும் பகுதி நேரத்தைச் செலவழித்தார். அவர் மறைந்து பல நூற்றாண்டுகள் கடந்த பின்னரும் அரசியல், மக்கள் கூடி வாழ்வதில் உள்ள பிரச்சனைகளோடு மக்கள் மீண்டும், மீண்டும் சந்திக்கும் பிரச்சனைகளைக் குறித்து அவர்கள் கவனமாகவும், நவநாகரீக முறையிலும் சிந்திக்க பிளாட்டோவின் குடியரசு உதவி செய்கிறது. ஆகவே காலங்களைக் கடந்தும் தீவிரமான தாக்கத்தினை ஏற்படுத்துபவராக பிளாட்டோ கருதப்படுகிறார்.

**அரிஸ்டாட்டில்** (Aristotle)
**(பொ.ஆ.மு.384-பொ.ஆ.மு.322)**

**தலைப்புகள்**

அரிஸ்டாட்டிலின் வாழ்வும் காலமும் - அரிஸ்டாட்டிலின் படைப்புகள் - அரிஸ்டாட்டிலின் சிந்தனை – அரசு ஓர் இயற்கை அமைப்பு – அரசின் பணிகள் - குடியுரிமைக் கோட்பாடு – அரசுகளை வகைப்படுத்தப்படுத்துதல் - அடிமை முறை பற்றிய கருத்துக்கள் - குடும்பம் பற்றிய கருத்துக்கள் - சொத்து பற்றிய கருத்துக்கள் - ஓய்வு பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்து – புரட்சி பற்றிய கருத்துக்கள் - மதிப்பீடு – செயல்பாடு – வினாக்கள்.

**அரிஸ்டாட்டிலின் வாழ்வும் காலமும்**

"அரசியல் தத்துவத்தின் வரலாற்றில் அனைத்து தகவல்களையும் தேடிப் பெறும் விருப்பத்தில் அரிஸ்டாட்டிலை மிஞ்சியவர் எவருமில்லை" என்கிறார் வில்லியம் எபென்ஸ்டீபன்.

அரிஸ்டாட்டில், பிளாட்டோவின் அகாடெமியினுடைய மாணவராவர். பிளாட்டோவின் மரணத்திற்குப் பின்னர் அரிஸ்டாட்டில் பொ.ஆ.மு. 355-ல் 'லைசீயம்' (டுலஉநரஅ) என்ற பள்ளியைத்

தானே தொடங்கினார். இங்குதான் அலெக்சாண்டர் அரிஸ்டாட்டிலிடம் கல்வி கற்றார். இங்கு அனைத்துத் துறைகளிலும் ஆராய்ச்சி மற்றும் கல்வி போதனைகள் நிகழ்ந்தன. அரிஸ்டாட்டில் பொ.ஆ.மு. 384-ல் ஸ்டாகிராவில் பிறந்தார். பிளாட்டோவைப் போலன்றி அரிஸ்டாட்டில் ஒரு உயர் நடுத்தர வகுப்புக் குடும்பத்தில் பிறந்தார். மாசிடோனியாவின் மன்னரான அமின்டாசின் (யுஅலவெயள) தனி மருத்துவராக இவரின் தந்தை நிக்கோமாகஸ் (ளைஉழஅயஉாரள) இருந்தார்.

அரிஸ்டாட்டில் என்பதன் பொருள் 'சிறந்த நோக்கம்' என்பதாகும். இவரின் பெயர்க்காரணத்தை மெய்ப்பிக்கும் வகையில் பிளாட்டோவின் இலட்சிய அரசுக்கு மாற்றாக சிறப்பாக நடைமுறைப்படுத்தக்கூடிய அரசினை முன்மொழிந்தார். அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி அரசு என்பது குறிப்பிட்ட நோக்கத்திற்கானதாகும். இந்நோக்கமே மனிதனின் நீதிநெறி மற்றும் அறிவார்ந்த வாழ்வில் மேலான நன்மையைத் தருவதாகும்.

**அரிஸ்டாட்டிலின் படைப்புகள்**

கிரேக்க இலக்கியத்திலிருந்து விலங்கியல் வரை இவர் பல்வேறு துறைசார்ந்த புத்தங்களை எழுதினார். இருப்பினும் இவரின் மிகப் பிரபலமான படைப்பான 'அரசியல்' என்னும் நூலிலிருந்து தற்கால அரசியல் அறிவியல் வளர்ந்துள்ளது. இதனால் இவர் **'அரசியல் அறிவியலின் தந்தை'** என அழைக்கப்படுகிறார். இது வெளியிடப்பட்ட மிகச் சரியான நாள் தெரியவில்லை. எனினும் இப்படைப்பு 1000 பக்கங்களுக்கு மேல் உள்ள 8 புத்தகங்களைக் கொண்ட பெரும் படைப்பாகும்.

பிளாட்டோ தனது ஆசிரியரான சாக்ரடீசுடன் ஏற்புடையவராக இருந்தாலும். அரிஸ்டாட்டில் தன் ஆசிரியரான பிளாட்டோ கூறிய பலவற்றில் உடன்பாடின்றி இருந்தார்.

**அரிஸ்டாட்டிலின் சிந்தனைகள்**

அரிஸ்டாட்டிலின் அனைத்து விதமான அரசியல் கருத்துக்களை இவருடைய 'அரசியல்' என்ற புத்தகத்தில் காணலாம்.

**அரசு ஓர் இயற்கை அமைப்பு** (State as a natural Institution)

அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி அரசு இயற்கையானது. அரசின் அதிகாரம் நீதி நெறியிலானதாகும். குடும்பத்தால் மக்களின் அதிகரித்துக் கொண்டிருக்கக் கூடிய தேவைகளைப் பூர்த்தி செய்ய் இயலாத காரணத்தால் தங்களின் குறுகிய வட்டத்திலிருந்து வெளிவந்து மக்கள் அரசினை உருவாக்க நினைக்கின்றனர். குடும்பங்கள் ஒன்றிணைந்து அரசினை ஓர் முழுமையான அமைப்பாக்குகின்றனர். தனி மனிதனின் பெரிய வடிவமே அரசு எனவும் ஓர் அரசில் மட்டுமே தனி மனிதனால் முழுமையாக சிந்திக்க இயலும் எனவும் அரிஸ்டாட்டில் நம்புகிறார்.

**அரசின் பணிகள் (குரஉெவழைளெ ழக ளுவயவந) :**

அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி அரசின் தலையாய பணி என்பது நல்வாழ்வினை ஊக்குவித்து மக்களின் மனநலம், ஒழுக்க நெறி மற்றும் உடல் வளர்ச்சி ஆசியவற்றிற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதாகும். அரசானது மக்களின் நல்ல பழக்கவழக்கங்களை சிறந்த செயல்பாடுகளாக மாற்றி நலனை மேம்படுத்துவதோடு, மகிழ்வு மற்றும் மதிப்பிற்குரியதாக வாழ்வினை மாற்றும் வகையில் செயல்பட வேண்டும்.

**குடியுரிமைக் கோட்பாடு**

ஒரு நபரின் வாழ்விடம், சட்ட உரிமை மற்றும் பிறப்பு ஆகியவை மட்டுமே குடியுரிமையை வழங்காது என அரிஸ்டாட்டில் நம்பினார். அவர் செய்யக்கூடிய பணியே ஓர் நபரை குடிமகனாக்குகிறது எனக்கூறுகிறார். ஓர் நபர் இறையாண்மை அதிகாரங்களைக் கொண்ட மக்கள் சபையில் பங்கேற்க வேண்டும். ஓர் குடிமகன் அரசாங்கத்தின் முடிவாக்க நடைமுறையில் பங்கேற்க வேண்டும்.

**அரசுகளை வகைப்படுத்துதல்:**

அரிஸ்டாட்டில் அளவு மற்றும் தரத்தின் அடிப்படையில் அரசுகளை வகைப்படுத்துகிறார்.

| அளவு | தரம் | |
|---|---|---|
| **வகை** | **சிறந்த வடிவம்** | **திரிந்த வடிவம்** |
| ஒன்று | முடியாட்சி | கொடுங்கோலாட்சி |
| சிலர் | பிரபுக்களாட்சி | சிறு குழு ஆட்சி |
| பலர் | தூய ஆட்சி அமைப்பு மறை | மக்களாட்சி |

அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி இறையாண்மையானது ஒருவரிடம் இருந்தால் அது முடியாட்சியாகும். அது பின்னர் கொடுங்கோலாட்சியாக சிதைவுறுகிறது. அப்பொழுது மக்கள் ஆட்சியாளருடன் போராடி அதனை ஆள்வதற்கு சிலரிடம் தருகின்றனர். இவ்வாறு பிரபுக்களாட்சி வருகிறது. பின்னர் இதுவும் சிதைவுற்று சிறுகுழு ஆட்சியாகிறது. இதனால் மக்கள் மீண்டும் புரட்சி செய்து அதிகாரத்தினை பல ஆட்சியாளர்களிடம் அளிக்கின்றனர். இதனால் அரசு தூய ஆட்சி அமைப்பாகிறது. இது மீண்டும் சிதைவுறும்போது மக்களாட்சியாகிறது. இதன் ஆட்சியாளர்கள் அரசின் அடிப்படை நோக்கத்தைப் பற்றிய பொது நலப் பார்வையற்றவர்களாக இருப்பர். இது மீண்டும் முடியாட்சியின் எழுச்சிக்கு வகை செய்கிறது.

**அடிமை முறை பற்றிய கருத்துக்கள்:**

அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி “அடிமைகளே எஜமானரின் முதல் அசையும் சொத்தாவர். அரதாவது ஓர் வீட்டின் தலைவராக எஜமானரின் உயிருள்ள சொத்துக்களில் அடிமைகள் முதலாவதாவர். அரிஸ்டாட்டில் நல்லொழுக்கம் இல்லாதவர்களே அடிமையாவர் எனக் கூறுகிறார். ஏனெனில் அடிமை என்பவன் செயல்பாட்டிற்கான கருவியேயன்றி உற்பத்திக்கு இல்லை என்கிறார். ஒரு வேளை உற்பத்திப் பணிகளில் ஈடுபட்டால் ஓர் அடிமையாகத் தனது பண்பை இழந்து நல்லொழுக்கம் உள்ளவர்களாவர்.

**குடும்பம் பற்றிய கருத்துக்கள் :**

குடும்பம் என்பது அரசிற்கு முந்தைய இயற்கை அமைப்பாகும். தனி மனிதர்கள் தங்களின் பிறப்பிலிருந்தே உறுப்பினர்களாக இருப்பதால் அது இயற்கையானதாகும். அதுவே நீதிநெறியிலான வாழ்வின் தொடக்கமாகவும், அரசின் மையக்கருவாகவும் உள்ளது.

**சொத்து பற்றிய கருத்துக்கள் :**

தனி நபர் சொத்து என்பது சிறந்த மற்றும் இயல்பான வாழ்விற்கான அடிப்படை என அரிஸ்டாட்டில் ஆதரித்தார். இருப்பினும் தனிநபர் சொத்துக்களுக்கு சில வரையறைகளை அவர் பரிந்துரைத்தார். மேலும் அவர் தனிநபர் சொத்து ஒழிப்பிற்கு ஆட்சேபனை தெரிவித்தார்.

**ஓய்வு பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்து :**

ஒரு நாட்டின் குடிமக்களுக்கு சொத்து மற்றும் அடிமைகள் அவசியம் என அரிஸ்டாட்டில் கூறுகிறார். இதற்குக் காரணம் என்னவென்றால், அப்பொழுது தான் குடிமக்களுக்கு ஓய்வு கிடைக்கும் என்றும் பயனுள்ள வகையில் சிந்திக்க நேரமும், நாட்டினர் அனைவரின் வாழ்வும் நலம்பெற திட்டமிடவும் இயலும் என்கிறார்.

**புரட்சி பற்றிய கருத்தக்கள் :**

அரசமைப்பு மாற்றங்களாலேயே முதலில் புரட்சி ஏற்படுவதாக அரிஸ்டாட்டில் கருதுகிறார். இம்மாற்றம் சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ இருக்கலாம். உதாரணமாக முடியாட்சியில் இருந்து கொடுங்கோலாட்சிக்கு ஏற்படும் மாற்றமானது மக்களிடையே புரட்சியைத் தூண்டுகிறது. இரண்டாவதாக அரசமைப்பில் மாற்றங்கள் நிகழாவிட்டாலும் அரசின் நோக்கங்கள் தவறினால் புரட்சிகள் ஏற்படுவதாகக் கூறுகிறார்.

**மதிப்பீடு :**

அரசியல், உளவியல் மற்றும் நன்னெறி சார்ந்த மிகப்பெரும் அரசியல் சிந்தனையாளர்களில் ஒருவராக அரிஸ்டாட்டில் கருதப்படுகிறார். அவர் பெரும்பான்மையான அறிவியல் மற்றும் கலைகளில் பரந்த அறிவைக் கொண்டிருந்தார். அவரது படைப்புகள் பல நூற்றாண்டுகளுக்கான தத்துவத்தின் அடித்தளத்தினை ஏற்படுத்தியுள்ளன. மறுமலர்ச்சி, சீர்திருத்தம் மற்றும் அறிவொளி போன்ற அறிவுப் புரட்சிகள் ஏற்பட்ட காலத்திற்குப் பின்னரும் அரிஸ்டாட்டிலின் கருத்துக்கள் உலகத் தத்துவத்தின் அடித்தளத்தில் இருக்கின்றன. ஆகவே, சந்தேகத்திற்கிடமில்லாமல் எக்காலத்திலும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தத்துவ ஞானிகளில் ஒருவராக அரிஸ்டாட்டில் விளங்குகிறார்

**ய. புனித தாமஸ் அக்வினாஸ்**
**(Saint Thomas Acquinas)**
**(பொ.ஆ. 1225 – பொ.ஆ. 1274)**

**தலைப்புகள் :**

வாழ்வும் காலமும் - அக்வினாசின் படைப்புகள் - அக்வினாசின் சிந்தனை – சம்மா காண்ட்ராஜென்டிலஸ் (ளுரஅஅய ஊழவெசய புநவெடைநள) – சம்மா தியாலஜிகா (ளுரஅஅய வுாநழடழபஉைய) – அரசுரிமை (ழுடெ முபைளாபி) – மதிப்பீடு – செயல்பாடு – வினாக்கள்.

**வாழ்வும் காலமும் :**

பதிமூன்றாம் நூற்றாண்டானது மேற்கு ஐரோப்பாவில் இடைக்கால மேற்கத்திய தத்துவத்தின் பொற்காலமாகக் கருதப்படுகிறது. மேற்கு ஐரோப்பாவின் பெரும்பான்மை மதமாக கத்தோலிக்கம் உருவானது. இதன் விளைவாக 13-ஆம் நூற்றாண்டில் அரிஸ்டாட்டிலின் அரசியல் மீண்டும் தோன்றியது. அரிஸ்டாட்டிலின் மதச்சார்பற்ற கருத்துக்களுக்கும் புனித அகஸ்டினின் பாவம் பற்றிய மதக் கருத்துகள், அரசியல் சமூகம் ஆகிய கருத்தாக்கங்களுக்கும் இடையே கூர்மையான வேறுபாடுகள் தோன்றின. இதனை திருச்சபை ஏற்றுக்கொண்டு பிணைப்புக் கோட்பாடாக்கியது.

இருப்பினும், சில தத்துவ ஞானிகள் மதச்சார்பற்ற அரசியல் அனுமானங்களுடன் தங்களின் சமயக் கருத்துக்களை உட்புகுத்துவதில் சவால்களைச் சந்தித்தனர். இதனால் இறுதியில் உலகைப் புரிந்துகொள்ளும் இரு வெவ்வேறு வழிமுறைகளுக்கிடையே இது சமரசத்தை ஏற்படுத்தியது. இதனைக் கடைசியில் அரசியல் மற்றும் அரசியல் கோட்பாடு ஆக்குவதன் மூலம் கடவுளுடன் நெருங்கும் மக்களின் உயர்ந்த விருப்பத்தில் வெற்றி கண்டனர். இம்முக்கிய தத்துவ வெற்றிக்கு சிற்பியாக இருந்த கிறிஸ்துவ சமயவாதிகளில் புனித தாமஸ் அக்வினாஸ் மிக முக்கியமானவராவார்.

புனித தாமஸ் அக்வினாஸ் நேப்பிள்சின் வடக்கே உள்ள ராக்காசீக்காவில் (சுழஉஉயளநஉஉய) உள்ள தனது குடும்பத்துக்குச் சொந்தமான கோட்டையில் பொ.ஆ. 1225-ல் பிறந்தார். அவரது தந்தையான அக்வினோ லேண்டல்.்.ப் (டுயனெரடக ழக யுஙரயைெ) ஓர் முக்கிய நிலவுடமைக் குடும்பத்தின் தலைவராவார். தாயாரான தியோடோரா ரோசி (வுhநழனழசய சுழளளை) அவர்கள் நியோபாலிட்டன் கராசியோலோ (நேயிழடவையெ ஊயசயஉஉழைடழ) குடும்பத்தைச் சேர்ந்தவர்.

**அக்வினாசின் படைப்புகள் :**

19-ம் நூற்றாண்டில் போப் பதிமூன்றாம் லூயி அவர்கள் அக்வினாஸின் தத்துவார்த்த முறையே கத்தோலிக்க சமயவாதத்தின் அலுவல் மதமாகும் என பிரகடனப்படுத்தினார். இது கத்தோலிக்கர்கள் அவரின் படைப்புகளை வாசிப்பதை முக்கியமாக்கியதுடன் கிறித்துவ மதத்தின் இப்பிரிவினை புரிந்து கொள்ள விரும்புபவர்களுக்கும் முக்கியமானதாக விளங்கியது. அக்வினாசின் படைப்புகளிலுள்ள கருத்துரைகள் அனைத்தும் அவரது சமயவாத வடிவமைப்பிலிருந்து தோன்றியதாகும். இவரது முக்கியப் படைப்புகள் 1. சம்மா காண்ட்ரா ஜென்டிலஸ் (ளுரஅஅய ஊழழெவசய புநவெடைநள) (பொ.ஆ. 1264) 2. சம்மா தியாலஜிகா (ளுரஅஅய வுhநழடழபைஉய) (பொ.ஆ. 11274) 3. அரசுரிமை (முஒ முைபௌாி).

**அக்வினாசின் சிந்தனை**

**சம்மா காண்ட்ரா ஜென்டிலெஸ் (Summa Contra Gentiles) :**

அக்வினாஸ் தனது சம்மா காண்ட்ரா ஜென்டிலெஸ் என்னும் நூலினை ஸ்பெயின் நாட்டில் இஸ்லாமிய மதத்துடான கணக்கீட்டினை கிறித்துவர்கள் நேர்செய்ய டொமினிக்கன் சமயப் பரப்புக் குழுவினருக்கு ஓர் கையேடு அல்லது பாடநூலாக வடிவமைத்தார் என பரவலாகக் கூறப்படுகிறது. இப்படைப்பு கிறித்துவ மத நம்பிக்கை மீதான குற்றச்சாட்டுக்கள் மற்றும் குற்றம் சாட்ட வாய்ப்புள்ளவற்றினை பாதுகாக்கும் வகையிலான படைப்பாகும்.

**சம்மா தியாலஜிகா (Summa Teologica)**

அக்வினாஸ் தன்னுடைய சம்மா தியாலஜிகாவில் பகுத்தறிவு அடிப்படையில் ஒற்றுமையை ஏற்படுத்த நான்கு நிலைகளிலான சட்டங்களை நிலைநாட்டினார். இவை சட்டத்தினை ஓர் வடிவத்திலிருந்து மற்றொன்றிற்கு வேறுபடுத்துவது சம்பந்தப்பட்ட பகுத்தறிவின் நிலைகளாகும்.

இப்பிரபஞ்சம் முழுமைக்கும் செயலாற்றக்கூடிய பகுத்தறிவே இவற்றில் மிகவும் உயர்ந்த மற்றும் விரிவானதாகும். இதனை 'நித்திய சட்டம்' (நுவநசயெட டுயற) என பெயரிட்டுள்ளார். இது கடவுளால் நிறுவப்பட்ட இயற்கையான நன்னெறி முறைமையாகும். இதற்கு அடுத்தாக நித்திய சட்டத்தின் சிறப்புப் பிரிவாக 'தெய்வீக சட்டம்' (**Divine Law**) உள்ளது. இது பல்வேறு மத இலக்கியங்களில் கடவுளின் வெளிப்பாடுகளைக் கொண்டதாகும்.

இதற்கடுத்த நிலையில் உள்ள சட்டத்தினை அக்வினாஸ் 'இயற்கைச் சட்டம்' (யேவரசயட டுயற) என அடையாளம் காட்டுகிறார். இந்த இயற்கைச் சட்ட கருத்தானது உணர்வடக்கத் தத்துவத்தின் அடிப்படையில் பகுத்தறிவினால் கண்டறியப்பட்ட நீதிநெறிச் சட்டமாகும். இது மனிதனுக்குப் பகுத்தறிவுத் திறன் உள்ளது எனவும், சட்டத்தினால் குறிப்பிடப்பட்டாலும் இல்லாவிடினும் சில நன்னெறிகளுக்கு மனிதனை உட்படுத்துகிறது எனவும் அனுமானிக்கிறது. உதாரணமாக கொலை செய்தல் என்பது தவறு என்றும் தகுந்த முறையிலான நடத்தையினைப் புரிந்துகொள்ள நமக்கு ஓர் குற்றவியல் சட்டம் தேவையில்லை எனவும் கூறுகிறது.

அக்வினாசின் இயற்கைச் சட்டக் கோட்பாட்டின் தனித்தன்மை யாதெனில் அது இயற்கை மற்றும் தெய்வீகம், அதாவது இயற்கை மற்றும் பரிசுத்த ஆவியுடன் தொடர்பினை ஏற்படுத்துவதாகும். கடவுளின் நித்திய சட்டத்தால் சரியானவை மற்றும் தவறானவை எவை என தீர்மானிக்கப்படுகிறது.

ஆகையால் இயற்கைச் சட்டம் என்பது வேறொன்றுமல்ல நித்திய சட்டத்தில் பகுத்தறிவிலான படைப்பின் பங்கேற்பாகும். மனிதனின் நீதிநெறியிலான பகுத்தறிவு என்பது சுருக்கமாக இயற்கையைக் கடந்த பரிசுத்த ஆவி கொள்கையின் நீட்டிப்பாகும். இறுதியாக, மனிதச் சட்டம் என்பது குறிப்பிட்ட புவிசார் சூழ்நிலைகளில் இயற்கைச் சட்ட நல்லொழுக்க நெறியுரைகளில் மனித பகுத்தறிவின் செயலாக்கமாகும்.

**அரசுரிமை பற்றிய கருத்துக்கள் (On Kingship)**

அக்வினாசின் அரசியல் கோட்பாடானது அரிஸ்டாட்டிலின் கோட்பாட்டினை ஒத்துள்ளது. அரசுரிமை பற்றிய அக்வினாசின் எழுத்துக்கள் மிகச் சீரான அரசியல் படைப்பாகக் கருதப்படுகிறது. அரிஸ்டாட்டில் தனது 'அரசியல்' என்னும் நூலில் பின்பற்றிய தர்க்க முறைபாணியினை அக்வினாசும் பின்பற்றுகிறார். இவர் **"அரசு இயற்கையானது ஏனெனில் அது மனிதனுக்கும் இயற்கையானது. ஓர் சமூக மற்றும் அரசியல் விலங்காக ஓர் குழுவாக வாழ்வதற்கு"** என வாதிடுகிறார். இதன் விளைவாக அரசியல் செயல்பாடுகள் தேவை மற்றும் நன்மையானதாகும் என வலியுறுத்துகிறார். அரிஸ்டாட்டிலைப் போலவே அக்வினாசும் மக்களின் அரசியல் தன்மைக்கு அவர்களின் பகுத்தறிவு மற்றும் பேச்சுத்திறன் ஆகியவை அடிப்படையாகும் என்கிறார்.

இதற்கு அடுத்ததாக அரசியல் அரங்கில் பகுத்தறிவிலான நடவடிக்கையின் மூலமாக மனிதர்கள் நல்லொழுக்கத்தைப் பெற்று மகிழ்ச்சி மற்றும் நிறைவடைகின்றனர் என கூறுகிறார். இவர் அரிஸ்டாட்டிலைப் போன்றே 'அரசு' என்பது நீதிநெறியிலான சமூகம் என நம்பினார். மேலும் அதன் நோக்கமே உறுப்பினர்களின் நீதிநெறியிலான நன்மையாகும். இவ்வாறு அரசு என்பது நீதியின் அடிப்படையிலானது எனவும் சட்டவரையறைக்கு உட்பட்ட குடிமக்களின் நன்மைக்காக சிறந்தவர்களே ஆளவேண்டும் எனவும் வாதிட்டார். இத்தகைய வாதமானது நம்மை நேரடியாக அரசமைப்பு வகைப்படுத்தல் பிரச்சனைக்கு வழி நடத்திச் செல்கிறது என்பதால் மீண்டும் அக்வினாஸ் அவர்கள் அரிஸ்டாட்டிலின் கொள்கைகளை பின்பற்றி தரம் மற்றும் அளவீட்டு முறைகளை பயன்படுத்தினார். இவர் அரசமைப்பினை ஆள்பவர்களின் எண்ணிக்கை மற்றம் ஆட்சியின் தரத்தின் அடிப்படையில் வகைப்படுத்துகிறார்.

**மதீப்பீடு** :

புனித தாமஸ் அக்வினாஸ் இடைக்காலச் சிந்தனையாளர்களில் பெரும் சிந்தனையாளராகக் கருதப்படுவதுடன் புதிய மரபினையும் தோற்றுவித்தார். இது **'தாமிசம்' (வுாழஅளைஅ)** என அழைக்கப்படுகிறது. இவரது அரசியல் கோட்பாட்டின் அடிப்படைகளை இவரின் அரிஸ்டாட்டிலினுடைய அரசியல் பற்றிய கருத்துரையான **'டி ரெஜிமினிபிரின்சிபம்'** (ளந சநபஅைநெிசைஉைிரஅ **இறைமை ஆட்சி)** என்பதில் காணலாம். அப்பொழுது அவர் போப்பின் அவையில் இத்தாலி நாட்டில் (1259-68) இருந்தார். அரிஸ்டாட்டிலைப் போன்றே அரசு இயற்கையானது என்றும் அது மரபார்ந்த நிறுவனமல்ல மிகச்சரியான சமுதாயமாகும் எனவும் கூறுகிறார். மனிதர்கள் சமூக விலங்காக இருப்பதால் அரசு என்பது மரபார்ந்ததல்ல என்பதுடன் இயற்கையானதாகும் என்கிறார். அவர்கள் வாழ்வதற்காகவும், வளம் பெற்று பண்பாட்டு மேம்பாடு அடைவதற்காகவும் சமுதாயத்தை உருவாக்க விழைகின்றனர். இதனைக் கூடிவாழும் விலங்குகள் உள்ளுணர்வின் அடிப்படையிலும், மனிதர்கள் பகுத்தறிவின் அடிப்படையிலும் மேற்கொள்கின்றனர்.

அக்வினாசின் கூற்றுப்படி அனைத்து வலிமையும் கடவுளிடம் இருந்தே வருகின்றன. இதற்குக் காரணம் வாழ்வின் வலிமை மற்றும் இறப்பு ஆகியவை திருச்சபை கோட்பாட்டின்படி கடவுளின் தனிச்சிறப்புரிமையாகும். இச்சந்தர்ப்பத்தில் அக்வினாஸ் அவர்கள் அரிஸ்டாட்டிலிடம் இருந்து மாறுபட்டாலும் இறையாண்மை இயற்கையானது எனும் கேள்வியில் மீண்டும் திரும்புகிறார். மக்களைக் கட்டுப்படுத்தும் முடிவுகளை எடுக்கக்கூடிய ஆளும் அமைப்பு இல்லாவிடில் குழப்பம் விளைந்து

மக்கள் ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்வர் என்கிறார். அக்வினாசின் கருத்துப்படி இறையாண்மை மிக்க அரசன் அல்லது அரசாங்கம் என்பது ஆளப்படுவோரின் பிரதிநிதியாகும்.

இங்ஙனம் அரசு என்பது எவ்வகையிலும் திருச்சபையினை சாராததாகும். இவை ஒவ்வொன்றும் தனித்தனி பங்கு மற்றும் நோக்கங்களைக் கொண்டதாகும் என அக்வினாஸ் வாதிடுகிறார். அக்வினாசின் கருத்துப்படி திருச்சபை அரசிற்கு கீழானதல்ல. ஆனால் அரசு என்பது திருச்சபையினை கருத்தில் கொள்ளவேண்டும். இதற்கு திருச்சபையின் நோக்கம் அரசின் நோக்கத்தினை விட உயர்ந்ததாக இருப்பதுடன் குடிமக்களின் அடிப்படை நோக்கமாகவும் இருப்பதாகும். அக்வினாஸ் திருச்சபைக்கும், அரசுக்கும் உள்ள உறவினை ஆன்மாவிற்கும், உடம்பிற்கும் உள்ள உறவாகக் கருதுகிறார். ஒவ்வொன்றும் தனிப்பட்ட பங்கினை கொண்டிருந்தாலும் ஆன்மாவின் நோக்கம் உயர்ந்ததாகும்.

**டி. நிக்கோலோ மாக்கியவல்லி**
**(ழேைஉழடழ ஆயஉாயைஎநடடை)**
**(பொ.ஆ. 1469-பொ.ஆ. 1527)**

**தலைப்புகள் :**

வாழ்வும் காலமும் - படைப்புகள் - அரசியல் கருத்துக்கள்: மனிதனின் தன்மை பற்றிய மாக்கியவல்லியின் கருத்துக்கள் - அரசியல் மற்றும் நீதிமுறைமையைப் பிரித்தல் - மாக்கியவல்லியின் முறைகள் - மாக்கியவல்லியின் ஆட்சிக்கலை – மதிப்பீடு – செயல்பாடு – வினாக்கள்.

**வாழ்வும் காலமும் :**

இத்தாலிய பண்பாட்டின் மையமான ∴பிளாரன்சில் மாக்கியவல்லி பிறந்தார். பிற பகுதிகளை விட அங்கு ஐரோப்பிய மறுமலர்ச்சியின் தாக்கம் அதிகமாக இருந்தது. இவர் வழக்கறிஞரான பெர்னார்டோ டி நிக்கோலோ மாக்கியவல்லி (டீநசயெசனழ னை ழேைஉழடழ ஆயஉாயைஎநடடை) மற்றும் அவரது துணைவியரான ஸ்டெ∴பானோ நெல்லி பார்த்தோ லோமியா (டீயசவழடழஅநய ழக ளுவநகயழெ நேடடை) ஆகியோருக்கு மூன்றாவது குழந்தையாகப் பிறந்தார். மறுமலர்ச்சி விழுமியங்களின் அடிப்படையில் சிறப்பான மனிதநேயக் கல்வியை இவர் பெற்றுள்ளதை அவரது எழுத்துக்கள் வெளிப்படுத்துகின்றன. இவர் பொ.ஆ. 1494-ல் மெடிசி (ஆநனைஉை) வீழ்ந்த பிறகு குடியரசு அரசாங்கத்தின் பணியில் நுழைந்தார். பொ. ஆ. 1498 முதல் 1512 வரை வேந்தர் பணியகத்தின் செயலராக இருந்தார். இப்பதவி தூதாண்மை, இராணுவம் மற்றும் நிர்வாக விவகாரங்கள் தொடர்பான முக்கியப் பதவியாகும். பொ.ஆ. 1512-ல் மெடிசி மீண்டும் நிறுவப்பட்டதன் விளைவாக மாக்கியவல்லி தனது பதவியை இழந்து சில காலத்திற்கு சிறைப்படுத்தப்பட்டார். இதன் பின்னர் அவர் இலக்கியப் பாதையில் பயணித்தார். பொ.ஆ. 1513-ல் லோரென்சோ டி மெடிசிக்காக (டுழசநணெழ னந ஆநனைஉை) 'இளவரசன்' (வுாந °சலைஉந) என்னும் தனி வரைவு நூலை எழுதினார். இக்காலக்கட்டத்திலேயே அவர் தனது அடுத்த முக்கியப் படைப்பான டைட்டஸ் லிவியசின் முதல் பத்து புத்தகங்களுக்கான உரைக்கோவை (சுருங்கக்கூறின் லிவி மீதான உரைக்கோவை – னுளைஉழரசளநள ழெ டுளைல) என்னும் நூலினை 1517-ல் நிறைவு செய்தார். இருப்பினும் இவ்விரு படைப்புகளும் அவரது மறைவிற்குப் பின்னர் 1531-ல் வெளியிடப்பட்டன. மாக்கியவல்லி மேலும் சில சிறிய இலக்கிய படைப்புகளை உருவாக்கினாலும் ஓர் அரசியல் சிந்தனையாளராக அவரது மதிப்பு இவ்விரு புத்தகங்களின் அடிப்படையிலேயே நீடிக்கிறது.

**மனிதனின் தன்மை பற்றிய மாக்கியவல்லியின் கருத்துக்கள்** (Machiavelli on Human Nature)

மாக்கியவல்லியின் அரசாங்கம் பற்றிய கோட்பாடானது அவரது மனிதனின் தன்மை பற்றிய கருத்தாக்கத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவரும் ஹாப்சைப் போன்றே மனிதனின் தன்மை மீது அவநம்பிக்கை கொண்டிருந்தார். மனிதர்கள் இயற்கையில் முழுமையான சுயநலம் கொண்டிருப்பதுடன் அவர்களின் வாழ்விலும் சுயநல விருப்பங்களால் உந்தப்படுகின்றனர் என நம்புகிறார். இளவரசன் நூலின் ஓரிடத்தில் மனிதன் நன்றி மறந்தவன், நிலையற்றவன், ஏமாற்றுபவன், கோழைத்தனம் மற்றும் கஞ்சத்தனமுள்ளவன் எனக் கூறுகிறார். மன்னரானவர் மக்களால் விரும்பப்படுவதைக் காட்டிலும் அவரைக் கண்டு மக்கள் அஞ்சுவதையே இலக்காக்க வேண்டும் என பரிந்துரைக்கிறார். மாக்கியவல்லியைப் பொறுத்தவரை அன்பு என்பது ஓர் கட்டுப்பாட்டு பிணைப்பாகும். மனிதர்கள் அடிப்படையில் சுயநலமாக இருப்பதால் தங்களின் தேவைக்குத் தக்கவாறு அதனை ஒவ்வொரு சமயத்திலும் மீறுவர்.

ஆனால் பயம் என்பது அக்காரணத்திற்காகவே அவர்களைக் காலவரையறையின்றி கட்டுப்படுத்தி வைக்கிறது. மனிதர்கள் தோற்றத்தின் அடிப்படையிலேயே வி‘யங்களைத் தீர்மானிக்கின்றனர் என்பதால் இதனை ஆட்சியாளர் தனக்கு சாதகமாக்கிக் கொண்டு செயல்பட வேண்டும். அவரைப் பொறுத்தவரை மனிதர்கள் பலவீனமானவர்களாகவும், அறியாமையிலும் உள்ளதுடன் அடிப்படையில் கெட்டவர்களாகவும், தேவையின் அடிப்படையில் நல்லவர்களாகவும் உள்ளனர். இதனால் ஆட்சியாளர் தனது மன்ற உறுப்பினர்களை எப்பொழுதும் நம்பாமல் தனது சுய முடிவினைப் பயன்படுத்துமாறு எச்சரிக்கிறார்.

மனிதர்கள் முடிவற்ற விருப்பமுள்ளவர்கள் என்றும் அதில் மிக முக்கியமான விருப்பமாக தனிநபர் சொத்து உள்ளது எனவும் கூறுகிறார். அவர் பொருள் முதல்வாத தனி மனிதத்துவத்தினை சுதந்திரம் மற்றும் சுய அரசாங்கத்தின் மீதான விருப்பத்தின் விளக்கமாகக் கூறுகிறார். அவர் தனது உரைக்கோவையில் (வுாந னுளைஉழரசளநள) மனிதனின் தன்மை மீதான அவநம்பிக்கையை வெளிப்படுத்தியுள்ளார். மனிதனின் அடிப்படை விருப்பமாக பொருளாதார ஆதாயமே உள்ளது என்பதைப் பேணுகிறார். மக்களின் இந்நோக்கமே அவர்களை குடியரசினை விரும்பவும், முடியாட்சியை வெறுக்கவும் வைக்கிறது என்கிறார். குடியரசிலான அரசாங்கத்தின் கீழ் மக்கள் அதிகமான பொருளாதார ஆதாயங்களைப் பெறும் வாய்ப்பு அதிகமாகும். இது முடியாட்சியில் சாத்தியமாகாததற்குக் காரணம் யாதெனில் இளவரசன் அனைத்து ஆதாயங்கள் மற்றும் லாபங்களைத் தனக்கே எடுத்துக்கொள்வதாகும். ஓர் சுதந்திரமான தேசம் விரும்பப்படுவதற்கான காரணம் என்னவெனில் அச்சுதந்திர தேசத்திலேயே மக்களின் வளம் பன்மடங்காகப் பெருக வாய்ப்புள்ளது.

**அரசியல் மற்றும் நீதி முறைமையைப் பிரித்தல்:**

கிரேக்க அரசியல் சிந்தனையில் அரசியலின் அடிப்படையாக நன்னெறி கருதப்படுகிறது. ஆனால் மாக்கியவல்லி இம்மரபார்ந்த இலட்சியத்திலிருந்து குறிப்பிடத்தகுந்த அளவில் மாறுபட்டிருக்கிறார். அரசியல் என்பது அதன் சுதந்திரமான சுயமதிப்பளவின் அடிப்படையிலானதாகும். ஆகவே அதனை மரபார்ந்த நன்னெறி மதிப்பளவின் கீழ் வரையறை செய்ய முடியாது என்கிறார். மேலும் அவர் அரசியல் மற்றும் நன்னெறியினை பிரிப்பதனை வலியுறுத்துகிறார். அவரைப் பொறுத்தவரையில், ஆட்சியாளர் ஒழுங்கானவராகவும், நேர்மையானவராகவும் தனது வார்த்தைப்படி நடப்பவராகவும் இருக்க வேண்டும். உண்மையில் எந்தவொரு ஆட்சியாளரும் இத்தகைய தகுதிகளுடன் இருப்பதில்லை. கெட்ட எண்ணமுள்ள மக்களை ஆள்வதற்காக ஆட்சியாளருக்கு இத்தகுதிகள் உகந்தவையல்ல. மேலும் நீதிநெறி கட்டுப்பாடுகளற்ற அரசைப் பாதுகாப்பதில் இளவரசன் கவனம் செலுத்தவேண்டும். ‘முடிவுகளே வழிமுறைகளைத் தீர்மானிக்கின்றன, என்பதனுடன் மாக்கியவல்லி திருப்தியடையவில்லை.

மக்கள் தீர்ப்பின் அடிப்படையிலேயே ஆட்சியாளரின் வெற்றி தீர்மானிக்கப்படுகிறது’. நம்பத்தகாத வழிமுறைகளைப் பின்பற்றினாலும் இறுதியில் வெற்றியடைந்தால் இளவரசன்

மன்னிக்கப்படுகிறார். அரசியல் செயல்பாடுகளுக்கு அவசியப்படும்போது மரபார்ந்த நீதிமுறைமையை ஒதுக்கி வைத்துவிட்டு வெற்றிகரமான அரசியலுக்கு மேற்செல்ல வேண்டும்.

**மாக்கியவல்லி (இளவரசன்)**

**மாக்கியவல்லியின் முறைமை (Machiavelli's Method)**

மாக்கியவல்லியைப் பொறுத்தவரை வரலாற்று முறையே அரசியல் அறிவியலைக் கற்கும் சரியான முறையாகும். இவர் மனித விருப்பங்கள் மற்றும் பேரார்வம் ஆகியவை எப்பொழுதும் ஒரே மாதிரியானவை எனக் கூறுகிறார். வாழ்விலுள்ள சம்பவங்களை ஒப்பிடும்போது மனித இனம் ஒரே மாதிரியான பரிகாரங்களைத் தேட முனைவதுடன் ஒரே மாதிரியான நடத்தையை மீண்டும் கொண்டிருக்கின்றன எனக் கூறுகிறார். ஆகவே கடந்த காலத்தைப் படித்தறிவது என்பது தற்காலத்தைப் புரிந்து கொள்வதுடன் எதிர்காலத்திற்கான முன்கணித்தலை மேற்கொள்வதை எளிமையாக்குகிறது என்கிறார். அவர் அரசியலை வரலாறு மற்றும் மெய்மைவாத அடிப்படையில் கற்பதுடன் குறிப்பாக அரசியல் நடத்தையைக் கற்றறிவதற்கு செயலறிவு முறையினைச் சார்ந்துள்ளார். அவர் நடத்தையியலின் முன்னோடியாக விவரிக்கப்படுகிறார். இளவரசன் மற்றும் உரைக்கோவை ஆகிய இரண்டிலுமே இம்முறையினை அவர் பின்பற்றுகிறார். அவர் அதிகாரத்தினை கையகப்படுத்தி, பாதுகாத்து விரிவாக்கம் செய்யும் கருவியே அரசியல் என்பதுடன் அவற்றினை அடைவதற்காக இம்மெய்யான உலகில் உள்ள மக்களின் அறிவுத்திறனுக்குத் தக்கவாறு அணி திரட்டி அடைவதாகக் கருதுகிறார்.

மாக்கியவல்லியின் முறையானது உய்த்தறிதல் அல்லது அறிவியல் முறையாக அழைக்கப்படுகிறது. இதற்கான அடிப்படை யாதெனில் அவர் பல்வேறு அரசியல் ஆட்சிக் காலங்களின் மனிதனின் தன்மை பற்றிய நடைமுறை அல்லது வரலாற்று அனுபவங்களின் அடிப்படையில் முடிவுரைகளை எட்டுகிறார். அரசியலைப் பகுத்தறியும் சில நீதிநெறிகளுக்கு மாற்றாக மனித நடத்தையின் பாங்கில் கவனம் செலுத்துவதில் அவருடைய சுயத்தன்மை உள்ளது. இருப்பினும் மாக்கியவல்லியின் முறையானது மேலோட்டமான அறிவியல் மற்றும் வரலாற்று முறையாகும் என விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். அவர் குறிப்பிட்டவற்றிலிருந்து பொதுவானவற்றை (ீயசவைஉரடயச வழ புநநெசயட) நோக்கிய நடைமுறையிலான உய்த்தறிதல் முறையினைப் (ஐனெரஉவளைந ஆநவாழன) பின்பற்றவில்லை. அதே நேரத்தில் 'பொதுவானவற்றிலிருந்து குறிப்பிட்டவற்றிற்கான' (புநநெசயட வழ ீயசவைஉரடயச) நடைமுறையில் கொணர்முறையினையும் (னுநனரஉவளைந ஆநவாழன) பின்பற்றவில்லை. அவர்களைப் பொறுத்தவரையிலும் மாக்கியவல்லி அரசியல் தத்துவத்தின் மையப் பிரச்சனைகளை எப்பொழுதும் தொடவில்லை. உதாரணமாக அரசு நீடித்த்லுக்கான நியாயவாதம் மற்றும் அரசியல் கோட்பாட்டின் அடிப்படைகள் மற்றும் வரையறைகளைக் குறிப்பிடலாம். அவருடைய பார்வை பரந்ததாக இருந்தாலும் நடைமுறை அரசியலின் தேவைகளைத் தாண்டி அவர் எப்பொழுதும் பார்த்ததில்லை.

''அரசுகளைக் கண்டறிய மற்றும் சீர்திருத்த ஓர் ஆட்சியாளர் தேவை. அவை நிறுவப்பட்ட பின்னர் தாங்கிப் பிடிப்பதில் குடியரசிலான அரசாங்கங்கள் சிறந்தவையாகும்''.

**அரசியல் மற்றும் மதத்தினைப் பிரிப்பது பற்றி நிக்கோலோ மாக்கியவல்லி**

அரசின் நன்னெறி நோக்கம் பற்றிய பிளாட்டோ, அரிஸ்டாட்டில், புனித தாமஸ் அக்வினாஸ் மற்றும் பலரின் நம்பிக்கையில் இருந்து மாக்கியவல்லி மாறுபட்டுள்ளார். அவர் அரசியலை மதம் மற்றும் நீதிமுறைமை ஆகியவற்றிலிருந்து பிரித்து அரசியலுக்கு ஓர் தன்னாட்சி நிலையினைத் தருகிறார். மதம் மற்றும் நீதிநெறி ஆகியவை இளவரசனின் ஆட்சிக்கலையில் நடைமுறைக் கொள்கையாகாது என மாக்கியவல்லி கூறுகிறார்.

**மாக்கியவல்லி (லிவி மீதான உரைக்கோவை – Discourses on Livy)**

மாக்கியவல்லியின் இரு முன்னணி புத்தகங்களான 'இளவரசன்' மற்றும் 'லிவி மீதான உரைக்கோவை' ஆகியவற்றிற்கிடையே எத்தகைய முரண்பாடுகளும் இல்லை என ஜார்ஜ் ா். சபைன் என்னும் அறிஞர் சரியாக உற்று நோக்குகிறார். இரண்டுமே ஒரே பொருளைப் பற்றியவையாகும். அதாவது அரசுகளின் எழுச்சி மற்றும் வீழ்ச்சிக்கான காரணங்கள் மற்றும் அவற்றை நிரந்தரமாக்குவதற்கான வழிமுறைகள் ஆகியவை ஆகும். 'இளவரசன்' நூல் முடியாட்சிகள் அல்லது முழுமையான அரசாங்கங்களைப் பற்றியும் உரைக்கோவையானது முக்கியமாக ரோமப் பேரரசின் விரிவாக்கம் பற்றியதாகும்.

**மாக்கியவல்லியின் ஆட்சிக்கலை (Machiavelli's Statecraft)**

ஆட்சிக்கலை என்பது மாக்கியவல்லி எடுத்தியம்பியவற்றில் குறிப்பிடத்தகுந்த மற்றும் சர்ச்சைக்குரிய பங்களிப்பாகும். அது தனித்தன்மையான வழிகாட்டு முறைகளைக் கொண்டிருப்பதால் குறிப்பிடத்தகுந்ததாகவும், வெற்றிகரமான ஆளுகைக்காக ஆட்சியாளர் குறிப்பிட்ட அநீதியான நடைமுறைகளைப் பயன்படுத்துவதால் சர்ச்சைக்குரியதாகவும் உள்ளது. ஆட்சியாளர் தமது நோக்கத்தினை எட்டுவதற்காக நீதிநெறியிலான கட்டமைப்பினை ஒதுக்கிவைக்க வேண்டுமென மாக்கியவல்லி அறிவுரை கூறுகிறார். இருப்பினும் மரபார்ந்த நீதிமுறைமை என்பது அரசியலுக்கு முற்றிலும் தேவையற்றது எனவும் அவர் நினைக்கவில்லை. ஒன்று ஆட்சியாளருக்கும் மற்றொன்று அவரது பணியாளர்களுக்கும், குடிமக்களுக்குமாக அவர் நீதிநெறியில் இரட்டை மதிப்பளவினை எடுத்தியம்புகிறார். ஆட்சியாளரின் நீதிநெறி என்பது அரசினை வலிமைப்படுத்தும் அவரது குறைவுபடாத அர்ப்பணிப்பு மற்றும் தமது வலிமையை உயர்த்தி அரசின் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பாதுகாப்பதுடன் வெளிநாட்டு படையெடுப்பாளர்களிடம் இருந்து சிறந்த பாதுகாப்பினை உறுதி செய்வதில் உணர்த்துகிறது. அவர் தமது கடமையை நிறைவேற்றுவதில் வெற்றியடைவதில் இருந்து அவரது திறன் மதிப்பிடப்படுகிறது. ஆனால் அவரது பணியாளர்களும், குடிமக்களும் மரபார்ந்த நீதிமுறைமையில் இருந்து விலகிச் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. ஏனெனில் அவ்வாறு செய்தால் அரசின் அடிப்படையே அர்த்தமற்றுப் போய்விடும்.

இளவரசன் தமது குடிமக்கள் மத்தியில் தாம் மிகவும் உயர்ந்த மதிப்பீட்டில் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டுமென மாக்கியவல்லி விரும்புகிறார். உலகளாவிய தன்முனைப்பு வாதம் பற்றி இளவரசன் கவனமுடன் இருக்கவேண்டும்.

அரசாங்கமானது உள்நாட்டு குற்றவாளிகள் மற்றும் வெளிநாட்டு எதிரிகளிடமிருந்து மக்களைப் பாதுகாக்க வேண்டும். ஓர் அறிவார்ந்த ஆட்சியாளர் மக்களின் உயிர் மற்றும் உடமைக்கான பாதுகாப்பு மற்றும் மக்களின் மாண்பினைப் பாதுகாக்கும் சூழலை ஏற்படுத்தும் வகையிலான கொள்கைகளை உருவாக்குகிறார். தம் அரசிலுள்ள பெண்களுக்குத் தகுந்த பாதுகாப்பினை அளிக்க அவர் இளவரசனுக்கு அறிவுறுத்துகிறார். ஓர் அரசில் மக்கள் தங்களது உயிர், உடைமை மற்றும் பெண்கள் பாதுகாப்பாக இருந்தால் தங்களின் அட்சியாளருக்கு விசுவாசமாக இருப்பர்.

**மதிப்பீடு:**

சமூகத்தில் நீதிமுறைமையின் அடித்தளத்தினை கீழ்நிலைப்படுத்த மாக்கியவல்லி கருதவில்லை. ஒரு உண்மையான தேசபக்தனாக ஓர் வலுவான தேசிய அரசாக இத்தாலியைக் கட்டியெழுப்ப அவர் ஏங்கினார். அக்காலத்தில் இத்தாலி ஐந்து பகுதிகளாகப் பிரிந்து கிடந்தது. அவை ∴பிளாரன்ஸ், வெனிஸ், நேப்பிள்ஸ், மிலன் மற்றும் ரோமன் கத்தோலிக்க திருச்சபை நிலப்பரப்பு ஆகியவை ஆகும். ஐரோப்பாவின் பிற தேசிய அரசுகளிடம் ஓர் மதிக்கத்தக்க இடத்தினை தன் நாடு பெறவேண்டும் என அவர் விரும்பினார். ஆனால் இத்தாலியர்களிடம் இருந்த நீதிநெறி சீர்கேட்டினைப் பற்றி அவர் மிகவும் கவலையடைந்தார். அவர் ஓர் குடியரசினை விரும்பினாலும் அக்கால இத்தாலியின் சூழ்நிலைகளால் முடியாட்சியை முன்மொழிந்தார்.

**தாமஸ் ஹாப்ஸ்** (Thomas Hobbes)
**(பெ.ஆ. 1588-பொ.ஆ. 1679)**

**தலைப்புகள் :**

வாழ்வும் காலமும் - மையக் கருத்துக்கள் : மனிதனின் தன்மை - இயற்கை நிலை-சமூக ஒப்பந்தம் - இறையாண்மை – மதிப்பீடு – செயல்பாடு – வினாக்கள்.

**வாழ்வும் காலமும் :**

பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலேய தத்துவ ஞானியான தாமஸ் ஹாப்ஸ் அறிவியல் புரட்சி (ளுஉநைவெகைiஉ சுநஎழடரவழைெ) நிகழ்ந்த காலத்தவர். தற்காலச் சமூகக் கோட்பாட்டிற்கான முதல் முயற்சியினை இவரே மேற்கொண்டார். அவர் தனது கருத்துக்களை நீதிநெறி சார்பு நிலைவாதத்தின் (ஆழசயட சுநடயவiஎளைஅ) அடிப்படையில் கூறுவதுடன் இயற்கை நிலை மீதான அதிகபட்ச அவநம்பிக்கையுடன் அனைவருக்கெதிராகவும் அனைவரும் மேற்கொள்ளும் யுத்தம் என்கிறார். தாமஸ் ஹாப்ஸ் ஏப்ரல் 5, 1588-ல் மால்ம்ஸ்பெரி (ஆயடஅநளடிரசல) என்னுமிடத்தில் இங்கிலாந்தின் கடற்பகுதிக்கு அருகில் ஸ்பானிஷ் கடற்படைத்தொகுதி (ளுியniளா யுசஅயனய) தென்பட்டதாக வந்த செய்தியைக் கேட்ட தாய்க்கு குறைப்பிரசவத்தில் பிறந்தார். ஹாப்சின் தந்தை அக்குடும்பத்தைக் கைவிட்ட பின்னர் ஹாப்ஸ் தனது வசதியான மாமாவின் வீட்டில் வளர்ந்தார். ஹாப்ஸ் தனது பள்ளிக்கல்வியை விரைவில் துவக்கியதுடன் பின்னர் ஆக்ஸ்போர்டின் மெக்தலீன் கல்லூரியில் சேர்ந்தார். தமது பத்தொன்பதாவது வயதில் பட்டம்பெற்ற பிறகு கேவன்டிஷ் குடும்பத்தினருடன் தொடர்பு ஏற்பட்டு வில்லியம் கேவண்டிஷ்க்கு ஆசிரியரானார். தத்துவக் கூறுகளின் மீது ஹாப்ஸ் சிறிதளவே விருப்பம் காட்டினாலும் ஐரோப்பா கண்டத்தில் வில்லியம் கேவண்டிசுடன் சுற்றுப்பயணம் மேற்கொண்டபிறகு மரபுநடை கொண்டவற்றில் விருப்பம் காட்டினார். அவர் வரலாற்றின் நகர்வுகள், தேசங்கள் மற்றும் பேரரசுகளின் விதியினைப் பற்றி அறிவதில் விருப்பம் கொண்டார். 1692-ஆம்ட ஆண்டு தூசிடிடசின் 'பெலோப்பனீசியப் போர் வரலாறு' (ர்ளைவழசல ழக வாந ிநடழிழnநௌயைெ றுயச) என்னும் நூலினை மொழி மாற்றம் செய்து பதிப்பித்தார்.

ஹாப்சின் பல படைப்புகளில் டி சைவ் (னுந ஊiஎந) மற்றும் லெவியதான் அவரின் மிகவும் முதிர்ந்த மற்றும் அற்புதமான படைப்பாகும். இதில் கலிலியோவின் இயற்பியல் வழியில் மனித உளவியலுக்கு செயல்விளக்கமளிக்க முறயச்சித்ததுடன் தற்கால அரசியலுக்கு அடித்தளமிடுகிறார். மனிதனின் தன்மை பற்றிய கருத்தாக்கம், இயற்கை நிலை, சமூக ஒப்பந்தம் மற்றும் அவரது இறையாண்மை பற்றிய கருத்துகள் ஆகியவை அவருடைய அரசியல் தத்துவத்தினைப் படிக்கும் அனைவரின் விருப்பத்தினையும் கவர்ந்துள்ளது. கீழ்க்காணும் பகுதிகளில் ஹாப்சின் முக்கியப் படைப்புகளை ஆராய்ந்த புரிந்துகொள்ள முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

**மனிதனின் தன்மை (Humman Nature) :**

பல சமயங்களில் ஹாப்சின் லெவியதான் மனிதனைப் பற்றி தெளிவும், எளிமையும் கொண்ட கோட்பாட்டுடன் தொடங்குவதாகவும், அரசியலைப் புரிந்துகொள்வதன் முன் தேவையாகவும் இருக்கிறது. அரசியல் அறிஞர்கள் அடிக்கடி 'ஹாப்சியன்' (ர்ழடிடிநளயைெ) என்ற பதத்தினை பயன்படுத்துகின்றனர். இது மனிதனின் மீதான அவநம்பிக்கைக் கருத்தினைக் குறிப்பதாகும். அதாவது மனிதன் அடிப்படையில் சமூக விரோதி, சுயநலமிக்கவன், கொடுமைமிக்கவன் மற்றும் அதிகார ஆசையுடையவன் என்பதாகும். மனிதன் சமூகம் மற்றும் அரசியலுக்கு முன்னரே இருந்தவன் என்ற ஹாப்சின் அனுமானங்களை ஏற்றுக்கொண்டால் பின்னர் மனிதன் தன் தேவை மற்றும் விருப்பங்களை மட்டுமே திருப்திப்படுத்துவதை மேற்கொள்வான் என்பதையும் ஏற்றுக்கொள்வதாகும். ஹாப்சின்

வார்த்தையின் படி மனித இனம் தனது உணர்ச்சி வழி நடப்பதாகும். தங்களின் அறிவுத்திறனை அவர்கள் அதிக மகிழ்ச்சி மற்றும் குறைவான வலி ஆகியவற்றினை பெறுபவை எவை எனத் தீர்மானித்து பயன்படுத்துகிறார்கள். ஹாப்ஸ் மேலும் கூறுகையில் மனிதனின் நோக்கமானது ஒரே ஒரு தடவை தனது விருப்பத்தை நிறைவேற்றுவதோ மற்றும் ஒரு நிகழ்வில் மட்டுமல்லாமல் தனது எதிர்கால விருப்பங்களை உறுதியுடன் நிறைவேற்றுவது ஆகும். ஹாப்ஸ் மிகவும் கவனமாகக் கூறுவது யாதெனில் பல்வேறு மக்கள் பலதரப்பட்ட மகிழ்வின் வடிவங்களை விரும்பினாலும் மக்களிடம் பொதுவாக உள்ள ஒரு விருப்பம் அதிகாரமாகும். மகிழ்ச்சியைத் தேடுபவர்கள் அனைவருமே தர்க்கத்தின் அடிப்படையில் அதிகாரத்தைத் தேடுபவர்களாவர். இங்ஙனம் ஹாப்ஸ் மனிதனின் தன்மை முழுமையான தன்னலப் பற்றுள்ளதாகவும், தன்னைப் பற்றியதாகவும் மட்டுமானது எனக் கருதுகிறார்.

## இயற்கை நிலை (State of Nature) :

ஹாப்ஸ் தனது இயற்கை நிலைக் கோட்பாட்டில் மனித நடத்தையைப் புரிந்துகொள்வதற்கான அனுமான முறையினைத் தந்துள்ளார். இயற்கை நிலை என்பது முழுமையான சுதந்திரம் மற்றும் சமத்துவம் உள்ள சூழல் என வாதிடுகிறார். தனி மனிதர்களைக் கட்டுப்படுத்த எவ்விதச் சட்டமும் இல்லாத முழுமையான சுதந்திரத்தில் அனைத்தையும் செய்யும் உரிமை உண்டு. அதில் மனிதர்கள் ஏறத்தாழ சமமான உடல் மற்றும் அறிவுத்திறனைப் பெற்றிருப்பது முழுமையான சமநிலையாகும். மேலும் அத்தகைய சூழலில் அனைத்தையும் செய்யும் உரிமை அனைவர்க்கும் உள்ளதாலும், அனைவருமே தங்கள் உரிமைகளைச் செயல்படுத்துவதில் சமமான திறனுள்ளவர்களாக இருப்பதாலும் அனைவரும் அனைவராலும் தாக்கப்படுகின்றனர். ஆகவே இயற்கை நிலை என்பது ஓர் போர்ச் சூழ்நிலையாக உள்ளது. உயிர் வாழ்தல் என்பது மனிதர்கள் அதிகாரத்தைப் பெறுவதன் அடிப்படை நோக்கமாக உள்ளது. ஆகவே, இயற்கை நிலையில் அனைவருமே மற்றவரின் மீதான நிலையான பயத்திலேயே வாழ்கின்றனர். இதனால் மனிதர்கள் இயற்கையில் சமூக விரோதமாக அதிகாரத்தைப் பெறுபவர்களாக உள்ளனர்.

## சமூக ஒப்பந்தம் (Social Contract) :

மனிதனின் தன்மை பற்றிய ஹாப்சின் கருத்துக்கள் அவரது அரசியல் கோட்பாட்டில் ஆழ்ந்த தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. மனிதனின் உண்மையான தன்மையை அறிந்ததால் ஹாப்ஸ் அரசியலின் அறிவியல் கோட்பாடாக சமூக ஒப்பந்தத்தினை முன் வைத்தார். சமூக ஒப்பந்தத்தின் அடிப்படைக் கருத்து மிகவும் எளிமையானதாகும். மனிதர்களுக்கு இடையிலான ஒப்பந்தத்தின் வரையறைகளால் பகுப்பாய்வு செய்யப்பட்டு தீர்மானிக்கப்படுகிறது. அரசானது பரஸ்பர ஒப்பந்தம் அல்லது உறுப்பினர்களின் ஒப்புதல் அடிப்படையில் உருவாக்கப்படுகிறது. இதன் விளைவாக மக்கள் ஒப்புதல் அளித்ததற்குத் தகுந்தவாறு இருக்கும்போது அரசாங்கம் சட்டப்பூர்வமானதாகிறது.

இது தற்கால மதச்சார்பற்ற அரசினைப்பற்றிய புதிய கருத்தாக உள்ளதுடன் மதச்சார்பற்ற அரசாங்கம் இறைவழி ஒப்புதலுடன் நீடிக்கிறது என்ற இடைக்கால சிந்தனைக்கு முரணானதாகும். அத்தகைய கருத்தினை அரச வம்சத்தினர் இன்றும் பயன்படுத்துவதுடன் இறைவழி உரிமையின்படியே மன்னர் ஆளுகிறார் எனவும் வாதிடுகின்றனர். ஆனால் ஒப்புதல்-ஒப்பந்தம் இதனை ஒரேயடியாக நிராகரிப்பதுடன் அதற்கு முரணாக மக்கள் ஒப்புதல் அளித்ததற்கு தகுந்தவாறே அரசாங்கம் சட்டப்பூர்வமானதாக உள்ளதாகக் கோருகிறது. ஹாப்சின் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் முக்கியத்துவம் யாதெனில் அதனை அரசைப் பற்றிய ஓர் தர்க்க மற்றும் அறிவியல் பகுப்பாய்வாக அவர் நம்பினார். மனிதர்கள் தங்களுடைய பகுத்தறிவின் அடிப்படையில் தேவைகள் மற்றும் விருப்பங்களுக்குத் தக்கவாறே ஒப்புதல் அளிப்பர் எனவும் அவர் வாதிடுகிறார்.

## இறையாண்மை (Sovereignty)

ஹாப்சின் அரசன் ∴ இறையாண்மை பற்றிய கருத்தாக்கத்தினை தனிமனிதனுக்கும், அரசனுக்கும் இடையேயான உறவின் தொகுப்பாகப் பார்க்கலாம். தனிமனிதனுக்கும், அரசனுக்கும் இடையேயான உறவு என்பது முழுமையான அதிகாரமற்ற நிலை மற்றும் முழுமையான அதிகார ஒன்றிப்பு ஆகியவற்றிற்கு இடையேயானதாகும். பொதுநலக் கூட்டமைப்பில் (ஊழஅஅழறெநயடவா) தனிமனிதனின் அனைத்து அதிகார அடிப்படைகளையும் நீக்குவதுடன் அதனை அரசனிடம் ஒருமுகப்படுத்துவது அவசியமாகும் என ஹாப்ஸ் வாதிடுகிறார். வேறு வழியில் கூறவேண்டுமென்றால் மனிதனின் பகுத்தறிவின்மைக்குத் தக்கவாறு சட்டம் மற்றும் ஒழுங்கினை நிலைவாட்டுவதில் சற்றும் அதிகாரக் குறைவுபடாத ஓர் முழுமையான இறைமையாளரை உருவாக்குவதற்கு ஹாப்ஸ் ஆதரவளித்தார். ஓர் முழுமையான அதிகாரத்தை உருவாக்கும் முழுமையான தேவை அவரது அரசயில் சிந்தனைக்குத் திறவுகோலாக அமைகிறது. இறைமையாளர் ஒருவராகவோ ஓர் அவையாகவோ இருப்பினும் ஹாப்ஸ் தனி மனிதனின் இறையாண்மை மிக்க அதிகாரத்தை விரும்பித் தேர்வுசெய்கிறார்.

**மதிப்பீடு :**

ஹாப்சின் முக்கியத்துவம் அவரது அரசியல் தத்துவத்தில் மட்டுமல்ல அரிஸ்டாட்டிலின் சிந்தனைக்கு எதிரான அவருடைய பங்களிப்பு மற்றும் அரசியலைப் பற்றிய பொருள் முதல்வாதக் கருத்தாக்கம் ஆகியவற்றிலும் உள்ளது. அவருடைய படைப்புக்களின் வாயிலாக இலக்கமற்ற நோக்கில் அரசியலைப் புரிந்து கொள்வது என்பது தொடங்கியது எனலாம். அவரது அரசியல் தத்துவமே ஜான்லாக், ஜீன் ஜாக்குவஸ் ரூசோ, இம்மானுவேல் காண்ட் போன்ற பிற அரசயில் சிந்தனையாளர்களுக்கு அடிப்படையாக இருந்தது. அவர்கள் தற்கால அறிவியல் அணுகுமுறையின் வழியே அரசியலை ஆராயும் ஹாப்சின் மரபினைப் பின்பற்றினர்.

## ஜான் லாக்
## (John Locke)
**(பொ.ஆ.1632-பொ.ஆ.1704)**

**தலைப்புகள் :**

வாழ்வும் காலமும் - லாக்கின் படைப்புபள் - மையக் கருத்துக்கள்: மனிதனின் தன்மை பற்றிய கருத்தாக்கம் - இயற்கை நிலை – மதிப்பீடு – செயல்பாடு – வினாக்கள்.

**வாழ்வும் காலமும் :**

இங்கிலாந்தின் சோமர்செட்'யரில் உள்ள ரிங்டன் என்னுமிடத்தில் ஆகஸ்ட் 29, 1632-ல் தத்துவார்த்தமான சுதந்திரத்துவத்தின் தந்தையான ஜான் லாக் பிறந்தார். பிரிஸ்டல் அருகிலுள்ள பென்ஸ்போர்டு என்னுமிடத்தில் தனது குழந்தைப்பருவத்தை அவர் கழித்தார். ஆரஞ்சின் இளவரசர் வில்லியமுடன் (றுடைடயைஅ ழக ழுசயபெந) லாக்கிற்கு நட்பு ஏற்பட்டது. 1688-ல் நடைபெற்ற மகத்தான புரட்சியின் (புடழசழைரள சுநஎழடரவழைெ) விளைவாக வில்லியம் இங்கிலாந்தின் அரியணை ஏறினார். 1689-ல் மூன்றாம் வில்லியம் லாக்கை முறையீட்டு ஆணையாளராக்கினார். ஆனால் சாதகமற்ற அரசியல் சூழ்நிலை அவரை பதவி விலக வைத்ததுடன் எஸ்ஸெக்சில் குடியமர வைத்தது. அவர் தனது பொது வாழ்வினை தேயிலை வாரிய ஆணையாளர் பணியுடன் முடித்துக் கொண்டார்.

**லாக்கின் படைப்புகள் :**

சகிப்புத்தன்மை தொடர்பான கடிதங்கள்(1689), மனமிதப் புரிதலைப் பற்றிய கட்டுரை (1690), குடிமை அரசாங்கம் பற்றிய ஒரு ஆய்வு நூல்கள் (1690), சகிப்புத்தன்மை பற்றிய மூன்றாவது கடிதம் (1692), சகிப்புத்தன்மை பற்றிய நான்காவது கடிதம் (1693) கல்வி தொடர்பான சில சிந்தனைகள் (1693).

**மையக் கருத்துக்கள் :**

லாக்கின் மையக் கருத்துக்களை கீழ்க்கண்டவாறு விவாதிக்கலாம்.

**மனிதனின் தன்மை பற்றிய கருத்தாக்கம் : (ஊழஉெநிவழைெ ழக ர்ரஅயெ யேவரசந)**

மனிதனின் தன்மை பற்றிய லாக்கின் புரிதலை அவரது மனிதப் புரிதல் பற்றிய கட்டுரையில் அறியலாம். ஹாப்சைப் போல மனிதனின் தன்மை மீதான அவநம்பிக்கையை லாக் பரிந்துரைக்கவில்லை. காரணங்களை ஆராய்வதே மனிதர்களின் பகுத்தறிவு உருவாகக் காரணமாகும் என அடையாளப்படுத்துகிறார். தனி மனித மற்றும் சமூக வாழ்வின் அடிப்படையாக பகுத்தறிவினை ஒப்புக் கொள்கிறார். மனிதர்கள் சமூகமயமானவர்கள், பகுத்தறிவு, நாகரீகம், நிலையான மனநிலை மற்றும் தன்னாட்சித் திறனுள்ளவர்கள் ஆவர். தனிமனிதனின் இயற்கைச் சமநிலையை லாக்கின் கருத்து ஆதரிக்கிறது. அவரைப் பொறுத்தவரை, மனிதர்கள் இயற்கையில் சுதந்திரமானவர்கள். எத்தகைய மேலான அதிகாரத்திடமிருந்தும் சுதந்திரமாக இருக்கக்கூடிய உள்ளார்ந்த முன்னுரிமைக்குத் தகுதியான மற்றும் இயற்கையின் வழிகாட்டுதல் படி நடப்பவர்களாக உள்ளனர். அறிவு, வலிமை மற்றும் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் தனி மனிதர்கள் சிறிய அளவிலான மாறுபாடுகளைக் கொண்டிருப்பதாக ஒப்புக்கொள்கிறார். எனினும் அவரது தனி மனிதர்களின் ஒற்றுமைகள் மீதான சார்பு, வேறுபாடுகளை விட அதிகமாகவே உள்ளது. மனிதர்களின் பயன்பாட்டுவாதப் பண்பினை லாக் குறிப்பாக பிரதிபலிக்கிறார். பெந்தாமின் அடியொற்றி லாக் கூறுவது யாதெனில் மனிதர்கள் மகிழ்வு மற்றும் வலி ஆகியவற்றிற்கிடையே ஓர் சமநிலையை ஏற்படுத்த முயல்வதாகக் கூறுகிறார். அவரது உடன்படிக்கையின் அடிப்படையாக மகிழ்வு அல்லது பயன்பாடு பற்றிய கருத்தே உள்ளது.

**இயற்கை நிலை** (State of Nature)

லாக்கின் இரண்டாவது ஆய்வு நூலில் 'இயற்கை நிலை' பற்றிய சிந்தனையைக் காணலாம். ஹாப்சின் இயற்கை நிலைக்கு முரணாக மனிதனுடைய சமூக உள்ளுணர்வின் காரணமாக நல்லொழுக்கத்தினால் அமைதியான சூழ்நிலை ஏற்படுவதாக அனுமானிக்கிறார். இயற்கைச் சட்ட நியதிகளின்படி அவரது இயற்கை நிலை முழுமையான சுதந்திரத்தின் அடிப்படையிலானதாகும். பரஸ்பர வலிமை மற்றம் அதிகார எல்லாயால் வரையறுக்கப்பட்ட சமத்துவமே இக்காலக்கட்டத்தின் பண்பியல்பாகும். அவருடைய வார்த்தைகளின்படி இயற்கை நிலை என்பது ஓர் அமைதியான நிலை, நல்விருப்பம், பரஸ்பர உதவி மற்றும் பாதுகாப்பாகும். சுருங்கக் கூறின், மனிதர்களின் மீதான தனது நம்பிக்கையினை அடிக்கோடிடுகிறார்.

உரிமைகள் மற்றும் கடமைகளின் ஆதாரமாக 'இயற்கைச் சட்டம்' கருதப்படுகிறது. மனிதர்கள் தங்களின் உரிமைகளை இயற்கைச் சட்டத்திலிருந்து பெறுகிறார்கள். மேலும் விதிக்கப்பட்டுள்ள உரிமைகளை பரஸ்பர அடிப்படையில் பாதுகாப்பத்தற்காக மதிக்க வேண்டுமென இயற்கைச் சட்டம் எதிர்பார்க்கிறது. இயற்கைச் சட்டத்தைக் கடவுளால் இயற்றப்பட்ட நீதிநெறிச் சட்டமாக குறிப்பதுடன் பகுத்தறிவின் மூலம் அதனை உணரலாம் என்கிறார். அவரது இயற்கை நிலையினை 'அமைப்பெதிர்வாதிகளின் சொர்க்கம்' என்றால் அது தவறாகாது.

இறுதியாக, இயற்கை நிலையின் சமநிலைக்கு அச்சுறுத்தலாக உள்ள் மூன்று அடிப்படைக் குறைபாடுகளை லாக் அடையாளம் காட்டுகிறார். முதலாவதாக, சட்டப்படியான கட்டமைப்பு

இல்லாததாகும். இரண்டாவதாக, அறிவார்ந்த மற்றும் நடுநிலையான நீதிபதி இல்லாமையாகும். மூன்றாவதாக, முடிவுகளைச் செயலாக்கப்படுத்த ஓர் ஆட்சித்துறை அமைப்பின் தேவையாகும். ஆகவே இப்பணியிலிருந்து விடுபடும் வழிமுறையே அரசு எனும் நிகழ்வாகும். லாக்கின் இயற்கை நிலை என்பது உண்மைகளுக்கு முரணானதாக உள்ளதை மனதில் கொள்ள வேண்டும். இது எத்தகைய வரலாற்று நியாயவாதத்தின் ஆதரவும் இல்லாத புனைவு முதற்கோளாகும்.

### சமூக ஒப்பந்தம் (Social Contract)

குடிமைச் சமூகத்தில் நுழைவதற்கான கருவியாகவே சமூக ஒப்பந்தம் கட்டமைக்கப்பட்டுள்ளது. லாக்கின் கருத்துப்படி இரு சமூக ஒப்பந்தங்கள் முன்மொழியப்படுகின்றன. முரலாவது குடிமைச் சமூகத்தை நிறுவவும், இரண்டாவது அரசமைப்பிலான அரசாங்கத்திற்கானதும் ஆகும். ஒப்பந்தத்தின் அஸ்திவாரமாக ஒப்புதலை லாக் அங்கீகரிக்கிறார். அவரைப் பொறுத்தவரை பொது நலக்கூட்டமைப்பில் யாருடைய சுய ஒப்புதலின்றியும் சேர்க்க முடியாது. லாக் இரண்டு வகையான ஒப்புதலைப் பற்றி பேசுகிறார்.

1. இயற்கையால் மாற்ற இயலாத முறையான அல்லயுது உயிர்ப்புள்ள ஒப்புதல்.
2. உட்கிடையான அல்லது மறமைமுகமான ஒப்புதல்.

இது பங்கேற்பாளர்களை நம்பிக்கை என்ற நிலையிருந்து புதிய முறைமையைத் துவக்க அனுமதிக்கிறது. ஒப்பந்தத்தைப் பொறுத்தவரையில் லாக் முன்கூறியதற்கே முன்னுரிமை அளிப்பதுடன் மீண்டும் இயற்கை நிலைக்குத் திரும்ப இயலாது எனத் தெளிவுப்படுத்துகிறார். லாக்கினுடைய ஒப்பந்தத்தின் முக்கிய இயற்பண்பு யாதெனில் தனிமனிதர்கள் இயற்கை நிலையில் பெற்றிருந்த உரிமைகளை ஒப்படைக்க மாட்டார்கள் என்பதாகும். உரிமைகளை ஒப்படைத்தல் என்பது ஒப்பந்தத்தின் நோக்கத்தையே தோல்வியடையச் செய்துவிடும். ஏனெனில் அரசு என்பது உரிமைகளின் உத்திரவாதி மற்றும் பாதுகாவலனாகவே கட்டி எழுப்பப்படுகிறது. ஆகவே ஒப்பந்தமானது சுதந்திரச் சாசனம் எனப் பொருள்படுமேயன்றி அடிமைப்படுத்துதலுக்கான உரிமமாக இருக்காது. லாக்கின் சமூக ஒப்பந்தமானது ஒருவேளை கொடுங்கோலாட்சி முறையில் ஆளுகை இருப்பின் புரட்சி செய்யும் விருப்பத்தேர்விற்கு அதிகாரமளிக்கிறது. தனிமனிதர்களுடைய இயற்கை உரிமைகளின் பாதுகாவலனாக அரசின் பங்கினை உறுதிப்படுத்துவதற்காக இந்நடவடிக்கை இணைக்கப்பட்டது. மேலும் புரட்சி பற்றிய முடிவினை சட்டமன்றத்திடம் விடுவதுடன் ஒப்புதல் மற்றும் பெரும்பான்மைத்துவக் கொள்கையில் லாக் கவனம் செலுத்துகிறார்.

அதிகாரத்தின் தன்மை பற்றிய கேள்விக்கு, லாக் வரையறுக்கப்பட்ட இறையாண்மை (டுைஅைவைநன ளுழஎநசநபைவெல) என்னும் கருத்தினைக் கோடிட்டுக் காட்டுகிறார். முழுமையான இறையாண்மை என்பது அவரது குடிமைச் சமூகக் கட்டமைப்பிற்கு எதிரானதாகும். அதிகாரப் பிரிவினைக்கான மாற்று செயல்திட்டத்தினை வழங்கவும் லாக் தயங்கவில்லை. அவரைப் பொறுத்தவரையிலும் அரசாங்கத்தின் அதிகாரங்கள் மூன்று அங்கங்களிடம் பிரிக்கபட்டுள்ளன. முதலாவதாக சட்டமன்றம் ஆகும். இதனைப் பொதுநல கூட்டமைப்பின் மேலான அதிகாரம் எனக் குறிப்பிடுகிறார். இரண்டாவதாக நீதித்துறையின் அதிகாரங்களை உள்ளடக்கிய ஆட்சித்துறையாகும். மூன்றாவதாக அரசின் வெளியுறவு அதிகாரத்தைக் கறிக்கும் கூட்டாச்சியாகும். ஒருவரின் கையில் அனைத்து அதிகாரங்களையும் கொண்ட ஆட்சியாளர் பற்றிய கருத்தை லாக் ஏற்றதுடன் அது பெரும்பான்மையினருடைய ஒப்புதலின் வெளிப்பாடாகும் என்கிறார்.

### மதிப்பீடு :

ஜான் லாக் தமது அறிவியல் மனப்பாங்கு மற்றும் பகுத்தறிவிலான நன்னடத்தையின் மூலமாக மேற்கத்திய அரசியல் சிந்தனையில் குறிப்பிடத்தகுந்த இடத்தினைப் பெற்றுள்ளார். தனிமனிதவாதியாக தமது மனத்திண்மையின் அடிப்படையில் ˙அவர் நம்புவது என்வெனில் தமது தலையெழுத்தினை மனிதர்கள் தாமே தீர்மானிக்கின்றனர் என்பதாகும். வால்டேர் (ஏழடவயசைந),

டிடராட் (னுனைநசழவ), ரூசோ (சுழரளளநயர) போன்ற சிந்தனையாளர்களுக்கு மட்டுமல்லாமல், பிரெஞ்சுப் புரட்சிக்கும் கூடெ தூண்டுதல் மற்றும் உத்வேகம் அளித்த பெரும் மூல ஆதாரமாக அவரது படைப்புகள் உள்ளன. பாரிங்டனின் (ீயசசபைெவழெ) கூற்றுப்படி லாக்கின் அரசாங்கம் பற்றிய இரு ஆய்வு நூல்கள் அமெரிக்கப்புரட்சியின் பாடப்புத்தகமாகவே மாறின. சுதந்திரத்தைப் பெறுவதே அரசின் மிக முக்கியப் பிரச்சனையாக லாக் பார்த்தார். இதனை தனிமனித நலனுக்காக வரையறுக்கவே அவர் கடும்முயற்சி செய்தார்.

## ஜீன் ஜாக்குவஸ் ரூசோ
## (Jean Jacques Rousseau)
**(பொ.ஆ.1712-பொ.ஆ. 1778)**

**தலைப்புகள் :**

வாழ்வும் காலமும் - மையக் கருத்துக்கள் : இயற்கை நிலை – சமூக ஒப்பந்தம் - பொது விருப்பம் - மதிப்பீடு – செயல்பாடு – வினாக்கள்.

**வாழ்வும் காலமும் :**

தற்கால அரசியல் உரைக்கோவையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த அரசியல் தத்துவஞானிகளுள் ஒருவரான ஜீன் ஜாக்குவஸ் ரூசோ ஜூலை 28, 1772-ல் ஜெனீவாவில் பிறந்தார். சிதறுண்ட குடும்பத்திலிருந்து வந்த ரூசோ பராமரிப்புடனான குழந்தைப் பருவ வாய்ப்பினை இழந்தார். ஒருசில பணிப்பயிற்சிகளுக்குப் பின்னர் தம்மை விடுவித்துக் கொண்டு ஜெனீவாவை விட்டுச் சென்று சுற்றித் திரியும் ஆவலில் வாழ்ந்தார்.

இளம் விதவையான டி வாரன்ஸ் அம்மையார் (ஆயனயஅந னந றுயசநளெ) உதவியுடன் தூரினிலுள்ள (வுரசைi) மடாலயத்திலும் பின்னர் அன்னெசியிலுள்ள (யுநெநஉல) ஓர் இறையியல் கல்லூரியிலும் ரூசோவுக்கு முறைசார்ந்த கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. அந்நிறுவனங்களின் கற்பித்தல் முறையின் விளைவாக ஏற்பட்ட வெறுப்பு அவரை மறைசார்ந்த கல்வியைக் கைவிடத் தூண்டியது. தொடர் தோல்விகளால் 1730-ல் அவரை லியான்ஸ் நகருக்கு அனுப்ப அம்மையார் கட்டாய சூழலுக்குள்ளானார். ஓராண்டு அங்க அலைந்து திரிந்த பின்னர் மீண்டும் 1731-ல் அம்மையாரிடம் ரூசோ அடைக்கலமானார். 1740 வரை அம்மையாரின் கொடையிலேயே அவர் வாழ்ந்தார். அம்மையாருடைய அறிவு ஒளியின் தாக்கத்தினாலும், அவரது மதிப்புமிக்க உதவியினாலும் மாண்சியர் டி மால்பை (ஆழளெநைச னந ஆயடடில) குடும்பத்தில் ஆசிரியராக ரூசோ பணியில் சேர்ந்தார். இருப்பினும் அவர் தனது பணியை விட்டு விலகி இலக்கற்ற ஆத்மாவாக தனது பயணத்தினைத் தொடர்ந்தார். இக்காலக்கட்டத்தில் தான் ரூசோ உருவாக்கினார். அவரது புத்தங்களுக்குப் பதிலாகக் கண்டனங்களையே பெற்றதால் பல்வேறு இடங்களுக்கு அவர் குடிபெயர வேண்டியதாயிற்று. ஜூலை 2, 1778-ல் ரூசோவின் மறைவு அதிர்ச்சியுடனும், தத்துவத்திற்குப் பெரும் இழப்பாகவும் பார்க்கப்பட்டது.

**மையக் கருத்துகள் :**

அரசியல் தத்துவ உலகினில் ரூசோ முக்கிய நிலையினை வகிக்கிறார். அவரது சமூக ஒப்பந்தக் கோட்பாட்டிற்காக அவர் முக்கியமாக அறியப்படுகிறார். தீவிர சமூக ஒப்பந்தக் கோட்பாட்டாளரான ரூசோ 'பொது விருப்பம்' (புநநெசயட றுடைட) மூலமாக அரசின் தோற்றத்தினை வெளிப்படுத்த முனைகிறார். 'இயற்கை நிலை' மற்றும் 'சமூக ஒப்பந்தம்' ஆகிய ஒரு வளர்ச்சி நிலைகளின் விளைவே அரசின் தோற்றத்திற்கான இயற்பண்பாகிறது என்று கூறுகிறார்.

**இயற்கை நிலை (State of Nature) :**

ஹாப்சைப் போலன்றி ரூசோவின் கருத்துரைப்படி நிறைவான சுதந்திரம், சமத்துவம் மற்றும் நிறைவான பேதைமை ஆகியவற்றின் சுருக்கமே இயற்கை நிலை ஆகும். அதனை அவர் மிகவும் அமைதியான மற்றும் மகிழ்வூட்டும் ரம்மியமான சூழலாக அடையாளம் காட்டுகிறார். இயற்கை நிலையில் மனிதன் தனிமையில் ஆசைகளற்ற சுதந்திரமான வாழ்வு வாழ்ந்தான். முன்பின் முரணான சீரமை வாழ்வு மற்றும் தெளிவற்ற பேச்சு இருப்பினும் வாழ்வு என்பது மனநிறைவு, சுதந்திரம், தன்னிறைவு மற்றும் வளம் ஆகியவற்றால் வடிவம் பெறுகிறது. பொல்லாங்கின்மையே ரம்மியமான மகிழ்ச்சிக்கு வழிவகுக்கிறது. அவருடைய வார்த்தையின்படி 'மேலான பேரின்பம்' காலத்தின் விதிமுறையாகும்.

காலப்போக்கில் மனித வாழ்வினுடைய நாகரீகத்தின் மாற்றங்களால் அந்நிலைக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது. இயற்கை நிலை நீடிப்பதற்குச் சவால்களாக மாறபடும் தட்பவெப்பம், பருவகாலம் மாற்றம் மண் சார் தொழில் அமைவு, தனிநபர் சொத்து ஆகிய பலதரப்பட்ட காரணிகளை அவர் ஒப்புக்கொள்கிறார். ரூசோவின் கருத்துப்படி மனிதனின் முன்னேற்றம் மற்றும் உயர்வான பகுத்தறிவுடன் கூடிய புரட்சி என்பது மனித சிந்தனை மற்றும் வாழ்வில் இருப்பின் அதன் தொடர்ச்சியாக புதிய அடக்கிலான தீமைகளைக் கொண்டு வரும். இத்தொடர் மாற்றங்களே இயற்கை நிலையின் கட்டமைப்பினை அசைத்துப் பார்த்து சமத்துவமின்மையின் தோற்றத்திற்கு வகை செய்வதாக அடையாளப்படுத்துகிறார். தனிநபர் சொத்து என்னும் கருத்தாக்கமே சமூக கோளத்தில் ஏழை மற்றும் பணக்காரன் என்ற புதிய பிளவினை உருவாக்கியுள்ளது. அவரின் சொற்படி 'முதல் மனிதன் ஒரு துண்டு நிலத்தை வேலி போட்டத் தனக்குத் தானே இது என்னுடையது என்று கூறிக்கொண்டதை மக்கள் நம்புவதைக் கண்டான். அவனே குடிமைச் சமூகத்தின் உண்மையான நிறுவனராவான்' என்று கூறுகிறார்.

அக்காலமானது தொடர் போர்கள், கொலைகள் மற்றும் ஏழை, பணக்காரன் பிளவு ஆகியவற்றின் சாட்சியாக இருந்தது. இப்புதிய முறைமை காட்டுமிராண்டி அரசில் காணப்படாத பிரபஞ்ச அளவிலான தீமைகளை அனுமதித்தது. இத்தகைய திருப்பம் நிறைந்த சம்பவங்களின் தவிர்க்க முடியாத உச்சகட்டமாக சமத்துவமின்மை உதயமானதுடன் எஜமானர் மற்றும் அடிமைகள் என்ற அடுக்கினை உருவாக்கியது. இரண்டு மெய்க்கோள்களின் அடிப்படையில் காட்டுமிராண்டித்தனமான செயல்பாடு இருப்பதாக ரூசோ கருத்து தெரிவிக்கிறார். முதலாவதாக ஒவ்வொருவரும் தனது சுய நல்வாழ்விற்காகவும், சுய பாதுகாப்புத் தேவைக்காகவும் உந்தப்படுகின்றனர். இரண்டாவது மரணத்தைப் பற்றிய பயமாகும். அவர் பகுத்தறிவு மற்றும் காரண காரிய அறிவின் தோற்றத்தினை ஆழ்ந்த உணர்வு நிலையில் காண்கிறார். மனிதர்கள் இயற்கையில் சிந்திக்கும் திறனற்றவர்கள் என்பது ரூசோவின் கருத்தாகும். குடிமைச் சமூகம் இயற்கைக்கு முரணானதாகவும், மனிதனின் பகுத்தறிவினுடைய வெளிப்பாடாகவும் உள்ளது. இயற்கைக்குத் திரும்புதல் என்னும் முழக்கத்தினை இவர் வலியுறுத்தினார். அவருடைய கோரிக்கையான இயற்கைக்கு பின்னோக்கிச் செல்லுதல் என்பது புதிதாகப் பின்னப்பட்ட சமூகக் கட்டமைப்பினைத் தகர்ந்து போகச் செய்வதைக் குறிப்பதற்கு ஒப்பானதல்ல, ஆனால் இயற்கை விதிக்கானதாகும். தத்துவம் மற்றும் பகுத்தறிவே மனித வாழ்வினை கவர்வதுடன் இயல்பாற்றலை வெளிப்படுத்துவதாக ரூசோ கூறுகிறார்.

இயற்கை நிலையின் ரம்மியமான பண்பு குறுகிய காலமே நீடித்தது. பொருளாதார உயர்வு மற்றும் சமூகத்தின் பரிணாம வளர்ச்சி ஆகியவற்றால் வரையறுக்கப்பட்ட மனிதனின் சிக்கலான வார்ப்புருக்கள் வெளிப்பட்டது பேரழிவிற்கு வகை செய்கின்றன. குடிமை அரசினை அமைப்பதைத் தவிர மனிதர்களுக்கு வேறு வழியில்லை. அது சமூக ஒப்பந்த அம்சம் மூலமாக நிறைவேறியது. சமூக ஒப்பந்தத்தின் ஆறாவது அத்தியாயத்தில் ரூசோ கூறுவது யாதெனில் 'மனிதர்கள் தொடக்க நிலையில், தான் நீடித்திருக்கும் முறையினை மாற்றிக் கொள்ளாவிடில் மனித இனமே அழிந்து விடும் என அனுமானிக்கிறேன்' என்பதாகும். இயற்கை நிலை என்பதன் வெற்றி

தனிமனிதர்கிளன் சுயநலத்திற்கான தேடலின் ஒரு குறிப்பிட்ட நிலையில், பிறரின் அச்சுறுத்தல் ஏற்படுத்தும் பாதுகாப்பின்மைக்கு மன் தமது சுயபாதுகாப்புத் திறன் அடிப்படையில் போதுமான வலிமையற்றவராக உணர்வது வரையிலாகும். சமூக ஒப்பந்தத்தின் பயன்பாடு என்பது ஒப்பந்தத்தில் நுழைவது வரை தனிமனிதர்களிடம் இருந்து பெறப்பட்ட பாதுகாப்பிற்கான வாய்ப்புச் சூழலை ஏற்படுத்துவதாகும். அடுத்ததாக பாதுகாப்பு தொடர்பான சக்தியைப் பற்றிய கேள்வியே தனிமனிதர்களிடம் உள்ள குழப்பமாகும். அவரைப் பொறுத்தவரையிலும் மனிதர்கள் எவ்வகைப் புதிய சக்தியையம் உருவாக்கும் திறனற்றவர்கள். ஏற்கனவே உள்ளவற்றை வழிகாட்டி திசைதிருப்ப மட்டுமே அவர்களால் இயலும். ஆகவே இப்பாதையில் ஒருங்கமைந்த அணுகுமுறையே அவரால் பரிந்துரைக்கப்படுகிறது.

எத்தகைய வடிவில் இருந்தாலும், ஒப்புதல் இல்லாத அதிகாரம் என்பது எளிதில் காணாமல் போகும் என கைவிடுகிறார். அவரது வாக்கின்படி உடன்படிக்கை மற்றும் ஒப்புதல் இல்லாத ஒரு மனிதனின் மீதான மற்றொரு மனிதனின் அதிகாரம் எத்தகைய பகுத்தறிவு அடிப்படையும் இல்லாததாகும். குடிமை அரசு பற்றிய ரூசோவின் சமன்பாடு பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளது. ‘‘ஒவ்வொருவரும் தான் மற்றும் தனது அதிகாரத்தினை பொது விருப்பம் என்ற மேலான வழிகாட்டுதலின் கீழ் ஒரே பெருநிறுவனத் திறனாக்கி பின் ஒவ்வொன்றும் பிரிக்க இயலாத முழுமையாக பெறப்படுகிறது’’. ஆகவே அரசு என்பது தனது உறுப்பினர்களிடமிருந்து மாறுபட்ட வாழ்வு மற்றும் சுய விருப்பம் கொண்ட ஒரு நீதிநெறியிலான அமைப்பாக உருவாகிறது. அரசாங்கம் என்பது தனிமனிதர்களை இணைத்து ஒன்றாக்குவது மட்டுமல்ல உள்ளார்ந்த அடையாளம், ஆளுகை மற்றும் சய உயிர்ப்பு கொண்ட புதிய அமைப்பாகும் என ரூசோ கூறுகிறார். அனைத்திற்கும் மேலாக அரசு என்பது தனக்கென சுயவிருப்பம்’ (புநநெசயட றுடைட) என்ற பதமிட்டு அழைக்கிறார். ஏதேனும் தனிப்பட்ட அல்லது குறிப்பிட்ட விருப்பம் இருப்பின் அது பொது விருப்பத்திற்குக் கீழானதாகும்.

இயற்கை நிலையில் உள்ளுணர்வினால் உந்தப்பட்ட வாழ்க்கை என்பதற்குப் பதிலாக நீதி மற்றும் நீதி நெறிமுறைமையிலான வாழ்வில் புதிய குடிமை அரசு அமைகிறது. தனிமனிதர்கள் தங்களின் இயற்கை சுதந்திரம் மற்றும் அனைத்திற்குமான வரையறையற்ற உரிமையை இழந்து அதற்குப் பதிலாக குடிமை சுதந்திரம் மற்றும் சொத்துரிமையைப் பெறுகின்றனர். இயற்கை நிலையில் உள்ள சுதந்திரம் தவறானது என்றும் தங்களின் கட்டுப்படுத்தமுடியாத விருப்பங்களுக்கு அது அடிமையாக்குகிறதே தவிர வேறொன்றுமில்லை எனவும் கண்டனம் தெரிவிக்கின்றனர். இதற்கு மாறாக, குடிமைச் சமூகத்தினால் வழங்கப்படும் நீதிநெறியிலான சுதந்திரம் என்பது அவர்களைத் தாங்களே தங்களின் எஜமானர்களாக ஆக்குகிறது. அவரின் வார்த்தைப்படி ‘சட்டத்திற்குக் கீழ்ப்படிதல்’ என்பதனைக் குறிப்பது நமது சுதந்தரமாகும். ஹாப்ஸ் மற்றும் லாக்கைப் போலன்றி, ரூசோ ‘தனிமனிதன் இறையாண்மை மிக்க சமூகத்திடம் சமத்துவத்தை அடையும் பொருட்டு முழுமையாகச் சரணடைய வேண்டும்’ எனக் கூறுகிறார். தனிமனிதன் தனது உரிமைகளை அரசாங்க அமைப்பிடம் ஒப்படைப்பதால் சுதந்திரம் மற்றும் அதிகாரத்திற்கு இடையே இணக்கமான சூழல் வளர்கிறது.

மாற்றித்தர இயலாத, பிரிக்க முடியாத, முழுமையான மற்றும் நிரந்தரமான தன்மையுடைய இறையாண்மை பற்றி ரூசோ குறிப்பாக உள்ளார். அவரைப் பொறுத்தவரையிலும் இறையாண்மையே பொது விருப்பமாகும். சிலரிடம் நிர்வாக அதிகாரங்கள் கொடுக்கப்பட்டதாலேயே அவர்கள் இறையாண்மை மிக்கவர்களாகிவிட முடியாது. அவர்கள் வெறும் சார்நிலை முகவர்களாவர். இறையாண்மையை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அம்முகவர்களில் ஒருவரிடம் மாற்றித்தர சமூகம் முயன்றால் அது அரசியல் அமைப்பின் இறஇங்குமுகத்தில் முடியும். ரூசோவின் ஒப்பந்தத்தில் இறையாண்மை அதிகாமிக்கவர் ஓர் அங்கமாவார். மேலும் அவர் ‘மக்கள் இறையாண்மை’ (ீழிரடயச ளுழஎநசநபைவெல) என்ற கருத்தினை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

**பொது விருப்பம் (General Will) :**

பொது விருப்பம் மற்றும் சமூகம் ஆகியவை அரசிற்கு ஒரே மாதிரியானதாகும். மக்கள் தங்களின் அதிகாரம் மற்றும் ஆளுகை ஆகியவற்றினை பொது விருப்பத்தினுடைய கட்டளையின் கீழ் சமர்ப்பிக்கிறார்கள். பொது விருப்பமானது விஞ்சியதாகும். மேலும் இறையாண்மை என்பது முறைமை முழுவதும் நிறைந்திருப்பதுடன் பொது விருப்பத்தைத் தவிர வேறு எதனுடனும் ஒத்துப்போவதில்லை. சமூகத்தில் பொது விருப்பம் உறைந்துள்ளதை வைத்துப் பார்க்கும்போது அது மக்களின் இறையாண்மை மற்றும் மேலதிகாரத்தைச் சுமப்பதான 'மக்கள் இறையாண்மை' ஆகும். ரூசோ அதிகாரத்தின் மாற்றத்தக்க முறையினை வலியுறுத்துகிறார். பொது விருப்பம் என்பது அனைவரின் விருப்பத்திற்கும் சமமானதல்ல. ஏனென்றால் முன்னது பொது நலனையும் பின்னது பன்மடங்கான தனிப்பட்ட நலனையும் கொண்டதாகும். பொது விருப்பத்தினை இரண்டு மெய்க்கோள்கள் தீர்மானிக்கின்றன. முதலாவது, பொது நலனை நாடுகிறது. இது விருப்பத்தின் நோக்கத்தினை குறிப்பதாகும்.

இரண்டாவதாக அது அனைவரிடமிருந்தும் வருவதாகவும் அனைவருக்கும் பொருந்துவதாகவும் உள்ளது. இது அதன் தோற்றத்தினை முன்மொழிகிறது. பொது விருப்பம் என்பது பிரதிநித்துவப் பண்பு இல்லாததாகும். இதற்குக் காரணம் பிரதிநிதித்துவ அமைப்புகள் சமூகத்தின் தேவைகளில் கவனம் செலுத்தாமல் தங்களின் தனிப்பட்ட விருப்த்தினை மேம்படுத்தும் மனப்போக்கினைக் கொண்டிருப்பதாகும். நன்னெறி விழுமியங்கள் மற்றும் நல்மனப்பாங்கு ஆகியவை அனைவரின் விருப்பத்துடனும் ஒன்றிப்பொருந்துகிறது. பொது விருப்பம் என்பது மனச்சாட்சி மற்றும் உள்ளார்ந்த விருப்பத்தின் தவிர்க்க இயலாத வெளிப்பாடாகும். மேலும் அது சரியான பொது நலத்திலானதாகவும், பிரபஞ்சத்தின் பொது நன்மை அடிப்படையிலானது எனவும் அங்கீகரிக்கப்படுகிறது.

**மதிப்பீடு :**

ரூசோவின் ஆளுமை மற்றும் அவரது படைப்புக்களைப் பற்றி பல்வகையான கருத்துக்கள் உள்ளன. ஜி.டி.எச்.கோல் என்னும் அறிஞர் அவரது 'சமூக ஒப்பந்தம்' பற்றி கருத்து கூறும் பொழுது 'இன்று வரை உள்ள அரசியல் தத்துவப் பாட நூல்களில் இது மிகச் சிறந்ததாகும்' என்கிறார். மார்லே பிரபு அவர்கள் ரூசோவின் 'தத்துவார்த்தமான சொற்கோவை' பற்றிய தமது மாறுபட்ட கருத்தினை வெளிப்படுத்தும் போது "ரூசோ பிறக்காமலே இருந்திருப்பின் உலகம் மேலும் சிறந்திருக்காதோ?" என்ற கூறுகிறார். அவர் கூற முயல்வது யாதெனில் ரூசோ வாழந்திருக்காவிட்டால் பிரெஞ்சுப் புரட்சியின் மிக மோசமான அனுபவங்களைத் தவிர்த்திருக்கலாம். ஏனென்றால் அவரது கருத்துக்களே அந்த இயக்கத்தின் அடிப்படையாக இருந்ததாகும்.

அவரது தத்துவமானது சமதர்மத்தின் பின்னணியைக் கொண்டதாகும். முதலாளித்துவம் என்பது ரூசோவின் கைகளில் மிக மோசமாக நடத்தப்பட்டது.

அவர் கல்வியை தேசியமயமாக்கதலை ஆதரித்ததுடன் தனிநபர் சொத்து என்னும் கருத்தினை எதிர்த்தார். மேலும் அவரது சொற்கோவையில் முற்றாட்சி மற்றும் அதிகாரப் போக்கினை இணக்கமாக்கினார். பொது விருப்பம் என்னும் சாக்கில் அவர் கிட்டத்தட்ட பெரும்பான்மையின் கொடுங்கோன்மையை ஆதரிக்கிறார். இவை அனைத்திற்கும் மாறாக, தற்கால அரசியல் தத்துவ ஞானிகளுள் ரூசோ ஈடு செய்ய முடியாத இடத்திற்குத் தகுந்தவராவார்.